வெளியீடு: 05-09-2008

Issued: 05-09-2008

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

**வியாழக்கிழமை, ஏப்ரல் 17, 2008—தொகுதி 48—எண் 1**

**Thursday the 17th April, 2008—Volume 48—No. 1**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai-600 009

[Price Rs. 3.00

17–4–2008

## உள்ளடக்கம்


பக்கங்கள்

ஆளுநரும் அமைச்சரவையும் v-x

Governor and Council of Ministers xi-xv

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் xvii-xix

பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) xxi-xxxi

1. **வினாக்கள்–விடைகள்—**

உறுக்குறியிட்ட வினாக்கள் 1-39

2. **விதி 110–ன்கீழ் அறிக்கை—**

சென்னை, மத்திய சிறை இருந்த இடத்தினை மெட்ரோ இரயில் நிருவாகத்திற்கு மற்றும் அரசு பொது மருத்துவமனை விரிவாக்கத்திற்கு அளிப்பது— 39-45

பொதுப் பணித் துறை இடத்தினை ஸ்டான்லி மருத்துவமனை விரிவாக்கத்திற்கு அளிப்பது

மற்றும்

சென்னை, அண்ணா சாலையில் தோட்டக்கலைச் சங்கத்திற்குச் சொந்தமான இடத்தில் உலகத் தரத்திலான சிறப்பு வேளாண் தோட்டக்கலைப் பூங்கா அமைப்பது குறித்தும் மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

பக்கங்கள்


**3. தகவல் கோரல்—**

(அ) உறுப்பினர்கள் திரு. கோ. அரி மற்றும் திரு. வி.பி. கலைராஜன் ஆகியோர் அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள அனுமதி வேண்டுதல் — 45,53-55

திரு. கே.ஏ. செங்கோட்டையன் — 45

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி — 53-55

(ஆ) உயர் கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப் பட்டோருக்கான 27 சதவீத இட ஒதுக்கீடு குறித்து உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் கிரீமி லேயர் என்பது அறவே நீக்கப்படுதல் குறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுதல் — 45-47, 55-56

திரு. ஜி.கே. மணி — 45-47

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி — 55-56

(இ) அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு குறித்து — 47-53, 56-59,60

திரு. வை. சிவபுண்ணியம் — 47-48

திரு. சி. கோவிந்தசாமி — 48-49, 59-60

திரு. டி. சுதர்சனம் — 49-51,60

திரு. ஓ. பன்னீர்செல்வம் — 51,52

திரு. கே.ஏ. செங்கோட்டையன் — 59

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி — 52-53, 56-59

(ஈ) பாட்டாளி மக்கள் கட்சி சட்டமன்ற உறுப்பினர் திரு. வை. காவேரி அவர்கள் மீது காவல் துறை வழக்குப் பதிவு செய்துள்ளது குறித்து — 61

திரு. தி. வேல்முருகன் — 61




பக்கங்கள்


**4. கவன ஈர்ப்பு—**

சங்கரன்கோவில், அருள்மிகு சங்கர நாராயண சுவாமி திருக்கோயில் அறக்கட்டளைக்குச் சொந்தமான நில ஆக்கிரமிப்புகளை அகற்றுத — 61-66

திரு. என். மாலைராஜா — 62,63-64,66

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன் — 62-63,65

**5. அரசினர் தீர்மானம்—**

உறுப்பினர்கள் திரு. கோ. அரி மற்றும் திரு. வி.பி. கலைராஜன் ஆகியோரைப் பேரவைப் பணிகளினின்று கூட்டத் தொடர் முழுவதும் நீக்கி வைத்த தண்டனையை ஒரு வார காலமாகக் குறைத்தல் — 66-67

**6. அறிக்கைகள் அளித்தல்—** 67-68

(அ) பொது கணக்குக் குழு — 67

(ஆ) பொது நிறுவனங்கள் குழு — 67-68

(இ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு — 68

**7. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி — 68-166

கோரிக்கை எண் 4 —ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

*மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி — 68,89, 99-100,109, 112-113,115, 121,142, 147-165

திரு. செ. கருப்பசாமி — 89-91,93-94 96,97,98

திரு. அ. சௌந்திரபாண்டியன் — 99,101, 102-106

| | பக்கங்கள் |
|---|---|
| 3. **தகவல் கோரல்—** | |
| (அ) உறுப்பினர்கள் திரு. கோ. அரி மற்றும் திரு. வி.பி. கலைராஜன் ஆகியோர் அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள அனுமதி வேண்டுதல் | 45,53-55 |
| திரு. கே.ஏ. செங்கோட்டையன் | 45 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 53-55 |
| (ஆ) உயர் கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப் பட்டோருக்கான 27 சதவீத இட ஒதுக்கீடு குறித்து உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் கிரீமி லேயர் என்பது அறவே நீக்கப்படுதல் குறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுதல் | 45-47 55-56 |
| திரு. ஜி.கே. மணி | 45-47 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 55-56 |
| (இ) அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு குறித்து | 47-53 56-59,60 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 47-48 |
| திரு. சி. கோவிந்தசாமி | 48-49, 59-60 |
| திரு. டி. சுதர்சனம் | 49-51,60 |
| திரு. ஓ. பன்னீர்செல்வம் | 51,52 |
| திரு. கே.ஏ. செங்கோட்டையன் | 59 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 52-53, 56-59 |
| (ஈ) பாட்டாளி மக்கள் கட்சி சட்டமன்ற உறுப்பினர் திரு. வை. காவேரி அவர்கள் மீது காவல் துறை வழக்குப் பதிவு செய்துள்ளது குறித்து | 61 |
| திரு. தி. வேல்முருகன் | 61 |





| | பக்கங்கள் |
|---|---|
| 4. **கவன ஈர்ப்பு—** | |
| சங்கரன்கோவில், அருள்மிகு சங்கர நாராயண சுவாமி திருக்கோயில் அறக்கட்டளைக்குச் சொந்தமான நில ஆக்கிரமிப்புகளை அகற்றுத | 61-66 |
| திரு. என். மாலைராஜா | 62,63-64,66 |
| மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன் | 62-63,65 |
| 5. **அரசினர் தீர்மானம்—** | |
| உறுப்பினர்கள் திரு. கோ. அரி மற்றும் திரு. வி.பி. கலைராஜன் ஆகியோரைப் பேரவைப் பணிகளினின்று கூட்டத் தொடர் முழுவதும் நீக்கி வைத்த தண்டனையை ஒரு வார காலமாகக் குறைத்தல் | 66-67 |
| 6. **அறிக்கைகள் அளித்தல்—** | 67-68 |
| (அ) பொது கணக்குக் குழு | 67 |
| (ஆ) பொது நிறுவனங்கள் குழு | 67-68 |
| (இ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு | 68 |
| 7. **மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | 68-166 |
| கோரிக்கை எண் 4 —ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | |
| *மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி | 68,89, 99-100,109, 112-113,115, 121,142, 147-165 |
| திரு. சொ. கருப்பசாமி | 89-91,93-94 96,97,98 |
| திரு. அ. சௌந்திரபாண்டியன் | 99,101, 102-106 |

பக்கங்கள்

7. **மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

*திருமதி டி. யசோதா 106-112, 113,114

திரு. டி. மூர்த்தி 73,115-121, 122

திரு. என். நன்மாறன் 85,86 122-125, 126-127

திரு. கு. செல்வம் 128-134

திரு. போளூர் ம. வரதன் 134-140

*திருமதி ஆர். பிரேமா 140-145

8. **அறிவிப்பு**—

பேரவை அலுவலில் மாற்றம் 147

9. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 166-169



தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228 ЧП
சென்னை-600 008
நூலகம்




ஆவணக் காப்பகம்

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு, கடவுச் சீட்டுகள் மற்றும் சிறப்பு முயற்சிகள்

2. **நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை மற்றும் தேர்தல்கள்

3. **மின்சாரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம்

**4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:**

நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

**5. கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:**

கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

**6. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

**7. பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**

பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம், செயற்திட்டப் பணிகள், சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்

**8. உயர் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் தொழில்நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்.



**9. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.என். நேரு:**

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

**10. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

**11. ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:**

குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

**12. வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், சிறைச்சாலைகள், எடைகள்—அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள், நிறுவனங்களைப் பதிவு செய்தல், வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு

**13. சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:**

சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

14. **செய்தித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு, அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

15. **உணவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எ.வ. வேலு:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

16. **குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

குடிசை மாற்று வாரியம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு

17. **பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள்

18. **தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, எஸ்.தக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



19. **இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

20. **கைத்தறித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்

21. **பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்

22. **வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

வணிக வரிகள்

23. **சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இஸ்லாமிய அறக்கட்டளைகள் (வக்ஃபு)

24. **வனத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

25. **நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

**26. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள்

**27. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

**28. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

**29. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

**30. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

**31. கதர்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

**1. Chief Minister** – **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture, Passports and Special Initiatives

**2. Minister for Finance** – **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislative Assembly and Elections

**3. Minister for Electricity** – **The Hon. Thiru Arcot N. Veeraswami:**

Electricity, Non-Conventional Energy Development and Personnel and Administrative Reforms

**4. Minister for Rural Development and Local Administration** – **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

**5. Minister for Co-operation** – **The Hon. Thiru Ko.Si. Mani:**

Co-operation, Statistics and welfare of Ex-Servicemen

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Wasteland Development

7. **Minister for Public Works and Law** .. **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Law and Courts

8. **Minister for Higher Education** .. **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology, Mines and Minerals

9. **Minister for Transport** .. **The Hon. Thiru K.N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

10. **Minister for Health** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**

Health, Medical Education and Family Welfare

11. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**

Rural Industries including Cottage Industries and Small Industries



12. **Minister for Revenue and Housing** .. **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits, Registration of Companies, Housing, Rural Housing and Housing Development

13. **Minister for Tourism and Registration** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism, Tourism Development Corporation, Registration and Stamp Act

14. **Minister for Information** .. **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing, Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

15. **Minister for Food** .. **The Hon. Thiru E.V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection and Price Control

16. **Minister for Slum Clearance and Accommodation Control** .. **The Hon. Thiru Suba. Thangavelan:**

Slum Clearance Board and Accommodation Control

17. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees

| | | |
|---|---|---|
| 18. Minister for Labour | .. | **The Hon. Thiru T.M. Anbarasan:** Labour, Population, Employment and Training, Steel Control, Newsprint Control, Census and Urban and Rural Employment |
| 19. Minister for Hindu Religious and Charitable Endowments | .. | **The Hon. Thiru K.R. Periakaruppan:** Hindu Religious and Charitable Endowments |
| 20. Minister for Handlooms | .. | **The Hon. Thiru NKK. P. Raaja:** Handlooms and Textiles |
| 21. Minister for School Education | .. | **The Hon. Thiru Thangam Thenarasu:** School Education and Archaeology |
| 22. Minister for Commercial Taxes | .. | **The Hon. Thiru S.N.M. Upayathulla:** Commercial Taxes |
| 23. Minister for Environment | .. | **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:** Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs |
| 24. Minister for Forests | .. | **The Hon. Thiru N. Selvaraj:** Forests and Cinchona |



| | | |
|---|---|---|
| 25. Minister for Highways | .. | **The Hon. Thiru M.P. Saminathan:** Highways and Ports |
| 26. Minister for Social Welfare | .. | **The Hon. Dr. (Tmt.) Poongothai:** Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes |
| 27. Minister for Animal Husbandry | .. | **The Hon. Tmt. P. Geetha Jeevan:** Animal Husbandry |
| 28. Minister for Adi Dravidar Welfare | .. | **The Hon. Tmt. A. Tamilarasi:** Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour |
| 29. Minister for Fisheries | .. | **The Hon. Thiru K.P.P. Samy:** Fisheries and Fisheries Development Corporation |
| 30. Minister for Dairy Development | .. | **The Hon. Thiru U. Mathivanan:** Milk and Dairy Development |
| 31. Minister for Khadi | .. | **The Hon. Thiru K. Ramachandhiran:** Khadi and Village Industries Board, Bhoodhan and Gramadhan |

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி

## மாற்றுத் தலைவர்கள்#

திரு. கு. பிச்சாண்டி

திரு. குத்தாலம் க. அன்பழகன்

திருமதி டி. யசோதா

திரு. கி. ஆறுமுகம்

திரு. என். நன்மாறன்

திருமதி பி. பத்மாவதி

## செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

---

# 26-3-2008 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எட்., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. அ.மு.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம்., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ப. சரசுவதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.எல்., பி.ஜி.டி.சி.ஏ. | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | - பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |



| | |
|---|---|
| திரு. ம. பன்னீர் செல்வம் | - தலைமை நிருபர் |
| திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கி. மாதவன், எம்.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | - தலைமை நிருபர் |
| திருமதி ஓ.வி. கல்யாணி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கே. இராமகிருஷ்ணா, பி.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கே. பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி கு. இந்துமதி, பி.எஸ்சி., எம்.எட்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ம.ச. சந்திரமௌலி, எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| செல்வி எஸ். பிலோமினா, எம்.எஸ். டபிள்யூ. பி.எட்., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. பா. அன்பழகன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி வி.வி. ரமா, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. இரா. பழனிசாமி, பி.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. சு. சந்திரன், பி.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. பா.சி.க. சிங்காரவேலு, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி பு. சுப்புலட்சுமி, எம்.ஏ., எம்.பில்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |

## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | - சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | - வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | - ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து. | - அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | - திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | - சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | - சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | - திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | - ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | - பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | - பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | - துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | - திருச்சிராப்பள்ளி–I |
| 14.* | ஆவுடையப்பன், திரு. இரா. | - அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | - செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | - அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | - ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | - உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | - கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. கரி. | - திருவாடானை |

21. இராமசாமி, திரு. தி. - ஸ்ரீவில்லிபுத்தூர்
22. இராமசுவாமி, திரு. கே.பி. - ராசிபுரம்
23. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
24. இராமச்சந்திரன், திரு. டி. - தளி
25. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். - பள்ளிப்பட்டு
26. இராம்பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
27. இராஜா, திரு. எஸ்.ஆர். - தாம்பரம்
28. இராஜேந்திரன், திரு. ஆ. - வீரபாண்டி
29. இராஜேந்திரன், திரு. இரா. - பனமரத்துப்பட்டி
30. இராஜேந்திரன், திரு. க. - ஜெயங்கொண்டம்
31. இராஜேந்திரன், திரு. சபா. - நெல்லிக்குப்பம்
32. இராஜ்குமார், திரு. ம. - பெரம்பலூர் (செ.வ.)
33. இளமதி சுப்பிரமணியன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
34. இளவரசன், திரு. வீர. - திருமங்கலம்
35. இளவழகன், திரு. கே.எல். - ஆற்காடு
36. உதயசூரியன், திரு. தா. - சின்னசேலம்
37. உதயம் சண்முகம், திரு. - அறந்தாங்கி
38. உபயதுல்லா, திரு. சி.நா.மீ. - தஞ்சாவூர்
39. உலகநாதன், திரு. கே. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
40. எதிரொலி மணியன், திரு. கோ. - பொளணமல்லூர்
41. ஐயப்பன், திரு. கோ. - கடலூர்
42. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)



43. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
44. கண்ணப்பன், திரு. மு. - தொண்டாமுத்தூர்
45. கண்ணன், திரு. பெ. - தாரமங்கலம்
46. கண்ணன், திரு. வே. - செஞ்சி
47. கமலாம்பாள், திருமதி பெ. - காஞ்சிபுரம்
48. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. - தென்காசி
51. கலியவரதன், திரு. வீ.ஏ.டி. - முகையூர்
52. கலீலூர் ரஹ்மான், திரு. ம.அ. - அரவக்குறிச்சி
53. கலைராஜன், திரு. வி.பி. - தியாகராய நகர்
54. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை
55. காமராஜ், திரு. பெ. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
56. காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. - மதுராந்தகம்
57. காவேரி, திரு. வை. - எடப்பாடி
58. கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். - கலசப்பாக்கம்
59. கீதா ஜீவன், திருமதி பி. - தூத்துக்குடி
60. குணசேகரன், திரு. சு. - சிவகங்கை
61. குணசேகரன், திரு. ம. - மானாமதுரை (செ.வ.)
62. குத்தாலம் க. அன்பழகன், திரு. - குத்தாலம்
63. குமாரகுரு, திரு. இரா. - திருநாவலூர்

64. குருசாமி, திரு. செ. - அந்தியூர் (செ.வ.)
65. கோபாலன், திரு. போ. - உதகமண்டலம்
66. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
67. கோவிந்தசாமி, திரு. சி. - திருப்பூர்
68. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
69. சக்கரபாணி, திரு. அர. - ஒட்டன்சத்திரம்
70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி - அச்சரப்பாக்கம் (செ.வ.)
71. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
72. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
73. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. - வாசுதேவநல்லூர் (செ.வ.)
74. சந்திரகாசி, திரு. மா. - வரகூர் (செ.வ.)
75. சந்திரா, திருமதி மு. - ராஜபாளையம் (செ.வ.)
76. சாமி, திரு. ஆர். - மேலூர்
77. சாமி, திரு. கே.பி.பி. - திருவொற்றியூர்
78. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
79. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். - ஆண்டிமடம்
80. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
81. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
82. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி
83. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருவள்ளூர்
84. சின்னசாமி, திரு. அ. - பேரணாம்பட்டு (செ.வ.)
85. சின்னசாமி, திரு. ஆர். - சிங்காநல்லூர்



86. சின்னச்சாமி, திரு. செ. - மருங்காபுரி
87. சின்னதுரை, திரு. கு. - தலைவாசல் (செ.வ.)
88. சின்னப்பன், திரு. போ. - விளாத்திகுளம்
89. சின்னராஜ், திரு. ஓ.கே. - மேட்டுப்பாளையம்
90. சீனிவாசன், திரு. கு. - பூங்கா நகர்
91. சுதர்சனம், திரு. டி. - பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. எம்.ஆர். - ஆத்தூர்
93. சுந்தரம், திரு. ந. - காரைக்குடி
94. சுந்தர், திரு. க. - உத்திரமேரூர்
95. சுப்பிரமணியம், திரு. ஓ. - பவானிசாகர்
96. சுப்புராம், திரு. ராம. - திருமயம்
97. சுப்ரமணியன், திரு. ந. - குளத்தூர் (செ.வ.)
98. சுரேஷ் ராஜன், திரு. என். - கன்னியாகுமரி
99. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். - நாட்றாம்பள்ளி
100. செங்குட்டுவன், திரு. டி. - கிருஷ்ணகிரி
101. செங்கோட்டையன், திரு. கே.ஏ. - கோபிசெட்டிப்பாளையம்
102. செந்தமிழன், திரு. ஞா. - சைதாப்பேட்டை
103. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. - மேல்மலையனூர்
104. செந்தில் பாலாஜி, திரு. வே. - கரூர்
105. செல்வம், திரு. கு. - மங்களூர் (செ.வ.)
106. செல்வராஜ், திரு. என். - முசிறி
107. செல்வராஜ், திரு. து. - ஸ்ரீவைகுண்டம்
108. செல்வி ராமஜெயம், திருமதி - புவனகிரி

109. சேகரன், திரு. கு. - திருவெறும்பூர்

110. சேகர், திரு. எஸ்.வி. - மயிலாப்பூர்

111. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

112. சையது கௌஸ் பாஷா, திரு. சை. - மதுரை மத்தி

113. சௌந்தரபாண்டியன், திரு. அ. - லால்குடி

114. சௌந்திரபாண்டியன், திரு. அ. - குன்னூர் (செ.வ.)

115. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்

116. ஞானதாஸ், திரு. ஆர். - சிவகாசி

117. டில்லி பாபு, திரு. ப. - அரூர் (செ.வ.)

118. தங்கமணி, திரு. பி. - திருச்செங்கோடு

119. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை

120. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி

121. தண்டபாணி, திரு. மா. - வேடசந்தூர்

122. தமிழரசி, திருமதி ஆ. - சமயநல்லூர் (செ.வ.)

123. தமிழரசு, திரு. அ. - ஓமலூர்

124. தமிழ்செல்வன், திரு. சி. - ஏற்காடு (ஆவா.)

125. தம்பிதுரை, முனைவர் மு. - பர்கூர்

126. தர்மலிங்கம், திரு. எல்.பி. - சத்தியமங்கலம்

127. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு

128. தியோடர் ரெஜினால்டு, திரு. த. - பத்மநாபபுரம்

129. திருநாவுக்கரசு, திரு. கே. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)

130. துரைக்கண்ணு, திரு. இரா. - பாபநாசம்



131. துரை சந்திரசேகரன், திரு. - திருவையாறு

132. துரைசாமி, திரு. வி.பெ. - சங்கரி (செ.வ.)

133. துரைமுருகன், திரு. - காட்பாடி

134. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி

135. தேன்மொழி, திருமதி எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)

136. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு

137. நெடுஞ்செழியன், டாக்டர் சு. - கபிலர்மலை

138. நெடுஞ்செழியன், திரு. செ. - புதுக்கோட்டை

139. நேரு, திரு. கே.என். - திருச்சிராப்பள்ளி—2

140. பதர் சயீத், திருமதி - திருவல்லிக்கேணி

141. பத்மாவதி, திருமதி பி. - நன்னிலம் (செ.வ.)

142. பரஞ்ஜோதி, திரு. மு. - ஸ்ரீரங்கம்

143. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)

144. பலராமன், திரு. பி. - பொன்னேரி (செ.வ.)

145. பழனிசாமி, திரு. ஆர்.எம். - மொடக்குறிச்சி

146. பன்னீர்செல்வம், திரு. எம். - சீர்காழி (செ.வ.)

147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி

148. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்

149. பாண்டுரங்கன், திரு. ந. - அணைக்கட்டு

150. பாபு, திரு. வி.எஸ். - புரசைவாக்கம்

151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. - திருவிடைமருதூர்

152. பாலபாரதி, செல்வி கே. - திண்டுக்கல்

153. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை

| | | |
|---|---|---|
| 154. | பிரபாவதி, திருமதி பெ. | - தாராபுரம் (செ.வ.) |
| 155. | பிரேமா, திருமதி ஆர். | - அவினாசி (செ.வ.) |
| 156. | பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். | - கடையநல்லூர் |
| 157. | புஷ்பராஜ், திரு. செ. | - கண்டமங்கலம் (செ.வ.) |
| 158. | பூங்கோதை, டாக்டர் (திருமதி) | - ஆலங்குளம் |
| 159. | பெரியகருப்பன், திரு. கே.ஆர். | - திருப்பத்தூர் |
| 160. | பெரியசாமி, திரு. இ. | - ஆத்தூர் |
| 161. | பெரியசாமி, திரு. மு.க. | - பூம்புகார் |
| 162. | பெரியண்ணன், திரு. பி.என். | - பெண்ணாகரம் |
| 163. | பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. | - கோயம்புத்தூர் கிழக்கு |
| 164. | பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. | - பொள்ளாச்சி |
| 165. | பொன்முடி, டாக்டர் க. | - விழுப்புரம் |
| 166. | பொன்னுசாமி, திரு. கே. | - சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 167. | பொன்னுதுரை, திரு. செ. | - பெருந்துறை |
| 168. | போளூர் ம. வரதன், திரு. | - செங்கம் (செ.வ.) |
| 169. | போஸ், திரு. ஏ.கே. | - திருப்பரங்குன்றம் |
| 170. | மகேந்திரன், திரு. இ. | - உசிலம்பட்டி |
| 171. | மகேந்திரன், திரு. கே. | - பொம்பூர் (செ.வ.) |
| 172. | மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. | - திருவோணம் |
| 173. | மணி, திரு. எஸ். | - பொங்கலூர் |
| 174. | மணி, திரு. கோ.சி. | - கும்பகோணம் |
| 175. | மணி, திரு. ஜி.கே. | - மேட்டூர் |
| 176. | மதிவாணன், திரு. உ. | - திருவாரூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 177. | மலரவன், திரு. தா. | - கோயம்புத்தூர் மேற்கு |
| 178. | மாணிக்கம், திரு. இரா. | - குளித்தலை |
| 179. | மாரிமுத்து, திரு. வே. | - நாகப்பட்டினம் |
| 180. | மாலைராஜா, திரு. என். | - திருநெல்வேலி |
| 181. | முருகவேல், திரு. கே. | - முதுகுளத்தூர் |
| 182. | முல்லைவேந்தன், திரு. வ. | - மொரப்பூர் |
| 183. | மூர்த்தி, திரு. டி. | - திருப்போரூர் (செ.வ.) |
| 184. | மூர்த்தி, திரு. பி. | - சோழவந்தான் |
| 185. | மேகநாதன், திரு. த.அ. | - காவேரிப்பட்டினம் |
| 186. | மோகன், திரு. பெ. | - ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 187. | மைதீன்கான், திரு. டி.பி.எம். | - பாளையங்கோட்டை |
| 188. | யசோதா, திருமதி டி. | - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 189. | ரங்கநாதன், திரு. ப. | - வில்லிவாக்கம் |
| 190. | ரங்கராஜன், திரு. என்.ஆர். | - பட்டுக்கோட்டை |
| 191. | ரவிக்குமார், திரு. து. | - காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 192. | ரவிச்சந்திரன், திரு. எல். | - சேலம்–I |
| 193. | ராணி வெங்கடேசன், திருமதி | - சாத்தான்குளம் |
| 194. | ராதாகிருஷ்ணன், திரு. ல. | - கோவில்பட்டி |
| 195. | ராமச்சந்திரன், திரு. கா. | - கூடலூர் |
| 196. | ராமநாதன், திரு. கே.வீ. | - பவானி |
| 197. | ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். | - இளையான்குடி |
| 198. | ராஜகுமார், திரு. எஸ். | - மயிலாடுதுறை |
| 199. | ராஜசேகரன், திரு. மா. | - தொட்டியம் |

| | | |
|---|---|---|
| 200. | ராஜன், திரு. அ. | - நாகர்கோவில் |
| 201. | ராஜா, திரு. என்.கே.கே.பி. | - ஈரோடு |
| 202. | ராஜா, திரு. தி.க. | - திருப்பத்தூர் |
| 203. | ராஜேந்திரன், திரு. கே.எஸ்.கே. | - மதுரை மேற்கு |
| 204. | லட்சுமணன், திரு. ச. | - போடிநாயக்கனூர் |
| 205. | லதா, திருமதி ஜி. | - குடியாத்தம் |
| 206. | லீமா றோஸ், திருமதி ரா. | - திருவட்டாறு |
| 207. | வசந்தகுமார், திரு. எச். | - நாங்குநேரி |
| 208. | வரதராஜன், திரு. ரா. | - விருதுநகர் |
| 209. | விசுவநாதன், திரு. இரா. | - நத்தம் |
| 210. | விடியல் எஸ். சேகர், திரு. | - காங்கேயம் |
| 211. | விஜயகாந்த், திரு. | - விருத்தாசலம் |
| 212. | விஜயகுமார், திரு. கே.எஸ். | - கும்மிடிப்பூண்டி |
| 213. | விஜயகுமார், திரு. பெ.சு. | - போளூர் |
| 214. | விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. | - செய்யாறு |
| 215. | வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். | - பேராவூரணி |
| 216. | வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | - சேலம்–2 |
| 217. | வேதரத்தினம், திரு. எஸ்.கே. | - வேதாரண்யம் |
| 218. | வேலு, திரு. எ.வ. | - தண்டராம்பட்டு |
| 219. | வேலுசாமி, திரு. இல. | - தருமபுரி |
| 220. | வேலுசாமி, திரு. செ.ம. | - பல்லடம் |
| 221. | வேலுமணி, திரு. சு.ப. | - பேரூர் |
| 222. | வேல்துரை, திரு. பா. | - சேரன்மகாதேவி |



| | | |
|---|---|---|
| 223. | வேல்முருகன், திரு. தி. | - பண்ருட்டி |
| 224. | வைத்திலிங்கம், திரு. ஆர். | - ஒரத்தநாடு |
| 225. | ஜாண் ஜேக்கப், திரு. எஸ். | - கிள்ளியூர் |
| 226. | ஜாண் ஜோசப், திரு. ஞா. | - விளவங்கோடு |
| 227. | ஜெகன்மூர்த்தி, திரு. மு. | - அரக்கோணம் (செ.வ.) |
| 228. | ஜெயக்குமார், திரு. டி. | - இராயபுரம் |
| 229. | ஜெயக்குமார், முனைவர் கு. | - நாமக்கல் (செ.வ.) |
| 230. | ஜெயபால், திரு. எஸ். | - குளச்சல் |
| 231. | ஜெயராமன், திரு. எஸ்.பி. | - வந்தவாசி (செ.வ.) |
| 232. | ஜெயலலிதா, செல்வி ஜெ | - ஆண்டிப்பட்டி |
| 233. | ஸ்டாலின், திரு. மு.க. | - ஆயிரம் விளக்கு |
| 234. | ஹசன் அலி, திரு. கு. | - இராமநாதபுரம் |
| 235. | ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் | - நியமனம் |

## பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

| | | |
|---|---|---|
| திரு. ஜி. மாசிலாமணி | .. | மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர் |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2039, சித்திரை 5

## 2008 ஏப்ரல் 17, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்*
*நடைதெரிந்த நன்மை யவர்"*

சொற்களின் வழிமுறையறிந்த நல்லறிவாளர்கள் அவையின் நேரத்தையும், நிலைமையையும் உணர்ந்து உரையாற்ற வேண்டும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள். வினா எண் 111, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**111—**

### கசிவுநீர்க் குட்டைகள்

***30146—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, காளம்பாளையம் ஊராட்சி, சீளியூர் வழுக்குபாறை ஓடை, காளம்பாளையம் பகுதிகளில் கசிவுநீர்க் குட்டைகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஏப்ரல் 17

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் தொகுதி, காளம்பாளையம் ஊராட்சி, சீளியூர் வழுக்குபாறை ஓடை, காளம்பாளையம் பகுதிகளில் கசிவுநீர்க் குட்டை (க.ச. எண் 328) கட்டுவதற்கு ரூபாய் 24.00 இலட்சத்திற்கு பொதுப் பணித் துறையால் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. நபார்டு வங்கியின் நிதியுதவி கிடைக்கப்பெற்றதும் திட்டப் பணிகள் பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதி, சீளியூர் கிராமத்தில் வழுக்குபாறை ஓடை அமைந்துள்ளது. அந்த ஓடையில் மழைக் காலத்தில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடுகின்றது. விவசாயிகள் நலன் கருதி கடந்த காலத்தில் க.ச. எண் 190, 195 மற்றும் க.ச. எண் 328 ஆகிய இரண்டு இடங்களில் கசிவுநீர்க் குட்டைகள் கட்டுவதற்காக விவசாயிகளே 10 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்து, விலைகொடுத்து வாங்கி அரசாங்கத்திற்கு ஒப்படைத்துள்ளார்கள். அரசுக்கு ஒப்படைக்கப்பட்ட அந்த இடத்தில் குட்டை கட்டுவதற்காக தற்போது பொதுப் பணித் துறையால் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருவாய்த் துறை மற்றும் வனத் துறை சான்றிதழ் பெற்று அரசாங்கத்திற்கு அனுப்பி ஓராண்டு காலத்திற்கு மேலாகிறது. ஆகவே, மேற்படி இடத்திலே கசிவுநீர்க் குட்டை கட்டி அந்த மக்களுடைய வாழ்வாதாரத்தைப் பெருக்குவதற்கு உடனே நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதியில் உள்ள காரைமேடு ஒன்றியம், காளம்பாளையம் ஊராட்சியில் க.ச. எண் 328—ல் கசிவுநீர்க் குட்டை கட்டுவதற்காக ஈரோடு, பொதுப் பணித் துறை செயற் பொறியாளர் அவர்களால் ரூபாய் 24 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. 1.5 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலத்தை ஒட்டியுள்ள 5 ஏக்கர் தனியார் நிலம் விவசாயிகளால் வாங்கப்பட்டு மொத்தம் 6.5 ஏக்கரில் கசிவுநீர்க் குட்டை அமைக்கப்படவுள்ளது.

சென்னை-600



2008 ஏப்ரல் 17]

இத்திட்டத்தில் செயற்கை முறையில் நிலத்தடி நீரை அதிகப்படுத்தும் வாய்ப்புகள் பற்றியும், நீர் செறிவு துளைகள் அமைத்தல் குறித்தான கருத்துகள் பெறும் பொருட்டும் மதிப்பீடுகள் சென்னை, தரமணி நீர்வள ஆதார அமைப்பு தலைமைப் பொறியாளர், பொதுப் பணித் துறை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அவருடைய கருத்து கிடைத்தவுடன் அந்த இடத்தில் ரூபாய் 24 இலட்சம் மதிப்பீட்டில் கசிவுநீர்க் குட்டை கட்டப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதி பெரும்பாலும் மேற்குத் தொடர்ச்சி மலையினுடைய அடிவாரத்தில் அமைந்திருக்கிறது. இந்தப் பகுதியிலே மழை பெய்கிற காலத்திலே மழை நீர் முழுவதும் வீணாகி, பவானி ஆற்றில் கலக்கின்ற அவல நிலை இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, அந்த மலையின் அடிவாரத்தில் இருக்கின்ற ஓடைகளின் குறுக்கே பல்வேறு பகுதிகளிலே இதுபோன்ற தடுப்பணைகளைக் கட்டினால் அங்கிருக்கின்ற விவசாயிகளுடைய நீராதாரத்தைப் பெருக்குவதற்கு ஏதுவாக இருக்கும். அந்த வகையிலே பல்வேறு இடங்களிலே கசிவுநீர்க் குட்டைகள் கட்ட வேண்டும் என்று அரசாங்கத்திற்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அந்தவகையிலே காளம்பாளையம் கிராமத்தில் க.ச. எண் 115/2, 153/2, வெள்ளியங்காடு கிராமம் 103/1ஏ, 235/2 ஆகிய பகுதிகளிலே கசிவுநீர்க் குட்டை கட்டுவதற்கு அரசாங்கத்திற்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அந்தப் பகுதியிலே விரைவிலே கசிவுநீர்க் குட்டை அமைத்து அங்கிருக்கின்ற விவசாயிகளுடைய வாழ்வாதாரத்தை உயர்த்துகின்றவகையிலே அரசு ஏற்பாடு செய்யுமா என்பதனைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு நான் பதில் தந்திருக்கின்றேன். அவர் இன்னும் சில சர்வே எண்களையெல்லாம் சொல்லி அந்தப் பகுதிகளையெல்லாம் சொல்கிறார். அதுபற்றித் தனியாகக் கேள்வி எழுப்பினால் பதில் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர் சட்டமன்றத் தொகுதியிலே இருக்கிற ஜமுனாமுத்தூர் மலையையொட்டி இருக்கிற கிராமங்களான அத்திமூர், திண்டிவனம், அமிர்தி, நாகநதி, சோமந்தபுத்தூர், பெரியகரம் போன்ற ஊர்களிலே மழைக் காலங்களிலே தண்ணீர் வீணாகிறது. அந்தத் தண்ணீரைத் தடுக்கின்ற விதத்திலே கசிவுநீர்க் குட்டை அமைத்தால் நீர்வள ஆதாரம் பெருகுவதோடு, அந்தப் பகுதி மக்களுக்கு வறட்சிக் காலத்திலே நீர் நிரம்பக் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கின்றது. எனவே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அதைக் கவனத்தில் கொள்வாரா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய அந்த வினா குறித்து துறை ஆராயும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 112, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரெ. நெடுஞ்செழியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**112—**

## பணிமனை

***32499—திரு. ரெ. நெடுஞ்செழியன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டையில் போக்குவரத்து பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,





(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை எண் 61, நாள் 9-9-1992-ன்படி ஏற்கெனவே இயங்கிக்கொண்டிருக்கும் பணிமனைக்கும், புதியதாக அமையவிருக்கும் பணிமனைக்கும் இடையே உள்ள தூரம் குறைந்தது 40 கிலோ மீட்டருக்கு மேல் இருக்க வேண்டும். தற்சமயம் கந்தர்வக்கோட்டையிலிருந்து 32 கிலோ மீட்டர் தொலைவில், புதுக்கோட்டையில் இரண்டு பணிமனைகளும், கந்தர்வக்கோட்டையிலிருந்து 32 கிலோ மீட்டர் தொலைவில் தஞ்சாவூரில் 3 பணிமனைகளும் அமைந்துள்ளன. எனவே, தற்சமயம் கர்ந்தவக்கோட்டையில் பணிமனை அமைக்க சாத்தியமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரெ. நெடுஞ்செழியன்.

**திரு. ரெ. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை தொகுதிக்குட்பட்ட கந்தர்வக்கோட்டை ஒன்றியத்தைத் தலைமையிடமாகக்கொண்டு 110 கிராமங்கள் உள்ளன. இந்தக் கிராமங்களைச் சேர்ந்த மாணவ, மாணவிகளும், பொதுமக்களும், மருத்துவம் உட்பட பல்வேறு அத்தியாவசியத் தேவைகளுக்கு கந்தர்வக்கோட்டைக்கு வந்து போக வேண்டிய கட்டாயச் சூழ்நிலை உள்ளது. ஆனால் இங்கு இயங்கும் பேருந்துகளின் எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ளது என்பதுடன், தேவைக்கேற்பவும் இல்லை. தற்போது இயக்கப்படுகின்ற 11 வழித்தடங்களில் சென்று வரும் பேருந்துகள் டீசல் போடவும், தேவையான செப்பனிடுதலைச் செய்துகொள்ளவும் 32 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள புதுக்கோட்டை பணிமனைக்குப் போய் வர வேண்டிய சூழ்நிலை உள்ளது. அதன்பொருட்டு டீசலைச் சிக்கனப்படுத்தவும், நேரம் விரயமாவதைத் தடுக்கவும், மக்களின் நலன் கருதி கந்தர்வக்கோட்டையில் ஒரு பணிமனை அமைத்தால் புதிய வழித்தடங்களும், கூடுதல் வழித்தடங்களும் அமைக்க ஏதுவாக இருக்கும் என்பதால், கந்தர்வக்கோட்டையில் பணிமனை ஏற்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கந்தர்வக்கோட்டையில் பணிமனை அமைப்பதற்கு கடந்த ஆண்டில் இடம் தேர்வு செய்யப்பட்டது. ஆனால், அங்கு இடவசதிகள் தனியாரிடத்திலே கேட்டு தரப்படாத காரணத்தினாலே அறநிலையத் துறைக்குச் சொந்தமான சுமார் 5 ஏக்கர் பரப்பளவுள்ள இலுப்பத்தோப்பு என்னும் கந்தர்வக்கோட்டை உள்ள இடத்தில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மாத்திரம் கேளுங்கள்.

**திரு. ரெ. நெடுஞ்செழியன்:** கேள்விதான் சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியா இது? ஐந்தரை ஏக்கர் இருக்கிறது, நாலரை ஏக்கர் இருக்கிறது என்பது கேள்வியா?

**திரு. ரெ. நெடுஞ்செழியன்:** பணிமனை அமைக்க அரசு முன்வருமா என்று தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை பணிமனையில், 2 பணிமனைகளிலும் 155 பேருந்துகள் இப்போது இயங்கிக்கொண்டிருக்கின்றன. அதிலே 6 நகரப் பேருந்துகள் கந்தர்வக்கோட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு அனைத்து இடங்களுக்கும் சென்று வருகின்றன. எனவே 32 கிலோ மீட்டர் சென்று வருவது என்பது போக்குவரத்துக் கழகத்திற்கு ஒரு செலவினம்தான். அதை ஒத்துக்கொள்கிறோம். ஆனால் இருக்கின்ற நிதிநிலைமையிலே உடனடியாக புதிய பணிமனை அமைக்கக்கூடிய சாத்தியக்கூறு இல்லை என்று துறை தெரிவித்திருக்கிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தந்தப் பகுதியிலே இடம் பார்த்துத் தருவார்களானால் அனைத்து இடங்களிலுமே பணிமனை அமைப்பது குறித்துப் பரிசீலிக்கலாம். அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடத்தைக் கேட்கின்றபோது, அவர்கள் இப்போது வாடகைக்குத்தான் தருகிறார்கள், சொந்தமாக மாற்றித் தருவதில்லை. எனவே, வாடகை கட்டுப்படியாகக்கூடிய நிலையில் இல்லை. எனவே மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம் இடத்தைத் தேர்வு செய்து தருவதற்கு நீங்கள் உதவி புரிவீர்களானால் வரும் ஆண்டில் அதைப்பற்றி யோசித்து ஒரு முடிவெடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுஞ்செழியன்.

**திரு. ரெ. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறைக்குச் சொந்தமான அந்த இடம் 5 ஏக்கர் இடமும் முழுவதுமாக எந்தப் பயனும் இல்லாததாக இருக்கிறது. அதனால் அந்த இடத்தை எடுத்துக்கொள்ளலாம். இல்லையென்று சொன்னால், தனியாரிடத்திலே வாங்குவதற்கு, எங்கள் கிராமத்தைச் சேர்ந்தவர்களும் உதவி செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, கந்தர்வக்கோட்டையில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்காக கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பாக





50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் தீட்டி அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அது எந்த நிலையில் உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கந்தர்வக்கோட்டையில் புதிய பேருந்து நிலையம் அமைவதைப்பற்றி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்மூலம் தெரிந்துகொள்ள வேண்டும். நீங்கள் சொல்வதைக் கேட்டு உங்களுக்கு நிச்சயமாக அதற்குப் பதில் சொல்கிறோம். ஆனால், புதிய பணிமனை அமைப்பதற்குரிய இடத்திற்கு நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் உதவி புரிவார்களேயானால் நிச்சயமாக வரும் ஆண்டிலே அங்கு ஒரு பணிமனை அமைப்பதற்கு நமது அரசு முயற்சி எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்களினுடைய நிர்வாக வசதிக்காக பணிமனைகளைப் புதிதாக உருவாக்குவதுபோல் பண்ருட்டி, கடலூர், திட்டக்குடி, சிதம்பரம், நெய்வேலி, விருத்தாசலம் போன்ற பகுதிகளை உள்ளடக்கி, கடலூர் கோட்டத்திற்கு என்று ஒரு பொது மேலாளர் G.M. அலுவலகம் ஒன்றை உருவாக்கி, அங்கு இருக்கக்கூடிய தொழிலாளர்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கும், போக்குவரத்துக்குச் சிரமம் இல்லாமல் கிராம மக்கள் சென்று வருவதற்கும் ஏதுவாக அப்பகுதிக்கென்று புதிய பொது மேலாளர் அலுவலகம் ஒன்றை உருவாக்குவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் என்றிருந்தது. இப்போது விழுப்புரம் போக்குவரத்துக் கழகமாக இருக்கின்றது.

அந்தப் போக்குவரத்துக் கழகத்தில் கிட்டத்தட்ட 2,900 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. முழுமையாக திருவள்ளூர் மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம், வேலூர் மாவட்டம், விழுப்புரம் மாவட்டம், கடலூர் மாவட்டம் உள்ளடக்கிய பகுதிகளிலே அவையெல்லாம் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மேலும், நிர்வாகத்தை நல்லமுறையில் சீர்செய்வதற்காக கடந்த ஆண்டு, திருவண்ணாமலையில் ஒரு பொது மேலாளரைக் கொண்டு ஒரு அலுவலகம் திறக்கப்பட்டது. இந்த ஆண்டு எங்களுடைய மானியக் கோரிக்கையிலே அறிவித்திருக்கிறோம். கடலூரை தலைநகரமாகக் கொண்டு, ஒரு பொது மேலாளரை, இலகுவாக அந்தப் போக்குவரத்துக் கழகங்களைக் கையாளுவதற்கு ஓர் அதிகாரியை அங்கு போடுவதாக போக்குவரத்துக் கழகத்திலே சொல்லியிருக்கிறோம். விரைவிலே அதைப்பற்றி யோசித்து ஆவன செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரில் ஏற்கெனவே நான் வலியுறுத்தியதைப்போல, கூடுதலான பேருந்துகள் அங்கே இயக்கப்பட்டு வருகிற சூழலில் கூடுதல் பேருந்து நிலையம் கேட்டேன். நேற்றைக்கே அது வரும் என்று எதிர்பார்த்தேன். கொஞ்சம் தள்ளிப்போயிருக்கிறது. அங்கே பணிமனைக்குள்ளே பேருந்துகளை நிறுத்துவதற்கே இடம் இல்லாமல், இரவு நேரங்களிலே பாதைகளில் நிறுத்த வேண்டிய அளவிற்கு இடவசதி குறைவாக இருக்கிறது. ஆகவே, திருப்பூரில் இருக்கக்கூடிய அந்த இரண்டு பணிமனைகளுக்கு மாற்றாக நகரத்தை விட்டு சற்று வெளியே ஒரு புதிய பணிமனை அமைப்பதற்கு போக்குவரத்துத் துறை முன்வருமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதுபோல, பல சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் பகுதியிலே புதியதாக பணிமனை அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இருக்கின்ற நிதிநிலையில் இப்போது அதற்கு சாத்தியக்கூறு இல்லை. உங்களுக்குத் தெரியும், திருப்பூரிலே ஒரு ஏக்கர் நிலம் என்ன விலை விற்கிறது என்று. அங்கே பணிமனை



அமைக்கவேண்டும் என்றால், 5, 6 ஏக்கர் நிலம் வேண்டும். அதற்கு கட்டுமானப் பணிக்கென்று பணம் வேண்டும். அதற்கெல்லாம் நிதிநிலை சரியாக இல்லை. கோவை போக்குவரத்துக் கழகம் இப்போதுதான் வரவுக்கும் செலவுக்கும் சரியாக இருக்கின்ற ஒரு நிலைக்கே வந்துள்ளது. இந்த இரண்டு ஆண்டு காலம் நம்முடைய முதலமைச்சர், அரசு பணத்தைத் தந்து புதிய பேருந்துகளை வாங்கிய காரணத்தால்தான் அது இந்த நிலைக்கு வந்திருக்கிறது. எனவே, எங்களுக்கே சிரமமாகத்தான் இருக்கும். இங்கிருந்து 32 கிலோ மீட்டர் அவர் சொல்கின்றதுபோல வெளியே சென்று டீசல் போடுவதற்காக போய் வரும்போது ஒவ்வொரு பேருந்தும் 64 கிலோ மீட்டர் சென்று வரக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. அதை குறுகிய வட்டத்திலே கொண்டுவர வேண்டுமென்றால், அதற்கான நிதி ஆதாரங்களைத் திரட்ட வேண்டும். இப்போதுதான் மெதுவாக மெதுவாக அது சரியாகிக் கொண்டிருக்கிறது. வருங்காலத்திலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை யோசிக்கலாம். ஏற்கெனவே நீங்கள் கேட்டதால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் R.T.O. அலுவலகம் வடக்கு, தெற்கு என பிரித்துத் தந்திருக்கிறார்கள். இப்போது இதையும் மாண்புமிகு முதலமைச்சருடைய அனுமதியைப் பெற்று முடிந்த வரை எவ்வளவு விரைவாகச் செய்ய முடியுமோ அவ்வளவு விரைவாகச் செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயே பின்தங்கிய ஒரு மாவட்டம் உள்ளது என்று சொன்னால், அது வேலூர் மாவட்டம்தான். அந்த வேலூர் மாவட்டத்திலேயே மிகவும் பின்தங்கிய தொகுதி சோளிங்கர் சட்டமன்றத் தொகுதி. அங்கே வாழ்கின்ற பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக அங்கே ஒரு போக்குவாத்துப் பணிமனையை நீங்கள் அமைத்துத் தர வேண்டும். ஏனென்று சொன்னால், கடந்த காலங்களில் பாண்டியநல்லூரிலே ஏறத்தாழ 10 ஏக்கர் நிலம் இதற்காகக் கையகப்படுத்தப்பட்டது; அந்த 10 ஏக்கர் நிலமும் இப்போது ஆக்கிரமிப்பாளர்களால் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்து கொண்டிருக்கிறது. அதனால் இந்த நிலத்திலே—அமைச்சர் பல்வேறு சாதனைகளைப் போக்குவரத்துத் துறையிலே ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஓர் இளம் அமைச்சர் நமக்கு தமிழகத்திலே கிடைத்திருக்கிறார். இந்த நல்ல நேரத்திலே—

போக்குவரத்துப் பணிமனையை நீங்கள் அமைத்துத் தர முன்வரவேண்டும் என்று சொல்லி, நடவடிக்கை எடுப்பாரா என்று கேட்டு அமர்கிறேன்.

*முற்பகல் 9–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல, இடம் ஏற்கெனவே வாங்கப்பட்டிருக்குமானால், அவருடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து தொகையை ஒதுக்கித் தருவாரேயானால், இந்த ஆண்டே அந்தப் பணிமனையை அமைப்பதற்குரிய முயற்சி எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பகுதியில், இப்போது டாக்டர் கலைஞர் அவர்களால் Hi-tech Industrial Park வரவிருக்கிறது. அங்கே ஏராளமான கிராமங்கள் இருக்கின்றன; அங்கே தமிழக அரசு பஸ்ஸும் வரவில்லை; அங்கே தனியார் இரண்டு பேர் பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறார்கள். பக்கத்தில் ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்குச் சென்றால், 50 பள்ளிக் குழந்தைகள், பள்ளிக்கூடத்திற்குப் போவதற்கு வசதியாக இருக்கும் என்று அந்தத் தனியார் நிறுவனங்களைக் கேட்டால், 'அது எங்களுக்குத் தெரியாது; நீங்கள் அரசாங்கத்திடம் சொல்லுங்கள்' என்று சொல்கிறார்கள். R.T.O.–விடம் போனால், 'எம்.எல்.ஏ. சொன்னால் நாங்கள் கேட்க வேண்டுமென்ற சட்டம் இல்லை; எங்கள் route பிரகாரம்தான் போகும்' என்று சொல்கிறார்கள். எனவே, சிறு கிராமங்களுக்குத் தனியார் பஸ்ஸோ அல்லது அரசு பஸ்ஸோ, ஒரு கிலோ மீட்டர் இடைவெளியில் ஒரு கிராமத்தைத் தொடுவதற்கு நீங்கள் வசதி செய்து தரவேண்டுமென்று நமது சட்டப் பேரவைத் தலைவர்மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு மதுரை போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக 4,000 பேருந்துகள் அங்கே இயக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. கடந்த காலத்தில், பெரும்பாலான பேருந்துகள் நகரப் பேருந்துகளாக இயக்கப்பட்ட காரணத்தால், போதிய வருவாய் இல்லை. இப்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த ஆண்டு மதுரை போக்குவரத்துக் கழகத்திற்கு மட்டும் 1,000 புதிய பேருந்துகளை அரசு செலவிலே நமக்கு அளித்திருக்கிறார்கள். எனவே, இந்த ஆண்டுதான் திருநெல்வேலி, தூத்துக்குடி பகுதிகளில் குறிப்பாக, அந்தப் பகுதிகளில் இருக்கின்ற பழைய பேருந்துகளையெல்லாம் மாற்றி, புதிய பேருந்துகளாக விடுவதற்கு இந்த அரசு முயற்சி எடுத்திருக்கிறது. ஒரு கிலோ மீட்டர் தூரத்திலே, பள்ளிகளுக்குச் செல்லக்கூடிய 50 குழந்தைகள் இருக்கின்றனர் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்த அளவில், எந்தத் தனியார் போக்குவரத்தையும் நாம் ஆதரிக்கவில்லை. நாம் பொதுவுடைமை இயக்கத்தின் சார்பாக இருப்பதால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசு சார்பாகத்தான் பேருந்துகளை விடச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, அந்தப் பகுதியில் இடத்தைக் குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால், அந்தப் பள்ளி மாணவர்கள் சிறந்த முறையிலே வந்து செல்வதற்குரிய பேருந்து வசதிகளை உடனடியாக உங்களுக்குச் செய்து தருகிறோம் என்ற உறுதியை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 113, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ், மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**113—**

**வருவாய் வட்டம்**

***31891—திருமதி ரா. லீமா றோஸ்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவட்டாறு ஒன்றியத்தை வருவாய் வட்டமாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவட்டாறு ஒன்றியம் என்பது 10 கிராம ஊராட்சிகளையும், 6 பேரூராட்சிப் பகுதிகளையும் கொண்ட 7 வருவாய்க் கிராமங்களையும் உள்ளடக்கிய ஒன்றியமாகும். பாலமோர், சுருள்கோடு, பேச்சிப்பாறை ஆகிய ஊராட்சிகளும், பொன்மனை பேரூராட்சியும் மலைப் பகுதிகளைக் கொண்டது. பாலமோர் ஊராட்சி மக்கள் சான்றிதழ் பெற கல்குளம் வட்டத்திற்கு வந்து செல்ல சுமார் 80 கி.மீ. தூரமும், பேச்சிப்பாறை ஊராட்சியில், கோதையாறு மேல்தாங்கலில் இருக்கும் மக்கள் சான்றிதழ் பெற, கல்குளம் வட்டத்திற்கு வந்து செல்ல சுமார் 150 கி.மீ.–க்கும் மேலாகிறது. சான்றிதழ் பெற வரும் மக்கள் முழுநாள் இங்கே செலவிட வேண்டியிருப்பதோடு, போக்குவரத்து வசதியில்லாத மலைப் பகுதி என்பதால், பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். ஆகவே, மலைப் பகுதிகள் என்ற சிறப்புக் காரணத்தைக் கொண்டேனும், திருவட்டாறை மையப்படுத்தி வருவாய் வட்டமாக அறிவிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வருவாய் வட்டம் அறிவிக்கக் கோரியுள்ளார். ஒரு வட்டம் அமைப்பதற்கு பல்வேறு நிபந்தனைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகளில், மக்கள் தொகை ஒன்றுதான் அங்கே அரசினுடைய விதிமுறைகளுக்குட்பட்டு வருகின்றது. குறைந்தபட்சம் 1 இலட்சம் மக்கள் தொகை இருக்கவேண்டும்; அங்கு 1½ இலட்சம் மக்கள் தொகை இருக்கின்றது. மற்றபடி வருவாய்க் கிராமங்கள் குறைவாக இருக்கின்றன. ஒரு வருவாய் வட்டம் அமைப்பதற்குக் குறைந்தபட்சம் 250 சதுர கிலோ மீட்டர் இருக்கவேண்டுமென்று விதிமுறை இருக்கின்றது. அதுவும் இதிலே வரவில்லை. மூன்று நிபந்தனைகள் இதிலே ஒத்துவரவில்லை என்றாலும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அது மலைப் பகுதியாக இருக்கின்றது என்பதை இங்கே கோடிட்டுக் காண்பித்திருக்கிறார்கள். ஒரு பகுதியிலிருந்து 80 கி.மீ. தூரம் வரை வரவேண்டியிருக்கிறது என்பதையும் இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். எதிர்காலத்தில் வேண்டுமானால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து அரசு பரிசீலிக்கும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருங்காலத்திலாவது பரிசீலிக்கலாம் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைப் புறநகர்ப் பகுதியான அம்பத்தூர் தாலுகா மிகப் பெரிய தாலுகாவாக இருக்கின்றது.

சுமார் 15 இலட்சம் வாக்காளர்களைக் கொண்ட அந்த அம்பத்தூர் வட்டத்தை மூன்றாகப் பிரித்து, திருவொற்றியூர், மாதவரம் மற்றும் அம்பத்தூர் என்று பிரிக்கின்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறதா? அங்கே எப்போது போய்ப் பார்த்தாலும் தாசில்தாரே இருப்பதில்லை. எனவே, அங்கே பொதுமக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்று சொன்னால் அது மிகப்பெரிய இடமாக இருக்கின்ற காரணத்தினால், அவர்கள் போய் வருவதற்கே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அம்பத்தூர் வட்டத்தை மூன்றாகப் பிரிக்கின்ற எண்ணம் அரசின் செயற்குறிப்பில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சென்னைப் பெருநகரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளிலே, அம்பத்தூர், தாம்பரம், சென்னை நகரத்திலே மக்கள்தொகை அதிகம் கொண்ட பகுதிகளாக இருப்பதை அவர்கள் சுட்டிக்காட்டியிருப்பது உண்மைதான். அதை அரசு ஆய்வு செய்துகொண்டுதான் இருக்கின்றது. குறிப்பாக, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், இந்த ஆண்டு, ஒரு 50 ஆண்டுகால கோரிக்கையான, கரம்பக்குடி வட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். கோரிக்கை வைப்பதற்காக இங்கே வந்த ஒரு

[2008 ஏப்ரல் 17

நபர், பல்லவராயர் என்பவர், முதலமைச்சரிடத்திலே கோரிக்கை மனுவைக் கொடுத்துவிட்டுச் செல்லுகின்ற வேளையிலே, விபத்திலே மரணம் அடைந்துவிட்டார். அதையே நினைவிலே வைத்து, முதல் வட்டமாக தமிழகத்திலே தாலுகா-வட்டம் கொடுத்தவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல, பிற்படுத்தப்பட்ட மாவட்டமான புதுக்கோட்டையிலே, பொன்னமராவதிக்கும் வட்டம் கொடுத்திருக்கிறார். ஆக, முதல்வர் அவர்களைப் பொறுத்த அளவில், தமிழகத்திலே கடந்த ஆண்டு இரண்டு புதிய வட்டங்களைத் தோற்றுவித்தார்கள். இந்த ஆண்டும் வட்டம் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. அரசுக்கு ஆகின்ற செலவு, ஒரு வட்டம் தோற்றுவித்தால், ரூ.50 இலட்சம்வரை ஓராண்டுக்கு ஆகின்றது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம் அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொல்லியிருப்பது அரசினுடைய ஆய்விலே இருக்கின்றது. விரைவிலே மாண்புமிகு முதல்வரோடு கலந்து, மிகப் பெரிய வட்டமாக இருக்கக்கூடிய தாம்பரத்தில் 18 இலட்சம் பேர் இருக்கிறார்கள். குறிப்பாக, குறைந்தபட்சம் ஒரு இலட்சத்திலிருந்து 5 இலட்சம் வரைக்கும் ஒரு வட்டத்திலே இருக்கலாம். ஆனால், தாம்பரத்தில் 18 இலட்சம் பேர் இருக்கிறார்கள். இது சென்னைப் பெருநகரம். நீலகிரி, கன்னியாகுமரி இவையெல்லாம் மலைப் பகுதி. ஆறு, மலைகளைக் கொண்டிருக்கின்ற பகுதிகளையும், பெருநகரங்களாக இருக்கின்ற பகுதிகளையும் சிறப்பு ஆய்வாக அரசு கவனத்திலே கொண்டு, எதிர்காலத்திலே அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டங்களைப் பிரிப்பது குறித்து இங்கே அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்திருக்கிறார்கள். நேற்றையதினம் நமது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், ஒன்றியங்களை வரையறை செய்வதற்கான திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அது மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கிறது. இதையெல்லாம் நாம் வரையறை செய்கிறபொழுது, ஏற்கெனவே இந்த அவையிலே, மாவட்டங்கள் பிரிக்கப்படுவதற்கான ஒரு ஆலோசனையை நான் சொன்னபோது மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறுக்கிட்டுச் சொன்னார்கள்; நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மாவட்டம் என்ற நிலையிலே ஒரு நாடாளுமன்றத் தொகுதிக்கு ஒரு மாவட்டம்



2008 ஏப்ரல் 17]

என்ற அளவிலே உருவாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தோம். அதைப்பற்றி பரிசீலிக்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அன்றையதினம் அறிவித்தார்கள். அதைப்பற்றி, இந்த அரசு என்ன கருத்து கொண்டிருக்கிறது? அதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டம் அமைப்பதுபற்றிய மூலக் கேள்விக்கு நான் பதில் சொல்லிக்கொண்டிருக்கின்றேன். மாவட்டம் அமைப்பதுபற்றி, நாடாளுமன்றத் தொகுதிக்கு ஒரு மாவட்டம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. அதிலே மாற்றுக் கருத்து இல்லை. இந்த ஆண்டுகூட புதிய மாவட்டம் அறிவித்து, புதிய அரியலூர் மாவட்டத்தை நாம் தோற்றுவித்திருக்கிறோம். தொடர்ந்து தமிழகத்திலே தேவைப்படுகின்ற மாவட்டங்களிலே பிரித்து, புதிய மாவட்டங்களை உருவாக்குவதற்குரிய நடவடிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆய்வு செய்து, அதுசம்பந்தமாக நிச்சயமாக, பாராளுமன்றத்திற்கு ஒரு மாவட்டம் என்பதை எதிர்காலத்திலே பரிசீலிக்கலாம் என்று இதே அவையிலே அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள், அதுபற்றி மாண்புமிகு முதல்வர் அவர்கள் முடிவு எடுப்பார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலத்தினுடைய அவசியத் தேவையை உணர்ந்து, ஊராட்சிகளை, ஒன்றியங்களை, வட்டங்களை, மாவட்டங்களைப் பிரிப்பது, நிர்வாக வசதிக்காக, மக்கள் நலத் திட்டங்கள் விரைந்து சென்றடைவதற்காக என்ற அடிப்படையிலே பிரித்துக்கொண்டிருக்கிறீர்கள். அமைச்சர் அவர்கள்கூட மாவட்டங்களைப் பிரிப்பது பற்றி இங்கே விளக்கிச் சொன்னார்கள். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தவாறு, ஒரு நாடாளுமன்றத் தொகுதிக்கு ஒரு மாவட்டம் என்ற நிலை வருவது வரவேற்கக்கூடியது. அதற்குள்ளாக, கோவை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, திருப்பூரைத் தலைநகரமாகக் கொண்டு ஒரு மாவட்டம் உருவாக்கியிருக்கிறீர்கள்.

இது வரவேற்கக்கூடியது. அதைப்போல 12 சட்டமன்றத் தொகுதிகளைக் கொண்ட, மிகப்பெரிய மாவட்டமான, 250 கிலோ மீட்டர் நீளமுள்ள மிகப்பெரிய மாவட்டங்களை நிர்வாக வசதிக்குப் பிரிப்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்ற அடிப்படையில், வேலூர் மாவட்டம், விழுப்புரம் மாவட்டம், சேலம் மாவட்டம் கோவை மாவட்டம் போன்ற மாவட்டங்களையெல்லாம் பிரிப்பது அவசியமாக இருக்கிறது. ஆகவே, அந்த அடிப்படையிலே, நடப்பு ஆண்டிலே பிரிப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்பேரிலே அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9–55*

நம்முடைய சென்னை மாநகராட்சி இப்போது மிகப்பெரிய மாநகராட்சியாக, உலகத்திலேயிருக்கிற 97 நாடுகளில் முதன்மையான மக்கள் தொகை கொண்ட நகரமாக இருக்கிறது. தாம்பரம் மிகப் பெரிய மக்கள் தொகை கொண்ட நகரம். அமைச்சர் அவர்கள்கூட இங்கே சொன்னார்கள். ஆகவே, தாம்பரம், அதையொட்டியுள்ள நகரங்கள் மற்றும் உள்ள பேரூராட்சிகளெல்லாம் வளர்ந்து கொண்டிருக்கின்ற பகுதிகள்; தொழில் நிறுவனங்கள் வந்துகொண்டிருக்கிற பகுதிகள். ஆகவே, சென்னை மாநகராட்சியையும் இரண்டாகப் பிரிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய மாவட்டங்களைத் தோற்றுவிப்பதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஆட்சிப் பொறுப்பேற்று இரண்டாண்டு காலத்திலே இரண்டு புதிய மாவட்டங்களை உருவாக்கியிருக்கிறார்கள். இப்பொழுது திருப்பூர் மாவட்டம். நீங்களே இதைச் சொன்னீர்கள். ஆக, இந்த அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. நிர்வாக நலனைக் கருதி, அவசியமானதை, நீண்டநாள் கோரிக்கைகளை நிறைவேற்றுகின்ற வகையில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். எதிர்காலத்திலேயும் நிச்சயமாக நம்முடைய முதல்வர் அவர்கள் அரசு, அவற்றை நிறைவேற்றுவதற்குரிய—நிதியாதாரம் குறுக்கீடாக இருக்காது—நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதுவும், சூழ்நிலையைப்



பொறுத்து மேற்கொள்ள முடியும். மாவட்டங்களைப் பிரிப்பது என்பது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய முடிவு. குறிப்பாக, சென்னை மாநகராட்சியைப் பிரிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இதுகுறித்து, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் முடிவு செய்ய வேண்டும். குறிப்பாக, இந்த அரசைப் பொறுத்த அளவில், மாவட்ட நிர்வாகத்திற்காக, நிதியாதாரங்களைக்கூடக் கருத்திற்கொள்வதில்லை. மக்களுடைய தேவைக்கேற்றபடி, அரசு முன்னேற்றமான நடவடிக்கைகளை வெகுவிரைவாக எடுத்து வருகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கூ.ந. சேகரன்.

**திரு. கூ.ந. சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்ற, சட்டமன்றத் தொகுதிகளுடைய எல்லைகளையெல்லாம் இந்தியத் தேர்தல் ஆணையம் புதியதாக வரையறை செய்து வெளியிட்டு, இனி வருகின்ற தேர்தல்களும் அந்த அடிப்படையிலேதான் நடைபெறும் என்று தெரிவித்திருக்கின்றது. நேற்றையதினம் நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், சட்டமன்றத் தொகுதிகளின் எல்லை வரையறைக்குட்பட்டு ஊராட்சி ஒன்றியங்களுடைய எல்லைகளும் வரையறை செய்து அறிவிக்கப்படும் என்று அறிவிப்பு செய்து வருகிறார்கள். எங்கள் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலே, லால்குடி சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு வட்டம் இருக்கிறது. அதேபோன்று முசிறி சட்டமன்றத் தொகுதியிலே இரண்டு வட்டங்கள் இருக்கின்றன. ஆனால், திருச்சி வட்டத்தைப் பொறுத்தவரை, திருச்சி தாலுகாவைப் பொறுத்தவரையிலே, மூன்று சட்டமன்றத் தொகுதிகள் அடங்கியிருக்கின்றன. அதிலே, திருச்சிராப்பள்ளி–1, திருச்சிராப்பள்ளி–2, திருவெறும்பூர் ஆகிய மூன்று சட்டமன்றத் தொகுதிகளும் ஒரே தாலுகாவிலே அடங்கியிருக்கின்றன. திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதி என்பது, மிகப் பெரிய தொகுதியாக இருக்கின்ற காரணத்தால், திருவெறும்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு, புதிய தாலுகா ஒன்று தோற்றுவிக்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆரம்பகட்டத்திலேயே தெளிவாகக்

குறிப்பிட்டிருக்கிறேன். சென்னை மாநகரத்திலே மொத்தம் 5 வட்டங்கள்தான் இருக்கின்றன. எத்தனை தொகுதிகள் இருக்கின்றன என்பதும் உங்களுக்குத் தெரியும். 14 தொகுதிகள் சென்னை நகரத்திலே இருக்கின்றன. அதேமாதிரியாகத்தான், திருச்சியிலே ஒரு வட்டத்திலே மூன்று தொகுதிகள் இருக்கின்றன. ஆனால், ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள்தான் இருக்கின்றன. ஒரு வட்டம் அமைப்பதற்கு சுற்றளவு 250 சதுர கிலோமீட்டர்வரை இருக்கலாம் என்று நம்முடைய விதிமுறைகள் இருக்கின்றன. ஆகவே, திருச்சியைப் பொறுத்தவரை 250 சதுர கிலோமீட்டருக்கு மேல் இருப்பதற்கு வாய்ப்பில்லை. ஆகவே, ஒரு வட்டமே தற்சமயம் போதுமானதாகத்தான் இருக்கின்றது என்று கருதுகின்றேன். எதிர்காலத்திலே சென்னையிலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து, அப்படி அவசியம் ஏற்பட்டால் பிரிக்கின்ற காலத்திலே, எதிர்காலத்திலேதான் அதைக் கருத்திலே கொள்ள முடியுமே தவிர, தற்சமயம் பிரிப்பதற்கு வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 114, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி, மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**114—**

### சுற்றுலாத் தலம்

***33684—திரு. தி. இராமசாமி:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு சதுரகிரி சுந்தர மகாலிங்கம் மலையினைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

துறையின் சார்பாக எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கருத்திற்கொண்டு, தேவையான அடிப்படை வசதிகளைத் துறை செய்து வருகிறது. (குறுக்கீடு)





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, திரு. சின்னசாமி? அங்கே என்ன சத்தம்? அமைதியாக இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழ்க்கை நெருக்கடியிலும், மன அழுத்தத்திலும் வாழ்கின்ற மக்கள், மனதுக்கு இதமளிக்கின்ற இடங்களைத் தேடிச்செல்வது இன்றைக்குப் பழக்கமாக இருக்கிறது. அந்த அடிப்படையில் எங்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் வத்திராயிருப்புக்கு அருகில் இருக்கிற சதுரகிரி சுந்தர மகாலிங்க சுவாமி கோயில் மலை, மதுரை மாவட்டம், சாத்தூர் வனச் சரகத்திற்கு உட்பட்டது. இந்த சதுரகிரி மலைக்கு வத்திராயிருப்பு வழியாகத்தான் சாலைப் போக்குவரத்து வசதி உள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள இந்த மலை இயற்கை வளம் மிக்கது. இந்த மலையில் கோயில் அமைந்துள்ள இடம், தரைமட்டத்திலிருந்து 4,500 அடி உயரம் உள்ளது. சதுரகிரி மலையில் ரூரைக்குட்டியாறு, அத்தியூத்து ஆறு ஆகிய இரண்டு ஆறுகள் உற்பத்தியாகி, தரைப்பகுதியில் கல்லணை ஆற்றில் கலந்து செல்கிறது.

இங்கு மக்கள் வருகை அதிகம். இந்தக் கோயிலில் வருடத்திற்கு சுமார் 20 இலட்சம் ரூபாய் வருமானம் வருகிறது. இந்தப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக அறிவித்து, கோயில் வரை மலையில் சாலை வசதி செய்வதுடன் வத்திராயிருப்பிலிருந்து மலைவரை செல்லும் சாலையை இருவழிச் சாலையாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-00

மலையில் உற்பத்தியாகும் ஆறுகளின் இடையில் தடுப்பணைகள் கட்டி நீரைத் தேக்கி, மலையைக் குளிர்ச்சியாக்கி, இயற்கையெழில் கொஞ்சும் இடமாக மாற்றுவதன் காரணமாக மேலும் மக்களை ஈர்த்து இந்தப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக ஆக்குவதன்மூலம் இந்தப் பகுதி வியாபார ரீதியாகவும் மேலும் வளர்ச்சி அடைவதற்கும் வாய்ப்பாக இருக்கும். எனவே, இதை அரசு அறிவிக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு சுந்தர மகாலிங்கம் மலைப் பகுதியில் சுற்றுலா

பயணிகளுடைய எண்ணிக்கை ஆண்டுக்கு 13,680 பேர். அந்தப் பகுதிகளில் அடிப்படை வசதிகளைச் செய்ய வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே கருத்துரு கேட்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இதுவரை துறைக்கு கருத்துரு அனுப்பாத காரணத்தால் காலதாமதமாகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பித் தந்தவுடன் அந்த அடிப்படைத் தேவைகள் இந்தத் துறையின் சார்பாகச் செய்து கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அளவில் சுற்றுலாத் தலங்களுடைய கையேடு ஒன்று மாநில அரசால் வெளியிட்டிருப்பதுபோல, ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கின்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், பண்பாட்டுத் தலங்கள், வழிபாட்டுத் தலங்கள், இயற்கையெழில் கொஞ்சும் இடங்கள் இவற்றை ஒரு புத்தக வடிவில் வெளியிட்டு, மாவட்டவாரியான சுற்றுலாத் தலங்களாக அறிவிக்க அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, எங்கள் விருதுநகர் மாவட்டம், திருச்சுழியில் ரமண மகரிஷி அவதரித்த இடம், விருதுநகரில் பெருந்தலைவர் காமராஜருடைய நினைவிடம், ஸ்ரீவில்லிபுத்தூரில் அருள்மிகு ஆண்டாள் திருக்கோயில், இராஜபாளையத்தில் முன்னாள் முதலமைச்சர் பி.எஸ்.கே. நினைவிடம், ஐயனார்கோயில் அருவி, வத்திராயிருப்பில் இருக்கின்ற நமது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் கட்டப்பட்ட பிளவுக்கல் கோயிலாறு அணைப்பகுதி, அதேபோல சதுரகிரி சுந்தர மகாலிங்கம் கோயில் இவற்றை இணைத்து ஒரு மாவட்டச் சுற்றுலா என்ற அடிப்படையில் அறிவிப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட நினைவிடத்தைப் பொறுத்தமட்டில், அனைத்து நினைவிடங்களும் செய்தித் துறையின் சார்பாகப் பராமரிக்கப்பட்டு, அவை சம்பந்தமான



விளம்பரங்கள் செய்யப்பட்டு வருகின்றன. இந்தத் துறையின் சார்பாக மாநிலத்தில் இருக்கக்கூடிய அனைத்து சுற்றுலாப் பகுதிகளையும் இணைத்து கையேடுகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. இருந்தாலும், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தமட்டில் அதிகமான சுற்றுலாத் தலங்களை உள்ளடக்கிய மாநிலமாக இருக்கின்ற காரணத்தால், இந்தத் துறையின் சார்பாக பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரையை ஏற்று Master plan–பெரும் திட்டம்–தயாரிப்பதற்காக ஹட்கோ நிறுவனத்திடத்திலே இந்தத் துறை ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஹட்கோ நிறுவனத்தினுடைய அறிக்கை இன்னும் இரண்டு அல்லது மூன்று மாத காலத்திற்குள்ளாக துறையினிடத்தில் ஒப்படைக்கப்படும். ஒப்படைத்த பிறகு, மாநிலத்தில் இருக்கக்கூடிய சுற்றுலாத் தலங்களை இணைத்து பல்வேறு அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்குத் துறை தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்.

**திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அச்சரப்பாக்கம் தொகுதியிலுள்ள வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் மிகவும் புகழ் பெற்றது. இங்கு உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகள் வந்து பார்வையிட்டுச் செல்கின்றனர். மாணவர்கள், மாணவிகள், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள மக்களெல்லாம் சுற்றுலாப் பயணிகளாக அங்கு வந்து பார்வையிட்டுச் செல்கிறார்கள். ஆனால், அவர்கள் தங்குவதற்கு அங்கே இடம் இல்லை. வெளிநாடுகளிலிருந்து வருகின்ற பயணிகள் குடிப்பதற்கும் பாதுகாக்கப்பட்ட தண்ணீர் இல்லை. அதேபோல, அவர்கள் வேண்டுகின்ற உணவும் கிடைப்பதில்லை. ஆகவே, வேடந்தாங்கலை உலகத் தரம்வாய்ந்த சுற்றுலாத் தலமாக அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அச்சரப்பாக்கம் தொகுதியை உள்ளடக்கிய வேடந்தாங்கல் பகுதி பறவைகள் சரணாலயமாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. அங்கு சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கான விடுதிகள் கட்ட

வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கைகள் வைத்திருக்கிறார்கள். துறையைப் பொறுத்தமட்டில், 22 சுற்றுலா விடுதிகள் இந்தத் துறையின் சார்பாக பல்வேறு பகுதிகளில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. எனவே, புதிதாக விடுதிகள் கட்டக்கூடிய கருத்துரு எதுவும் இந்தத் துறையினிடத்தில் இல்லை. தனியார்கள் யாராவது முன்வந்தால், துறையின் சார்பாக அவர்கள் ஊக்கப்படுத்தப்படுவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ராம. சுப்புராம்.

**திரு. ராம. சுப்புராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருமயம் சட்டமன்றத் தொகுதியின் தலைமையிடமான திருமயம் பல்லவர் கால குகைக் கோயில்களையும், மலைக்கோட்டையையும் உள்ளடக்கியது. 108 வைணவ திவ்யதேசங்களில் ஒன்றான திருமயம் மிகப் பிரசித்தி பெற்ற இடமாக விளங்குகிறது. தினமும் சுமார் 500 சுற்றுலாப் பயணிகள் அங்கு வந்து செல்கின்றார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்கவில்லையென்றாலும், அடிப்படை வசதிகள் அனைத்தையும் செய்துதர முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் எந்தப் பகுதியாக இருந்தாலும்சரி, சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருவதாக இருந்தால், அடிப்படைத் தேவைகளான, கழிப்பிட வசதிகள், தெரு விளக்குகள், சாலை வசதிகள், இணைப்புச் சாலை வசதிகள் போன்றவை இந்தத் துறையின் சார்பாக செய்யப்பட்டு வருகின்றன. அங்கும் அதிகமான பயணிகள் வந்தால் நிச்சயமாகச் செய்து கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 115, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.



**115—**

## மாணவர் விடுதி

***31713—திரு. கு. பிச்சாண்டி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், கறிக்கலாம்பாடி கிராமத்தில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், கறிக்கலாம்பாடி கிராமத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி கட்டுவதற்கு கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கறிக்கலாம்பாடி கிராமத்திலே 642 மாணவர்கள் உயர்நிலைப் பள்ளியிலேயும், வேடநத்தத்திலே உள்ள பள்ளியில் 430 மாணவர்களும் படிக்கிறார்கள். அவர்கள் தங்கிப் படித்து அந்தக் கல்வியைக் கற்பதற்கு வசதியாக அங்கே ஒரு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி தேவை என்ற கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அவசியம் இந்த ஆண்டு அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

இந்த ஆண்டு 25 புதிய மாணவர் விடுதிகள் தொடங்குவதற்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் அவர்களுடைய தொகுதிக்கு ஒவ்வொன்று வேண்டுமென்று கேட்கிறார்கள். இதையெல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, எதிர்காலத்திலே நிதிநிலைமைக்கேற்ப தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் புறம்போக்கு இடவசதியுள்ள இடங்களிலே ஹாஸ்டல்கள் தொடங்கப்பட்டால் விரைவிலே அவற்றிலே மாணவர்கள் சேர்க்கப்படலாம். பல இடங்களில் அப்படிப்பட்ட இடங்கள் இல்லாமல் ஹாஸ்டல் தொடங்கப்பட்டு, கட்டடங்கள் கட்டப்பட முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, கறிக்கலாம்பாடி கிராமத்திலே அரசின் புறம்போக்கு நிலங்களோடு, அந்த இடவசதி இருக்கிற காரணத்தினால் இந்த ஹாஸ்டலைத் தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதுபோல, பல இடங்களிலே கட்டுவதற்கு இடம் இல்லாமல் சிரமப்படுகிறோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கோரிக்கையை அரசு கனிவுடன் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கபிலர்மலை தொகுதியில் 10 அரசு பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் எல்லாம் இருக்கின்றன. ஆனால் ஒரு பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதிகூட இல்லை. அதனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி அமைக்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைபோல ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், அந்தந்தப் பகுதிகளினுடைய தேவைகளை என் மத்தியிலே குறிப்பாக அளித்திருக்கிறார்கள். நிதிநிலைமைக்கேற்ப அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு விரைந்து எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 116, மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.

**116—**

## ஜவுளிப் பூங்கா

***24248—திரு. குத்தாலம் க. அன்பழகன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், திருபுவனத்தில் பட்டு, கைத்தறிப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், திருபுவனத்தில் பட்டு, கைத்தறிப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

**திரு. குத்தாலம் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொன்மையும் நுணுக்கமும், தரமும் வாய்ந்த திருபுவனம் பட்டு இந்தியாவின் சிறப்புப்பெற்ற ஒன்றாகும். கழக ஆட்சிக் காலத்தில் ஜனாதிபதி பரிசு பெற்ற நெசவாளர்கள் எல்லாம் அதிகமாக அந்தப்

பகுதியிலே வாழுகின்றார்கள். மேலும், திருநாகேஸ்வரம், அம்மாசத்திரம், தாராசுரம், அம்மாபேட்டை, துத்தாலம், கதிராமங்கலம், கும்பகோணம் பகுதிகளில் கைத்தறி நெசவாளர்கள் ஏறத்தாழ 50 ஆயிரம் பேர் வாழுகின்ற அந்தப் பகுதிகளில், அவர்களுக்கென்று பட்டு—கைத்தறிச் சங்கங்கள் நிறைய உள்ளன. ஆகவே, அவர்களின் நலன் கருதி திருபுவனத்தில் ஜவுளிப் பூங்கா அமைக்கும் திட்டத்தினை அரசு மறுபரிசீலனை செய்து அதற்கு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவுளிப் பூங்கா என்பதே வியாபார நோக்கத்திலே நாம் போட்டியிட வேண்டும்; நம்முடைய நெசவாளர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்கிற காரணத்திற்காகத்தான் தொடங்கப்படுகிறது.

அதிலும், இந்த பட்டு இரக நெசவைப் பொறுத்தவரை, பருத்தி இரகங்களில் செய்யப்படுவதைப்போல, உயர் தொழில்நுட்பத்தைப் புகுத்துவதற்கான வாய்ப்பு எதுவும் அதிலே கிடையாது. அதனால், பட்டு என்ற தனிப்பட்ட ஒரு நிலைக்காக, இந்த நெசவுப் பூங்கா தேவை இல்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 117, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்.

**117—**

## ஆசிரியர் பயிற்சிப் பள்ளி

***19502—திரு. வை. காவேரி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் மேல்நிலைப் பள்ளியில் அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?





(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் மேல்நிலைப் பள்ளியில் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம் தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் மேல்நிலைப் பள்ளி ஒன்றும், பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்றும் இருக்கின்றன. அங்கு மொத்தம் 3,000—க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றார்கள். எடப்பாடி தொகுதியிலே, மொத்தம் 10 மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. ஆகவே, இங்கிருக்கின்ற மாணவ, மாணவிகள் ஆசிரியர் பயிற்சி படிக்க வேண்டுமென்றால் வெளியூருக்குச் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, அங்கு ஓர் அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி தொடங்கினால், அப்பகுதி மாணவ, மாணவிகள் பயில்வதற்கு ஏதுவாக இருக்கும் என்பதால் ஓர் அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியைத் தொடங்க வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, மேல்நிலைப் பள்ளிகளில் எல்லாம் அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் தொடங்குவது என்பது நடைமுறையில் இல்லை; அத்தகைய கொள்கையே நம்மிடத்திலே இல்லை. அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி என்பது N.C.T.E.—யிடத்திலே அவர்கள் அங்கீகாரம் பெற்று அவர்கள் தனியாகத் தொடங்கக்கூடிய ஒன்று. நம்மைப் பொறுத்தமட்டிலே, சேலம் மாவட்டத்திலே ஏற்கெனவே அங்கே கங்கவள்ளியிலே ஓர் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம், அதேபோல உத்தமசோழபுரத்திலே DIET ஒன்று நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதேபோல பாகல்பட்டியிலேயும், அஸ்தம்பட்டியிலேயும் இரண்டு அரசு உதவி பெறக்கூடிய அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் நடைபெற்றுக்

கொண்டிருக்கின்றன. இஃதன்னியிலே, அங்கே ஏறத்தாழ 30 தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் சேலம் மாவட்டத்திலே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் சேர்த்து, அங்கே ஏறத்தாழ 2,500 பேர் கல்வி கற்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தமட்டிலே வேலூருக்கு அடுத்தபடியாக அதிகபட்சமாக ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் இருக்கக்கூடிய மாவட்டம், சேலம் மாவட்டம். எனவே, அங்கே புதிதாக ஓர் ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தை, அதுவும் அரசின் சார்பில் தொடங்கக்கூடிய செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அஞ்சூரில் இருக்கின்ற St. Mary's–ஆசிரியர் பயிற்சி நிறுவனம் போன்ற தமிழகத்திலே உள்ள பல்வேறுபட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக ஆசிரியர் பயிற்சிக்காக பணம் கட்டி, பயிற்சி எடுத்தும், அவர்கள் தேர்வு எழுத முடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்றது. இதனால், பல்லாயிரக்கணக்கான மாணவ, மாணவிகள் மிகவும் மன உளைச்சலுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கருணை உள்ளம்கொண்டு, எப்படியாவது இந்த முறை அவர்களுக்குத் தேர்வு எழுத வாய்ப்பு அளித்து, அவர்களுடைய வாழ்க்கையிலே ஒளிவிளக்கு ஏற்றி வைக்க வேண்டுமாய் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இரண்டு நாட்களுக்கு முன்னாலே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் இங்கே எழுப்பிய கவன ஈர்ப்பிலேகூட இதற்கான பதிலை அப்போது சொன்னேன். 2006–2007 ஆம் ஆண்டு ஏறத்தாழ 254 தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் N.C.T.E.–மூலமாக ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் தொடங்குவதற்கு ஒப்புதல் பெற்று இங்கே தொடங்கினார்கள். அதிலே, 213 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் தமிழக அரசினுடைய staff approval–என்று சொல்லக்கூடிய நம்முடைய அங்கீகாரத்தைப் பெற்று





ஆரம்பித்தார்கள். அதிலே, 41 நிறுவனங்கள் அத்தகைய அங்கீகாரத்தைத் தமிழக அரசிடமிருந்து பெறவில்லை. இந்த 41–லே ஏறத்தாழ 34 நிறுவனங்கள், ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் கோர்ட்டுக்குச் சென்று, நாங்கள் தேர்வு நடத்த அனுமதிக்க வேண்டுமென்று முறையிட்டார்கள். நீதிமன்றத்திலே, அதிலே 1,989 மாணவர்களுக்கு பரீட்சை எழுதுவதற்கு அனுமதி வழங்கினார்கள். 300 மாணவர்கள் இந்தப் பரீட்சையை எழுதவில்லை; அதுதான் இப்போது இருக்கிற சூழ்நிலை. ஆனால், நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடத்திலே சொல்கிறேன், ஒவ்வொரு தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள்—நான் எல்லா நிறுவனங்களையும் சொல்லவில்லை, சில குறிப்பிட்ட நிறுவனங்கள்—மாணவர்களை முன்னாலே வைத்துக்கொண்டு, மாணவர்களைப் பகடைக்காய்களாக வைத்துக்கொண்டு, தமிழக அரசினுடைய அனுமதியைக்கூடப் பெறாமல், இன்னும் சொல்லப்போனால், சில இடங்களிலே அனுமதி பெற்றிருந்தாலும்கூட, 50 இடங்களுக்கு அனுமதி பெற்றுவிட்டு, 100 இடங்களுக்கு சேர்க்கக்கூடிய நிலையை வைத்துக்கொண்டு, மாணவர்களை ஏமாற்றி சேர்த்திருக்கிறார்கள். அரசின் சார்பாக கடுமையாக நடவடிக்கை எடுக்க, அதற்கான விவரங்களை DIET–லும், முதன்மைக் கல்வி அலுவலகங்களிலும்கூட நாங்கள் தெளிவாகத் தெரிவித்திருக்கிறோம்.

முற்பகல் 10–15

நான் மீண்டும் இந்த அவையிலே சொல்கின்றேன், அரசின் அங்கீகாரம் பெறாத இத்தகைய தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களின்மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும். ஆனால், பாதிக்கப்பட்ட மாணவர்களைப் பொறுத்த அளவில், சமீபத்திலே உயர் நீதிமன்றத்தில் கொடுத்திருக்கின்ற தீர்ப்பில், அரசின் அனுமதியைப் பெற்றால்தான் அவர்கள் எழுதியிருக்கக்கூடிய தேர்வின் முடிவுகளை வெளியிடவேண்டுமென்று திட்டவட்டமான தீர்ப்பைக் கொடுத்திருக்கின்றார்கள். இருந்தாலும் பல உறுப்பினர்கள் மாணவர்களுடைய நிலை குறித்து எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். இதுகுறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்து பேசி முடிவு செய்வதற்கு அரசு முயற்சி எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 118, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

[2008 ஏப்ரல் 17

118—

கட்டடம்

***30926–திரு. த. தியோடர் ரெஜினால்டு:**

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை வணிக வரி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டம், தக்கலையில் வணிக வரி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு, இருக்கையில் இல்லை.

வினா எண் 119, மாண்புமிகு உறுப்பினர் திரு. த.அ. மேகநாதன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

119—

பாலம்

***8323–திரு. த.அ. மேகநாதன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவேரிப்பட்டினம் தொகுதி, பஞ்சப்பள்ளி ஊராட்சிக்குச் செல்லும் வழியில் பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்திய விடையை அளிக்க தங்களின் அனுமதி கோருகின்றேன். தருமபுரி மாவட்டம், மாரண்டஅள்ளி–பஞ்சப்பள்ளி சாலையில் சின்னாற்றின் குறுக்கே, கடந்த 1995 ஆம் ஆண்டு ஏற்பட்ட அதிக



2008 ஏப்ரல் 17]

வெள்ளத்தில், ஏற்கெனவே இருந்த பாலம் பழுதடைந்துள்ளது. அந்தப் பாலத்திற்குப் பதிலாக புதிய பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. வரக்கூடிய நிதியாண்டில் அது எடுத்துக்கொள்ளப்பட்டு, புதிய உயர்மட்டப் பாலம் கட்டப்பட உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது காவேரிப்பட்டினம் தொகுதியில் பஞ்சப்பள்ளி ஊராட்சிக்குச் செல்லும் வழியில் உள்ள அத்திமுட்லு பாலம் மழையின்போது கடுமையாக உடைந்து, சுமார் மூன்று வருடங்கள் ஆகின்றன. இதனால் தருமபுரி மாவட்டத்தில், மாரண்டஅள்ளியிலிருந்து, மைசூர், கானகாபுரம், தேன்கனிக்கோட்டை, ஓசூர் ஆகிய பகுதிகளுக்குச் செல்லும் பேருந்து 25 கி.மீ. தூரம் வேறு பாதையில் செல்கின்றது. இதனால் எனது தொகுதியில் சூடனூர், கும்பனூர், பஞ்சப்பள்ளி, சாமனூர், அத்திமுட்லு ஆகிய பஞ்சாயத்துக்களிலுள்ள சுமார் 30 கிராம மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். அதேபோல, சூடனூர், காடுசெட்டிப்பட்டியிலிருந்து, பஞ்சப்பள்ளி ஊராட்சிக்குச் செல்லும் சாலையில், எக்காண்டஅள்ளியில் உள்ள பாலம் தரைப் பாலமாக உள்ளது. அங்கு மழை பெய்தால், வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, அதனால் போக்குவரத்து தடைபடுகின்றது. மழைக்காலங்களில் பஞ்சப்பள்ளி ஊராட்சிக்குச் செல்லவேண்டிய இரண்டு பாதைகளும் துண்டாகிவிடுகின்றன. எக்காண்டஅள்ளியில் மேம்பாலம் கட்டவேண்டுமென்று பொதுமக்கள் 30 வருடங்களாகக் கோரி வருகின்றார்கள். எனவே பஞ்சப்பள்ளி ஊராட்சிக்குச் செல்ல, எக்காண்டஅள்ளி மேம்பாலத்தையும், அத்திமுட்லு மேம்பாலத்தையும் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி, மாரண்டஅள்ளியிலிருந்து பஞ்சப்பள்ளி செல்லக்கூடிய சாலையில், பாலம் கட்டப்படுமா என்பது. அதற்குத்தான் நான், வரக்கூடிய நிதியாண்டில் அப்பாலப் பணி எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது என்று ஏற்கெனவே சொன்னேன். அது சுமார் 327 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட இருக்கிறது.

மேலும் இன்னொரு பாலத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார். அதை ஆய்வு செய்து, தேவையானால், நிதிநிலைமைக்கேற்ப அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம்–சென்னை நெடுஞ்சாலையில் lower அணைக்கட்டு பாலம் நேற்று முன்தினம் இடிந்து விழுந்துவிட்டது. அதனால் அங்கு போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது. எனவே இந்தப் பாலம் உடனே சீரமைத்துக் கொடுக்கப்படுமா என்பதை உங்கள்மூலம் கேட்டு ...ன்றேன்.

**...ண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை ...மைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே, அணைக்கரை என்கின்ற பாலம், பொதுப் பணித் துறையின் மதகின்மேலே பாலமாக ...படுத்தப்பட்டு வருகின்றது. கடந்த நான்கு நாட்களுக்கு முன்பு ...ரக வாகனங்கள் அதிகச் சுமையை ஏற்றிக்கொண்டு சென்ற ...ரணத்தால் அதில் பழுது ஏற்பட்டுள்ளது. அந்தப் பழுதை பொதுப் பணித் துறை அதிகாரிகள் சரிசெய்திருக்கின்றார்கள். மேலும், அந்தச் சாலையானது இந்திய தேசிய ஆணையத்தின் பராமரிப்பில் இருக்கின்றது. சாலையைப் பொறுத்தமட்டில் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் மேம்படுத்தப்பட்டிருக்கின்றது. சாலையினுடைய பராமரிப்பு, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. எனவே இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் அதிகாரிகளும், பொதுப் பணித் துறையின் அதிகாரிகளும் அதைச் செப்பனிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் நேரடியாக ஆய்வு செய்து தக்க ஏற்பாட்டைச் செய்திருக்கின்றார்கள்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரங்கராஜன்.

*முற்பகல் 10–20*

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதியிலே, கனரக வாகனங்கள் அதிகமாகச் சென்ற காரணத்தினால் மன்னார்குடி–அதிராம்பட்டினம் சாலையிலே ஒரு பாலம் இடிந்து விழுந்துவிட்டது. அதை மதிப்பிற்குரிய மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் நேரிலே பார்வையிட்டு, இந்த வருடம் நிதியொதுக்கித் தருவதாக கூறியிருந்தார்கள். எனவே, இந்த ஆண்டு அதற்கு ஒரு கோடியே ஐம்பது இலட்சம் ரூபாய் திட்டமிடப்பட்டு அனுப்பப்பட்டு இருப்பதாகத் தெரிகிறது. அப்படியிருந்தால் இந்த நிதியாண்டிலேயே அந்தப் பாலத்தை புதிதாகக் கட்டித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 28 ஆம் தேதி மானியக் கோரிக்கை இருக்கிறது. அதில் விளக்கமாகத் தெரிவிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. ஜெயராமன்.

**திரு. எஸ்.பி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதியில், மருதாடு–வழுதூர்–உத்திரமேரூர் செல்லும் நெடுஞ்சாலையில் வழுதூர் தரைப் பாலத்தை மேம்பாலமாக உயர்த்தித் தந்தால் அங்குள்ள சுமார் 40 கிராமங்களில் உள்ளவர்கள், மற்றும் பள்ளி மாணவ, மாணவிகள் பயன்பெறுவார்கள். மழைக்காலங்களில் போக்குவரத்து பாதிக்கப்படுகிறது. எனவே, இந்தத் தரைப்பாலத்தை மேம்பாலமாக உயர்த்தித் தந்தால் அந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் பயன்தரக் கூடியதாக இருக்கும். எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தரைப்பாலத்தை மேம்பாலமாக அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

[2008 ஏப்ரல் 17

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற பாலம், உயர்மட்டப் பாலமாகத் தேவைப்படுமானால் எதிர்காலத்திலே பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தருமபுரி சட்டமன்றத் தொகுதி, முத்தம்பட்டிக்கும், சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, கோவிந்தாபுரத்திற்கும் இடையிலே மிகப்பெரிய வேப்பாடி ஆறு செல்கிறது. இந்த இரண்டு ஊராட்சி மக்களும், சேலம் செல்ல வேண்டுமென்றால், மழைக்காலங்களிலே ஏறக்குறைய 25 கிலோ மீட்டர் சுற்றிவரவேண்டிய ஒரு அவல நிலை உள்ளது. அதுவும் பள்ளிக் குழந்தைகளையெல்லாம் கயிறு கட்டி, தொட்டில்களிலே எடுத்துச் செல்கின்ற செய்தி பத்திரிகையிலேகூட வந்திருக்கிறது. இது சம்பந்தமாக, ஏற்கெனவே நமது அமைச்சர் அவர்களிடம், நானும், ஓமலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், பலமுறை எடுத்துரைத்திருக்கிறோம். அவரும் பரிசீலிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்த நிதியாண்டிலே, அந்த மக்களுடைய நலன் கருதி, அந்தப் பாலத்தை கட்டித்தர முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே பாலங்கள் உருவாகியிருக்கின்றன என்று சொன்னால் அது நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க வாய்ப்பில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே, நம்முடைய தருமபுரி தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினரும், ஓமலூர் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினரும், என்னிடத்திலே கடிதம்மூலமாகக் கொடுத்திருக்கிறார்கள். பொதுவாக, ஊராட்சி ஒன்றிய மண் சாலைகளாகட்டும், ஊராட்சி ஒன்றியச் சாலைகளிலே பாலம் கட்டுவதாக இருந்தால், அரசினுடைய நிதியிலிருந்து, நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்கப்படுகின்ற நிதியிலிருந்து



2008 ஏப்ரல் 17]

எடுத்து செலவு செய்ய இயலாது. நபார்டு வங்கியினுடைய கடனுதவி, ஹட்கோ வங்கியினுடைய கடனுதவி போன்ற கடனுதவிகளைப் பெற்றுத்தான் பாலத்தைக் கட்டித் தருகிறோம். எனவே, நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிடுகின்ற சாலை, ஊராட்சி ஒன்றியச் சாலை. எனவே, அதை நபார்டு வங்கியின் கடனுதவி பெற்று எதிர்காலத்திலே அந்தப் பாலம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், விழுப்புரத்திலிருந்து திருவண்ணாமலை சாலையிலே சூரப்பட்டு அருகே, ஒரு பாலம் கட்ட கடந்த ஆண்டு ஒப்பந்தப்புள்ளி கோராமல், டெண்டர் விடப்படவில்லை. மீண்டும் அந்தப் பாலம் கட்டுவதற்கு டெண்டர் விடப்பட்டு, அந்தப் பாலம் கட்டித்தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவதற்காக, நம்முடைய அந்த மாவட்டத்தைச் சார்ந்த அமைச்சர் என்கிற முறையிலே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் என்னிடத்திலே கவனத்திற்குக் கொண்டுவந்தார்கள். அதேபோல, சட்டமன்ற உறுப்பினரும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தார்கள். நேரடியாக நான் அந்தப் பகுதியைப் பார்வையிட்டேன். அதேபோல, ஊராட்சி ஒன்றியச் சாலை, ஏறத்தாழ இரண்டு ஊராட்சிகள் துண்டிக்கப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்ற காரணத்தால், அதை நபார்டு வங்கியினுடைய பரிந்துரைக்கு அனுப்பினோம். நபார்டு வங்கியும் ஒப்புதல் தந்தது. எனவே, அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கும், மண் சாலையை தார்ச்சாலையாக மாற்றுவதற்கும் செயற்குறிப்புக்கு அனுமதி வழங்கியது. அரசும் தேவையான நிதியை வழங்கியது. அந்த அடிப்படையிலே கட்டுமானப் பொருள்களுடைய விலை ஏற்றத்தின் காரணமாக ஒப்பந்தப்புள்ளி கோருகின்ற நேரத்திலே அதிலே சுணக்கம்

ஏற்பட்டது. இப்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்ற புதிய அறிவிப்பின் அடிப்படையிலே, விரைவில் மீண்டும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, விரைவில் அந்தப் பாலம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன்.

**திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியது மாரண்டஅள்ளி–பஞ்சப்பள்ளி சாலையில், சின்னாறு அணைக்கு குறுக்கே அத்திமுட்லு பாலமானது மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய 2006–2007 ஆம் ஆண்டு அறிவிப்பிலே அந்தப் பாலம் உயர்மட்டப் பாலமாகக் கட்டப்படும் என்று அறிவித்திருந்தார்கள். அதற்கு அடுத்த கட்டமாக 26–2–2008–ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தருமபுரியிலே அடிக்கல் நாட்டு விழாவும் செய்யப்பட்டுவிட்டது. இன்று, பதிலுரையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அடுத்த ஆண்டு அந்தப் பாலம் பரிசீலனை செய்து எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்கிறார்கள். முன்னுக்குப் பின் முரண்பாடு ஏனென்று தெரியவில்லை. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினா விடை என்கிற காரணத்தினாலே நான் அதிக விளக்கத்திற்குச் செல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னைத் தூண்டியிருக்கிறார். கடந்த ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கிலேயே அந்தப் பாலம் பழுதடைந்துவிட்டது. அதற்குப் பிறகு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பிறகுதான் அந்தப் பாலம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அதற்கு ஒப்பந்தப்புள்ளி விரைவில் கோரப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றுதான் தெரிவித்திருக்கிறேன். இதில் என்ன முரண்பாடு என்பதை அறிய விரும்புகிறேன்.



(முற்பகல் 10–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 120, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**120—**

## பால் குளிரூட்டும் நிலையம்

***34971—திருமதி பி. பத்மாவதி:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நன்னிலம் தொகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலம் தொகுதி அதிகமான கிராமங்களை உள்ளடக்கிய தொகுதி. ஏராளமான கறவை மாடுகள் அங்கே இருக்கின்றன. அங்கு உற்பத்தியாகும் பால் முழுவதும் தனியார் நிறுவனத்தின்மூலமாக எடுத்துச் செல்லப்படுகிறது. நன்னிலம் தொகுதியில் உள்ள சன்னாநல்லூரில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று இருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் அமைதியாக இருங்கள்.

**திருமதி பி. பத்மாவதி:** சொந்தக் கட்டடத்தில் இருக்கின்றது. அந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் செயல்பாட்டை மேலும் அதிகப்படுத்தி அங்கு உற்பத்தியாகின்ற பால் முழுவதையும் கொள்முதல் செய்வதற்கான

வகையிலே அரசு வழிவகை காண வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்வதோடு, அந்தப் பகுதியில் உற்பத்தியாகும் பால் முழுவதையும் சொசைட்டியின்மூலமாக எடுத்து, பால் குளிரூட்டும் நிலையம் ஒன்று அமைத்துத்தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக ஒரு குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கு 3 ஏக்கர் நிலமும் 5 கோடி ரூபாய் வரை செலவும் பிடிக்கும். அதற்கு மாற்றாகத்தான், அந்தந்தப் பகுதியிலே 2,000 லிட்டருக்குமேல் பால் கொள்முதல் செய்யப்படுவதற்கு, மொத்த பால் குளிர்விப்பான்கள் அமைக்கப்படுகின்றன. மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் 5-வது முறையாக பொறுப்பேற்ற பிறகு, 150-க்கு மேற்பட்ட மொத்த பால் குளிர்விப்பான்கள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. நன்னிலம் பகுதியைப் பொறுத்த அளவில் தற்போதுதான் 15 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் புதியதாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அந்தப் பகுதியிலே 5,000 லிட்டர் வரை அல்லது 2,000 லிட்டர் பால் வருமேயானால், அந்தப் பகுதியிலும் ஒரு மொத்த பால் குளிர்விப்பான் அமைக்க வாய்ப்பு இருக்கும். தற்போது நன்னிலத்தில் இருந்து திருவாரூரில் 5,000 லிட்டர் கொள்ளளவுள்ள மொத்த பால் குளிர்விப்பான் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இப்போது அந்த இடத்திற்கு பால் எடுத்து வரப்படுகிறது. மீண்டும் வருகிற காலத்தில் நன்னிலம் பகுதியிலே 2,000 லிட்டர் பால் கொள்முதல் செய்வதற்கான வாய்ப்பு இருக்குமேயானால், அங்கேயும் ஒரு மொத்த பால் குளிர்விப்பான் அமைக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, அதற்கான வகையிலே பால் உற்பத்தியை அதிகப்படுத்தி எதிர்காலத்தில் அதைச் செயல்படுத்த பரிசீலிக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். நிச்சயமாக அதற்கான வாய்ப்புகள் அங்கு அதிகமாக இருக்கின்றன.



இன்னும் கூடுதலான சொசைட்டி அமைப்பதற்கான வாய்ப்புகளும் அதிகமாக இருக்கின்றன. அதிகமான பால் உற்பத்தி கிடைக்கும். எனவே, அந்த வகையிலே எதிர்காலத்திலே அந்தப் பகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று மீண்டும் ஒருமுறை கேட்டு நன்றி சொல்லி அமர்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு**: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. விதி 110-ன்கீழ் அறிக்கை

**சென்னை, மத்திய சிறை இருந்த இடத்தினை மெட்ரோ இரயில் நிருவாகத்திற்கு மற்றும் அரசு பொது மருத்துவமனை விரிவாக்கத்திற்கு அளிப்பது-**

**பொதுப் பணித் துறை இடத்தினை ஸ்டான்லி மருத்துவமனை விரிவாக்கத்திற்கு அளிப்பது-**

**மற்றும்**

**சென்னை, அண்ணா சாலையில் தோட்டக்கலைச் சங்கத்திற்குச் சொந்தமான இடத்தில் உலகத் தரத்திலான சிறப்பு வேளாண் தோட்டக்கலைப் பூங்கா அமைப்பது குறித்தும் மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கையினை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் இந்த அறிக்கையை முன்வைக்கின்றேன்.

சென்னை மாநகரின் மையப் பகுதியிலிருந்த மத்திய சிறையினை திருவள்ளூர் மாவட்டத்திலே உள்ள புழல் பகுதிக்கு மாற்றிய

காரணத்தால், ஏற்கெனவே பத்திய சிறைச்சாலை இருந்த 13.238 ஏக்கர் நிலம் தற்போது காலியாக உள்ளது.

இந்த நிலத்தில் ஒரு ஏக்கர் நிலத்தை சென்னை மெட்ரோ இரயில் அலுவலகத்திற்கு வழங்குவது என்றும், மூன்றரை ஏக்கர் நிலத்தை மெட்ரோ இரயில் செயல்பாட்டுக்கான துணை மின் நிலையம் ஒன்றை அமைப்பதற்கு தமிழ்நாடு மின் வாரியத்திற்கு வழங்குவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இவை போக, அங்கே 10.73 ஏக்கர் நிலம் எஞ்சியுள்ளது.

முற்பகல் 10–30

இந்த நிலையில் சென்னையிலே உள்ள அரசு பொது மருத்துவமனையின் விரிவாக்கத்திற்கு மேலும் நிலம் வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாளாக உள்ளது. சென்னை அரசு பொது மருத்துவமனை 165 ஆண்டு கால பாரம்பரியமிக்கது. 2,722 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை இது. இத்துடன் சுமார் 2 ஆயிரம் மாணவர்கள் படிக்கும் மருத்துவக் கல்லூரியும் இணைந்து செயல்பட்டு வருகிறது. நாளொன்றுக்கு சுமார் 12 ஆயிரம் வெளி நோயாளிகள் இங்கே சிகிச்சைக்காக வந்து செல்கிறார்கள்.

இவ்வளவு பெரிய மருத்துவமனை தற்போது சுமார் 30 ஏக்கர் நிலத்தில் மட்டுமே அமைந்திருப்பதால் இடப் பற்றாக்குறை பெரிதுமுள்ளது. இதனைப் போக்கிடும் வகையில் இந்தப் பொது மருத்துவமனைக்குப் பக்கத்திலே உள்ள பழைய சிறைச்சாலை இருந்த இடத்திலே எஞ்சியுள்ள சுமார் 10 ஏக்கர் நிலத்தினை அரசு பொது மருத்துவமனையின் விரிவாக்கத்திற்காக வழங்குவது என்று இந்த அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இதுபோலவே வட சென்னையிலே உள்ள ஸ்டான்லி மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி மிக, மிகப் பழமையானதாகும். ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் சுமார் 1,500 மாணவர்கள் பயின்று வருகின்றார்கள். இந்த மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரியின் வளர்ச்சிக்காக தமிழக அரசு 100 கோடி ரூபாயைச் சென்ற ஆண்டுதான் வழங்கியுள்ளது. குறிப்பாக மாணவர்களுக்குத் தேவையான விடுதி வசதிகளை ஏற்படுத்தவும், மருத்துவமனை விரிவாக்கத்திற்காகவும் இந்தத் தொகை செலவிடப்படவுள்ளது. அங்கேயும் இடப் பற்றாக்குறை பெரிதாக உள்ளது.



இந்த மருத்துவமனைக்கு அருகில் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான சுமார் 10 ஏக்கர் நிலம் உள்ளது. ஸ்டான்லி மருத்துவமனையின் தேவையை உத்தேசித்து தற்போது பொதுப் பணித் துறையின் வசமுள்ள அந்த 10 ஏக்கர் நிலத்தைப் பெற்று அதை ஸ்டான்லி மருத்துவமனையின் விரிவாக்கத்திற்காக வழங்கவும் தமிழக அரசு முடிவு எடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்ததாக, சென்னை மாவட்டம், அண்ணா மேம்பாலத்திற்கு அருகில் புல எண்கள் 13 மற்றும் 64–ல் உள்ள சுமார் 316 கிரவுண்டு நிலம் பற்றி பேரவைக்கும், நாட்டிற்கும் சில முக்கிய விவரங்களை அறிவித்தாக வேண்டும். இந்த இடத்தின் இன்றைய மதிப்பு சுமார் 1,000 கோடி ரூபாய்க்கு மேலாகும். அரசாங்கத்திற்குச் சொந்தமான இவ்வளவு விலை மதிப்புள்ள பெரிய இடம் வேளாண் தோட்டக் கலைச் சங்கத்திற்கு வழங்கப்பட்டதை பொது நோக்கத்திற்காக அரசாங்கம் திரும்பப் பெற 5–8–1989–ல் ஓர் ஆணையிட்டது. இந்த ஆணையை எதிர்த்து வேளாண் தோட்டக்கலைச் சங்கம் சார்பில் தாக்கல் செய்த மனுவின்மீது அன்றைய சென்னை உயர் நீதிமன்றம் அரசாணையைத் தள்ளுபடி செய்து 19–6–1998–ல் தீர்ப்பு அளித்தது. தமிழக அரசு சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து, அதிலும் 20–8–1998–ல் தற்போதைய நிலையே தொடரலாம் என உயர் நீதிமன்றம் ஆணை பிறப்பித்துவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அரசு தரப்பில் எவ்வித அறிவுரையோ, ஆணையோ இல்லாத அந்த நிலையில் அன்றிருந்த ஆட்சியில் அரசு வழக்கறிஞர் தானாகவே உயர் நீதிமன்றத்தில் மனு செய்ததற்கிணங்க, சென்னை உயர் நீதிமன்றம் 21–12–2004 அன்று அரசின் சார்பாக மேல்முறையீட்டு மனுக்களை திரும்பப் பெற அனுமதியளித்து ஆணையிட்டது.

3–3–2006 அன்று தோட்டக் கலை நிலம் முழுவதையும் தோட்டக் கலைச் சங்கத்திற்கே மீண்டும் ஒப்படைக்க அன்றைய அரசினால் ஆணையிடப்பட்டது. ஆனால், பொதுத் தேர்தலையொட்டி தேர்தல் ஆணையம் வழங்கிய அறிவுரைகளின்படி இந்த ஆணை நிறைவேற்றப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது. அரசு மீண்டும் வழக்கைத் தொடரும் வாய்ப்பாக 2006–ல் தி.மு.க. அரசு மனு தாக்கல் செய்தது. உயர் நீதிமன்றம் 4–4–2007–ல் வழங்கிய ஆணையில், தாமதத்தை ஏற்று வழக்குத் தொடர அனுமதித்தது. இதனை எதிர்த்து வேளாண் தோட்டக் கலைச் சங்கம், உச்ச நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைப் பதிவு செய்தது. உச்ச நீதிமன்றம் தனது 16–5–2007 நாளிட்ட தீர்ப்பில் தோட்டக்கலைச் சங்கத்தின் மனுவைத் தள்ளுபடி செய்தது.

முற்பகல் 10-35

சென்னை உயர் நீதிமன்றத்தில் அரசு தாக்கல் செய்த மேல் முறையீட்டு மனுக்களின்மீதான வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் 11-4-2008 நாளிட்ட தீர்ப்பில் இந்த அரசு செய்த மேல்முறையீட்டு மனுக்களை அனுமதித்தும், 19-6-1998 நாளிட்ட தனி நீதிபதியின் தீர்ப்பைத் தள்ளுபடி செய்தும் தீர்ப்பு வழங்கியது. அந்தத் தீர்ப்பின் முக்கிய சாராம்சம் வருமாறு: அதையும் படிக்கின்றேன்.

"அரசாங்கத்தின் முன் அனுமதி பெறாமலே வேளாண் தோட்டக் கலைச் சங்கம் Woodlands Drive-in Restaurant-க்கு இந்த நிலத்தில் ஒரு பகுதியை உள் குத்தகைக்கு விட்டது. அதன் பின்னர் அரசு அனுமதி இல்லாமலேயே மீண்டும் 5 ஆண்டுகளுக்கு Drive-in உணவு விடுதிக்கு உள் குத்தகையை நீட்டிப்புச் செய்துள்ளது.

திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தோட்டக்கலைச் சங்கத்தை தனது சொந்த சொத்துபோல கையாள்வதாக நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இதெல்லாம் அந்தத் தீர்ப்பிலே இருக்கிற வாசகங்கள்.

மேலும் இச்சங்கத்தின்மீது நிதி முறைகேடு குறித்து பல குற்றச்சாட்டுகள் சாட்டப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து மாவட்டப் பதிவாளர், தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை மேற்கொண்டார். சங்கத்தின்மீது இத்தகைய கடுமையான குற்றச்சாட்டுகள் இருக்கும்போது, அரசு பொதுக் காரணங்களுக்காக நிலத்தைத் திரும்பப் பெறக் கோரிய காரணங்களைப் புறக்கணித்துவிட்டு, நிரூபணமாகாத குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலும், அரசியல் காழ்ப்புணர்வு காரணம் என்றும் கூறி அவர்கள் தொடுத்த நீதிப் பேராணைகளை ஒரு நபர் நீதிபதி அனுமதித்துள்ளார்.

ஆண்டொன்றுக்குக் குறைந்தபட்சமான ரூபாய் 5,000 செலவில் மலர்க் கண்காட்சியை நடத்தியதைத் தவிர கடந்த 20 ஆண்டுகளில் எந்த முன்னேற்றமும் தோட்டக்கலைச் சங்கத்தால் ஏற்பட்டதாகவே காட்டப்படவில்லை. மேலும், மலர்க் கண்காட்சியை நடத்தியது தொடர்பாக அதிக அளவில் பணம் வசூல் செய்தும், அதில் குறைந்த அளவே செலவு செய்தும், நிதி முறைகேடுகள் நடைபெற்றுள்ளதால், அச்சங்கத்தின்மீதும் அதனுடைய செயலாளர் மீதும், உரிய அலுவலரால் விசாரணை செய்யப்பட வேண்டும்.





வருவாய் நிலை ஆணைகளின்படியும், அரசு வழிகாட்டி நெறிமுறைகளின்படியும், காலம் காலமாகக் குடியிருக்கக்கூட இடம் இல்லாமல் வாடும் ஏழையெளிய மக்களுக்கு இருப்பிடம் வழங்க வேண்டும் என்ற விதிமுறைகள் ஒருபுறம் இருக்க, இச்சங்கத்திற்குச் சொந்தமாக நிலங்கள் உள்ளதாலும், அதன் ஒரு பகுதியில் மட்டுமே தோட்டக்கலை வளர்ச்சிக்காக அவர்கள் பயன்படுத்தி வருவதாலும், அரசால் குத்தகைக்கு விடப்பட்ட நிலங்களை சங்கத்தின் கௌரவச் செயலாளர் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், தனது சொந்த உபயோகத்திற்காக, அதாவது வாடகைக்கு, வாடகைகளுக்கான கார்களை நடத்தவும் மற்றும் Meena Advertisers என்ற பெயரிலான விளம்பர நிறுவனத்திற்கும் பயன்படுத்தி வருவதாக ஆவணங்கள்மூலம் தெரிய வருவதால், அரசால் மேற்படி நிலங்களைத் திரும்பப் பெறுவது குறித்த அரசின் நடவடிக்கையில் எவ்விதத் தவறும் இருப்பதாகக் கருத முடியாது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி தனது மனுவில் கார் மற்றும் விளம்பர நிறுவன பெயரால் வியாபாரம் நடத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார். நிலம் ஏற்கெனவே அரசின் வசம் உள்ளதைக் கருத்தில்கொண்டும், அரசின் தலைமைச் செயலாளரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் அடிப்படையிலும், இந்நிலங்கள் பொதுக் காரியங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

இவ்வழக்கில் உள் குத்தகைதாரரான Woodlands Drive-in உணவு விடுதி உரிமையாளர் வாதியாக இல்லாதபோதிலும் இந்நீதிமன்றத் தீர்ப்பிற்குக் கட்டுப்பட்டவராகிறார். ஏனென்றால், தோட்டக் கலைச் சங்கம் இந்நிலங்களை அரசின் அனுமதியின்றி உணவு விடுதிக்கு உள் குத்தகைக்கு விட உரிமை இல்லாதபோது உள் குத்தகைக்கு அனுமதித்துள்ளது.

இது தொடர்பாக அரசால் ஏதும் அனுமதி வழங்கப்படாத நிலையில், நிலத்தைத் திரும்பப் பெற்றது சரியானதுதான் என்கிறபோது உள் குத்தகைதாரர், தானாகவே அந்த இடத்தைக் காலி செய்ய வேண்டும். எனவே, தோட்டக்கலைச் சங்கத்தால் உள் குத்தகைக்கு விடப்பட்ட நிலம் உள்பட அனைத்து நிலங்களையும் அரசு திரும்பப் பெற நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அரசியல் காழ்ப்புணர்வு காரணமாக தோட்டக்கலைச் சங்கத்தின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கூறுவது அடிப்படை இல்லாத வாதம் ஆகும்.

பத்திகள் 10–10

அரசு இந்த நிலத்திற்கு உரிமையாளர் என்பதை 28-4-1980-ல் ஏற்பட்ட ஒப்பந்தத்தில் எதிர் மனுதாரராக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் Woodlands Drive-in உணவு விடுதி உட்பட அனைத்து நிலங்களையும் திரும்பப்பெற அரசுக்கு அதிகாரம் உள்ளது. மேலும், மேற்படி சங்கத்தால் அரசின் அனுமதியின்றி உள் குத்தகைக்கு விடப்பட்டு அதன் வாயிலாகப் பெறப்பட்ட வாடகைத் தொகை முழுவதையும் வசூலிக்க அரசுக்கு அதிகாரம் உள்ளது. ஏனென்றால் உள் குத்தகைக்கு விட்டதே சட்டத்திற்குப் புறம்பான காரியமாகும்.

பொதுக் காரணத்திற்காகவும், நிபந்தனைகளை மீறிய காரணத்திற்காகவும், நிலத்தை திரு. கிருஷ்ணமூர்த்தி சொந்த வியாபாரத்திற்காகவும் அரசின் அனுமதியின்றி Woodlands Drive-in உணவு விடுதிக்கு உள் குத்தகைக்கு வழங்கியதாலும், நிலத்தைத் திரும்பப் பெற அரசுக்கு அதிகாரம் உள்ளது.

சங்கத்தின் கௌரவச் செயலாளர் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி, சென்னை நகரின் இதயப்பகுதியில் உள்ள அரசுக்குச் சொந்தமான நிலத்தை தனது சுய இலாபத்திற்கும், வருமானத்திற்கும் அரசுக்கு ஒரு பைசா கூடச் செலுத்தாமல் பயன்படுத்தியுள்ளார். எனவே, அரசுக்குச் சொந்தமான நிலத்தை சட்டத்திற்குப் புறம்பாக கௌரவச் செயலாளரான திரு. வி. கிருஷ்ணமூர்த்தி தனது சொந்த உபயோகத்திற்குப் பயன்படுத்தியும், அதில் வாடகை வசூலித்தும் வருமானம் ஈட்டியுள்ளதால் இத்தொகையை வசூலிக்க அரசுக்கு அதிகாரம் உள்ளது."

இவ்வாறு இந்தப் பிரச்சினையிலே தீர்ப்புக் கூறப்பட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி அவர்களின் இந்தத் தீர்ப்பிற்கிணங்க அரசுக்குச் சொந்தமான சுமார் 116 கிரவுண்டு இடம், சுமார் 30 ஆண்டுகளுக்குப்பின் இன்றைக்கு அரசின் வசம் வந்துள்ளது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



(மேசையைத் தட்டும் ஒலி) சென்னையின் இதயம் போன்ற பகுதியிலே உள்ள இந்தப் பெரிய இடத்தில் சென்னை வாழ் மக்கள் அனைவரும் பயன்படுத்திக்கொள்ளத்தக்க வகையிலும், சென்னைக்கு மேலும் அழகூட்டத்தக்க வகையிலும் பெங்களூரில் உள்ள லால்பாக் போலவும், நீலகிரியில் உள்ள தாவரவியல் பூங்கா போலவும் உலகத் தரத்திலான சிறப்பு வேளாண் தோட்டக்கலைப் பூங்கா ஒன்றினை அமைப்பது என்று இந்த அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

## 3. தகவல் கோரல்

### (அ) உறுப்பினர்கள் திரு. கோ. அரி மற்றும் திரு. வி.பி. கலைராஜன் ஆகியோர் அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள அனுமதி வேண்டுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினமே, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கலைராஜன், திரு. அரி ஆகிய இருவரும் இந்தக் கூட்டத் தொடர் முழுவதும் நீக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற நிலையில், அவர்கள் மீண்டும் தங்களுடைய பணிகளைச் சட்டமன்றத்திலே ஆற்றுவதற்கு அனுமதி அளிக்க வேண்டும், அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்தினோம். பேரவைத் தலைவர் அவர்கள் அதற்கு எந்த பதிலும் சொல்லவில்லை. இப்போதாவது ஏதாவது பதில் சொல்ல விரும்புகிறாரா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

### (ஆ) உயர் கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கான 27 சதவித இட ஒதுக்கீடு குறித்து உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் கிரீமி லேயர் என்பது அறவே நீக்கப்படுதல் குறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காடு,

[திரு. ஜி.கே. மணி] [2008 ஏப்ரல் 17

நாடாளுமன்றத்தின் சட்டம் ஏற்கப்படும் என்ற ஒரு நல்ல தீர்ப்பை உச்ச நீதிமன்றம் வழங்கியது. அது தமிழகத்திற்குக் கிடைத்த மாபெரும் வரலாற்றுப் பரிசாக, தமிழ்நாட்டு மக்களும், இந்தியத் திருநாட்டு மக்களும் கொண்டாடிக்கொண்டு, மிக மகிழ்ச்சியோடு இருந்துகொண்டிருக்கிறோம். இப்படி மகிழ்ச்சியோடு இருக்கிற இந்தச் சூழ்நிலையில் நம்முடைய நடுவணரசினுடைய அமைச்சரவை, தீர்ப்பு வந்த அன்றே கூடி, இதுகுறித்து ஆலோசித்திருக்கிறது. அந்த அமைச்சரவைக் கூட்டத்தில், சமூக நீதியின் பிறப்பிடமாக இருக்கிற தமிழ்நாடு என்ற காரணத்தினாலேதான் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு அமைச்சர் அவர்கள், அதிலும் குறிப்பாக மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் மாண்புமிகு மருத்துவர் அன்புமணி அவர்கள் அதிலே குறுக்கிட்டு இந்த இடஒதுக்கீட்டில் வரலாற்று நிகழ்வு என்ற ஒரு பெருமை இருக்கிற அதேவேளையில், இந்த creamy layer முறை முற்றிலுமாக அகற்றப்பட வேண்டும் என்று வலியுறுத்தி குறிப்பிட்டிருக்கிறார். மாண்புமிகு பிரதமர் அவர்களும், மாண்புமிகு அர்ஜுன்சிங் அவர்களும், அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கிற பிற அமைச்சர்களெல்லாம் அதை ஏற்றுக்கொண்டு, விரைவிலே இதைக் கனிவோடு பரிசீலித்து இறுதி முடிவு எடுப்போம் என்ற அறிவிப்பையும் வழங்கியிருக்கிறார்கள்.

முற்பகல் 10—45

அதே நேரத்தில், நம்முடைய அவையிலேகூட மாண்புமிகு மச்சர் அவர்கள் இதை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதி, 'கிரீமி லேயர் என்ற வார்த்தை 'இது கிருமி' என்ற பொருள்பட, 'இது கிருமி' அகற்றப்பட வேண்டும், 'கிருமியே கூடாது' என்று ஒரு நல்ல அறிவிப்பைச் சொன்னது நமக்கெல்லாம் மகிழ்ச்சியளிப்பதாக இருக்கிறது.

இந்தச் செய்தியை,—'Financial Express' என்ற செய்தி ஏடுகூட, நடுவண் அமைச்சரவைக் கூட்டத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நல்ல அறிவிப்பை வெளியிட்டார்கள். ஆனால், நம்முடைய நடுவண் அரசினுடைய அமைச்சராக இருக்கிற மாண்புமிகு திரு. டி.ஆர். பாலு அவர்கள் நடுவண் அரசுக்குக் கொடுத்த கடிதத்திலே, வருமான வரம்பு குறிப்பிடப்பட வேண்டும், இப்போதிருக்கிற வருமான வரம்பு உயர்த்தப்பட வேண்டுமென்று சொல்லியிருப்பதாக நாளேடுகளிலே செய்தி வந்திருக்கிறது. இது நமக்கெல்லாம் மிகப் பெரிய அதிர்ச்சியைக் கொடுப்பதாக இருக்கிறது. காரணம், 'சமூக ரீதியாக, கல்வி ரீதியாக



2008 ஏப்ரல் 17] [திரு. ஜி.கே. மணி]

பின்தங்கிய சாதியினருக்கு இட ஒதுக்கீடு வழங்குவது ஏற்புடையது' என்று இந்திய அரசமைப்புச் சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், நாடாளுமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட சட்டத்தைப் பரிசீலிக்கும்போது உச்ச நீதிமன்றத்தினுடைய நீதிபதிகள் இந்த ஷரத்தை அவர்களாகவே சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆன காரணத்தினாலேதான், இந்த நிலையிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நல்ல தீர்ப்பை, தீர்வை உண்டாக்குவதற்கு, தமிழகம்தான் சமூக நீதியினுடைய பிறப்பிடம் என்ற அளவிலே இந்த சட்டப் பேரவையிலே, இந்த creamy layer கூடவே கூடாது; Creamy layer முற்றிலுமாக ஒழிக்கப்பட வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தை நடுவண் அரசை வலியுறுத்தி நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காரணம், creamy layer முறை இருக்குமென்று சொன்னால், நடுவண் அரசிலே பணியாற்றக்கூடிய ஒரு கடைநிலை ஊழியர் 'D' Group பணியாளர்கூட அந்த இடஒதுக்கீட்டிலே பயனடைய முடியாது. அது மிகப் பெரிய பாதிப்பாக அமைந்துவிடும். ஆன காரணத்தினாலேதான், அந்த creamy layer முறை கூடவே கூடாது, இட ஒதுக்கீட்டு முறை (மணியடிக்கப்பெற்றது) இது இல்லாமல் நிறைவேற்றப்படும் என்ற ஒரு நல்ல அறிவிப்பை நடுவண் அரசுக்கு வலியுறுத்துவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

## (இ) அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாடுதழுவிய அளவிலே விலைவாசி உயர்வுக்கான எதிர்ப்பாக மறியல் போராட்டம் நடைபெறுகிறது. அத்தியாவசியப் பொருள்களான அரிசி, கோதுமை, மண்ணெண்ணெய், சமையல் எண்ணெய்கள் போன்ற உணவுப் பொருள்களினுடைய விலை ஏற்றப்பட்டிருக்கிறது. இதற்கு மத்திய அரசு உடனடியாக, இந்த விலை குறைப்பைச் செய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபடவில்லை என்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது. நம்முடைய மன்றமும் இதன்மீது உரிய

[திரு. வை. சிவபுண்ணியம்] [2008 ஏப்ரல் 17

கவனம் செலுத்த வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். (குறுக்கீடுகள்) இந்த விலை உயர்வைக் குறைப்பதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்காததைக் கண்டித்து (மணியடிக்கப்பெற்றது) இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் போராட்டம் இன்றைக்கு இந்திய அளவிலே நடைபெறுகிறது. தமிழ் மாநிலம் முழுமையிலும் மறியல் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நமது மாநிலத்திலேயும் இந்த விலைவாசி உயர்வு பாதிக்கிறது. நாம் அனைவரும் சேர்ந்து மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி விலையைக் குறைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த மன்றத்தின்வாயிலாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். இன்றையதினம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்ல வேண்டிய விஷயத்தையெல்லாம் சொல்லியாயிற்று இல்லையா? அடுத்ததாக என்ன? (குறுக்கீடுகள்)

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) இந்த விலைவாசி உயர்வைத் தடுக்காத மத்திய அரசாங்கத்தை இந்த அவை கண்டிக்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கூறுகிறது. அதைக் கண்டிக்கத் தவறுகிறபட்சத்திலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அவையிலிருந்து வெளிநடப்புச் செய்கிறது என்பதை நான் இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்)

**திரு. டி. சுதர்சனம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லிவிடுகிறேன். . .

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . குறுக்கீடுகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. கோவிந்தசாமி பேசிவிடட்டும். (குறுக்கீடு) அவர் பேச வேண்டுமென்று அப்போதே கேட்டார்.

**திரு. சி. கோவிந்தசாமி:** நான் சொல்லிவிடுகிறேன். அப்புறம் நீங்கள் சொல்லுங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் வரலாறு காணாத அளவிற்கு விலைவாசி உயர்வு என்பது மிகக் கடுமையாக உயர்ந்திருக்கிறது. மத்திய அரசு தனது வரவு-செலவுத்



2008 ஏப்ரல் 17] [திரு. சி. கோவிந்தசாமி]

திட்டத்தைத் தாக்கல் செய்த பிறகு சற்றேறக்குறைய 20 சதம் வரையில் பல பொருள்களின் விலை என்பது உயர்ந்திருக்கிறது. அரிசி, கோதுமை, சர்க்கரை, பருப்பு எண்ணெய் வகை உட்பட, பல்வேறு அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்ந்திருக்கிறது. ஆகவே, online வர்த்தகம் தடை செய்யப்பட வேண்டும். உணவுப் பொருட்கள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வது தடை செய்யப்பட வேண்டுமென்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வைத்து, இவை விலை உயர்வுக்குக் காரணமாக இருக்கிறது. (குறுக்கீடுகள்) காங்கிரஸ் நண்பர்கள் சொல்கிறார்கள், கேரளா, மேற்கு வங்காளம் நிலை என்னவென்று. இந்தியா முழுவதும் உங்கள் கொள்கையால் விலை ஏறிக் கொண்டிருக்கிறது என்பதுதான் எங்களுடைய கருத்து. (மேசையைத் தட்டும் ஒலி) மேற்கு வங்காளத்திலேயும், கேரளாவிலேயும் விலை ஏறவில்லை என்று நாங்கள் வாதிடவில்லை.

இந்த மத்திய அரசினுடைய தவறான கொள்கை, தமிழகம் உள்பட, மேற்கு வங்கம் உள்பட எல்லா மாநிலங்களிலும் கடுமையாக விலையை உயர்த்துகிறது. ஆகவே, மத்திய அரசினுடைய (குறுக்கீடுகள்)

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஏன் எழுந்து நிற்கிறீர்கள்?

**திரு. சி. கோவிந்தசாமி:** இந்தத் தவறான நடவடிக்கையை கைவிடவேண்டும் என்று வலியுறுத்தி நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும், நாடு முழுவதும் இன்றைக்கு இடதுசாரிகள் போராடி வருகிறோம். அதை எதிரொலிக்கின்ற வகையிலே தமிழகச் சட்டமன்றத்தின்மூலமாக மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்வதற்காக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் மத்திய அரசை வலியுறுத்தி இன்று வெளிநடப்புச் செய்கின்றோம். (குறுக்கீடுகள்).

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம். (குறுக்கீடுகள்)

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களும், இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களும் மத்தியில் காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பேற்று நான்கு ஆண்டுகள் முடிவடைந்த நிலையில், இந்த நான்கு ஆண்டுகாலம்

காங்கிரஸ் கூட்டணியிடம் இருந்து, தேர்தல் வரப்போகிறது என்ற நிலை வருகிறபோது, ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி விலைவாசி ஏறிவிட்டது என்றும், அதனாலே வெளியேறுகிறோம் என்ற காரணத்தைச் சொல்லி, மத்தியிலே ஆளுகின்ற அரசை குறைகூறவேண்டும் என்று இங்கே வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள். நாடாளுமன்றத்திலே அவர்கள் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சிக்கும் உறுப்பினர்கள் இருக்கிறார்கள், இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சிக்கும் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அங்கே அவர்கள் எதைப்பற்றி வேண்டுமானாலும் பேசலாம். அதுவும் இல்லாவிட்டால் எல்லாக் கட்சிகளும் சேர்ந்து ஒரு கூட்டணி ஆட்சி நடந்துகொண்டிருக்கிறது. அந்தக் கூட்டணிக்கு ஒரு குழு இருக்கிறது. Co-ordination Committee. அந்தக் குழுவிலே வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே திரு. பரதன் அவர்கள் உறுப்பினராக இருக்கிறார்கள். அந்தக் குழுவிலே சொல்லி விலைவாசியைக் குறைப்பதற்கு என்னென்ன செய்யலாம் என்று அவர்கள் சொல்லியிருக்கலாம்.

விலைவாசி ஏறியிருக்கிறது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், நம்முடைய நாட்டில் மட்டும் விலைவாசி உயரவில்லை. இன்றைக்கு இந்தியத் திருநாட்டில் பணவீக்கம் 7.4 சதவீதமாக உள்ளதை நான் முழுமையாக ஒத்துக்கொள்கிறேன். ஆனால், சீன நாட்டினுடைய பணவீக்கம் இன்றைக்கு 10.4 சதவீதமாக உயர்ந்து இருக்கிறதே அதற்கு இவர்கள் என்ன பதில் சொல்லப்போகிறார்கள் என்பதையும், இன்றைக்கு அமெரிக்க நாட்டிலே பணவீக்கம் 17.6 சதவீதமாக உயர்ந்திருக்கிறது. எதனாலே இந்த விலைவாசி உயர்ந்திருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இந்த ஆட்சி பொறுப்பேற்றபோது ஒரு பேரல் கச்சா எண்ணெயினுடைய விலை 44 டாலர். இன்றைக்கு ஒரு பேரல் கச்சா எண்ணெயினுடைய விலை 115.5 டாலர். எவ்வளவு அதிகமாக உயர்ந்து இருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அரபு நாடுகளிலே கச்சா எண்ணெயினுடைய விலையை அதிகமாக உயர்த்திவிட்டார்கள். அதனுடைய அடிப்படையில்தான் விலைவாசி உயர்வு இன்று ஏற்பட்டிருக்கிறது. இதற்காக அமைச்சரவைக் கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது. அந்த அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டி ஒரு முடிவு எடுத்திருக்கிறார்கள். மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையினை மாண்புமிகு நிதியமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் தாக்கல் செய்த பின்னாலே விலைவாசி உயர்வு ஓரளவுக்குக் கட்டுப்பட்டிருக்கிறது. இந்தக் குழு இன்றைக்குக் கூடியிருக்கிறது.





இன்னும் நாளை மறுநாள் கூடி இந்த விலைவாசி உயர்வைத் தடுப்பதற்கு நல்ல பல செயல்களைச் செய்ய இருக்கிறது. அதனாலே தேர்தல் stunt அடிக்கின்ற வகையிலே இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும், இன்றைக்கு வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள். வேண்டுமானால் அவர்கள் முதுகிலே குத்தலாம். (குறுக்கீடுகள்) நான்கு ஆண்டுகளாக நம்மோடு இருந்தவர்கள் இன்றைக்குத் தேர்தல் வருகின்றபோது எதிரிலே குத்தாமல், முதுகிலே குத்திவிட்டுப் போகின்ற நிலையை இவர்கள் எடுத்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே ஆணித்தரமாக சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, திரு. ஓ. பன்னீர்செல்வம்? (குறுக்கீடுகள்) சொல்லுங்கள். சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டப் பேரவை ஆளுநர் உரையிலிருந்து ஆரம்பித்து, இப்போது மானியக் கோரிக்கை வரையிலும் போய்க்கொண்டிருக்கிறது. ஆளுநர் உரை விவாதத்தில் கலந்துகொண்டு நாங்கள் அப்போதிருந்தே சொல்லிக்கொண்டிருக்கிறோம். விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துங்கள், ஏழையெளிய மக்கள் பெரிதும் துன்புறுகின்ற ஒரு சூழ்நிலை, அபாயகரமான சூழ்நிலை இன்றைக்கு தமிழகத்திலே நிலவிக்கொண்டிருக்கிறது, ஆகவே, அரசு இதிலே துரிதமான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பலமுறை நாங்கள் இந்த சட்டமன்றத்திலும், மக்கள் மன்றத்திலும் எடுத்துக்கூறிக்கொண்டிருக்கிறோம். ஆனால், இன்றைக்கு என்ன நிலைமை? நிலைமை மத்திய, மாநில அரசின் கையைவிட்டு நழுவி விலைவாசி உயர்வு விண்ணை முட்டுகின்ற அளவிற்குப் போய்க்கொண்டிருக்கின்றது. ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய் என்று சொல்கின்றோம். ஆனால், ஒரு தோசை 12 ரூபாய் என்ற அளவிற்குத்தான் இன்றைக்கு—சாதா தோசை 12 ரூபாய் என்ற அளவிற்கு இப்போது விற்றுக்கொண்டிருக்கின்றது. இந்த அரசு பொறுப்பேற்றிருக்கின்றபொழுது 31 ஆயிரம் ரூபாயாக இருந்த. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–55

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கிலோ அரிசிக்கு மாவரைத்தால் அதிலே ஆயிரக்கணக்கான தோசைகள் சுடலாம். ஒரு தோசைதான் 12 ரூபாய்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கிலோ அரிசியில் மாவரைத்தால் ஆயிரக்கணக்கான தோசைகள் சுடலாம் என்று சொல்கிறார்கள். ஆனால், இன்றைக்கு ஒரு தோசை 12 ரூபாயிலிருந்து 30 ரூபாய் என்ற அளவிற்கு விற்றுக் கொண்டிருக்கின்றது. 31 ஆயிரம் ரூபாய். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் செல்வது Star Hotel –ஆக இருக்கும் என்று நினைக்கிறேன்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அதேபோல கட்டுமானப் பொருட்களினுடைய விலைவாசியும் இன்றைக்கு விஷம்போல ஏறிக்கொண்டிருக்கின்றது. 31 ஆயிரம் ரூபாய் என்ற ஒரு டன் இரும்பினுடைய விலை இன்றைக்கு 60 ஆயிரம் ரூபாய் என்ற அளவிற்குப் போய்க் கொண்டிருக்கின்றது. இதனால் மக்களுடைய இயல்பு வாழ்க்கை தொடர்ந்து பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. மத்திய அரசு நடவடிக்கை எடுப்பதாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அருமை அண்ணன் சுதர்சனம் அவர்கள் சொன்னார்கள். ஆனால், மத்திய அரசு நடப்பு நிதி ஆண்டில் பட்ஜெட் தாக்கல் செய்ததற்குப் பின்னால் 20 சதவீத விலை உயர்வு நாட்டை இன்றைக்கு பயமுறுத்திக் கொண்டிருக்கின்றது. எல்லாவற்றுக்கும் பணவீக்கம் காரணம் என்று மத்திய அரசால் சொல்லப்படுகின்றது. பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்துகின்ற பொறுப்பு மத்திய அரசுக்கு உண்டு. அதனை உணராமல் இன்றைக்கு மத்திய, மாநில அரசுகள் செயல்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டித்து நாங்கள் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்கின்றோம்.

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலைவாசி உயர்வைச் சுட்டிக்காட்டி, அதற்காக வெளியில் நடைபெறுகின்ற ஆர்ப்பாட்டங்கள், மறியல்கள், கிளர்ச்சிகள், இவற்றை முன்னிட்டு இவற்றை ஆதரிக்கும் முகத்தான் வெளிநடப்புச் செய்கிறோம் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினரும், இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியினரும், அ.தி.மு.க.–வினரும் வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள். நான், அவர்கள் இங்கேயிருந்து





கருத்துகளைச் சொல்லி விளக்கங்களைப் பெறாமல், வெளிநடப்புச் செய்தமைக்காக வருத்தப்படுகின்றேன். வெளிநடப்பு என்பது ஜனநாயகத்திலே ஒரு முறை. அதைத்தான் அவர்கள் செய்துகாட்டியிருக்கிறார்கள். அதற்காக நான் அவர்கள்மீது எரிச்சல் கொள்ளவில்லை, காழ்ப்பு கொள்ளவில்லை. ஆனால், ஒன்றை நாம் மறந்துவிடக்கூடாது. ஏதோ திடீரென்று நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் சுதர்சனம் அவர்கள் கூறியதைப்போல, விலைவாசி விண் உயரத்திற்கு ஏறி, அது உடனடியாகத் தடுக்கப்படவேண்டும் என்று ஒரு நிலை எடுத்து, இன்றைக்கு கம்யூனிஸ்ட் கட்சிகளின் நண்பர்கள், அதாவது இடதுசாரிக் கட்சிகளின் நண்பர்கள் இந்த அறப்போராட்டத்தில் ஈடுபட்டார்கள் என்று சொல்ல இயலாது.

*(வெளிநடப்புச் செய்த அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவைக்குள் நுழைந்தனர்.)*

அது அரைப் போராட்டம் என்ற காரணத்தினால்தான் சென்றவர்கள் திரும்பி வந்துவிட்டார்கள். *(சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி)* எவ்வளவு விரைவாக, தொலைபேசியிலே செய்தி வருவதைப்போல, அவர்களுக்குத் தகவல் வந்து — *(சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி)* 'வெளி நடப்பா? உள்ளே செல்லுங்கள்' என்று உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு, உள்ளே மீண்டும் வந்திருக்கிறார்கள் என்பதைக் கண்டு நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். *(சிரிப்பு)*

**(ஆ) உறுப்பினர்கள் திரு. கோ. அரி மற்றும் திரு. வி.பி. கலைராஜன் ஆகியோர் அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள அனுமதி வேண்டுதல்**—தொடர்ச்சி

(முற்பகல் 11-00)

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இங்கே நான் ஓர் அறிக்கையைப் படித்து முடித்த பிறகு, 4, 5 பிரச்சினைகள் கிளப்பப்பட்டன. ஒன்று, நம்முடைய எதிர்க்கட்சியின் கொறடா செங்கோட்டையன் அவர்கள், அந்தக் கட்சியைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்கள்மீது ஒரு தீர்மானத்தை நம்முடைய அவை முன்னவர் கொண்டு வந்து, அதன் காரணமாக வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள், அவர்களை மீண்டும் அவைக்குள் வர அனுமதிக்க வேண்டுமென்று கேட்டார்கள். யாரையும் அல்லது எதிர்க்கட்சியிலே உள்ளவர்களை கடுமையாகத் தண்டிக்க

வேண்டும் அல்லது கேவலமாகத் தண்டிக்க வேண்டும் என்ற நிலை எடுப்பதல்ல இன்றைய ஆளுங்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம். (மேசையைத் தட்டும் ஒலி)

அவர்கள் ஆளுங்கட்சியாக இருந்தபோது, தனியாகவும், சிறப்பாகவும் ஒரு கூண்டே தயாரிக்கப்பட்டு, அதிலே தண்டனை என்ற பெயரால் முரசொலி செல்வத்தை—அந்தக் கூண்டை இங்கே நிறுத்தி, அந்தக் கூண்டிலே நிறுத்துவதுதான் செல்வத்திற்குத் தரப்பட்ட தண்டனை என்று அதைப் பார்த்துப் பார்த்துக் களித்தார்கள். நான் அன்றைக்கு உள்ளே இல்லாவிட்டாலுங்கூட, அந்தக் கூண்டு இருந்த இடத்தைப் பார்த்தேன். அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய படத்திற்கும் எங்களை ஆளாக்கிய தலைவர் அறிஞர் அண்ணா அவர்களுடைய படத்திற்கும் இடையில் அந்தக் கூண்டு நிறுத்தப்பட்டிருந்தது. பரவாயில்லை, செல்வமும் இருவருக்குமிடையேதான் நிற்கிறான், அண்ணாவின் அன்பிற்குரியவனாக வாழ்ந்தவன், இருந்தவன். "செல்வா, செல்வா" என்றே அண்ணா அவர்களால் அழைக்கப்பட்டவன். அதைப்போலவே அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களிடத்திலே அளவற்ற பிரியம்கொண்டு அவருடைய ரசிகனாகவே இருந்தவன். அவர்களின் படங்களுக்கு நடுவிலே குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்ட அந்தக் காட்சியையெல்லாம் அ.தி.மு.க. ஆளுங்கட்சியாக இருந்தபோது, நடத்தப்பட்ட தண்டனை விவரங்கள். அதைப்போல எதிர்க்கட்சியைக் கேவலப்படுத்த வேண்டுமென்றோ, தண்டிக்க வேண்டுமென்றோ திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நினைத்ததுமில்லை; எங்களுடைய தோழமைக் கட்சியிலே உள்ளவர்கள் அத்தகைய பண்பாடு கொண்டவர்களும் அல்ல. அவர்களுடைய அறிவுரையைப் பெற்று நடந்து வருகின்ற இந்த ஆட்சியில் நம்முடைய நண்பர் செங்கோட்டையன் அவர்கள் வைத்த அந்தக் கோரிக்கையை அறவே ஏற்றுக்கொள்ள முடியாது என்று நான் மறுக்காமல்—நாமெல்லாம் அண்ணாவின் வழி வந்தவர்கள் என்ற வகையில், அவர்கள் நடத்திய அந்தக் குற்றத்தை—குற்றம் மிகுந்த செயலை—என் கண்ணெதிரிலேயே நடந்த அந்தக் காட்சியை, நான் நேராகக் கண்டிருந்தும்கூட—நம்முடைய அவை முன்னவர் கொடுத்த தீர்மானத்தை ஏற்று, இரண்டு நண்பர்களை வெளியேற்றி, இந்தக் கூட்டத் தொடர் முடிகின்ற வரையிலே அவர்கள் உள்ளே வரக் கூடாது என்று இருந்ததை—அந்தத் தண்டனையைக் குறைத்து நான் பரிந்துரை செய்கிறேன்—முதலமைச்சர் என்ற முறையிலே, உத்தரவிடுவதாக யாரும்



கருதக் கூடாது. நான் அவைத் தலைவர் அவர்களுக்குப் பரிந்துரை செய்கிறேன். 'கூட்டத் தொடர் முழுவதும்' என்பதை, 'ஒரு வார காலம்' என்கிற அளவிற்கு அந்தத் தண்டனையைக் குறைத்து, அவர்களை மீண்டும் இங்கே அனுமதிக்க வேண்டுமென்று அவைத் தலைவராகிய தங்களை நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள் என்றும் நான் நம்புகிறேன்.

*முற்பகல் 11-05*

### (ஆ) உயர் கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கான 27 சதவித இட ஒதுக்கீடு குறித்து உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் கிரீமி லேயர் என்பது அறவே நீக்கப்படுதல் குறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுதல்—தொடர்ச்சி

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இங்கே கோ.க. மணி அவர்களால் ஒரு குற்றச்சாட்டு கூறப்பட்டது. டி.ஆர். பாலு அவர்கள் டெல்லியிலேயே தமிழகம் சார்பில் உள்ள அமைச்சர்களிலே ஒருவராக இருக்கிறார். அவர் இந்த creamy layer-ஐப்பற்றி அங்கே பேசியபொழுது, வேண்டுமானால் வருமான உச்ச வரம்பை இன்னும் கொஞ்சம் அதிகமாக வைத்துக்கொள்ளுங்கள் என்று அவர் சொன்னதாகப் பத்திரிகையிலே வந்ததை மணி அவர்கள் இங்கே எடுத்துக் காட்டினார். அப்படி வந்திருந்தால் அது தவறு. அப்படி டி.ஆர். பாலு சொல்லியிருந்தால் அது திராவிட முன்னேற்றக் கழகம் வடித்துக் கொடுத்த கொள்கை அல்ல என்பதையும், அதைப்பற்றிச் சிந்தித்து ஒரு முடிவெடுக்க *18* ஆம் தேதியன்று திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உச்ச மட்டக் குழு கூடுகிறது; அந்தக் குழுவிலேதான் நாடாளுமன்ற தி.மு.க. உறுப்பினர்களும், இங்குள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைமைக் கழகச் செயலாளர்களும் மற்றவர்களும் கூடிப்பேசி முடிவை அறிவிக்க இருக்கிறோம். Creamy layer வேண்டாம் என்பதுதான் எங்களுடைய கொள்கை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், முதலில் நாம் இன்றைக்குப் பெற்றிருக்கிற மகிழ்ச்சி, *27* சதவீத இட ஒதுக்கீடு. உச்ச நீதிமன்றம் அதை ஏற்றுக்கொண்டது என்பது அளவில்லாத மகிழ்ச்சியை நமக்கு வழங்கிக்கொண்டிருக்கிறது. Creamy layer இருக்கிறதே என்பதற்காக நாம் அந்த மகிழ்ச்சியை அப்படியே கைகழுவிவிடக் கூடாது. அந்த மகிழ்ச்சியோடு, கவலையும் இருக்கிறதே, இதை நாம் எப்படியாவது

துடைக்க வேண்டும்; அதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதிலே நாம் யாருக்கும் சளைத்தவர்களாக இருக்க மாட்டோம். அதைப்பற்றி நான் நம்முடைய தோழமைக் கட்சிகளின் நண்பர்களோடும், வெளியிலே இருக்கின்ற தோழமைக் கட்சிகளின் தலைவர்களோடும் கலந்துபேசி, ஏற்றவகையிலே ஒரு நல்ல முடிவைக் காண்போம் என்ற அந்த உறுதியை இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வந்தவுடனேயே நான் அதுபற்றி திருமதி சோனியா காந்தி அவர்களுக்கும், பிரதமர் அவர்களுக்கும் தொலைபேசியிலே தொடர்புகொண்டு பேசியபோதும் சரி, நம்முடைய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. அர்ஜுன் சிங் அவர்களோடு தொடர்புகொண்டு பேசியபோதும் சரி, அவர்கள் எல்லாம் இதிலே நம்பிக்கையான முறையிலேதான் எனக்கு உறுதியளித்திருக்கிறார்கள். இதிலே நாம் படிப்படியாக முன்னேறுவோம் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். அப்படி முன்னேறுகிற நேரத்திலே அதற்கு இடைஞ்சலாக நம்முடைய நடவடிக்கைகள் அமைந்துவிடக் கூடாது என்பதை நான் மிகுந்த பணிவன்போடு—நமக்கு காரியம் பெரிது, அந்தக் காரியத்திலே எதிர்காலச் சந்ததியினரைக் கல்வித் துறையில், சமுதாயத் துறையில், சமூக நீதித் துறையிலே காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பை அன்று முதல் இன்று வரையிலே மேற்கொண்டிருக்கிற நாம் கைவிட்டுவிடக் கூடாது, அதை வீணடித்துவிடக் கூடாது என்பதற்காகப் பொறுமையாக இருந்து—பொறுமை நிச்சயமாக வெல்லும் என்ற நம்பிக்கையோடு, அந்தப் பொறுமையை நாம் கடைப்பிடிப்போம் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**(இ) அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு குறித்து—**
தொடர்ச்சி

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** விலைவாசி உயர்வு, ஏதோ இங்கே ஆளும் கட்சியாக அமர்ந்திருக்கிற எங்களுக்கெல்லாம் பிடித்த ஒன்று, அது எதிர்க்கட்சியிலே இருப்பவர்களுக்குத்தான் பிடிக்காத ஒன்று என்று அல்ல. விலைவாசி உயர்கிற நேரத்தில் வாங்கும் சக்தி அதிகமானால் விலைவாசியினுடைய கனம் தெரியாது, கனம் தெரியாது என்பது ஒரு பொருளாதாரக் கணக்கு. ஒரு காலத்திலே தங்கத்தினுடைய விலை, பவுன் விலை 20 ரூபாயாக இருந்தது.



இன்றைக்குப் பவுன் விலை ஆயிரம் ரூபாய், இரண்டாயிரம் ரூபாய், நாலாயிரம் ரூபாய், ஐந்தாயிரம் ரூபாய் என்று சகட்டுமேனிக்கு ஒவ்வொரு நாளும் பத்திரிகைகளிலும், தொலைக்காட்சிகளிலும் செய்தி வந்ததை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். ஆகவே, வாங்கும் சக்தி உள்ளவராக ஒரு சாதாரணப் பிரஜை ஆகிவிட்டால், எவ்வளவுதான் விலைவாசி உயர்ந்தாலும், அது தேர்தலிலே பயன்படுத்துவதற்காகத்தான் பயன்படுமே தவிர, அந்த உயர்வினால் யாரும் கஷ்டப்பட மாட்டார்கள். ஆனால் அதைச் சமாளிக்க, வாங்கும் சக்தியை நாம் உயர்த்த வேண்டும். அந்தப் பொருளாதாரத்தை ஒரு நாடு கடைப்பிடிக்க வேண்டும்; ஓர் ஆட்சி கடைப்பிடிக்க வேண்டும். அப்படிக் கடைப்பிடித்தால் விலைவாசியினால் பெரும் பாதகம் ஏற்பட்டுவிடாது.

நம்முடைய மத்திய அரசு இந்த விலைவாசி உயர்வுக்குப் பொறுப்பேற்க வேண்டுமென்று நாம் சொல்கிறோம். சொல்கிற அதே நேரத்தில், இங்கிருந்து வெளிநடப்புச் செய்வது என்பது, அதற்குப் பொருத்தமானதா என்று எனக்குத் தெரியவில்லை.

*முற்பகல் 11–10*

கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் எங்களுடைய தோழர்கள்தான்; நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தோழமைக் கட்சிக்காரர்கள்தான். அவர்களுக்கும் நான் சொல்லிக்கொள்வேன்; இந்தியாவில் எது வரக்கூடாது என்று கருதுகிறோம்? எது ஆதிக்கத்தைக் கைப்பற்றக் கூடாது என்று கருதுகிறோம்? மதவாத சக்திகள், பகுத்தறிவுக்கு விரோதமானவர்கள்; இவர்கள் ஆட்சியைக் கைப்பற்றக் கூடாது; மதவெறி கூடாது. காந்தியடிகளையே கொன்ற பாவிகளுடைய ஆட்சி வந்துவிடக்கூடாது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்காகத்தான் நாம் மதவாத சக்திகளுக்கு இடம் தராத ஓர் ஆட்சி வேண்டும் என்று சொல்லும்போது, அதையெல்லாம் கூட்டிக் கழித்துப் பார்த்தால், மிச்சப்படுவது யார் என்று வருகிறபோது, இன்றைக்கு இந்தியாவிலே மதவாத சக்தியாக இல்லாத ஓர் ஆட்சி உருவாக வேண்டுமேயானால், அது காங்கிரஸ் கட்சியினால்தான் முடியும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

இன்றைக்கு நம்முடைய திரு. சி. கோவிந்தசாமி ஏற்றுக்கொள்கிறாரோ, இல்லையோ? முந்தாநாள் ஏற்றுக்கொண்டவர்தான்; நாளைக்கும் ஏற்றுக்கொள்ளப்

போகிறவர்தான். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) 'மதவாத சக்தி வளர்ந்தால் பரவாயில்லை; அதற்காக விலைவாசி உயர்வை, அதைத் தடுக்காமல் இருந்த காங்கிரஸ் கட்சியை நாங்கள் ஆளவிடமாட்டோம்' என்று அவர்கள் சொல்லமாட்டார்கள். பொதுவான ஒரு நிலை; மதவாதமற்ற, மனித நேயமிக்க ஓர் ஆட்சி வரவேண்டும் என்பதிலே, யாருக்கும் இரண்டு கருத்துகள் இருக்கமுடியாது. அந்தக் கருத்துகளுடைய ஒற்றுமையிலேதான், எதிர்கால இந்தியா வாழமுடியும்; வளரமுடியும்; வெல்லமுடியும். அப்படிப்பட்ட ஒற்றுமையை நாம் உருவாக்கவேண்டும்.

மத்திய சர்க்கார் தவறு செய்கிறது என்பதற்காக, அதைச் சுட்டிக்காட்டி, 'நாங்கள் சொன்னதைக் கேட்கவில்லை; அவர்கள் இதற்கு முன்பே நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும்' என்று கூறி, மாநில அரசைக் கண்டித்து நீங்கள் வெளிநடப்புச் செய்வது முறையல்ல. ஆனால், வெளிநடப்பு என்பது ஜனநாயகத்திலே ஏற்றுக்கொண்ட முறை என்ற காரணத்தால், நான் அதற்காகச் சினம் கொள்ளவில்லை; மற்றும் கொள்ளவில்லை; வருத்தப்படவில்லை. இதிலே, ஆளுங்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம் இந்த வெளிநடப்பிலே கலந்துகொள்ள முடியாது; கலந்துகொள்ளக் கூடாது.

ஏனென்றால், நாம் எல்லோரும் சேர்ந்துதான் ஓர் அணியைத் தொடங்கினோம். அந்த அணி மதவாத அணி அல்ல; மதவாத சக்திகளுக்கு எதிர்ப்பான அணி. அந்த அணியிலே பிணி வந்துவிடக்கூடாது. அந்த அணி நல்லமுறையிலே இயங்கவேண்டும். அப்படி இயங்கவேண்டும் என்பதற்காகத்தான்—உங்களுக்குத் தெரியும்—கடந்த காலத்திலே 4, 5 மாத காலமாக, அணுசக்தி விவகாரத்திலேகூட ஏற்படவிருந்த பிளவை—அந்தப் பிளவு ஏற்படாமல் பார்த்துக்கொண்ட, அந்தப் பெரும் பணியை ஓரளவு நான் ஏற்றுக்கொண்டிருந்தேன் என்பதும், (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) வட புலத்திலே இருக்கிற கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுக்கெல்லாம் அந்த உண்மை தெரியும் என்பதும் நான் சொல்லி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை, பத்திரிகைகளிலே வந்த செய்திகள். ஆகவே, அவர்களும் சரி, காங்கிரஸ் கட்சியும் சரி, நானும் ஏற்றுக்கொண்டிருக்கின்ற கொள்கை, மக்களை மதவாதத்திலேயிருந்து மீட்கவேண்டும்; மதவெறியிலேயிருந்து மீட்கவேண்டும். மதவாத சக்திகளுக்கு இடம் தரக்கூடாது. மீண்டும் ஒரு அயோத்தி, மீண்டும் ஒரு ராம ரதம், மீண்டும் ஒரு அத்வானியினுடைய புயல்வேகச் சுற்றுப்பயணம் என்றெல்லாம் நாட்டிலே ஏற்பட்டால், நாடு



காடாகிவிடும். காடாகாமல் நாட்டைப் பாதுகாக்க வேண்டிய அந்தப் பெரும் கடமை நமக்கு இருக்கிறது என்பதை எடுத்துரைத்து, இந்த அளவில் என்னுடைய விளக்கத்தை நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** One minute. (Interruption) One minute. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

*முற்பகல் 11–15*

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் பேசுகிறபொழுது அறப் போராட்டம் என்று வெளிநடப்புச் செய்துவிட்டு, அரைப் போராட்டமாக உடனே வந்துள்ளார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் முழுப் போராட்டம்தான் நடத்தினோமே தவிர, அரைப் போராட்டம் அல்ல. மக்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற வகையில், மத்திய, மாநில அரசுகளுக்குச் சுட்டிக்காட்டும்விதமாக, விலைவாசிகள் விண்ணை முட்டுகின்ற அளவிற்கு உயர்ந்திருக்கின்றன என்பதை வலியுறுத்தி நாங்கள் வெளியில் சென்று, உள்ளே வந்திருக்கிறோம், ஆதி திராவிடர் நலத் துறை விவாதம் நடைபெறுகிற காரணத்தினால்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செங்கோட்டையன் அவர்கள், அவர் வைத்த ஒரு கோரிக்கையை முதலமைச்சர் அவர்கள் ஜனநாயக உணர்வோடு பரிசீலனை செய்து, அந்த வெளியேற்றப்பட்ட நண்பர்களை ஒரு வார காலம் போதும், மீண்டும் அவைக்கு அழைக்க வேண்டும் என்று சொன்னாரே, அதற்கு ஒரு நன்றி தெரிவித்திருந்தால் ஒரு பண்பாடு இருக்கும். ஆனால், நாம் அவர்களிடத்திலே அதை எதிர்பார்க்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி வெளிநடப்புச் செய்கிறபோது, மாநில அரசைக் கண்டித்து என்று நான் எந்த இடத்திலும் சொல்லவில்லை. மத்திய அரசினுடைய கொள்கை, தமிழகத்தையும்

பாதிக்கிறது, இந்தியா முழுவதும் பாதிக்கிறது என்ற கருத்தை வலியுறுத்தி மத்திய அரசினுடைய மேலான கவனத்திற்கு இதை எடுத்துச் சொல்வதற்காக, இந்தப் பேரவையின்மூலம் எடுத்துச் செல்வதற்காக என்றுதான் வலியுறுத்தியிருக்கிறோம். மற்றபடி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய அந்த அரசியல் கருத்தில் மிக உறுதியாக உங்களோடு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி என்றைக்கும் இருக்கும் என்பதை நான் உறுதியோடு இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். ஆகவே, மத்திய அரசினுடைய தவறான நடவடிக்கையைக் கண்டித்துத்தான் வெளிநடப்பே தவிர, மாநில அரசைக் கண்டித்து அல்ல என்பதை நான் தெளிவுபடுத்திக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் திரு. கோவிந்தசாமி அவர்கள், மத்திய அரசைக் கண்டித்து வெளிநடப்புச் செய்ததாகச் சொல்கிறார். நாடாளுமன்றத்திலே அவர்களுடைய உறுப்பினர்கள் இல்லையா? இது சட்டமன்றம். தமிழக அரசு பல்வேறு நல்ல காரியங்களை தமிழகத்திற்கு ஆற்றிக்கொண்டிருக்கிறது. அப்படி இருக்கின்ற நிலையில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள், நம்முடைய முதலமைச்சர் சொன்னதைப்போன்று, மத்திய அரசைக் கண்டித்து இங்கே வெளிநடப்புச் செய்ய வேண்டிய அவசியம் என்ன? நாடாளுமன்றத்திலே அவர்களுடைய உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அங்கே இந்தப் பிரச்சினையைக் கிளப்பிப் பேசியிருக்கலாம். அதை விட்டுவிட்டு. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள், மேலும் மேலும் அதை develop செய்ய வேண்டாம். (குறுக்கீடுகள்) முடியுங்கள், முடியுங்கள். உட்காருங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** அதை அங்கே பேசாமல், இங்கே வெளிநடப்புச் செய்வது அவ்வளவு நாகரீகமான காரியம் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)



**(ஈ) பாட்டாளி மக்கள் கட்சி சட்டமன்ற உறுப்பினர் திரு. வை. காவேரி அவர்கள்மீது காவல் துறை வழக்குப் பதிவு செய்துள்ளது குறித்து**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்ற கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எல்லாம் என்னுடைய ஆய்விலே இருக்கின்றன. (குறுக்கீடுகள்) மற்றவர்கள் எல்லாம் உட்காருங்கள். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடுகள்) என்ன, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது எடப்பாடி சட்டப் பேரவை உறுப்பினர் திரு. வை. காவேரி அவர்கள்மீது நேற்றையதினம் ஒரு கொலை முயற்சி வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே எங்களுடைய சட்டப் பேரவை உறுப்பினர்கள் திரு. அ. தமிழரசு, திரு. வீ.ஏ.டி. கலியவரதன் போன்றவர்கள்மீதும் தொடர்ந்து வழக்குகள் பதிவு செய்யப்பட்டு வருகின்ற காரணத்தினால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்தை ஈர்க்க வேண்டும். நான் என்னுடைய ஆதங்க உணர்வுகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையில் இருக்கின்றபோது பதிவு செய்ய வேண்டுமென்கிற அனுமதியைத் தங்களிடம் எங்கள் பேரவையினுடைய உறுப்பினர் கோருகிறார். அதற்கு அனுமதி அளிக்குமாறு கொறடா என்ற முறையில் தங்களுடைய கவனத்தை ஈர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே, திரு. வை. காவேரி அவர்கள் என்னை வந்து பார்த்தார். அதுசம்பந்தமான அறிவிப்பு S.P.-யிடமிருந்து எனக்கு வந்திருக்கிறது. அதை நீங்கள் பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறேன். அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது. என்னுடைய அறைக்கு வாருங்கள். அதை நான் காண்பிக்கிறேன். அதைப் பார்த்துவிட்டு, அதற்குப் பிறகு பேசிக்கொள்ளலாம். இப்போது உட்காருங்கள்.

## 4. கவன ஈர்ப்பு

### சங்கரன்கோவில், அருள்மிகு சங்கர நாராயண சுவாமி திருக்கோயில் அறக்கட்டளைக்குச் சொந்தமான நில ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. என். மாலைராஜா அவர்கள்

கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா.

**திரு. என். மாலைராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில், அருள்மிகு சங்கர நாராயண சுவாமி கோயில் அறக்கட்டளைக்குச் சொந்தமான கொங்கந்தான்பாறை கிராமத்திலுள்ள நிலத்தை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கவேண்டியது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

**அறிக்கை**

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், அருள்மிகு சங்கர நாராயண சுவாமி திருக்கோயில் 'ஆடித்தபசு மண்டகப்படி 11 ஆம் நாள் உற்சவத் திருநாள்' நடத்தப்பட்டு வருகிறது. அத்திருநாளின்போது சுவாமிக்கு அபிஷேகம், அலங்காரம் மற்றும் எழுந்தருளச் செய்வதற்காக 'ஆடித்தபசு மண்டகப்படி உற்சவ நிதி என்ற குற்றாலம்மாள் அறநிறுவனக் கட்டளை'யினை திருமதி குற்றாலம்மாள் என்பவர் 26-2-1975-ல் ஏற்படுத்தியுள்ளார். இக்கட்டளையின் அறங்காவலராக திரு. சங்கர நாராயணன் என்பவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். ரூபாய் இருபதாயிரத்தினை ஆரம்பத் தொகையாகக் கொண்டு மேற்காணும் அறக்கட்டளை ஆரம்பிக்கப்பட்டது. இக்கட்டளையின் மூலதனத்தின்மூலம் கிடைக்கப்பெற்ற வட்டியிலிருந்து 11 ஆம் திருநாளுக்கான செலவினம் போக எஞ்சியுள்ள தொகையிலிருந்து திருநெல்வேலி வட்டம், கொங்கந்தான்பாறை கிராமத்தில் சர்வே எண் 9-ல் 12.29 ஏக்கரும், சர்வே எண் 11-ல் 2.85 ஏக்கரும், ஆகக் கூடுதல் 15.14 ஏக்கர் நிலங்கள் 1985 மற்றும் 1986 ஆம் ஆண்டுகளில் இக்கட்டளையின் பெயரால் வாங்கப்பட்டன. மேற்கண்ட 15.14 ஏக்கர் நிலம் போலியான பத்திரங்கள்



தயாரிக்கப்பட்டு 2006 ஜூன் மாதத்தில் திருநெல்வேலி சந்திப்பில் ஷீபா ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தை நடத்தி வரும் திரு. எம்.கே.எம். முகமது ஷாபி என்பவருக்கு ரூ.7,67,500/-க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. திரு. முகமது ஷாபி, தனியாரிடம் வாங்கிய சுமார் 10 ஏக்கர் நிலத்துடன், இக்கட்டளை நிலங்களையும் சேர்த்து சுமார் 25 ஏக்கர் நிலத்தில், ஷீபா ஹவுசிங் நிறுவனம் என்ற அமைப்பின்மூலம் 300 வீட்டு மனைகளை உருவாக்கி அதற்கு ஷீபா கோல்டன் சிட்டி என்று பெயரிட்டு லே அவுட், கட்டட அனுமதி ஆகியவற்றைப் பெற்று, பல்வேறு நபர்களுக்குக் கிரயம் செய்யப்பட்டு தற்போது 130 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. திருநெல்வேலி இணை ஆணையரின் உத்தரவின் அடிப்படையில் திருநெல்வேலி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மேற்காணும் கட்டளை நிலங்களை மீட்பதற்காக சங்கரன்கோவில் துணை ஆணையர்/செயல் அலுவலரால் அசல் வழக்கு எண் 566/7-ல் வழக்கு தொடரப்பட்டு, வழக்கு நிலுவையில் உள்ளது. இந்நிலையில், திரு. முகமது ஷாபி மற்றும் கட்டளை நிர்வாகி ஆகியோர் திருநெல்வேலி இணை ஆணையருடன் இதுபற்றிப் பேச்சுவார்த்தை நடத்திட முன்வந்துள்ளனர். திருக்கோயில்/கட்டளை நலனுக்கு பாதிப்பு ஏற்படா வண்ணம் இப்பிரச்சினையில் உறுதியாக நடவடிக்கை எடுத்திட திருநெல்வேலி இணை ஆணையரை சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் அவர்களால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா.

**திரு. என். மாலைராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். அனைத்து விவரங்களையும் அறிந்துகொண்டேன்.

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், அருள்மிகு சங்கர நாராயண சுவாமி திருக்கோயிலில், ஆடித்தபசு மண்டகப்படி 11 ஆம் நாள் உற்சவத் திருநாள் நடத்தப்பட்டு வருகிறது. அத்திருநாளின்போது சுவாமிக்கு அபிஷேகம், அலங்காரம் மற்றும் எழுந்தருளச் செய்வதற்காக 'ஆடித்தபசு மண்டகப்படி உற்சவ நிதி' என்ற 'குற்றாலம்மாள் அறநிறுவனக் கட்டளை'யினை, திருமதி குற்றாலம்மாள் என்பவர் 1975 ஆம் ஆண்டில் ஏற்படுத்தியுள்ளார். இக்கட்டளையின் அறங்காவலராக திரு. சங்கரநாராயணன் என்பவர்

நியமனம் செய்யப்பட்டுள்ளார். ரூபாய் இருபதாயிரத்தினை ஆரம்பத் தொகையாகக் கொண்டு, மேற்காணும் அறக்கட்டளை ஆரம்பிக்கப்பட்டது. இக்கட்டளையின் மூலதனத்தின்மூலம் கிடைக்கப்பெற்ற வட்டியிலிருந்து, 11 ஆம் திருநாளுக்கான செலவினம்போக, எஞ்சியுள்ள தொகையிலிருந்து திருநெல்வேலி வட்டம், கொங்கந்தான்பாறை கிராமத்தில் சர்வே எண் 9–ல் 12 ஏக்கர், 29 சென்ட்டும், சர்வே எண் 11–ல் 2 ஏக்கர், 8.5 சென்ட்டும், ஆகமொத்தம் 15 ஏக்கர், 14 சென்ட் நிலம், 1985 மற்றும் 1986 ஆம் ஆண்டுகளில் இக்கட்டளையின் பெயரால் வாங்கப்பட்டது. ஆனால், இந்த நிலத்தைச் சில நபர்கள் போலியான ஆவணங்களைத் தயார் செய்து, குற்றாலம்மாள் அறக்கட்டளையினருக்குத் தெரியாமல், மேலப்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து போலியாகப் பத்திரப் பதிவு செய்துள்ளனர். அந்நிலத்தை ஒரு தனியார் நிறுவனம் வாங்கி, 300–க்கும் மேற்பட்ட குடியிருப்புகளை ஏற்படுத்த, தற்போது 130 குடியிருப்புகள் அங்கு கட்டப்பட்டுள்ளன. இவற்றை ஏழையெளிய, நடுத்தர மக்கள் வாங்கியுள்ளனர்.

மேற்படி நிலத்தை அறக்கட்டளைதாரருக்குத் தெரியாமலும், அறநிலையத் துறையினருக்குத் தெரியாமலும் எப்படி விற்றனர் என்பது தெரியவில்லை. போலிப் பத்திரங்களைத் தயார் செய்து விற்பனை செய்தவர்கள்மீது கடுமையான குற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். அறநிலையத் துறைக்குச் சொந்தமான அந்த நிலத்தில் தற்போது கட்டப்பட்டுள்ள 130 வீடுகளையும் வாங்கியவர்கள், பல ஏழைக் குடும்பங்களைச் சார்ந்தவர்கள் என்பதால், அவர்களுக்குப் பாதிப்பு ஏற்படாதவண்ணம், அந்நிலத்தை சந்தை மதிப்பீட்டு விலையின்படி நிர்ணயம் செய்து, அவர்களுக்கு அக்குடியிருப்புகளை வழங்கிடக் கேட்டுக்கொள்கிறேன். இனிமேல் அங்கு காலியாக உள்ள நிலத்தில் கட்டடம் கட்டத் தடை விதிக்கவும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். மாலைராஜா, இரண்டு கேள்விகள் மட்டும் கேட்கலாம்.

**திரு. என். மாலைராஜா:** முடித்துவிடுகிறேன். அங்கே குடியிருப்புகளைக் கட்டவேண்டுமானால், அறநிலையத் துறையின் அனுமதியைப் பெறவேண்டுமெனவும், இதுபோன்ற விதிமுறைகள் எங்கும் மீறப்படாதவண்ணம் கண்காணித்திடவும், அரசுக்கும் அறநிலையத் துறைக்கும் நஷ்டம் ஏற்படாவண்ணம் நடவடிக்கை எடுத்திடவும் வேண்டிக் கேட்டு, தங்களுடைய கவனத்தை ஈர்த்து அமைகின்றேன். நன்றி, வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றாலம்மாள் அறநிறுவனத்தின் சார்பில், சங்கரன்கோவிலில் இருக்கக்கூடிய அருள்மிகு சங்கர நாராயண சுவாமி திருக்கோயிலுக்கு ஆடித்தபசுனுடைய 11 ஆம் நாள் உற்சவத்திற்காக, குற்றாலம்மாள் அறநிறுவனம் என்ற பெயரிலே, குற்றாலம்மாள் என்பவரால் நிறுவப்பட்டது. அதனுடைய செயலாளராக இருந்து, திரு. சங்கரநாராயணன் என்பவர், குற்றாலம்மாள் அவர்களுடைய புதல்வர், கவனித்து வந்தார். 1975 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்த அறக்கட்டளை 11 ஆம் நாள் தபசுக்காக 20,000 ரூபாய் முதலீட்டிலே தொடங்கப்பட்டது. 1985 மற்றும் 1986 ஆம் ஆண்டுகளில், 15.14 ஏக்கர் நிலத்தினை அந்த அறக்கட்டளைக்காக வாங்கியிருந்தார்கள். அறக்கட்டளையினுடைய சொத்துக்களைக் கிரயம் செய்ததோடு, பட்டா மாறுதல் செய்யாமல் விட்டுவிட்டார்கள். இதைச் சில சமூகவிரோத சக்திகள், தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, மேற்படி சொத்துக்கள் தங்களுக்குரியவை என்று, போலியான ஆவணங்களைத் தயாரித்து, எம்.கே.எம். முகமது ஷாபி என்பவருக்கு விற்பனை செய்திருக்கின்றார்கள். பிறகு அது துறையினுடைய கவனத்திற்கும், இந்த அறக்கட்டளையினுடைய செயலராக இருந்து செயல்படக்கூடிய சங்கரநாராயணன் அவர்களுக்கும் விவரம் தெரிந்தவுடன், அவர்கள் இதுபற்றி வினா எழுப்பியபோது, அந்த ஷாபி என்பவர், தான் தவறுதலாக, போலியான ஆவணங்களைக் கண்டு அந்தச் சொத்துக்களை வாங்கிவிட்டதாகக் கூறியிருக்கின்றார். ஆகவே, அந்தச் சொத்துக்களுக்கு உரிய மதிப்பீட்டுத் தொகையைத் தான் செலுத்துவதாக அவர் உறுதி கூறியிருக்கிறார். இருந்தாலுங்கூட, துறையின் சார்பிலும் கட்டளைதாரர்கள் சார்பிலும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அது சம்பந்தமான வழக்கு, இப்பொழுது திருநெல்வேலி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்டு, நிலுவையில் இருக்கிறது. மேலும், அந்த ஷாபி என்பவர் உருவாக்கியிருக்கக்கூடிய பட்டாக்களை வேறு யாருக்கும் விற்பனை செய்யக்கூடாது என்பதற்காக, தனியாக ஒரு வழக்கு தொடரப்பட்டு, பதிவு செய்யப்பட்ட பத்திரங்களையும் விடுவிக்கக்கூடாது என்ற ஓர் ஆணையும் இப்பொழுது துறையின் சார்பில் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மேலும், இது தொடர்பாக அரசினுடைய தலைமை வழக்கறிஞருடன் கலந்து பேசி, இந்த அறக்கட்டளையினுடைய சொத்துக்களைப் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா.

**திரு. என். மாலைராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி.

## 5. அரசினர் தீர்மானம்

### உறுப்பினர்கள் திரு. கோ. அரி மற்றும் திரு. வி.பி. கலைராஜன் ஆகியோரைப் பேரவைப் பணிகளினின்று கூட்டத் தொடர் முழுவதும் நீக்கி வைத்த தண்டனையை ஒரு வார காலமாகக் குறைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் தங்கள் தீர்மானத்தை முன்மொழியலாம்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் திருவாளர்கள் கோ. அரி மற்றும் வி.பி. கலைராஜன் ஆகியோர் சட்டமன்ற நடவடிக்கைகளில் கலந்துகொண்டு ஜனநாயகக் கடமைகளை ஆற்றுவதற்கு ஏதுவாக அவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனையை ஒரு வாரமாகக் குறைத்து வழங்கலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெருந்தன்மையுடன் பரிந்துரைத்த கருத்திற்கிணங்க, திரு. கோ. அரி மற்றும் திரு. வி.பி. கலைராஜன் ஆகியோர் 15-4-2008 முதல் இப்பேரவைப் பணிகளிலிருந்து இக்கூட்டத்தொடர் முழுவதும் நீக்கப்படுவர் என்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்குப் பதிலாக, அவர்களை 15-4-2008 முதல் ஒரு வார காலத்திற்கு மட்டுமே பேரவைப் பணிகளிலிருந்து நீக்கம் செய்யலாம்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

| | |
|---|---|
| ஏற்போர் 'ஆம்' என்க. | (ஆம்) |
| மறுப்போர் 'இல்லை' என்க. | (இல்லை) |





ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

"மாண்புமிகு உறுப்பினர்கள், திரு. கோ. அரி மற்றும் திரு. வி.பி. கலைராஜன் ஆகியோர் 15-4-2008 முதல் ஒரு வார காலத்திற்கு அவையைவிட்டு நீக்கி வைக்கப்படுகிறார்கள்."

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம் அவர்கள் சொல்கிறார்கள், அவர்களுக்காக ஆளுங்கட்சியும் 'ஆம்' என்று சொன்னது என்று. ஆனால், நான் இந்த அவையிலே ஒன்றைச் சொல்கிறேன். அவர் போன முறை இங்கே அமைச்சராக இருந்தவர். எங்களிலே பல முறை இப்படி வெளியேற்றப்பட்டபோது பேராசிரியரும், தாங்களும் விடுத்த வேண்டுகோளை உங்கள் முதலமைச்சர் ஒருநாளாவது எழுந்து எங்களுக்குக் குறைத்ததுண்டா? இல்லையே! அதுதான் கலைஞர்; அதுதான் திமுக; இதுதான் அதிமுக.

## 6. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி.

***திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று இரண்டாவது முதல் தொண்ணூற்று ஏழாவது வரையிலான ஆறு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் எண்பத்து

[திரு. ஜி.கே. மணி] [2008 ஏப்ரல் 17

எட்டாவது முதல் தொண்ணூற்று இரண்டாவது வரையிலான ஐந்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (இ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை சந்திரசேகரன்.

**திரு. துரை சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007–2008 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் நான்காவது முதல் ஏழாவது வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 7. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### கோரிக்கை எண் – 4 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008–2009 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைமீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 4 – ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை. மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.696,11,77,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.72,58,99,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 4, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



2008 ஏப்ரல் 17] [டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்]

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 216, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9306, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12569, திரு. விடியல் எஸ். சேகர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 13784, திரு. மா. ராஜசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 14470, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3090, திரு. பெ.சு. விஜயகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1700, திரு. பெ. மோகன்.

**திரு. பெ. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2193, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10719, திரு. கு. பாண்டுரங்கன்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10807, திரு. கு.ப. வேலுமணி.

**திரு. கு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13205, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5344, திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6320, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. ஜி.கே. மணி] [2008 ஏப்ரல் 17

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6481, திரு. கி. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9477, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9780, திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11198, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



2008 ஏப்ரல் 17]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11422, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13537, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13958, திரு. கோ. எதிரொலி மணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 14818, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16070, திரு. தி. வேல்முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1494, திரு. எஸ். இராசசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1567, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1580, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1808, திரு. போ. சின்னப்பன்.

**திரு. போ. சின்னப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விளாத்திகுளம் தொகுதி, குளத்தூர் கிராமத்தில் மாணவர் விடுதி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1862, திரு. தா. மலரவன்.



**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதி திராவிட மாணவர்களுக்கு வழங்கும் உணவுத் தொகையை அதிகப்படுத்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2383, திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2637, திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2970, திரு. கு. செல்வம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3156, டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுராந்தகம் தொகுதியில் உள்ள செய்யூரில் பழுதடைந்துள்ள ஆதி திராவிட சிறுவர்களுக்கான விடுதியைப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3844, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் 80% நிலமில்லாத ஆதி திராவிட மக்களுக்கு 2 ஏக்கர் நிலம் வழங்கும் திட்டத்தில் முன்னுரிமை அளித்து நிலம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3920, திரு. எஸ். ராஜகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4089, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், அலமேலுமங்காபுரம் ஆதி திராவிடர் நல மேனிலைப் பள்ளியில் விளையாட்டு மைதானம் இல்லாததால் பக்கத்தில் உள்ள நிலத்தைக் கையகப்படுத்தி விளையாட்டு மைதானம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4164, திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதியிலுள்ள ஆதி திராவிட சமுதாய மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு அடிப்படை வசதிகள், குடிநீர், மின்விளக்கு, மயானம் மற்றும் மயானம் செல்வதற்கான பாதை போன்றவற்றை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4298, திருமதி ரா. லீமா றோஸ்.



**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதி, மலைவாழ் (பழங்குடியின) மக்கள் வாழும் பகுதிகளில் அடிப்படை வசதிகளான மின்சாரம், சாலை, குடிதண்ணீர் கிடைக்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4543, திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதியில் உள்ள அரசு ஆதி திராவிடர் மேல்நிலைப் பள்ளிகளில் அதிகமாக மாணவ, மாணவிகள் படிக்கின்றனர். வகுப்பறைகளின் நெருக்கடியைப் போக்க கூடுதல் கட்டடங்களை அரசு கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5146, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு அரசின் நலத் திட்ட உதவிகள் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *5582*, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காஞ்சிபுரம் தொகுதியில் உள்ள ஆதி திராவிட மாணவ, மாணவியர்கள் தங்கும் விடுதிகளில் குளியலறை மற்றும் கழிப்பிடங்களுக்குப் போதுமான தண்ணீர் விநியோகம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *5947*, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, மலையோரப் பகுதிகளில் குடியிருக்கும் மலைவாழ் மக்களுக்கு 300 குடியிருப்புகள் கட்ட தலா ரூபாய் 1.5 இலட்சம் வீதம் அனுமதிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *6745*, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சோளிங்கர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நெமிலி ஒன்றியத்தில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைமூலமாக சுய உதவிக் குழுக்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்



ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *7334*, திருமதி எஸ். தேன்மொழி.

**திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நிலக்கோட்டை தொகுதியில் உள்ள ஆதி திராவிடர்களுக்கான காலனி வீடுகள் மற்றும் தொகுப்பு வீடுகள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதை, போர்க்கால அடிப்படையில் பழுதுபார்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *7835*, திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பட்டுக்கோட்டையில் உள்ள ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கும் உயர்நிலைப் பள்ளியினை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *8858*, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில் உள்ள ஆதி திராவிடர் விடுதிகளில் தரமான உணவு வழங்குவது குறித்தும் இரவு நேரங்களில் விடுதிக்காப்பாளரை, விடுதியில் தங்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. இ. மகேந்திரன்] [2008 ஏப்ரல் 17

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9214, திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி இன மக்கள் தொழில் செய்வதற்கு மானியத்துடன்கூடிய கடன் தாட்கோமூலம் பெறுவதில் உள்ள பிரச்சினையைத் தீர்த்து, உடன் கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9277, திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

**திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதி திராவிட மாணவர்கள் பயன்பெறும் வகையில் பந்தநல்லூர் ஊராட்சியில் புதிய மாணவர் இல்லம் திறக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10054, திரு. ல. ராதாகிருஷ்ணன்.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டி தொகுதியிலுள்ள ஆதி திராவிடர் விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவ, மாணவிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த



2008 ஏப்ரல் 17] [திரு. ல. ராதாகிருஷ்ணன்]

வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10260, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டத்தில் தகுதியான அனைத்து ஆதி திராவிட மக்களுக்கும் விண்ணப்பித்தவுடன் தாட்கோமூலம் விரைவாகக் கடன் கிடைக்க உறுதி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10401, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதி திராவிட மக்கள் வசிக்கும் பழுதடைந்த வீடுகளைச் சீரமைக்க நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10438, திரு. வை. காவேரி.

[2008 ஏப்ரல் 17

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எடப்பாடி தொகுதி, வீரப்பம்பாளையம் அருந்ததியர் மக்களுக்கு நிலம் கையகப்படுத்தி வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10487, திரு. இரா. இராம்பிரபு.

**திரு. இரா. இராம்பிரபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பரமக்குடி சட்டமன்றத் தொகுதியிலுள்ள ஆதி திராவிட சமுதாய மக்கள் வசிக்கக்கூடிய கிராமங்களில் உள்ள சாலைகளுக்கு சிமெண்ட் சாலை அமைத்துத்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10633, திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதி திராவிட மாணவ, மாணவிகளுக்கு அரசு அளிக்கும் உதவித் தொகையை கூடுதலாக அதிகரித்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10759, திரு. பி. பலராமன்.



2008 ஏப்ரல் 17]

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு கட்டித் தரப்படும் தொகுப்பு வீடுகளின் மாதிரி வரைபடத்தை மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10886, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாரமங்கலம் தொகுதி, செலவடை ஊராட்சி, கரட்டுப்பட்டியில் ஆதி திராவிடர்கள் வசிக்கும் 30 குடும்பங்களுக்குப் பட்டா வழங்கி, இலவச வீடு கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11317, திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பல்லடம் தொகுதியில் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர், மாணவியர் நல விடுதி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11470, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

[2008 ஏப்ரல் 17

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொள்ளாச்சி தொகுதியில் ஆதி திராவிட நலத் துறைமூலம் செயல்படுத்தப்படும் ஆதி திராவிட மாணவ மாணவியர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் தரமான உணவு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11797, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பழங்குடியினர் என்று பொய்யாக சாதிச் சான்றிதழ் பெற்று அவர்களுக்குரிய சலுகைகளை அனுபவிப்பவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12481, திரு. ராம. சுப்புராம்.

**திரு. ராம. சுப்புராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருமயம் சட்டமன்றத் தொகுதி, திருமயம் ஒன்றியம் பி. அளகாபுரி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் மாணவிகள் விடுதி ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



2008 ஏப்ரல் 17]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12747, திரு. மா. சந்திரகாசி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 13063, திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலத்தில் அமைந்துள்ள சட்டக் கல்லூரி ஆதி திராவிடர் பழங்குடியின மாணவர்களின் உதவித் தொகை மற்றும் தங்கும் விடுதி பற்றியும் மேலும் அவர்கள் அரசு உதவியினைப் பெற்று கல்வி கற்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13161, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் நிலவி வரும் தீண்டாமைக் கொடுமையை தணிக்கும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13695, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை புட்டுத் தோப்பு பகுதியிலும் பிற இடங்களிலும் வசிக்கும் காட்டுநாயக்கர் சமூகத்தவருக்கு பழங்குடி இன சாதிச் சான்றிதழ் கிடைத்திடச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/–ல் ரூ.100/–குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13765, திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதியில் உள்ள பெருந்துறை ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியத்தில் ஆதி திராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/–ல் ரூ.100/–குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13863, திரு. வை. சிவபுண்ணியம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 14241, திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் தொகுதி, மேலூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஆதி திராவிடர் மாணவர்களுக்கென தனியாக விடுதி இல்லாமல் பள்ளியிலுள்ள வகுப்பறையிலேயே தற்போது மாணவர் விடுதி உள்ளது. எனவே, அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு புதிய கட்டடம் கட்டித் தருவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/–ல் ரூ.100/–குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14463, திருமதி பி. பத்மாவதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 15156, திரு. பா. வேல்துரை, இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 15238, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் தொகுதியில் காரமடை, பெத்திக்குட்டை, புஜங்கனூர், வெள்ளியங்காடு, சிறுமுகை ஆகிய இடங்களில் ஆதி திராவிட மாணவர்களுக்கென மாணவர் விடுதிகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/–ல் ரூ.100/–குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16271, திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் மலைவாழ் மக்களுக்கும் திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலைவாழ் மக்களுக்கும் வழங்கப்படும் சலுகைகள் முழுமையாக அவர்களைச் சென்றடைய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/–ல் ரூ.100/–குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16535, திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராசபாளையம் தொகுதியில் ஆதி திராவிட மக்கள் மட்டும் வாழும் பகுதியான கொடுக்காம்பட்டி ஊராட்சி, கணபதி சுந்தரநாச்சியாபுரம் கிராமங்களில் சமுதாயக் கூடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16966. டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்.

**டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதி திராவிட மக்களுக்கு மயானம், மயானச் சாலை போன்றவை தமிழகத்தில் உள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் கிடைக்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16988. திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செங்கோடு தொகுதியில் ஆதி திராவிடர் விடுதியில் உள்ள பழுதுகளை நீக்க நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 17036. திரு. ஞா. செந்தமிழன்.

**திரு. ஞா. செந்தமிழன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கும் விடுதிகளில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.696,11,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,58,99,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 17069. திரு. வீர. இளவரசன். இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைமீது விவாதம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சொ. கருப்பசாமி. உங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரம் 18 நிமிடங்கள். குறித்த நேரத்தில் பேசி முடிக்க வேண்டும்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதநேயத்தின் மாபெரும் தலைவி, உழைப்பு ஒன்றே உயர்வு என்ற நோக்கத்தோடு, மக்கள் பணியாற்றிவரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பார் ஆள யாரோ என, அவரவர் பரிதவித்துக்கொண்டிருக்கின்ற இந்தவேளையில், ஊரார் உலகத்தார் போற்றும்வகையில், தமிழக மக்களின் ஒட்டுமொத்த ஆதரவுடன் மீண்டும் நாடாள இருக்கும் எங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப்பாதம் தொட்டு வணங்குகின்றேன்.

---

@ 171 முதல் 209 வரையிலான பக்கங்களில் இணைப்பு 1 ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. சொ. கருப்பசாமி] [2008 ஏப்ரல் 17

தி.மு.க. ஆட்சி என்றாலே, மனதில், மக்கள் மனதில் தீயாகப் பரவிவரும் வேதனையுள்ள ஆட்சி. ஏழையெளிய மக்களிடம் எண்ணற்ற கனவுகள் இருப்பினும், தங்கள் வயிற்றுப் பிழைப்பிற்காக அன்றாடம் இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு இன்றைக்குள்ள விஷம் போல் ஏறிக்கொண்டிருக்கின்ற விலைவாசியே காரணம்.

முற்பகல் 11–35

பேரவைத் தலைவரே, நன்றாகக் கேளுங்கள். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மானியக் கோரிக்கையின் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் பக்கம் 26–ல் 10 ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவியர்களை நல்ல பெயர் உள்ள தனியார் பள்ளிகளில் சேர்த்தல்; இதிலே என்னவென்றால், மாணவ, மாணவியர்கள், அரசுப் பள்ளிகளில் படித்து வருகிற அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களைத் தேர்வு செய்து, மாவட்டத்திற்கு 10 பேர், ஆக 207 பேர் நல்ல பெயர் உள்ள தனியார் பள்ளிக்கூடத்திலே, தனியார் பள்ளிக்குப் பணத்தைக் கொடுத்து படிக்க வைப்பதாக இந்த கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் இளங்கலை பட்டப் படிப்பு, முதுகலைப் பட்டப் படிப்பு படிக்கின்ற மாணவ, மாணவியர்கள் கல்விக் கடன் பெற்று வந்த அந்தத் தொகையை முழு மானியமாக மாணவர்களுக்குக் கொடுத்து படிக்க வைத்தார்கள். ஆனால், நீங்கள் தனியார் பள்ளிகளை ஊக்கப்படுத்துகிறமாதிரி—மாணவர்களுக்கு, ஏழையெளிய மாணவர்களுக்குக் கொடுக்க வேண்டுமேதவிர—அதிகமான மதிப்பெண் பெற்ற பிள்ளைகள் அனைவரையும் தனியார் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிவிட்டீர்கள் என்று சொன்னால், அப்போது அரசுப் பள்ளிகளில் என்ன நடக்கிறது?

அதுமட்டுமல்ல, எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில், கூட்டுறவு வங்கியின்மூலமாக ஆதி திராவிட மக்களுக்குக் கறவை மாடுகள், செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள், விவசாயிகள் பயன்படுத்துவதற்கு டிராக்டர்கள், இப்படிப் பல்வேறு கடன் உதவிகளை வாரி வாரி வழங்கினார்கள். ஆனால், உங்களுடைய தி.மு.க. ஆட்சியில் ஏதாவது கொடுத்ததாகச் சொல்ல முடியுமா? எத்தனை பேருக்கு செம்மறி ஆடுகள் கொடுத்திருக்கிறீர்கள், வெள்ளாடுகள் கொடுத்திருக்கிறீர்கள் அல்லது டிராக்டர்கள் கொடுத்திருக்கிறீர்கள்? கணக்கு விவரங்கள் இருந்தால் நீங்கள் பதிலுரையில் சொல்லுங்கள்.



2008 ஏப்ரல் 17] [திரு. சொ. கருப்பசாமி]

பேரவைத் தலைவரே, இங்கே பாருங்கள். நான் உங்களைப் பார்த்துப் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருப்பசாமி, நேற்றைய அறிவிப்பைப் பார்த்தீர்கள் என்றால், உங்கள் சங்கரன்கோவில் நகராட்சிக்கு, எல்லா ரோடிற்கும் சிமெண்ட் சாலை கொடுத்திருக்கிறார்கள்.

**திரு. சொ. கருப்பசாமி:** அதைப் பின்னாலே பார்த்துக்கொள்ளலாம்; பிறகு தனியாகப் பேசிக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அவ்வளவையும் அறிவித்திருக்கிறார். முதலில், நன்றி சொல்லிவிட்டுப் பேசுங்கள்.

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுப்பதாக அறிவித்தார்களே தவிர, கொடுக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

**திரு. சொ. கருப்பசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, வாங்கின மக்கள், பயன்பெற்ற மக்கள் இப்போது என்ன பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியவில்லை. நீங்கள் இங்கே. குத்த வைத்திருப்பதால் உங்களுக்குத் தெரியவில்லை.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே ஆதி திராவிட மக்களுக்கு எத்தனை கறவை மாடுகள் எத்தனை பயனாளிகளுக்கு வழங்கினார்கள் என்ற அந்த விவரத்தையெல்லாம் இங்கே எடுத்துச் சொல்ல வேண்டும். சும்மா, ஒட்டுமொத்தமாக பேசிக்கொண்டுப் போனால் சரியாக இருக்காது.

**திரு. சொ. கருப்பசாமி:** இவர் ரொம்ப, ரொம்ப ரைட் மாதிரி பேசுகிறார். எங்கள் **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எழுப்பிய வினாவிற்கு அவர் பதில் சொல்லாமல் எங்கேயோ செல்கிறார். இப்படிப் பேசுவதனால் அது

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

உண்மையாகி விடாது. ** சும்மா, பேசுவதற்காக எது வேண்டுமானாலும் பேசிவிடுவதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருப்பசாமி, சப்ஜெக்ட்டுக்குள்ளே போங்கள். 18 நிமிடங்கள்தான் உங்களுக்கு நேரம் ஒதுக்கியிருக்கிறேன். மேற்கொண்டு அரை நிமிடம்கூட தரமாட்டேன், சொல்லிவிட்டேன்.

**திரு. சொ. கருப்பசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருப்பசாமி, இதை என்னிடம் காண்பித்துவிட்டுத்தான் நீங்கள் கொண்டு வந்திருக்க வேண்டும். அவர் சொன்ன அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற குற்றச்சாட்டுகளைச் சொல்லும்போது பேரவைத் தலைவரிடத்திலே கொடுத்து, அனுமதி பெற்று . . .

**திரு. சொ. கருப்பசாமி:** நீங்கள் ஆதாரம் . . .

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** என்ன? ** எனக்குத் தெரியாதது, உங்களுக்கு ஒன்றும் தெரிந்திருக்க நியாயம் இல்லை. அப்படி ஒரு புகார் இல்லை. (குறுக்கீடு) என்ன? **

*முற்பகல் 11–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருப்பசாமி, நீங்கள் ஏற்கெனவே அமைச்சராக இருந்திருக்கின்றீர்கள். நீங்கள் இங்கே வந்து இப்படி அவையிலே ** முதலில் என்னிடம் அனுமதி வாங்கினீர்களா? நீங்கள் இப்படியெல்லாம் விதியை மீறி நடந்துகொள்ளாதீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கின்ற ஆதி திராவிட மாணவர்கள் அதிக மதிப்பெண் எடுத்தால், அவர்களை நல்ல தனியார் பள்ளியிலே சேர்த்து இன்னமும் அவர்களை கைதூக்கி விடவேண்டுமென்பதுதான் இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை. அது தவறு என்கின்றாரா? இது ஒன்று. மற்றொன்று, அவர் சொன்னார், கூட்டுறவு சொசைட்டியின்மூலமாக டிராக்டர்களெல்லாம் ஆதி திராவிடர்களுக்கு அ.தி.மு.க. ஆட்சியில் கொடுத்ததாகச் சொன்னார். (திரு. சொ. கருப்பசாமி இருக்கையில் உட்காராமல் நின்றுகொண்டே இருந்தார்.)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருப்பசாமி, அமைச்சர் பேசிக்கொண்டிருக்கும்போது நீங்கள் உட்காரவேண்டும். (குறுக்கீடு) நீங்கள் முதலில் உட்காருங்கள். நீங்கள் இதுவரைக்கும் மரபைப்பற்றி என்ன படித்திருக்கின்றீர்கள்? உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அ.தி.மு.க. ஆட்சியில் எந்தெந்த ஆதி திராவிடர்களுக்கு, எந்தெந்த மாவட்டங்களில், எவ்வளவு டிராக்டர்கள் கொடுக்கப்பட்டன என்று அதற்கான ஆதாரங்கள் இருக்கின்றனவா? அவர் ஏற்கெனவே இந்தத் துறைக்கு அமைச்சராக இருந்தவர். அதை அவைக்குக் கொடுத்துவிட்டுச் சொன்னால் நன்றாக இருக்கும்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டியலெல்லாம் நிறைய இருக்கின்றன. ** கொண்டு வந்தால் அதையெல்லாம் படிக்க நேரமில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில், தாட்கோ மூலமாக 253 கோடி ரூபாய் செலவிலே 2,25,000 பயனாளிகள் பயன்பெறும் வகையில் திட்டம் செயல்படுத்தப்படும் என்று சொல்லியிருக்கின்றீர்கள். இந்த ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில், பக்கம் 58–ல், மத்திய அரசிடமிருந்து 2007–2008 ஆம் ஆண்டில், 55 கோடி ரூபாய் எதிர்பார்த்தார்களாம். அவர்களிடமிருந்து 48.98 கோடி ரூபாய் மட்டுமே வரப்பெற்றுள்ளது. அதில் விடுதிக்கு/பள்ளிக்கு 10 சதவிகிதம் ஒதுக்கீடு போக, மீதி 44.08 கோடி ரூபாயும் மற்றும் நீங்கள் ஒதுக்கித் தந்த 25 கோடி ரூபாய் ஆக, 69.08 கோடி ரூபாய் மட்டும்தான் தாட்கோ மூலமாக செயல்படுத்தப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. அப்படி இருக்கும்போது, 253 கோடி ரூபாய் என்று சென்ற ஆண்டு சொல்லிவிட்டு, இந்த ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் வெறும் 69.08 கோடி ரூபாய் என்றால் என்ன அர்த்தம்? இதற்கு என்ன பதில் சொல்லப்போகின்றீர்கள் என்பதைப் பிறகு சொல்லுங்கள்.

பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சியில் எதையும் கொடுக்கவில்லை என்று மக்கள் மிகுந்த வேதனையடைந்து, வெந்து, நூலாகியிருக்கின்றார்கள். கடந்த மாதம் பெய்த மழையின் பாதிப்பு பற்றி தெரியுமா? ஏகப்பட்ட விவசாயிகள் கண்ணீரும், கவலையுமாக, வீடு இடிந்து அவர்களுக்கு ரூபாய் கொடுக்கப்படவில்லை. நெற்பயிர்,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சூரியகாந்தி பயிரிட்டவர்கள், பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூபாய் கொடுக்கப்படவில்லை. இதற்கெல்லாம் தேர்தல் வரட்டும், ஓட ஓட விரட்ட, விவசாயப் பெருங்குடி மக்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றார்கள்.

அதேபோல ஒதுக்கப்பட்ட இந்த நிதிகூட பின்வரும் திட்டங்களுக்குச் செயல்படுத்தப்படும் என்று சொல்லியிருக்கின்றீர்கள். ஆனால் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 7 ஆயிரம் ஆதி திராவிட நிலமற்ற மகளிருக்கு 2 இலட்சம் ரூபாய் செலவில், ஒரு இலட்சம் ரூபாய் மானியத்தில் நிலம் வழங்கும் சிறப்பான திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அம்மா அவர்கள் கொண்டு வந்த அந்த திட்டத்தில் 11,274 மனுக்கள் வரப்பெற்று, 8,100 மனுக்கள் தகுதி வாய்ந்தவை எனஆய்வு செய்யப்பட்டு வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டன. அதில் 1,357 விண்ணப்பங்களுக்கு கடன் வழங்க வங்கிகள் ஒப்புதல் அளித்தன. இதில் 692 மகளிர் நிலத்தைப் பெற்று பயனடைந்து வருகின்றார்கள். ஆனால் 2006–2007 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் 8,000 மகளிருக்கு நிலம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என்று சொல்லியிருக்கின்றீர்கள். விட்டுவிட்டீர்கள். 2007–2008 கொள்கை விளக்கக் குறிப்பில் 1,361 மகளிர் பயன்பெறும் வகையில் செயற்படுத்தப்படும் என்று சொல்லியிருக்கின்றீர்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இந்த ஆண்டு 2008–2009 கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் எவ்வளவு செலவழிக்கப் போகின்றீர்கள், எத்தனை பயனாளிகளுக்குக் கொடுக்கப் போகின்றீர்கள், எவ்வளவு நிதி என்பதை குறிப்பிடாதது ஆதி திராவிட மக்களுடைய மனதில் மிகுந்த வேதனை அளிக்கிறது.

இந்த ஆட்சியில் மீண்டும் தீண்டாமை ஒழிப்பு என்ற போர்வையில் நாளுக்கு நாள் தீண்டாமை வளர்ந்து வருகின்ற மாதிரி நோக்கம் இருக்கிறது. இதை எதிர்ப்போர் மீது வழக்கு போடப்படுகின்றது. இதுதான் இந்த ஆட்சியின் சாதனையா? கடந்த மாதம் விழுப்புரம் மாவட்டம் எரையூரில்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய தலைவிதான், முன்னாள் முதலமைச்சர்தான், ஒரு ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த





நாடாளுமன்ற உறுப்பினர் விமானத்தில் இருந்தபோது அந்த விமானத்தில் ஏறுவதற்கே மறுத்தவர். இதை மறந்துவிடக் கூடாது. ஆனால் எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர், தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள்தான் அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்கியிருக்கின்றார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், அவர் தீண்டாமையைப் பற்றி பேசியதால்தான், அமைச்சர் சொன்னார். வேறு ஒன்றுமில்லை. தீண்டாமையைக் கட்டுப்படுத்தவில்லை என்று அவர் சொன்னதால், அமைச்சர் ஓர் உதாரணத்தைச் சொன்னார். வேறு ஒன்றுமில்லை, உட்காருங்கள். ** திரு. கருப்பசாமி, நீங்கள் ஜோரா ஒரு பாட்டு பாடுங்கள்.

முற்பகல் 11–45

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் பயன்படுத்திய அந்த வார்த்தை அவையினுடைய மரபிற்கு மீறியது. (குறுக்கீடுகள்) அவர் மன்னிப்புக் கேட்கவேண்டும். (குறுக்கீடுகள்) அவர் அந்த வார்த்தையை திரும்பப் பெறவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** (குறுக்கீடுகள்) திரு. கருப்பசாமி, நீங்கள் சொன்ன வார்த்தைகளைத் திரும்பப் பெறுங்கள். (குறுக்கீடுகள்) ** என்று சொல்லக்கூடாது. (குறுக்கீடுகள்) திரு. கருப்பசாமி சொன்ன வார்த்தைகளை அவைக்குறிப்பிலிருந்து நான் நீக்குகிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவரே அந்த வார்த்தையைத் திரும்பப் பெற்றுக்கொள்ளவேண்டும். திரும்பப்பெற்றுக்கொண்டு தன்னுடைய வருத்தத்தை இந்த அவையிலே தெரிவிக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கருப்பசாமி, நீங்கள் சொன்ன வார்த்தையைத் திரும்பப்பெறுகிறீர்களா, இல்லையா?

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

திரு. கருப்பசாமி, நீங்கள் சொன்ன வார்த்தையைத் திரும்பப் பெறுங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** நான் எப்பொழுதும் நடைமுறைப் பேச்சில் சொன்னேன். இதில் ஒன்றும் தவறு இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) அமைதி. அமைதி.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) **அதை நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஏற்றுக்கொள்கிறாரா? ஒன்று உறுப்பினர் அதைத் திரும்பப் பெறவேண்டும். இல்லையென்றால் அதை நீங்கள் நீக்கவேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை. அதை அவைக்குறிப்பில் இருந்து நீக்கவேண்டும். திரு. கருப்பசாமி, பாருங்கள், நீங்கள் முன்னாள் அமைச்சராக இருந்தவர். இந்தச் சமுதாயத்தின் மீது பற்று காரணமாக இருந்தால் தெளிவாகப் பேசுங்கள். எந்த அமைச்சர் மீதாவது குற்றச்சாட்டு சொன்னால், (குறுக்கீடுகள்) Subject-டோடு ஒட்டிப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோல மின்சாரத் துறை அமைச்சர் சொன்ன வார்த்தையையும் நீக்கிவிடலாம். ஏனென்றால் முழுமையாக எல்லாவற்றையும் நீக்கிவிடலாம் என்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன சொன்னார்கள்?

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** இல்லை. இல்லை. (குறுக்கீடுகள்) அவரே வந்து, ஒரு நிமிடம் கேளுங்கள். ஒரு நிமிடம் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்லி முடித்துவிடுகிறேன். கேளுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Right, right. அமைச்சர் சொன்னதும், உறுப்பினர் திரு. கருப்பசாமி சொன்னதும், அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. கருப்பசாமி.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பசாமி அவர்கள், ஏற்கெனவே அமைச்சராக இருந்தவர். (குறுக்கீடு) தொடர்ந்து கடந்த மூன்று சட்டமன்றக் கூட்டத் தொடரிலே பார்த்திருக்கிறோம். அவர் பேசுகின்றபோது மட்டும், பிரச்சினையாக எதையாவது எழுப்பவேண்டுமென்ற நோக்கத்திலே பேசிக்கொண்டிருப்பவர். தொடர்ந்து பாருங்கள் சட்டமன்றத்திலே– ஒன்று. இன்னொன்று, ** ஆதாரப்பூர்வம் என்று சொன்னால், நாங்கள் வழக்குப் போட்டிருக்கிறோம். ** பல்வேறு வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. ஆதாரமில்லாமல் இங்கே சட்டமன்றத்திலே குறிப்பிடுகிறார். ஆதாரமிருந்தால் கட்டாயம் அவர் மேல் இந்தத் துறையின் சார்பாக நடவடிக்கை எடுக்கப்படும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்தியாவிற்கே முன்னோடித் திட்டமாக இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். கொண்டுவந்த சைக்கிள் திட்டம் மாணவர்கள் பயன்பெறும் அளவிற்கு, (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11–50*

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** இல்லை, இல்லை, அது இல்லை. ** நான் என்ன சொல்கிறேன் என்றால் ஒரு குற்றச்சாட்டு சொல்வதாக இருந்தால், அதற்கான ஆதாரங்களை முன்கூட்டியே பேரவைத் தலைவரிடம் காட்டி அனுமதி வாங்கிச் சொல்ல வேண்டும். ஆதாரம் இருந்தால் சொல்ல வேண்டும். ** தெளிவாகச் சொல்ல வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள். இரண்டு side–லும் உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. இதனால் தான் உணவுத் துறை அமைச்சர், வேளாண்மைத் துறை அமைச்சர்,

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[பேரவைத் துணைத் தலைவர்] [2008 ஏப்ரல் 17

மின்சாரத் துறை அமைச்சர் எல்லோரும் அவரைக் கேட்டுக்கொண்டார்கள். ஆதாரத்தோடு பேசுங்கள், பொறுப்போடு பேசுங்கள், முன்னாள் அமைச்சராக இருந்தவர் நீங்கள் என்று இவ்வளவு கேட்டுக் கொண்ட பிறகும் ஏதோ யதார்த்தமாகப் பேசுவது மற்றவர்களுடைய மனதைப் புண்படுத்தும். எந்தவித ஆதாரமும் இல்லாமல் தொடர்ச்சியாக எல்லா அமைச்சர்களையும் குற்றம் சொன்னால் எப்படி? நீங்களே சொல்லுங்கள், தொடர்ச்சியாக... (குறுக்கீடுகள்) உட்காருங்கள், திரு. கருப்பசாமி, பேசுங்கள்.

**திரு. சொ. கருப்பசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** வேறு ஒன்றுமில்லை. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சைக்கிள் திட்டத்தை. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** எடுக்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் ஆகிவிட்டது. திரு. கருப்பசாமி, நேரம் முடிந்துவிட்டது. (குறுக்கீடு) இல்லை, நீங்கள் எங்கே பேசவே இல்லையே? பேசாமலேதான் ஊர் வம்பை இழுக்கிறீர்கள். முடித்து விடுங்கள்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் சொல்கிறேன். (குறுக்கீடு) 10 நிமிடம் கொடுத்தால் நன்றாகத்தான் இருக்கும்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்பில் பக்கம் 37-ல் கலவரங்களால் பாதிக்கப்படும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு நிதியுதவி வழங்கும் வகையில் நடப்பு நிதியாண்டில் 225 இலட்சம் ஒதுக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எரையூரில் நடந்த பாதிப்புக்குள்ளான ஆதி திராவிட மக்களுடைய பாதிப்புக்கு இந்த நிதியிலிருந்து ஏதாவது நிவாரணம் கொடுத்தீர்களா என்ற குறிப்பு இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் இல்லை. கொடுக்க வேண்டும். **

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2008 ஏப்ரல் 17]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. Before that I want to give my ruling. (குறுக்கீடுகள்) இருங்கள், இருங்கள். ** Please, அதுபோல எந்த ஆதாரமும் கொடுக்கவில்லை என்று பேரவைத் தலைவர் எனக்குச் செய்தி அனுப்பி இருக்கிறார். இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. (குறுக்கீடு) இல்லை, இல்லை இந்த மாதிரிப் பேசுவது உங்களுக்கு மட்டுமல்ல, ஒரு இயக்கத்திற்கே இழுக்கு வருகிறமாதிரி நீங்கள் நடந்து கொள்கிறீர்கள். அடுத்த பேச்சாளர் திரு. அ. சௌந்திரபாண்டியன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லாமே அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டியதுதான்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் கடைசியாகப் பேசியது ** அதுவும் ஆதாரமில்லாமல் சொல்லியது. அதையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்த கடைசி sentence எல்லாமே அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். திரு. அ. சௌந்திரபாண்டியன்.

**திரு. அ. சௌந்திரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக இணக்கத்தை இணக்கமாக்கியவர் ஐயா பெரியார் என்றால்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள் இங்கே அவர் என்னவோ 5 வருடத்தில் ஆதி திராவிட மக்களுக்காக பல்வேறு சாதனைகளை நிகழ்த்தியதாகக் கூறி இருந்தார்கள். நான் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். இங்கு தாட்கோமூலம் சரியாக யாரும் பயன்பெறவில்லை என்று நம்முடைய உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். தாட்கோமூலமாக கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் 3 இலட்சத்து 80 ஆயிரம் பயனாளிகள் பயன் பெற்றிருக்கிறார்கள்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திருமதி ஆ. தமிழரசி] [2008 ஏப்ரல் 17

(மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் 1.5 வருடங்களாக இருந்து பயன்படுத்திய நிதி எவ்வளவு என்று சொன்னால் ரூ.400 கோடி. ஆனால், இந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் ரூ.315 கோடியில் ஆதி திராவிட மக்கள் பயன்பெற்று இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(முற்பகல் 11–55

அதேபோல தனி நபர்மூலமாகவும் மற்றும் சுழல் நிதி கடன்மூலமாகவும் மகளிர்க்கான நிலம் வாங்கி வழங்கும் திட்டத்தின்மூலமாகவும் யாரும் பயன்பெறவில்லை என்று சொன்னார்கள். அவர்களுடைய மாவட்டத்திலேயே, திருநெல்வேலி மாவட்டத்திலே தனி நபர் கடனாக 296 நபர்கள் பயன்பெற்றிருக்கிறார்கள். அதுவும் சங்கரன்கோவில் தொகுதியில் 100 நபர்கள் அந்தத் திட்டத்தின்மூலம் பயன்பெற்றிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல், சுழல் நிதி கடனுக்கு 120 நபர்கள் பயன் பெற்றிருக்கிறார்கள். பொருளாதாரக் கடனுக்காக 360 நபர்கள் பயன்பெற்றிருக்கிறார்கள் சங்கரன்கோவில தொகுதியிலேயே. மகளிர்க்கு நிலம் வழங்கும் திட்டத்தின்கீழ் 5 நபர்கள் பயன் பெற்றிருக்கிறார்கள். மற்றும் பல்வேறு திட்டங்கள்மூலம் பயன் பெற்றிருந்தாலும், நம்முடைய ஆதி திராவிட நலத் துறையின் மூலமாக சங்கரன்கோவில் தொகுதியில் மட்டும் ரூ.51.30 இலட்சம் செலவில் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தத் தொகுதிக்கு நாங்கள் சென்றிருந்தபோது அந்தத் தொகுதி மக்கள், ஏழை மக்கள் சொன்ன ஒரு கருத்து, இந்தப் பகுதியில் அமைச்சர் அவர்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால், அவர் ஆற்றிய பணிகளைவிட இந்த இரண்டாண்டுகளில் எண்ணற்ற பணிகளைத் தலைவர் கலைஞர் அவர்கள் நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள் என்று அவர்களே வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை, நான் சொல்கிறேன், இருங்கள். ** என்று சொன்ன வார்த்தையை அவைக் குறிப்பில் இருந்து நீக்க வேண்டும். திரு. அ. சௌந்திரபாண்டியன் (குறுக்கீடுகள்) சார், அவர் சொன்னது எல்லாமே நீக்கியாகிவிட்டது. அவர் பேசிய பேச்சை அவைக் குறிப்பில் பார்த்தால், 'பேரவைத் தலைவர் அவர்களே', என்று சொன்னது மட்டும்தான் இருக்கும்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2008 ஏப்ரல் 17]

**திரு. அ. சௌந்திரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீக்கியாகிவிட்டது சார். அவர் சொன்னதைத்தான் நீக்கச் சொல்லியிருக்கிறேன்.

**திரு. அ. சௌந்திரபாண்டியன்:** சமூக இறுக்கத்தை இணக்கமாக்கியவர் அய்யா பெரியார் என்றால், சமூக இணக்கத்தை நல்லிணக்கமாக்கியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள், சமூக நல்லிணக்கத்தை வாழ்வுகளில் நடைமுறைப்படுத்தி சட்டமாக்கி, ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்டு மனித நேயமும், சமூக நீதியும் தம் இரு கண்கள் என சரித்திரம் படைக்கும் தலைவர். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சார், அமைச்சர் சொன்ன அந்த வார்த்தையை நீக்கிவிட்டேன் (குறுக்கீடுகள்) ஆமாம், அவர் பேசியது அப்படித்தானே இருக்கிறது? எல்லா பேச்சும் பார்த்தீர்கள் என்றால், எல்லாமே அப்படித்தான் இருக்கிறது. (குறுக்கீடுகள்) ஒன்றும் இல்லை, உட்காருங்கள்.

**திரு. அ. சௌந்திரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதாவது, அவர் எது, எது உண்மைக்கு மாறாக இந்த அவையில் பேசினாரோ அந்த வார்த்தைகளுக்கு நாங்கள் இங்கே ஆட்சேபனை செய்திருக்கின்றோம். அதை அவ்வப்போது நீக்கப்படுவதாக அறிவித்திருக்கின்றீர்கள். ஆக அறிவித்தவை எல்லாம் நீக்கப்பட்டிருக்கும். மற்றவை அவைக்குறிப்பில் இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) இல்லை, எவையெவை ஆட்சேபனைக்குரிய வார்த்தைகள் அவர்கள் சொன்னார்களோ, எவற்றையெல்லாம் நீக்க வேண்டும் என்று நான் உத்தரவிட்டேனோ அவற்றைத் தவிர மற்ற பேச்சுகள் இருக்கும். (குறுக்கீடுகள்) சொல்லிவிட்டேன்.

**திரு. அ. சௌந்திரபாண்டியன்:** சென்ற நிதிநிலை அறிக்கையில் 2007–2008–ல் அரிமா நோக்கெனத் தொடங்கி, [illegible] அறிக்[illegible]

228411
சென்னை-600 008

[திரு. அ. சௌந்திரபாண்டியன்] [2008 ஏப்ரல் 17

சுமார் 2 மணி நேரம் 45 மணித் துளிகள் அரிமாவாய் கர்ஜித்த இம்மாபெரும் சபைக்கு மேலும் சரித்திரம். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே.ஏ. செங்கோட்டையன், கொறடா, சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, குறிப்பிட்ட வார்த்தைகள் சிலவற்றை நீக்கிவிட்டீர்கள். அவற்றைத் தவிர, அனைத்தும் அந்த அவைக் குறிப்பேட்டில் இருக்க வேண்டுமே தவிர, நீங்கள் முழுமையாக மொத்த வார்த்தைகளையும் சொல்லக் கூடாது. நீங்கள் அவ்வப்போது நீக்கிவிட்டீர்கள். நீக்கியதைத் தவிர மற்ற அனைத்தும் இங்கே இருக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய வலியுறுத்தல்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதுதான் Sir, Ruling. ஆட்சேபனைக்குரியவற்றை மட்டும்தான் நீக்கச் சொல்லியிருக்கிறேன். வேறு ஒன்றும் இல்லை, மற்றவையெல்லாம் அவைக்குறிப்பில் இருக்கும்.

**திரு. அ. சௌந்திரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற நிதிநிலை அறிக்கையில் அரிமா நோக்கொடு தொடங்கி, இந்நிதிநிலை அறிக்கையில் சுமார் 2 மணி நேரம் 45 மணித் துளிகள் அரிமாவாய் கர்ஜித்து, இம்மாபெரும் சபைக்கு மேலும் சரித்திரம் சேர்த்து, அடுத்த தலைமுறைக்கு அவையடக்கம் கற்பிக்கும் இனமானப் பேராசிரியர் நிதியமைச்சரை வணங்குகிறேன்.

*நண்பகல் 12–00*

திராவிட இயக்கத்தின் 4 ஆம் தலைமுறையின் வழிகாட்டியும், நான் பிறந்த காலத்தில் இளைஞர் தி.மு.க. கண்டவரும், கழகம் காக்க அன்று பல காயங்கள் கண்டு, இன்று உழைப்பின் இலக்கணமாக உள்ளாட்சியில் நல்லாட்சி காணும் நாளைய தலைமுறையின் வழிகாட்டியுமான மாண்புமிகு அண்ணன் தளபதியாரை வணங்கி என் உரையைத் தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முதற்கண் நீலகிரி மாவட்ட தேயிலைத் தோட்ட தொழிலாளர்களின் ஊதிய உயர்வுக்காக சுமார் 10 முறைக்குமேல் முத்தரப்புப் பேச்சுவார்த்தை நடத்தியும், முடிவு ஏதும் எட்டாத நிலையில் இறுதியாக முத்தமிழ் அறிஞர் தலையீட்டால் இன்று நோட்டிஃபிகேஷன் வழங்கப்பட்டு தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களை மகிழ்ச்சியுறச்



2008 ஏப்ரல் 17] [திரு. அ. சௌந்திரபாண்டியன்]

செய்தமைக்கும், எனது தொகுதியில் உள்ள கோத்தகிரியில் பேரூராட்சிப் பகுதியில் தாட்கோ வணிக வளாகத்திற்கு அனுமதி வழங்கியமைக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், நிதி அமைச்சர் அவர்களுக்கும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் இத்துறையின் அமைச்சரான ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் முதற்கண் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்த ஒரு சமுதாயத்தின் வாழ்வும் வளமும் நிர்ணயிக்கப்படும் காரணிகளில் கல்வி மிக முக்கியமானது. அந்த அடிப்படையில் ஆதி திராவிட சமூகம் வளம்பெற இத்துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 1,095.29 கோடியை அதாவது 77 சதவீத நிதியை கல்வி சார்ந்த திட்டங்களுக்கு ஒதுக்கியிருப்பதை வாழ்வியல் பயனாகக் கருதுகிறேன். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனைப் பாதுகாக்க 1974–ல் இத்துறையை உருவாக்கி இச்சமுதாய மக்களின் வாழ்வில் ஒளியேற்றியவர் நமது முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள். அவர்களது செயல் சிறப்பு எங்கே; கடந்த கால அ.தி.மு.க. ஆட்சியில் ஆதி திராவிட சமூக மக்களை பலிபீடத்திற்கு அழைத்துச் சென்றவர் யார் என்பதையும் இம்மாமன்றத்தில் ஆதாரத்தோடு பதிவு செய்ய விரும்புகிறேன். கடந்த 5 ஆண்டுக் காலத்தில் அ.தி.மு.க. ஆட்சியில் எனது நீலகிரி மாவட்டத்தில் மொத்தப் பயனாளிகள் சுமார் 2,335 பேரே. ஆனால் இரண்டு ஆண்டுக் காலத்தில் இதுவரை கழக அரசில் 3,136 பேர் பயன்பெற்றிருக்கிறார்கள் என்பதைப் பதிவு செய்ய விரும்புவதோடு, பத்திரிகையாளர்கள், நாட்டு மக்களுக்கு இதை எடுத்துக் கூறவேண்டுமென்று வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல தனி நபர் கடன் திட்டத்தின்மூலமாக 5 ஆண்டுக் காலமாக நீலகிரி மாவட்டத்தில் சுமார் 351 பேர் பயன்பெற்றிருக்கிறார்கள், அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில். இந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் 419 பேர் பயன்பெற்றிருக்கிறார்கள் என்பதைப் பதிவு செய்ய விரும்புகிறேன். மகளிருக்காக துடிப்பதாக குரல் கொடுக்கிற அ.தி.மு.க.–வினர், மகளிர் குழுக்களுக்காக கடந்த 5 ஆண்டுக் காலத்தில் நீலகிரி மாவட்டத்தில் 480 குழுக்களுக்கும், ஆனால் இரண்டு ஆண்டுக்கால தி.மு.க. அரசு இன்றைக்கு 216 குழுக்களுக்கு வழங்கியிருப்பதையும் பதிவு செய்ய விரும்புகிறேன். தனி நபர் கடன் மட்டுமல்லாது புதிய துப்புரவுப் பணியாளர் சுய வேலைவாய்ப்பு

[திரு. அ. சௌந்திரபாண்டியன்] [2008 ஏப்ரல் 17

மறுவாழ்வுத் திட்டத்தில் கடந்த 5 ஆண்டுக் காலத்தில் ஏதாவது செய்திருக்கிறார்களா என்பதை எடுத்துக்கொள்ள முடியுமா முன்னாள் அமைச்சர் அவர்கள் என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீண்டாமை பற்றிக் கூட ஒரு வார்த்தையை இங்கே உச்சரித்தார். தீண்டாமையின் பிறப்பிடமாகவும், ஆரியத்தின் தோற்றமாகவும் உள்ள தலைமையின்கீழ் இருந்துகொண்டு எதைப் பேசுகிறார் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) பலிபீடம் நோக்கி மனித இனம் சென்று விடக்கூடாது என்பதற்காக இயக்கம் உருவாவதற்கு முன்பாகவே, 1947-ல் 'பலிபீடம் நோக்கி' என்ற ஒரு சிறு நாடகத்தின் வாயிலாக தமிழகத்தைப் பகுத்தறிவுப் பாதைக்கு இட்டுச் சென்றவர் தலைவர் கலைஞர் என்பதை அவர் மறந்துவிடக் கூடாது. ஏதோ மைக் கிடைக்கிறது, அமைச்சர் எதையும் கேட்கிறார் என்பதற்காக எதை வேண்டுமானாலும் பேசக்கூடாது. அவை அடக்கமும், நாகரீகமும் கற்றுக்கொள்ள வேண்டுமென்பதை முன்னாள் அமைச்சர் அவர்களுக்கு எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், மாவட்ட அளவில் இந்த opinion என்றால், மாநில அளவுக்குச் சொல்ல வேண்டுமென்றால் நிச்சயமாக எவ்வளவு செய்திருக்கிறோம் என்பதை எங்கள் அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள்.

என்னுடைய தொகுதிப் பிரச்சினைகளைப் பொறுத்தவரையில் பகாசூரன் மலையில் காட்சி முனை அமைத்து அங்கு சுற்றுலாத் தளத்தை மேம்படுத்த வேண்டுமாய் வேண்டுகிறேன். தெங்குமரஹடா பஞ்சாயத்து தீவாக உள்ளதால் கள்ளம்பாளையம் அருகில் மாயாற்றின் குறுக்கே பாலம் அமைக்குமாறு வேண்டுகிறேன்.

கோத்தகிரி தாலுகா மருத்துவமனையை ஒரு தாலுகா மருத்துவமனைக்குத் தேவையான வசதிகளைச் செய்து, தரம் உயர்த்தித் தருமாறு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். சோலடாமட்டம் துணைச் சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த வேண்டுகிறேன்.

கோத்தகிரி தாலுகா அலுவலகத்தில் இயங்கும் நடுவர் நீதிமன்றத்திற்குத் தனியாகப் புதிய கட்டடம் கட்டுமாறு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். வண்டிச்சோலை பஞ்சாயத்திற்குட்பட்ட சோளராம்பட்டிற்குச் சாலை வசதி செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். பொதுவாகச் சொல்லவேண்டுமானால்



2008 ஏப்ரல் 17] [திரு. அ. சௌந்திரபாண்டியன்]

நீலகிரி மாவட்டத்தில் மருத்துவ வசதிகள் குறைவு. காரணம், அங்கு மருத்துவர்கள் வருவதும் இல்லை. ஆகவே, அரசின் கொள்கை முடிவின்படியும், சிறப்பு விதிவிலக்கு வழங்கியும் நீலகிரி மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரி ஒன்றை வழங்குமாறு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இச்சமூக மக்களின் வாழ்வில் ஒளியேற்றுவதற்காகவே உருவாக்கப்பட்ட இயக்கம் என்பது தமிழகமும், இந்தியத் துணைக் கண்டமும் நன்கு அறிந்த ஒன்று. அதன் அடிப்படையில்தான் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வரும்போதெல்லாம் இந்தத் துறை வளம் பெறுகிறது. கடந்த 5 ஆண்டுக் காலங்களில் என்ன நடைபெற்றது என்பதையெல்லாம் புள்ளிவிவரத்தோடு விளக்குவோமானால் நிச்சயமாக இந்த மக்களுக்கு அவர்கள் செய்த பாவங்கள், துரோகங்கள் கொஞ்சநஞ்சமல்ல என்பதை ஆதாரத்தோடு விளக்க முடியும். ஆகவே, இனி வருங்காலங்களில் இப்படித் தொடர்ந்து ஏமாற்றுவதையே கொள்கையாகக் கொண்டிருக்கின்ற அந்த இயக்கத்தின் முன்னாள் அமைச்சர் அவர்கள், தேவையில்லாத வார்த்தைகளால் விமர்சிப்பதை விட்டுவிட வேண்டுமென்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

குறிப்பாக, இதுபோன்ற அவையடக்கமில்லாத நிலை எதிர்காலத்திலே வந்துவிடக் கூடாது என்பதற்காக, ஐயா பெரியாரின் பெண்ணியச் சிந்தனைகளைப் பள்ளிப் பாடத் திட்டத்தில் சேர்க்க வேண்டுமென்பதோடு, இளம் தலைமுறையும் எதிர்காலத்திலே சமுதாயத்தில் பகுத்தறிவோடு அவையடக்கம் பெற்று வரவேண்டுமென்பதற்காகத் தலைவர் கலைஞர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் பாடப் புத்தகத்தில் இணைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தின் கலைகளை நாளைய தலைமுறையும் காண வேண்டுமென்பதற்காக கலையைப் பேணிக் காக்க, சென்னை சங்கமம் நிகழ்ச்சி இனி தமிழகமெங்கும் பரவிடக் காரணமாக இருந்ததன் வாயிலாக இச்சமூக மக்களின் பொருளாதாரமும், கலையும் வளரும் என்பதையும் சுட்டிக்காட்டுவதோடு இவற்றிற்குக் காரண கர்த்தாவாக இருந்த நாடாளுமன்ற மேலவை உறுப்பினர், சமூகச் சிந்தனையாளர், கவிஞர் கனிமொழி, எம்.பி. அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்தியத் திருநாட்டின் ஜனநாயகத்தின் பாதுகாவலரும், பண்பாளருமான பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு

[திரு. அ. சௌந்திரபாண்டியன்] [2008 ஏப்ரல் 17

விழாவினை 2009 ஆம் ஆண்டு உலகம் வியக்கும் வண்ணம் கட்சிப் பாகுபாடின்றி அரசு சார்பில் விழா எடுப்பது என்பது ஜனநாயகத்திற்கே விழா என்றால் அது மிகையாகாது.

பலிபீடத்திற்கு மனித இனம் ஆளாகிவிடக்கூடாது. நாளைய சமூகம் சமத்துவக் காற்றைக் சுவாசிக்க ஐயா பெரியார் என்ற ஆக்சிஜனால் வாழ்வோரும் நாளைய தலைமுறையும் பயன்பெற ஐயா சிலையுடன் கூடிய சமத்துவபுரங்கள் சமூக நீதிக்கான விலை என்றால் அது மிகை ஆகாது.

நமது தலைவருக்காக வரலாறா அல்லது வரலாற்றுக்காகத் தலைவரா என்றால் இம்மாமன்றத்தின் வெளியிலும் ஜனநாயகம், சமூக நீதி, மனிதநேயம், தன்னைப்போலப் பிறரைப் பார்க்கும் பரந்த மனநிலையை உருவாக்கும், இப்படிப் பன்முகத் தலைவர் நம் முதல்வரின் ஆட்சியே

"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு"

என்பதற்கேற்ப தலைவர் அவர்களின் ஆட்சியே மற்றவர்களுக்கு ஒரு கலங்கரை விளக்கமாக அமைந்திருக்கிறது என்று கூறி, என்னுரையை நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை"

என்ற குறளின் வாசகத்தை வைத்துப் போர்க்களத்தில் எதிர்ப்புகளைத் தாங்கி படை நடத்தும் பொறுப்பு அதற்கான ஆற்றல் படைத்தவர்களிடம் இருப்பது போலத்தான், குடிமக்களைக் காப்பாற்றி உயர்வடையச் செய்யும் பொறுப்பும் அவர்களைச் சேர்ந்த ஆற்றலாளர்களுக்கே உண்டு என்ற இக்குறள் நெறியின்படி ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை உயர்வடையச் செய்ய வேண்டுமென்பதே இவ்வரசினுடைய தலையாயக் கொள்கை என்பதை எடுத்துரைத்து, இந்த மானியக் கோரிக்கையின்மீது ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் நலத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் இங்கே கொள்கை விளக்கத்தை அளித்திருக்கின்றார்கள்.



2008 ஏப்ரல் 17] [திருமதி டி. யசோதா]

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், ஆதி திராவிட மக்களுடைய விழுக்காடு இன்றைக்கு 19 சதவீதம் ஆதி திராவிட மக்களும், பழங்குடி சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் 1.04 விழுக்காடும் மொத்தமாகச் சேர்ந்தால் 20.4 சதவீதம் இடஒதுக்கீடு இன்றைக்கு உருவாகியிருக்கின்றது. 16,000 கோடியில் 3,040 கோடிதான் இந்தத் துறைக்கு என்று ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது என்று சொன்னால், மொத்த மக்கள் தொகையில் தமிழகத்தில் நான்கில் ஒரு பங்கு இருக்கின்ற ஆதி திராவிட மக்களுக்கு 16,000 கோடி ரூபாயில் 4,000 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்க வேண்டுமா, வேண்டாமா என்ற சந்தேகத்தை உங்கள் முன்னாலே நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, பக்கம் 14, 15-ல் பெண் கல்வி ஊக்குவித்தல் என்கின்ற தலைப்பின்கீழ் 3 முதல் 5 ஆம் வகுப்பு வரைக்கும் படிக்கும் மாணவியர்க்கு ரூபாய் 500-ம், 6 ஆம் வகுப்பு படிக்கும் மாணவியர்க்கு ரூபாய் 1,000-ம், 14 மாவட்டங்களிலே இந்தத் திட்டங்கள் நடைபெறுகின்றன என்று உங்கள் கொள்கை விளக்கக் குறிப்புகளிலேயே கூறியிருக்கின்றீர்கள். சென்னையைத் தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலேயும் தலித் மகளிர் கல்வி கற்கும் சதவீதம் குறைவு என்று அறிவிக்கும்போது, ஏன் மாநிலம் முழுவதும் இதனை அமல்படுத்தக் கூடாது? இதற்கு அதிகமாக 32 கோடி ரூபாய் தானே செலவாகும்? மகளிரை மேம்படுத்த இது உதவாதா என்பதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். 2007-2008 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு 3 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கின்றீர்கள்.

2008-2009 இல் மறுபடியும் இந்தத் திட்டத்திற்கு அதே 3 கோடி ரூபாய்தான் ஒதுக்கீடு செய்திருக்கிறீர்கள். எல்லாவற்றிலும் ஆண்டாண்டுக்கு நிதி அளவு உயர்கிறபோது, இந்தத் துறைக்கு மட்டும் அந்த மகளிர் கல்விக்காக 3 கோடி ரூபாய் சென்ற ஆண்டில் ஒதுக்கியதுபோல இந்த ஆண்டும் ஒதுக்கியிருப்பதை அதிகரித்து இருக்கவேண்டும் என்ற என்னுடைய ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறேன்.

பிற்பகல் 12-10

சமூக நலத் துறை விடுதிகள் பற்றி நான் பட்ஜெட்டிலே பேசினேன். சமூக நலத் துறை மூலமாகக் கட்டப்படுகின்ற விடுதிகள் ரூபாய் 2 கோடியே 68 இலட்சத்தில் கட்டப்படுகின்றன. ஆனால்,

தலித்துகளுக்கு என்று கட்டப்பட்டிருக்கின்ற விடுதிகள் கிட்டத்தட்ட 96 இலட்சத்திலே கட்டப்படுகின்றன என்ற குறையை நான் சொன்னேன். சமூக நலத் துறை மூலம் Working Ladies Hostel கட்டுகிற காரணத்தினால் வருமானம் வருகிறது என்பதற்காக அங்கே வசதிகளை அதிகரிக்கவேண்டும் என்ற ஒரு சூழ்நிலையில் அதிகமாகச் செலவு ஏற்படுகிறது என்று அன்றைக்குப் பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். என்னால் அதை ஒப்புக்கொள்ளமுடியவில்லை. காரணம், ஆதி திராவிட மக்களுக்கும் அந்தச் சலுகைகளைக் கொடுக்கவேண்டும் என்ற கோரிக்கையை நான் இங்கே வைக்கிறேன். செலவுகளைப் பற்றி நாம் கவலைப்பட்டுக்கொண்டிருக்கின்றபோது, நாம் வட்டிக்கடை வைக்கவில்லை, ஆதாயம் பார்ப்பதற்காக. நலிந்த மக்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பதில் நம்முடைய அரசாங்கம் முன்னுதாரணமாகத் திகழவேண்டும் என்றுதான் நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன், சென்னையிலே இராயபுரம் உள்ளது. அந்த இராயபுரத்திலே ஒரு விடுதி இருக்கிறது, மாணவர்கள் விடுதி. 100 பேர் தங்கக்கூடிய அந்த மாணவர் விடுதி. அந்த மாணவர் விடுதியிலே மற்றொரு 100 பேர் கல்லூரி மாணவர்கள் போகிறார்கள். அதே 100 பேர் இருக்கக்கூடிய அந்த விடுதியிலே 200 பேர் ஆகிறார்கள். P.G. மாணவர்கள் 100 பேர் அங்கே மீண்டும் சேர்கிறார்கள். ஆக 100 பேர் இருக்கக்கூடிய அந்த விடுதியில் 300 பேர் பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள், P.G. மாணவர்கள் என்று 300 பேர் ஒரே விடுதியில் தங்குகின்றபோது அந்த நிலையை நீங்கள் தயவுசெய்து பரிசீலிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, S.C., S.T. Commission. இன்றுவரைக்கும் தமிழகத்தில் நாம் நிர்ணயிக்கவில்லை என்று நான் கருதுகிறேன். குறிப்பாகச் சொல்லவேண்டும் என்று சொன்னால் இராஜஸ்தான், பஞ்சாப், மத்தியப் பிரதேசத்தில் S.C.-க்கு என்று ஒரு Commission, S.T.-க்கு என்று ஒரு Commission இருக்கிறது. உத்திரப்பிரதேசத்தில் இருக்கிறது; ஆந்திராவில் இருக்கிறது; உத்தராஞ்சலில் இருக்கிறது; கர்நாடகாவில் இருக்கிறது; சட்டீஸ்கரில் இருக்கிறது; கேரளாவிலும் இருக்கிறது. நம்மைச்சுற்றி இருக்கிற அத்துணை மாநிலங்களிலும் S.C., S.T. Commission இருக்கிறபோது, தமிழகத்திலே அந்தக் கமிஷன் இதுவரையிலும் போடப்படாமல் இருக்கிறது. அதைப்பற்றியும் நீங்கள் கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



1976-லே எம்.ஜி.ஆர். அவர்கள் முதல்வராக இருக்கும்போது கல்விக்கு என்று வருமான வரம்பே கிடையாது என்று ஓர் உத்தரவைப் போட்டார்கள். 1997-லே தமிழக அரசு ரூ.53,000/- வரை என்று ஒரு வருமான வரம்பை அறிவித்தது. 1999-லே மத்திய அரசு வருமான வரம்பை ரூ.50,000/-க்குக் கீழ் என்று அறிவித்தது. தற்போது அனைத்திலும் சமத்துவம் காணத் துடிக்கும் கலைஞர் அவர்கள் ஆட்சியில் வருமான வரம்பே தலித்துகளுக்கு இல்லை என்று அறிவித்து மற்ற மாநிலங்களுக்கு, ஏன், மத்திய அரசுக்கே வழிகாட்டக்கூடாதா என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், சேலம் சட்டக் கல்லூரி மாணவர்கள் மாண்புமிகு ஆதி திராவிட நலத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே மனு கொடுத்திருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். அவர்கள் என்ன கேட்கிறார்கள்? "நாங்கள் 130 S.C., S.T. மாணவர்கள் படித்து வருகிறோம். எங்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு கல்விக் கட்டணமாக ரூ.8,000/- என்று அரசு நிர்ணயித்தது. ஆனால் தற்போது 500 ரூபாய்தான் தருவதாக கல்லூரி நிர்வாகத்திற்கு அரசு அறிவிப்பு அனுப்பியுள்ளது. தற்போது 130 மாணவர்கள் தேர்வு எழுதமுடியாத நிலையிலும், தேர்வுக்கான நுழைவுச் சீட்டு பெறமுடியாத நிலையிலும் உள்ளோம். மேற்கண்ட இந்த மனுவைப் பரிசீலனை செய்து அரசாணை எண் 722/1970-ன்கீழ் எங்களுக்கு இந்த ஆண்டுக்கான கல்விக் கட்டணத்தை செலுத்துமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்" என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இந்தக் கடிதத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதனுடைய நகல் ஒன்றை என்னிடத்திலே கொடுத்திருக்கிறார்கள். அதை கருணையுடன் பரிசீலிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றைக்குச் சாயந்திர நேரம் அந்தச் சட்டக் கல்லூரி மாணவர்கள் என்னிடம் அந்த மனுவைக் கொடுத்தார்கள். அவற்றை விசாரித்து மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[2008 ஏப்ரல் 17

*பிற்பகல் 12–15*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** தமிழகத்திலே 12,400–க்கும் மேற்பட்ட பஞ்சாயத்துகள் இருக்கின்றன. அதிலே 100 சதவீதம் மக்கள் இருக்கக்கூடிய பஞ்சாயத்துகள், 50 சதவீதம் இருக்கக்கூடிய பஞ்சாயத்துகள், 30 சதவீதம் உள்ள பஞ்சாயத்துகளுக்கு உடனடியாக மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஆனால், நடைபெறுவது என்னவென்று சொன்னால், ஒரு சதவீதம் இருக்கின்ற பகுதிக்குத்தான் முதலில் மின் வசதி செய்யப்படுகின்றது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திலேகொள்ள வேண்டும்.

S.C. பஞ்சாயத்துத் தலைவர்கள் உள்ள பஞ்சாயத்துகளை உடனடியாகக் கவனத்தில் எடுத்து, அவர்களுக்கு வேண்டிய அந்த மின் இணைப்பை உடனடியாகக் கொடுக்க வேண்டும். காரணம், பிரிக்க முடியாத தொகையில் தலித்துகளுக்கான நிதியில் மின் துறைக்கும் பங்கேற்பு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன்.

அதேபோல, Industrial Estate, I.T. Park, Special Economic Zone போன்றவற்றில் எல்லாம் தலித்துகளுக்கும் ஒதுக்கீடு தாருங்கள். உங்கள் ஆட்சிக் காலத்திலாவது அவர்களை ஒரு நிறுவனத்தின் சொந்தக்காரர்களாக உருவாக்கித் தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஈரோடு பக்கத்திலுள்ள ஈகூரில் 200 தொழிற்கூடங்கள் ரூபாய் 20 கோடியில் கட்டி, பல காலமாக ஒதுக்கீடு செய்யப்படாமல் இருக்கின்றன. அதேபோல் திருப்பூர் முகலிப்பாளையத்தில் 100 தொழிற்கூடங்கள் கட்டி, 50 சதவிகித ஒதுக்கீடு செய்யப்பட்டு, இன்னும் 50 சதவிகிதம் ஒதுக்கீடு செய்யப்படாமல் உள்ளதை உடனடியாக ஒதுக்கீடு செய்து தருமாறு கோருகிறேன்.

இந்திய அரசமைப்புச் சட்டம் 77–ன்படி, Article 16, 4-A பதவி உயர்வில் இட ஒதுக்கீடு சட்டம் மத்திய அரசால் 1995–ல் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால், தமிழ்நாட்டில் அச்சட்டத்திற்கு இதுநாள் வரை உயிரும் கொடுக்கவில்லை; அதனை நடைமுறைப்படுத்த புதிய சட்டமும் இயற்றவில்லை, இதனையும் தங்களது கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.



2008 ஏப்ரல் 17] [திருமதி டி. யசோதா]

2008–2009 மொத்த நிதி ஒதுக்கீடான 16 கோடியில், என்னுடைய முதல் கட்டமாக சொன்ன அந்தக் கோரிக்கையை நான் மீண்டும் வலியுறுத்துகின்றேன். எங்களுக்கு மக்களுடைய விகிதாச்சார அடிப்படையில் நான்கில் ஒரு பங்கு ஒதுக்கீடு செய்து தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழக மக்கள் தொகையில் 20.4 சதவீதம் என்று இருக்கின்ற நாங்கள், எங்களுக்குத் தகுதிப் பரிசுகள் என்று +2 படிப்பில் வெற்றி பெற்றவர்களுக்கு, மதிப்பெண்கள் அதிகமாகப் பெறக்கூடியவர்களுக்கு ஆயிரம் மாணவர்கள், ஆயிரம் மாணவிகளுக்கு முதல்வரின் தகுதிப் பரிசாக முதல் ஆண்டு ரூ.1,500 வீதம் என்று இல்லாமல், அவர்கள் மேல் படிப்புப் படிக்கின்ற அத்தனை ஆண்டுகளிலும் 1,500 ரூபாய் 5 ஆண்டுகளாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு 1,500 ரூபாய் என்று அவர்களுக்காக ஊக்கமளிக்கின்ற அந்த நிதி ஆதாரத்தை நீங்கள் செய்து தருகின்றீர்கள். அதனுடைய பலனாக செலவு ரூபாய் 64.42 இலட்சம்; பயனாளிகள் 3,602 மாணவ, மாணவியர்கள். நடப்பு ஆண்டிற்கும் இதே தொகைதான் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், நான் குற்றமாகச் சொல்லவில்லை.

அண்ணல் மகாத்மா காந்தியடிகளுடைய நினைவுப் பரிசு அடுத்து வருகின்றது. அதிலேயும் +2 வகுப்பிலே மாவட்டத்திற்கு ஒரு மாணவர், ஒரு மாணவி என்று முதல் மதிப்பெண் பெறுகின்றவர்களைத் தேர்வு செய்கின்றீர்கள். அப்படித் தேர்வு செய்கின்றபொழுது அந்த மாணவர்கள் எத்தனை பேர் வருவார்கள்? ஒரு மாவட்டத்திற்கு என்றால், தமிழ்நாட்டிலே இருக்கின்ற மொத்த மாவட்டங்கள் எத்தனை? 30, 34 மாவட்டங்கள். அந்த மாவட்டங்களிலே மொத்தம் 60 பேருக்குமேலே இருக்காது. அதாவது, 60, 70 பேருக்குள்ளாக இருக்கும். இந்த 70 பேர் மகாத்மா காந்தியடிகளினுடைய நினைவுப் பரிசு பெறக்கூடியவர்களாக வருகிறார்கள். அதுவும் எப்படி வருகிறார்கள்? முதலிலே 1,500 ரூபாய், பிறகு 5 ஆண்டுகளுக்கு 1,000 ரூபாய், 1,000 ரூபாய், 1,000 ரூபாய். ஆனால், முதல்வருடைய தகுதி பெறுகின்றவர்கள், அவர்கள் மொத்தம் 2,000 பேர். மகாத்மா காந்தியடிகளுக்கு 64 பேர், முதல்வருடைய நிவாரணத்திலே தகுதிச் சான்றிதழ் பெறுகின்றவர்கள் 2,000 பேர். அவருடைய அந்தப் பரிசைப் பெறுகின்றவர்கள் 5 ஆண்டுக்காலமும் 1,500 ரூபாய் பெறலாம். ஆனால், மகாத்மா காந்தியடிகளினுடைய பெயரிலே கொடுக்கப்படுகின்ற அந்த நிதி 1,500 ரூபாய் முதலிலே; அதற்குப் பிறகு 1,000 ரூபாய், 1,000 ரூபாய், 1,000 ரூபாய் என்று சொல்லுவதை நிச்சயமாக சரி சமமாகச் செய்யுங்கள்.

மகாத்மா காந்தியடிகளைக் குறைத்து விடாதீர்கள். தேச பிதா மகாத்மா காந்தியடிகளை நிச்சயமாக அவருடைய பெயராலே இன்னும் அதிகமாகக் கொடுப்பதற்கு நீங்கள் உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, 2007–2008–ல் ரூபாய் 55 கோடியில் 10 சதவீதம் ஆதி திராவிடர் நலப் பள்ளி, விடுதிகள், குடியிருப்புகள், அடிப்படை வசதிகளுக்காக இயக்குநர் மூலமாக 10.10 சதவீதம், அதாவது ரூபாய் 4.90 கோடி போக, மீதம் ரூபாய் 44.08 கோடி. இது மாவட்ட ஆட்சியர் விருப்ப உரிமை நிதித் திட்டம், அவர் இஷ்டப்பட்டால் என்ன வேண்டுமென்றாலும் செய்யலாம். சுய உதவிக் குழுக்கள் உட்பட மகளிர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள், மகளிருக்கு நிலம் வாங்கித் தருதல், தனி நபருக்கு நிதியுதவி, இளைஞர் சுயத் தொழில் வேலைவாய்ப்புத் திட்டம், Civil Service இறுதித் தேர்வுக்கு நிதியுதவி, வேலைவாய்ப்பு எளிதில் கிடைக்க special பயிற்சி, ஒவ்வோர் ஆண்டும் இந்தத் திட்டங்களுக்காக 44.08 கோடி ரூபாய் நீங்கள் ஒதுக்கீடு செய்கிறீர்கள். இதை நான் வரவேற்கின்றேன். ஆனால் அதேநேரத்திலே தாட்கோ என்று சொன்னால் ஆதி திராவிட மக்களுக்கு வீடு கட்டுகின்ற ஒரு மிகப் பெரிய நிறுவனம். ஆனால் ஆதி திராவிட மக்களுக்கு ஒவ்வொரு மாவட்டத்திலேயும் எத்தனை வீடுகள் கட்டப்படுகின்றன என்ற கணக்குகளை நீங்கள் கொடுங்கள். அதுமட்டுமல்ல. குறிப்பாக, இந்தச் சட்டமன்றத்திலே தனித் தொகுதியிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், அவர்களுடைய தொகுதிகளிலே இருக்கின்ற ஆதி திராவிட மக்களுக்கு எவ்வளவு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரம் எங்களுக்குத் தெரியாத ஒன்றாக இருக்கின்றது. அதையும் நாங்கள் உங்களிடத்திலிருந்து எதிர்பார்க்கின்றோம். ஒவ்வோர் ஆண்டும் பட்ஜெட்டுக்காகத் தயாரிக்கப்படும் ஆதி திராவிடர் துணைத் திட்டம். . .

*பிற்பகல் 12–20*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிட நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாட்கோ என்ற ஒரு நிறுவனம் தலைவர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்டது. ஆனால் தாட்கோ நிறுவனத்தின்மூலமாகத் தற்போது வீடுகள் கட்டும் பணிகள் நடைபெறவில்லை. உள்ளாட்சித் துறைமூலமாக, D.R.D.A. மூலமாக



வீடுகள் கட்டும் பணிகள் நடைபெறுகின்றன. அதுமட்டுமல்லாமல், சட்டமன்ற உறுப்பினர்கள் நிதியிலிருந்து தேவைப்படுகின்ற இடங்களில் நிதியொதுக்கீடு செய்து கட்டிக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து எங்களுடைய பகுதிகளிலே தொகுப்பு வீடுகள் கட்டக் கொடுக்கின்றோம். முன்னாலே 37,000 ரூபாய் என்றிருந்தது இப்போது 55,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. 10 வீடுகளுக்குக் கொடுத்தால்கூட 5½ இலட்சம் ரூபாய் ஓடிவிடும். அதிலே 1 கோடியே 20 இலட்சம் என்றால் அதிலே 60 இலட்சத்திற்கு அரசாங்கமே என்னென்ன திட்டங்கள் என்று சொல்லிவிடுகிறார்கள். இருக்கிற 60 இலட்சத்தை வைத்துக்கொண்டு, எங்களாலே எத்தனை வீடுகளுக்குக் கொடுக்க முடியும்? ஆகையினாலே மத்திய அரசாங்கத்திலே கொடுக்கிறார்களோ, கொடுக்கவில்லையோ, எங்களுக்கு அதைப் பற்றிக் கவலையில்லை. நாங்கள் இங்கே உறுப்பினர்களாக இருக்கின்றோம். ஆகவே, இங்கே கேட்கின்றோம். ஆதி திராவிடர் நலத் துறையின்மூலமாக ஆதி திராவிட மக்களுக்கு வீடுகளைக் கட்டுவதற்கென்று மிக அதிகமாக நிதியினை ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

எவ்வளவு நாட்களுக்குச் செய்ய முடியும்? மத்திய அரசாங்கத்திடமிருந்து 30,000 வீடுகள் கட்டக் கொடுப்பார்கள். அந்த 30,000 வீடுகளை தமிழ்நாடு முழுமையும் நீங்கள் பிரித்துக்கொடுக்கும்போது, 1,000 வீடுகள் ஒரு மாவட்டத்திற்கு வந்தால்— ஒரு மாவட்டத்திலே 10 M.L.A.-க்கள், 9 M.L.A.-க்கள் இருப்பார்கள்— ஒரு தொகுதிக்கு. . . *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திருமதி டி. யசோதா:** உரையை முடித்துக்கொள்கிறேன். ஒரு தொகுதிக்கு எத்தனை வீடுகள் கிடைக்கும் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

அதுமட்டுமல்ல. ஒவ்வோர் ஆண்டும் பட்ஜெட்டிற்காகத் தயாரிக்கப்படும் ஆதி திராவிடர் துணைத் திட்டம், அந்த S.C. S.P. குறித்த ஆண்டறிக்கையைச் சட்டமன்றத்தில் வைக்காமல் சட்டமன்ற

உறுப்பினர்களைப் புறக்கணிப்பது ஏன் என்று புரியவில்லை. அரசாணை, G.O.Ms. No. 134—ன்படி ஆதி திராவிடர் நலத் துறைச் செயலர் ஆதி திராவிடர் துணைத் திட்டம். S.C.S.P.—க்கு ஒருங்கிணைப்பு அதிகாரியாக, Nodal Officer-ஆக இருப்பார் என்று ஆணையிடப்பட்டு இரண்டாண்டுகள் ஆகியும் Nodal Officer-ஆன அவர் எந்தெந்தத் துறைச் செயலாளர்களுடன் பேசி இந்தத் துணைத் திட்டத்தினை உருவாக்கியுள்ளார் என்பதனைத் துறைவாரியாகத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதனைக் கேட்பதற்குக் காரணம் 2007–2008, 789 என்கின்ற பட்ஜெட் கணக்கீட்டு குறியீட்டு இலக்கம் இடப்பட்டு ஆதி திராவிட மக்களின் துணைத் திட்டத்திற்கு S.C.S.P.—க்காக பட்ஜெட் கணக்கில் நிதியொதுக்கீடு ஒரு ரூபாய்கூட செலவு செய்யாத துறைகளாக மீன் வளம், வனத் துறை, நீர்வளத் துறை, மின் துறை, தொழில் துறை, போக்குவரத்து மேம்பாட்டுத் துறை, சுற்றுலா, உணவு வழங்கல், தொழிற் கல்வி, இளைஞர் நலம், விளையாட்டு, P.W.D. ஆகிய 12 துறைகள் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அது உண்மையாக இருக்குமேயானால் அதுகுறித்து துறையினுடைய செயலாளர் ஒரு வெள்ளை அறிக்கையினை இந்த அவையிலே வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

துணைத் திட்ட S.C.S.P. ஒதுக்கீட்டில் "Divisible" என்ற தலைப்பில் ஆதி திராவிட மக்களுக்காக . . . (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு விஷயத்தைச் சொல்லி உரையை முடித்துவிடுகிறேன். ஒதுக்கப்பட்ட நிதி ஆதி திராவிடர்கள் அல்லாதவர்களுக்காகச் செலவு செய்யப்படுவதாக அறிகிறேன். அப்படி இருக்குமேயானால் அப்படிப்பட்ட தவறான நடவடிக்கைகளை மேற்கொண்ட அதிகாரிகள்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–25

தலித் மக்களுக்கு அடிப்படை வசதிகள், மருத்துவச் சுகாதாரம், பாதுகாப்பான குடிநீர், கல்வித் தேவைகள், சுகாதாரமான கழிப்பிட வசதி அனைத்தும் கிடைத்தால் நம் நாட்டின் வளர்ச்சி உண்மையானதாக இருக்கும் எனக் கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். ஜெய்ஹிந்த்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி (குறுக்கீடு) மாண்புமிகு ஆதி திராவிட நலத் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே S.C. S.P.—யைப்பற்றிச் சொன்னார்கள். Special Component Sub-Plan—ஐப்பற்றிச் சொன்னார்கள். அது முறையாகச் செலவழிக்கப்படவில்லை என்றும் சொன்னார்கள். ஆனால் S.C. S.P. என்பது, ஆதி திராவிடர்கள் துணைத் திட்டம் என்பது, 21 துறைகளின் வாயிலாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டு அது முறையாக ஆதி திராவிட மக்களுக்குச் செலவழிக்கப்படுகிறது. நீங்கள் பார்ப்பீர்களென்று சொன்னால், கடந்த ஐந்து ஆண்டுகளாக எந்த ஒரு நிதியும் முறையாக ஒதுக்கப்படாத பட்சத்தில், இந்த வருடத்தில் மட்டும் 14 சதவீதம், மொத்த நிதி ஒதுக்கீடு, 14 சதவீதம் பெற்று ஆதி திராவிடர்களுக்காக, அதாவது பகுக்கப்பட்ட ஆதி திராவிடர் திட்டத்திற்காகவே ஒதுக்கப்பட்டு செலவு செய்யப்படுகிறது. அதேபோல T.S.P-யைப்பற்றிச் சொன்னார்கள். பழங்குடியின மக்களுக்குக் கொடுக்காமல் மற்றவர்களுக்குக் கொடுப்பதாகச் சொன்னார்கள். அந்த மாதிரி எதுவும் செலவு செய்யப்படவில்லை, பழங்குடியின மக்களுக்கு மட்டுமே செலவழிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இந்த மாமன்றத்திலே 2008–2009 ஆம் ஆண்டுக்கான ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பு வழங்கிய ஆதி திராவிட மக்களுக்காக அயராது பாடுபட்டு வரும் எமது தமிழினப் போராளி, மனித நேயப் பற்றாளர், சமூக நீதிக் காவலர் மருத்துவர் அய்யா அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) 61 ஆண்டுக் காலமாக மருத்துவ மேற்படிப்பில் இட ஒதுக்கீடு கிடைக்காமல் இருந்ததை அறிந்து, ஆதி திராவிட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீட்டைப் பெற்றுத்தந்த தென்னகத்து அம்பேத்கர் மாண்புமிகு மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மருத்துவர் சின்ன அய்யா அவர்களுக்கும், என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைக் கூறிக்கொண்டு, பாட்டாளி மக்கள் கட்சிக்கும் ஆதி திராவிட மக்களுக்கும் அனைத்து இன மக்களுக்கும் அயராது பாடுபட்டுவரும் ஓய்வறியா உழைப்பாளி, தியாகச் செம்மல், எமது கட்சியின் தலைவர் மாண்புமிகு கோ.க. மணி அவர்களுக்கும் இம்மாமன்றத்தின் வாயிலாக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. டி. மூர்த்தி] [2008 ஏப்ரல் 17

மத்திய அரசும் நமது மாநில அரசும் அரசு நலத் திட்டங்களை வழங்கும்போது அரசு நலத் திட்டங்கள் யாவும் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களுக்குத்தான் என்று சொல்லும் நமது அரசு, உண்மையான வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களின் நிலைமையை ஆராய்ந்து மீண்டும் கணக்கெடுக்க வேண்டுமாய் இந்த மாமன்றத்தின்வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று வருமானச் சான்று, அரசு எந்த நலத் திட்டத்திற்கும் 12,000 ரூபாய் ஆண்டு வருமானம் என நிர்ணயித்துள்ளது. ஆனால் தமிழகத்தில் மாதம் ரூபாய் 1,000 பெற்றுக்கொண்டு குடும்பம் நடத்த முடியுமா? சாதாரணமாக ஒரு பெண் கட்டுமானத் தொழிலாளிக்கே நாள் ஒன்றுக்கு 100 ரூபாய் வீதம் கணக்கிட்டால், மாதம் ரூபாய் 3,000 ஆகிறது. இதை ஆண்டொன்றுக்குக் கணக்கிட்டால் ரூபாய் 36,000 ஆகிறது. எனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் அரசு நலத் திட்டங்களைப் பெற ஆண்டு வருமானம் குறைந்தபட்சம் ரூபாய் 36,000 என ஆணையிட வேண்டும்.

தமிழக அரசு டெண்டர் மூலம் விடப்படுகின்ற அரசு ஒப்பந்தப் பணிகளை 20 சதவீதம் ஒதுக்கி அதை ஆதி திராவிடர், பழங்குடியின மக்கள் சாலைப் பணி மற்றும் இதரப் பணிகளை எடுத்துச் செய்ய சட்டம் இயற்றப்பட வேண்டும். மேலும் இதுபோன்ற ஒப்பந்தப் பணிகளில் பங்குபெறும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின ஒப்பந்ததாரர்களுக்கு E.M.D. என்று சொல்லப்படுகின்ற முன் வைப்புத் தொகை செலுத்துவதில் விலக்கு அளிக்கப்பட வேண்டும்.

ஆதி திராவிட நலத் துறையால் நடத்தப்படுகின்ற மாணவர், மாணவியர் விடுதிகள் பல ஆண்டுக் காலமாகப் பராமரிக்கப்படாமல், குறிப்பாக கதவு, ஜன்னல் திறந்து மூட முடியாமலும், தரை மற்றும் சுவர்களில் விரிசல் விழுந்தும் காணப்படுகின்றன. இவற்றை உடனடியாகச் சரி செய்ய அதிக அளவில் நிதியை ஒதுக்கித் தர வேண்டுமாய் தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், சமையலர்களும், விடுதிக் காப்பாளர்களும் விடுதியில் தங்காமல் இருக்கிறார்கள். தங்காமல் உள்ள காப்பாளர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும், பல விடுதிகளில் காப்பாளர் பணியிடங்கள் காலியாக உள்ளன. எனவே காலியாக உள்ள விடுதிக் காப்பாளர் மற்றும் சமையலர் பணியிடங்களை உடனடியாக அரசு நிரப்ப வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.



2008 ஏப்ரல் 17] [திரு டி. மூர்த்தி]

ஈமச் சடங்கு நிதி. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் இறந்தால் ஈமச் சடங்கிற்காக தமிழக அரசு நிதி உதவியாக ரூபாய் 500 வழங்குகிறது. இது போதுமானதாக இல்லை. எனவே ஈமச் சடங்கு நிதி ரூ. 2000-ஆக உயர்த்தப்பட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்தியத் திருநாட்டிற்கு சட்டத்தை இயற்றிய சட்ட மாமேதை புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கு நம்முடைய சமுதாயத்தில் உருவச் சிலை வைக்க அரசு கட்டுப்பாடு வைத்துள்ளது. இதனால் பொதுநலவாதிகளும், அரசியல் கட்சித் தலைவர்களும், சமூக ஆர்வலர்களும், டாக்டர் அம்பேத்கர் சிலையை நிறுவ முடியாமல் உள்ளனர்.

எனவே ஆதி திராவிட மக்களின் சம்பந்தியாக உள்ள நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் டாக்டர் அம்பேத்கர் சிலை அமைக்க அனுமதி என்ற பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டுப்பாடுகளைத் தளர்த்தி, அம்பேத்கருக்கு சிலை அமைக்க ஆணை வழங்கிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-30

சிறப்பு உட்கூறுத் திட்டத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு ஒதுக்கப்படுகின்ற நிதியை எந்த முறைகேடும் இல்லாமல் முழுமையாகச் செலவிடவேண்டும். மேலும், இத்திட்டம் சரியான முறையில் செயல்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க, கிராம, ஒன்றிய, மாவட்ட அளவில் தலித் மக்களையும், உள்ளாட்சிப் பிரதிநிதிகளையும் கொண்டு கண்காணிப்புக் குழுக்கள் உருவாக்கப்படவேண்டும். சிறப்பு உட்கூறுத் திட்டத்தைச் சரியாக அமல்படுத்தாத அதிகாரிகளுக்குக் கடுமையான தண்டனை அளிக்கவேண்டும். அத்துடன், கடந்த 5 ஆண்டுக் காலமாகச் சிறப்பு உட்கூறுத் திட்டத்தின்மூலம் நிறைவேற்றப்பட்டுள்ள பணிகளின் விவரத்தினை வெள்ளை அறிக்கையாக இம்மாமன்றத்தில் வழங்கவேண்டுமென பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

நடுவண் அரசின் மருத்துவக் கல்லூரிகளிலே சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து இப்போதுவரை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர் மருத்துவப் பட்ட மேற்படிப்பு படிப்பதற்கான இடஒதுக்கீடு முறை இல்லாமல் இருந்தது. இந்த நிலையில்,

அதிகாரிகளின் தலையீட்டாலும், நீதிமன்றங்களின் தலையீட்டாலும், கடுமையான எதிர்ப்புகள், முட்டுக்கட்டைகள் இவற்றையெல்லாம் சமாளித்து, நடப்பாண்டில் மருத்துவ மேற்படிப்பில் S.C./ S.T. இன மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு 22 சதவீதம் வழங்கி, ஆதி திராவிட இன மக்களின் வயிற்றில் பால் வார்த்தவர் மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மாண்புமிகு மருத்துவர் சின்ன அய்யா அவர்கள். அதையறிந்து, நூற்றுக்கும் மேற்பட்ட நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து, சின்ன அய்யா அவர்களைப் பாராட்டினார்கள். அதேபோன்று, அகில இந்திய S.C. / S.T. இன நல வாரியத்தின் தலைவர் மாண்புமிகு பூட்டாசிங் அவர்கள்கூட சென்னைக்கே வந்து, சின்ன அய்யா அவர்களைப் பாராட்டினார்கள். மேலும், இதேபோன்று, தமிழ்நாட்டைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள் பாராட்டினார்கள். இது சமூக நீதிக்குக் கிடைத்த வெற்றி. இதற்காக உழைத்த நமது மாண்புமிகு மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் சின்ன அய்யா அவர்களைத் தமிழ்நாட்டு மக்கள் எல்லாம் பாராட்ட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பழங்குடியின மக்கள் பிரச்சினை; பழங்குடியின மக்கள் பட்டியலில் உள்ள குரும்பாஸ் கொண்டாரெட்டி, இருளர், வில்லி, குரிஞ்சான், மலையாளி போன்றவர்களுக்குப் பழங்குடியினச் சான்று மறுக்கப்படுகிறது. இதனால், S.T. இன மாணவர்கள் படிக்கவோ, வேலைக்குப் போகவோ முடியவில்லை. மேலும், கொண்டாரெட்டி போன்ற S.T. இனச் சான்று பெற்று, அரசுப் பணியில் உள்ளவர்களுக்கு விசாரணை என்ற பெயரில், 15 ஆண்டுகளுக்கும் மேலாக வேலையில் இருந்தவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். இதனைத் தடுக்கவேண்டும். மேலும், மலைச் சாதியினர் வாழும் பகுதிகளுக்கு வீட்டுமனைப் பட்டா, சாலை வசதி மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். மேலும், S.T. இன மக்களுக்கு மத்திய அரசு வழங்கும் மலைவாழ் மேம்பாட்டு நிதியில் திட்டங்கள் முழுமையாக நிறைவேற்ற அரசு முன்வரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பள்ளிகளில் மனித உரிமைக் கல்வி, 6, 7, 8 ஆம் வகுப்புகளில் நடைபெற்று வந்தது. அது நடப்பு ஆண்டு முதல் நிறுத்தப்படுவதாகத் தகவல் வந்துள்ளது. கல்வி நிறுவனத்தால் மனித உரிமைக் கல்வி தொடர்ந்து



நடத்தப்படவேண்டும்; அரசு இதற்கு முன்வரவேண்டும்; இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. எனவே, இதை உடனடியாக நடத்திட ஆணையிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

தாட்கோ கடன்; ஆதி திராவிட மக்களுக்காக விவசாயக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டதைப் பாட்டாளி மக்கள் கட்சி மனதாரப் பாராட்டுகிறது. அதேவேளையில், தாட்கோமூலம் கடன் பெற்று, கடன் சுமைக்கு ஆளாகி, அவதிக்குள்ளாகியுள்ள ஆதி திராவிட மக்களுக்குத் தாட்கோ கடன் முழுவதையும் தள்ளுபடி செய்யவேண்டுமாய்ப் பாட்டாளி மக்கள் கட்சி கேட்டுக்கொள்கின்றது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. கு. பிச்சாண்டி தலைமை)

நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே, பக்கம் 34-ல், சமுதாயக் கூடங்கள் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. 2007-2008, ஆம் ஆண்டிற்கான ஆதி திராவிட மானியக் கோரிக்கையில், ரூ.80 இலட்சம் மதிப்பீட்டில் 8 சமுதாயக் கூடங்கள் கட்ட ஆணையிடப்பட்டுள்ளது. ஆனால், இந்த நிதியாண்டிலே, 2008-2009 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், வெறும் ரூ.14 இலட்சம் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அது ரூ.14 இலட்சமா அல்லது ரூ.140 இலட்சமா என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திற்குத் தெளிவுபடுத்தவேண்டும்.

ஆதி திராவிட மக்கள் அதிகம் வசிக்கும் அனைத்துக் கிராமங்களுக்கும் சமுதாயக் கூடம் அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணையிடவேண்டும். மேலும், இந்தச் சமுதாயக் கூடம் கட்டுவதற்கு ரூ.14 இலட்சம் போதாது. ஏனென்றால், கட்டுமானப் பொருட்களின் விலைகள் எல்லாம் ஏறிவிட்ட நிலையிலே, இந்த 14 இலட்சம் ரூபாய் போதாது. அதனை ரூ.20 இலட்சமாக உயர்த்தித் தரவேண்டுமென்று இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதிப் பிரச்சினை குறித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சமையல் எரிவாயு இணைப்பு இல்லாத குடும்பங்களுக்கு இலவச எரிவாயு அடுப்பும், இணைப்பும் வழங்கும் புதிய திட்டம் நல்ல திட்டம்; சிறப்பான திட்டம். இதுவரை 6½ இலட்சம் எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இத்திட்டம் ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பங்களைச் சார்ந்த பெண்களுக்கு வழங்கப்படும் என்று கூறிக்கொண்டு, கிராமத்தில்

[திரு டி. மூர்த்தி] [2008 ஏப்ரல் 17

வசிக்கும், குறிப்பாக குடிசை வீட்டில் வசிக்கின்ற பெண்களுக்குக் கிடையாது என்று மாவட்ட வழங்கல் துறை அதிகாரிகள் கூறிக்கொண்டு, இலவச எரிவாயு இணைப்பு வழங்க மறுக்கின்றனர். 90% மக்கள் S.C. / S.T. இன வகுப்பைச் சார்ந்த சகோதரிகளுக்கு இதுபோன்ற குறைபாடுகள் உள்ளன. இதனைக் களைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணையிடக் கேட்டுக்கொள்கின்றேன்.

என்னுடைய திருப்போரூர் தொகுதியிலுள்ள S.C. hostel இடிந்தும், சேதமுற்றும் உள்ளது. இதனை உடனடியாகச் செப்பனிட அமைச்சர் அவர்கள் சிறப்புக் கவனம் செலுத்திடக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, ஹாஸ்டல் வார்டன் பணியிடங்கள் பல இடங்களில் காலியாக உள்ளன. காலிப் பணியிடங்களை நிரப்பி, அந்தந்த விடுதியிலேயே வார்டன்களைத் தங்க வைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து சமுதாயக் கூடம். திருப்போரூர் தொகுதியில், பொன்மார் என்ற ஊராட்சி மிகவும் பின்தங்கிய ஊராட்சி. இந்தப் பொன்மார் ஊராட்சியில் சுமார் 4,000 ஆதி திராவிட மக்கள் வசிக்கின்றனர். இவர்களின் திருமணம் மற்றும் சுபகாரியங்கள் நடத்த, அந்தப் பகுதியிலிருந்து சுமார் 20 கி.மீ. தூரம் சென்றுதான் திருமண மண்டபத்தைத் தேட வேண்டியுள்ளது. எனவே, பொன்மார் ஊராட்சியிலும், மானாமதி ஊராட்சியிலும் திருமணம், சுபகாரியங்கள் நடத்த நமது துறைமூலம் ஒதுக்கீடு செய்யப்படுகின்ற நிதியிலிருந்து சமுதாயக் கூடம் கட்டித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். நானும் இதே கோரிக்கையை கடந்த இரண்டு ஆண்டுகளாக அமைச்சர் அவர்களிடத்திலே வைத்தேன். இந்த ஆண்டிலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு இரண்டு சமுதாயக் கூடங்கள் கட்டித் தருவார்களா என இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–35

திருப்போரூர் தொகுதியிலுள்ள தையூர் ஊராட்சி, ஆதி திராவிட மக்கள் அதிகம் வசிக்கும் பெரிய ஊராட்சி. இந்த ஊராட்சியில், சுடுகாடு செல்லும் வழியில் பெரிய ஓடை ஒன்று உள்ளது. இந்த ஓடையின்மீது பாலம் அமைக்க வேண்டுமென்ற 20 ஆண்டு காலக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன். (குறுக்கீடுகள்)



2008 ஏப்ரல் 17]

**திரு. டி. மூர்த்தி:** தையூர் ஊராட்சியில் மின் தட்டுப்பாடு தொடர்ந்து உள்ளது. எனவே, இங்கு ஒரு துணை மின் நிலையம் அமைக்கப்பட வேண்டும். அது நிலுவையில் உள்ளது. எனவே, உடனடியாக தையூரில் ஒரு துணை மின் நிலையம் அமைக்கப்படவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

திருப்போரூர் தொகுதியில் உள்ள முருகன் கோயில் மிகவும் பிரசித்திபெற்ற கந்தசாமி கோயில். இக்கோயிலுக்குச் சொந்தமாக 60 ஏக்கர் நிலம் உள்ளது. எனது திருப்போரூர் தொகுதிக்கு அரசுக் கல்லூரி வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன். (குறுக்கீடு) மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சமுதாயக் கூடத்தின் மதிப்பீடு வித்தியாசமாக இருக்கிறது என்று சொன்னார்கள். சமுதாயக் கூட மதிப்பீடு கடந்த 5 ஆண்டுகளில் 6 இலட்சம் ரூபாயாக இருந்த மதிப்பீடு, இன்றைக்கு தலைவர் கலைஞர் அவர்கள் ஐந்தாம் முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றபோது 14 இலட்சம் ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் பார்த்தீர்களென்று சொன்னால், கடந்த 5 ஆண்டுகளில் கட்டப்பட்டவை வெறும் 15 சமுதாய நலக் கூடங்கள் மட்டும்தான். ஆனால், தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, சென்ற ஆண்டு 12 சமுதாய நலக் கூடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு 8 சமுதாய நலக் கூடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. 1996–ல் தலைவர் கலைஞர் அவர்கள், நான்காவது முறையாக ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது 23 சமுதாய நலக் கூடங்களைக் கட்டித்தந்திருக்கிறார்கள். உறுப்பினர் அவர்கள் சென்ற ஆண்டே கோரிக்கை வைத்ததால், இந்த ஆண்டு அவர்களது தொகுதியில் ஒரு சமுதாய நலக் கூடம் கட்டித் தரப்படும் என்று தெரிவித்துக்கொண்டு, விடுதி மராமத்து ஒன்றைச் சொல்லியிருந்தார்கள். அதுவும் இந்த ஆண்டே பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன். (குறுக்கீடுகள்)

[2008 ஏப்ரல் 17

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் நன்றி மட்டும் தெரிவித்துவிட்டு உட்காருங்கள்.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்கு சமுதாயக் கூடம் கட்டிட ஆணை வழங்கிய, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். எங்களது நீண்டகால வேண்டுகோளை ஏற்று, அடுக்கப்பட்ட மூட்டைகளில் அடி மூட்டையாக இருக்கும் அருந்ததியர் மக்களுக்கு, தனி உள் ஒதுக்கீடு வழங்க ஆவன செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், 12-3-2008 அன்று நடத்தப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பங்குகொண்டு ஆதரவு தெரிவித்த அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உள் ஒதுக்கீட்டுக்காக ஆய்வு செய்து பரிந்துரை செய்திட சென்னை உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் திரு. எம்.எஸ். ஜனார்த்தனன் அவர்கள் தலைமையில் ஒரு நபர் குழு அமைக்க இடப்பட்ட ஆணை 6 மாத காலத்திற்குள் நிறைவேற்றப்பட உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுடைய எண்ணிக்கைக்கேற்ப விடுதிகள் போதுமானதாக இல்லை. மதுரையில் ஒரு விடுதியைச் சட்டமன்ற மதிப்பீட்டுக் குழு பார்வையிட்டபோது மிகவும் மோசமான நிலையில் இருந்தது. உணவு தயாரிப்பது, பரிமாறுவது, சுகாதாரமான முறையில் இல்லை. போதிய உபகரணங்கள் இல்லை. தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய இதுபோன்ற நிலைமையில் கூடுதல் கவனம் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். வார்டன்கள் தங்குவதிலும் பலவீனம் இருக்கிறது. விடுதி





மாணவர்களின் உணவுப் படியை உயர்த்த வேண்டுமென்று எங்களுடைய தலைவர், தோழர் திரு. என். வரதராஜன் அவர்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ.50 உயர்த்தியதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மனப்பூர்வமாக வரவேற்கிறது.

வெளிநாடு சென்று உயர் கல்வி பயில உதவித் தொகை பெற அதற்கான நிபந்தனை என்பது மாத வருமானம் 12,000 ரூபாய் என்று இருக்கிறது. அதனை 25,000 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் இடைநிற்றலைத் தவிர்ப்பதற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100 வீதம் திட்டம் இருக்கிறது. அது சென்னையிலும் நிறைவேற்றப்பட வேண்டும். கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

சேலம் மாவட்டத்தில் ஒரு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர் விடுதி உள்ளது. உணவுப் பொருளை வினியோகம் செய்யும் பொறுப்பை ஒரு தனியார் நிறுவனத்திடம் தந்திருக்கிறார்கள். அது ஒரு தொண்டு நிறுவனம் என்கிற முறையில் தனியார் ஒருவர் நடத்தி வருகிறார். இதை இரத்துச் செய்து, கூட்டுறவுப் பண்டகசாலைமூலம் அந்த விடுதிக்கு வினியோகம் செய்திட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

பிற்பகல் 12-40

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கட்தொகைக்கு ஏற்ப, சிறப்பு உட்கூறுத் திட்ட நிதியை உயர்த்தி, உறுதிசெய்திட வேண்டும். ஒதுக்கப்படும் தொகையைத் திருப்பியனுப்பக் கூடாது. வேறு துறைக்கு மாற்றி செலவழிக்கவும் கூடாது. இதற்கு ஒதுக்கப்படுகின்ற நிதியில் குறிப்பிட்ட சதவீதம், பெண்கள் சார்ந்த திட்டங்களுக்குப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி, தனித் தனித் துறைகளின்மூலம் ஒதுக்கப்படாமல், ஆதி திராவிடர் நலத் துறையின்மூலமே ஒதுக்கப்பட வேண்டும். மகாராஷ்டிர மாநிலத்தில் இவ்வாறுதான் நிறைவேற்றப்படுகின்றது என்று அறிகிறோம். அதேபோல, தமிழகத்திலும் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

ஆதி திராவிட மக்களுக்கு நிலம் வழங்குவதற்காக, நிலம் வாங்கும் திட்டத்தை முறையாகச் செயல்படுத்த வேண்டும். இதுகுறித்து,

கொள்கை விளக்கக் குறிப்பில் போதிய விவரங்கள் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். ஆதி திராவிடர்களில் கிறுத்தவர்களாக மதம் மாறியவர்களுக்கு அதே சலுகை கிடைக்க வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கோரி வந்தது. தமிழகத்தின் வரலாற்றிலேயே முதன்முறையாக, இதனை நிறைவேற்றக்கூடியவகையில், கிறுத்தவ ஆதி திராவிடர்களுக்கும் சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்திருப்பதை வரவேற்கிறோம். 25 கோடி ரூபாய் என்றிருப்பதை மேலும் அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

இலவச வீட்டுமனைப் பட்டா என்று தலைப்பு உள்ளது. ஆனால், உள்ளே சில வருமான வரம்புகள் வைக்கப்பட்டுள்ளன. ஏற்கெனவே இலவசம் என்று வந்த பிறகு, வருமான வரம்பு வேண்டியதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வீட்டுமனைப் பட்டா என்பதில், மதுரை மாநகராட்சியும் நிறைவேற்ற வேண்டும். குறிப்பாக மதுரை கிழக்குத் தொகுதியில், கீழ்மதுரை பகுதி மிகவும் மோசமாக இருக்கிறது. அது கிழக்குத் திசை என்பதற்காக கீழ்மதுரை என்று பெயர் வைத்தார்கள். குடியிருப்புகளே கீழே சென்றுவிட்டன. உரியமுறையில் தலையிட்டு அங்கே வீடுகளை மாற்றியமைக்க வேண்டுமென்றும், இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

நிலம் கையகப்படுத்தும் பணியை அரசு அதிகாரிகள் செய்வதற்குப் பதிலாக, சம்பந்தப்பட்ட மக்களிடமே "இடத்தைப் பார்த்துச் சொல்லுங்கள், நாங்கள் ஏற்பாடு செய்கிறோம்" என்று சொல்கிறார்கள். இது நோக்கத்தைச் சிதைத்துவிடுகிறது. அரசு நிர்ணயிக்கின்ற விலையும் தற்போதைய விலையோடு பொருத்தமாக இருக்க வேண்டும். ஏற்கெனவே நிலம் எடுத்து, பட்டா கொடுத்த இடங்களிலும்கூட, உரியவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று, பட்டா கிடைத்தும்கூட, அங்கே பொது மக்கள் குடியேற முடியாத நிலையில் உள்ளனர். விரைவில் இதற்குத் தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

ஆதி திராவிடர்களுக்கான சுடுகாட்டுப் பாதை அமைத்துக் கொடுக்கும்போது, நில ஆர்ஜிதச் சட்டத்தைப் பயன்படுத்தி பாதையை உறுதி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். ஈமச்சடங்கிற்கு 500 ரூபாய் என்று நீண்ட காலத்திற்கு முன்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதை இருமடங்காக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாதிச் சான்றிதழ் கிடைக்காமல், இந்து ஆதி திராவிட மக்கள்கூட, கன்னியாகுமரி மாவட்டத்தில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.





அதேபோல, அரக்கோணம் பகுதியிலேயும் இந்தப் பாதிப்பு இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு, கழுவந்திட்டை ஆகிய பகுதிகளிலும், வேறு பல இடங்களிலும் இந்தச் சிரமம் இருக்கிறது. ஆகவே, சாதிச் சான்றிதழ் கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். தருமபுரி தாலுகாவில் பன்னியாண்டி என்ற சாதியினர், அங்குள்ள மாவட்ட ஆட்சியர் சான்றிதழ் கொடுக்கலாம் என்று அறிவித்தாலும்கூட, வட்டாட்சியர் மறுக்கிறார் என்று கூறுகிறார்கள். ஆகவே, உரிய விசாரணை நடத்தி, அந்த மக்களுக்கு சாதிச் சான்றிதழ் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பழங்குடியின மக்கள் சாதிச் சான்றிதழ் பெறுவதில், தொடர்ந்து சிரமம் இருக்கிறது. ஏராளமான சாதியினர் இருக்கிறார்கள். அவர்களுக்காக "மலைவாழ் மக்கள் சங்கம்" என்கிற முறையில் தோழர் சண்முகம் தலைமையிலான அமைப்பு விடாமல் முயற்சி எடுக்கிறது. மலைவேடன், இருளர், காட்டுநாயக்கன், குறவர் போன்ற பல்வேறு சாதியினர் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். ஆகவே, அந்த சாதிச் சான்றிதழ் கிடைக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரையில் புட்டுத்தோப்புப் பகுதியில், காட்டுநாயக்கன் என்ற சமூகத்தினர் இருக்கிறார்கள். இதை நீண்டகாலமாக நான் அறிவேன். அவர்களுக்கெல்லாம் சாதிச் சான்றிதழ் கிடைக்கவில்லை. சாதிச் சான்றிதழ் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தீண்டாமை ஒழிப்பு என்று நாம் சொல்லியிருக்கிறோம். அதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது. ஆனால், மதுரை மாவட்டத்தில், பேரையூர் தாலுகாவில், உத்தப்புரம் என்கிற கிராமத்தில், ஆதி திராவிட மக்களின் குடியிருப்புப் பகுதிக்கும், ஆதி திராவிடர் அல்லாத மக்களின் குடியிருப்புப் பகுதிக்கும் இடையிலே ஒரு பெரிய சுவர் எழுப்பப்பட்டு, அந்தச் சுவரில் கடந்த 10 நாட்களாக மின்சாரம் பாய்ச்சப்படுவதாகத் தெரிவித்துள்ளார்கள். அதுசம்பந்தமாக இன்றைய 'இந்து' நாளேடு ஒரு செய்தி வெளியிட்டிருக்கிறது. கவன ஈர்ப்பு அறிவிப்பு ஒன்றை நான் கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு அவை முன்னவர், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டு சென்றிருக்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 ஏப்ரல் 17

பிற்பகல் 12-45

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே சொன்னதை நானும் கேட்டுக்கொண்டிருந்தேன். 'இந்து' பத்திரிகையிலும் பார்த்தேன். அது, கிராமத்திலே உள்ள மக்களுக்கும், ஆதி திராவிட மக்களுக்கும் இடையிலே ஒரு சுவர் எழுப்பப்பட்டிருக்கிறது. என்ன காரணம் என்று எங்களுக்குத் தெரியவில்லை. ஆனால், அதற்குமேலே ஒரு அடிக்கு மேல் மின்சார wire போவதைப் படத்திலே பார்த்தேன். மின்சார இலாகா அதிகாரிகளிடம் சொல்லி அதை அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தி சுமார் ஒரு பர்லாங் தூரத்திற்கு அப்பால் அந்த wire-ஐக் கொண்டு செல்லும்படி நான் வலியுறுத்தியிருக்கிறேன். இன்னும் ஒரு வாரத்திலே அந்த வேலைகள் நடைபெறும். ஆகையினாலே, மின்சாரம் shock அடித்து யாருக்கும் ஆபத்து ஏற்படாமல் இலாகா பார்த்துக்கொள்ளும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த ஏட்டினுடைய உள் செய்தியில் கடந்த 10 நாட்களாக ஒரு இரும்புத் தடியின்மூலம் இந்த மின்சாரப் பாய்ச்சல் இருப்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். உரிய முறையில் நடவடிக்கை எடுத்து உதவுவதாக அறிவித்திருப்பதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, சுவரையும் அப்புறப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம். (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இரண்டு நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

அதாவது, வன்கொடுமை என்று சொல்கிறோம். குறவர் சமூக மக்கள், De-notified என்று ஒருகாலத்தில் இருந்தார்கள். இப்பொழுது காவல் துறையில் பதிவு செய்கிறபோது, அவருடைய பெயர் கிருஷ்ணன் என்றால், குற. கிருஷ்ணன் என்று பதிவு செய்கிறார்[redacted]



2008 ஏப்ரல் 17] [திரு. என். நன்மாறன்]

என்றால், குற. இளங்கோ என்று பதிவு செய்கிறார்கள். இதுவும் ஒரு விதத்திலான வன்கொடுமை. அரசே இவ்வாறு செய்யக்கூடாது என்பதை அந்தப் பகுதி மக்கள் விரும்புகிறார்கள். ஏதோ ஒரு காலத்தில் போடப்பட்ட உத்தரவாக இருந்தாலும், வருங்காலங்களில் பெயரை மட்டும் எழுத வேண்டுமே தவிர ஜாதிப் பெயரைச் சேர்த்து எழுதக்கூடாது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் நலத் துறையில் பின்னடைவுப் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆலய நுழைவு என்பதில் விருதுநகர் மாவட்டம், பாவாளி கிராமத்தில் உள்ள கோயில் வேறு ஒரு சமூகத்திற்குச் சொந்தமானது. அங்குள்ள ஆதி திராவிட மக்கள் வழிபட்டு வந்தார்கள். இப்பொழுது அவர்கள் வழிபட வேண்டுமென்று விரும்புகிறபோது, ஆர்.டி.ஓ. அவர்கள் விசாரணை நடத்தி ஒரு தீர்ப்புத் தந்திருக்கிறார்கள். அந்த சமூக மக்கள் வரும்பொழுது, நீங்களும் போய் வழிபடலாம் என்று தீர்ப்பு தந்திருக்கிறார்கள். தீர்ப்பு வந்தும்கூட இன்னும் அது நிறைவேறவில்லை. இவர்கள் உள்ளே நுழையாமல் இருப்பதற்காகவே, அவர்களும் போகாமல் இருக்கிறார்களோ என்கிற எண்ணம் அந்தப் பகுதி மக்களுக்கு ஏற்படுகிறது. எனவே, இதுவும் ஒருவிதத்திலான தீண்டாமை என்று கருதப்படுகிறது. நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோருகிறேன்.

மதுரை மாவட்டத்தில், மேலூர் தாலுகாவில், தளியாமங்கலம் போன்ற கிராமங்களில், ஆண்டார் கொட்டாரத்தில் மதுரை தாலுகாவில் தபால் கார்டு கொடுக்கிறவர்கள்கூட அந்த மக்கள் போய் கார்டு வாங்க வேண்டுமென்று சொல்கிறார்கள். எல்லோருக்கும் கார்டு கொடுப்பார்கள். இவர்களை மட்டும் வந்து வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். அப்படி நிலைமை இருக்கிறது.

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரியில் கூத்தாடியம்மன் கோயில் தெருவைச் சேர்ந்த 15 ஆதி திராவிடர் குடும்பங்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். சாந்தி என்கிற பெண்மணி கடந்த மார்ச் திங்களில் முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு மனு அனுப்பியிருக்கிறார். எனவே, அதையும் விசாரித்து அங்குள்ள 15 குடும்பங்கள் மீண்டும் குடியேற வழி செய்ய வேண்டுமென்று கேட்டு, அனுமதித்த தங்களை வணங்கி விடைபெறுகிறேன். வணக்கம்.

[2008 ஏப்ரல் 17

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடு) மாற்றுத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** இந்த இருக்கையில் உட்கார்ந்து இருக்கும்பொழுது தற்காலிகம் இல்லை. மாற்றுத் தலைவர். (சிரிப்பு)

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க நிதிநிலை அறிக்கையிலே பேச வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி கூறி, இன்று தமிழக அரசு, கலைஞருடைய ஆட்சி, இந்தியாவிற்கு எப்படி வழிகாட்டிக் கொண்டிருக்கிறதோ அதேபோன்று ஆதி திராவிடர் நலத் துறை எப்படித் தமிழகத்திலே செயல்படுகிறது என்பதைப் பார்த்து, அனைத்து மாநிலங்களும் தமிழகத்தைப் பின்பற்றிக் கொண்டிருக்கின்றன என்ற வரலாறுபூர்வமான உண்மையை நான் இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள் இங்கே பேசும்பொழுது, அம்மா ஆடு கொடுத்தார், மாடு கொடுத்தார் இந்த சமூகத்திற்கு என்று சொன்னார். ஆனால், நம்முடைய கலைஞர் அரசு படித்த பிள்ளைகளை விமானப் பணிப்பெண்களாக மாற்றி ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க சமூக மாற்றத்தை உருவாக்கியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆடு கொடுத்து, மாடு கொடுத்து நீங்கள் ஆடு மேயுங்கள், மாடு மேயுங்கள் என்ற கருத்தை விட்டுவிட்டு, இன்று சமூகத்திலே ஒரு மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி இந்த ஆதி திராவிடர் சமூக மக்களுக்காக பாடுபடுகின்ற ஒரு விடுதலை வீரராகத்தான் நம்முடைய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களை நாம் பார்க்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) 1974 ஆம் ஆண்டு முதல் முறை ஒடுக்கப்பட்ட மக்களுக்கு, ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுவசதியை ஏற்படுத்தி, அவர்களெல்லாம் குடிசையிலே வாழ்கிறார்களே, அவர்களெல்லாம் சாலையோரங்களிலே படுத்திருக்கிறார்களே என்ற அந்தக் காட்சிகளைக் கண்ட நம்முடைய முதல்வர் அவர்கள் முதல் முறையாக செங்கல்பட்டிலே அந்த மக்களுக்கு வீடுகளை அமைத்து, அன்றைய துணைப் பிரதமர் திரு. ஜெகஜீவன்ராம் அவர்களை வரவழைத்து அவற்றைத் திறந்து வைத்தார்கள். அப்பொழுது, ஆதி திராவிட மக்களின் தலைவராக இருந்த திரு. ஜெகஜீவன்ராம் அவர்கள், இந்தியாவிற்கே இப்படி



2008 ஏப்ரல் 17] [திரு. கு. செல்வம்]

முன்னோடித் திட்டமாகக் கொண்டுவந்த கலைஞர் அவர்களைப் பாராட்டுகிறேன் என்று அவருடைய திருவாயால் பாராட்டினார். அந்தத் திட்டம்தான் இன்று இந்தியாவிலே அனைத்து மாநிலங்களிலே இந்திராகாந்தி வீடு கட்டும் திட்டமாக மாறி புகழ்பெற்றிருக்கிறது. ஆக, எதை வேண்டுமென்றாலும் பேசலாம் என்று நாம் குறை சொல்லக்கூடாது. இப்போதுதான் புரிகிறது. **

*பிற்பகல் 12–50*

ஆக, ஆதி திராவிட மாணவ மாணவிகளை தாராளமாகப் படிக்க வைக்க வேண்டும். விவசாயப் பெருங்குடி மக்கள், அவர்களுடைய வாழ்க்கையிலே விளக்கேற்ற வேண்டுமென்று, நம்முடைய அரசு அசுர வேகத்திலே சென்று கொண்டிருக்கிறது. (குறுக்கீடுகள்

வெள்ள நிவாரணங்கள் வழங்கவில்லை என்று சொன்னார்கள். வெள்ள நிவாரண விஷயங்களிலே மக்கள் அங்கே திருப்பியடிக்க காத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால், ஒரு அரசு எப்படிச் செயல்படுகிறது என்பதை நாம் பார்க்கவேண்டுமென்றால். . (குறுக்கீடுகள்)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, ** அப்படி சொன்னால் மற்றவற்றையும் நாங்கள் சொல்லவேண்டியிருக்கும். ஆகவே, அது அவைக்குறிப்பில் இருக்க வேண்டுமா என்பதை மட்டும் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** அந்த வார்த்தைகள் அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொன்னேன் என்றால், ** தவறாகச் சொல்லவில்லை. மதிப்பிற்குரிய மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள் எனக்கு நல்ல நண்பராக இருக்கக்கூடியவர். ஆக, நான் சொல்வது எல்லாம் என்னவென்றால், ஓர் அரசு எப்படி நடைபெறுகிறது என்பதற்குச் சான்றாக கடந்த வெள்ளத்தின்போது, எப்படி போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகளை நம்முடைய அரசு எடுத்தது என்பதை, தமிழக மக்கள் கண்கூடாகப் பார்த்தார்கள். நம்முடைய

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

முத்தமிழ் அறிஞர் முதலமைச்சர் அவர்கள், காலையும் மாலையும் அதிகாரிகளைச் சந்திப்பதும், அங்கு அந்த வெள்ள நிவாரணப் பணிகளில் போர்க்கால அடிப்படையிலே களப்பணியாற்றிய நம்முடைய தளபதி அவர்களையும் நம்முடைய தமிழக மக்கள் கண்டுகளித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, குறைகளைச் சுட்டிக்காட்டலாம். நாங்களும் சுட்டிக்காட்டுகிறோம். குறைகளைச் சொல்கிறோம்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையிலே, ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேசும்போது அழகாக எடுத்துரைத்தார்கள். இந்த அரசு செய்யாமல் எந்த அரசு இந்தச் சமூகத்திற்கு செய்யும் என்றார்கள். அதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் சில பரிந்துரைகளை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

பள்ளிக் கல்வியில் ஆதி திராவிடர்களுக்கு நல்ல பல வாய்ப்புகள் தரப்படுகின்றன. ஆனால், கல்லூரி அல்லது தொழிற்கல்வி படிப்பிற்குரிய உதவித் தொகை வழங்கப்படுவதில்லை என்று நான் கருதுகிறேன். ஏறக்குறைய 70 ஆயிரம் ஆதி திராவிட மாணவர்கள் ப்ளஸ் 2 தேறி வருகின்றனர். அவர்கள் அனைவரும் மேல்கல்வி தொடருவதற்கு ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டும். அதாவது ஒடுக்கப்பட்ட சமூகத்திலே 70 ஆயிரம் மாணவர்கள் பி.இ. படித்து வந்தால், அவர்களுக்குரிய வாழ்க்கை ஏற்றத்திலே முன்னேற்றம் அடைய வாய்ப்பு இருக்கும்.

அதேபோன்று, இந்தியா முழுவதும் விவசாயக் கடன் தொகை ஏறக்குறைய ரூபாய் 60 ஆயிரம் கோடியை தள்ளுபடி செய்தார்கள். அதற்கு நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர்தான் காரணமாக இருந்தார்கள் என்று பத்திரிகைகள் சொன்னது.

அதேபோன்று ஏறக்குறைய ஒரு 100 கோடி ரூபாய் கடன் சுமை ஆதி திராவிட மக்களுக்கு இருக்கிறது. அதையும் இந்த அரசு முழுமையாகத் தள்ளுபடி செய்ய வேண்டும்.



ஆதி திராவிட மாணவர்கள் 20 சதவீதத்திற்கும் மேற்பட்டிருக்கும் ஒன்றியங்களிலே, எல்லோருக்கும் பொதுவான கல்லூரிகளில் எம்.சி.ஏ./ எம்.பி.ஏ பாடத் திட்டங்களைப் பரவலாக்க அரசு முன்வர வேண்டும்.

ஆதி திராவிடர் முன்னேற்றத்திற்காக யு.ஜி.சி. தலைவர் திரு. தோரட் அவர்கள் அளித்துள்ள அறிக்கையை ஆய்ந்துவிட்டுப் புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்த அறிஞர் குழு ஒன்றை நமது அரசு நியமிக்க வேண்டும். ஆதி திராவிடர்கள் பயிற்சியிலே பல்வேறு திறமைகளை வெளிப்படுத்துவதற்காக, ரூ. 25 கோடியை நம்முடைய அரசு செலவு செய்கிறது. இது பாராட்டிற்குரிய ஒரு விஷயமாகும். அதேபோன்று இந்த 25 கோடி ரூபாய், ஆதி திராவிட மக்கள் நடத்தும் கல்லூரிக்குச் செல்கிறதா என்பதை நம்முடைய அமைச்சர் கண்காணிக்க வேண்டும்.

ஆதி திராவிடர்களுக்கு 25 புதிய தங்கும் விடுதிகள் திறப்பதற்கு ஏற்கெனவே அறிவிப்பு செய்துள்ளது பாராட்டத்தக்கது. இன்னும் 25 விடுதிகளுக்கு 12 கோடி ரூபாய் அளவிற்கு கட்டடம் கட்டுவதாக அறிவித்துள்ளதும் பாராட்டத்தக்கது. 50 மாணவர்கள் தங்கும் விடுதிக்கு 18 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படுகிறது. இந்த நிதி போதுமான நிதி இல்லை. இதை இன்னும் உயர்த்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–55

IAMWARM நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் ரூ.2,547 கோடி செலவிடப்பட்டு, 15.4 இலட்சம் ஏக்கர் நிலங்கள் பயனடையும் என்று முதல்வர் அவர்கள் அறிவித்தது பாராட்டத்தக்கது. அந்த 15.4 இலட்சம் ஏக்கர் நிலங்களில் 5–ல் ஒரு பங்கு நிலங்கள், அதாவது, 3 இலட்சம் ஏக்கர் நிலங்கள் ஆதி திராவிட மக்களுடையவையாக இருப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும். இல்லையெனில், நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே உள்ள, ஆதி திராவிட மக்களுக்குச் சொந்தமான 5–ல் ஒரு பங்கு நிதி மற்றவர்களுக்கு திசை திருப்புவதற்கு ஏற்பாடாகும். அதை உறுதிசெய்யும் வகையில் IAMWARM திட்டத்தின்மூலம் முழுப் பயனடையும் வகையில் IAMWARM-லே பட்டியலினத்தவர் மக்களுக்காக ஒரு துணைக் குழு அமைக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நிலத்தடி நீரைச் சேமிக்கும் வகையாக 48,500 தடுப்பணைகளை 550 கோடி ரூபாய் செலவிலே கட்டுவதற்காக நம்முடைய முத்தமிழ் அறிஞர் முதல்வர் அவர்களுடைய இந்த அரசு அறிவித்திருப்பது

வரவேற்கத்தக்கதாகும். இந்தத் தடுப்பணைகளைத் தொண்டு நிறுவனம் மூலமாகவும், பொதுச் சேவை அமைப்புகள் மூலமாகவும் கட்டப்போவதாக அறிவிப்பு வந்திருக்கிறது. ஆக, இதிலே 30 சதவீத வேலைகளை ஆதி திராவிட மக்களுக்கு ஒதுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பாசனம், வெள்ளக் கட்டுப்பாடு, போக்குவரத்து, சாலைகள், குடிநீர் வழங்கல், வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி, பொதுவான பணிகள் மற்றும் மின் சக்தித் துறைகளுக்கு ரூ.6,847.99 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் துறைகளிலே பல்வேறு ஒப்பந்தக்காரர்கள் பயன்பெறுகின்றனர். ஆனால், ஆதி திராவிட சமூகத்தைச் சார்ந்த Class-I contractors இருக்கிறார்களா என்றால் அங்கே இருப்பது இல்லை. இதற்கு ஓர் ஒதுக்கீட்டை உருவாக்குவதற்கு நம்முடைய ஆதி திராவிட நலத் துறை முன் வரவேண்டும்.

அதேபோன்று, ஜவஹர்லால் நேரு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம். இந்தத் திட்டத்தின்கீழ் நகர் குடிசைவாசிகளுக்கு ஒரு இலட்சம் வீடுகள்; ஒரு வீடு ரூ.2,78,700/- என்ற கணக்கிலே கட்டித் தரப்படுகின்றன. ஆனால், அதேசமயம், இந்திரா ஆவாஸ் யோஜனா திட்டத்தின்கீழே ஆதி திராவிட மக்களுக்கு 55,000 ரூபாயை ஒதுக்கியிருக்கிறோம். இதைக் கொஞ்சம் உயர்த்தித் தர நம்முடைய அரசு முன்வர வேண்டும்.

பட்டியலினத் துணைத் திட்டத்தின்கீழ் 2007-2008 ஆம் ஆண்டு திட்ட இணைப்பு நூலிலே பட்டியலினத்தவர் துணைத் திட்டம், இணைப்பு 4-ல், பக்கம் 271-ல், 1,638 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. (மணியடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். ஆதி திராவிட நலத் துறைமூலமாகத் தயாரிக்கப்பட்ட Special Component Sub Plan-லே பார்த்தால், அது முன்னுக்குப்பின் முரணாக இருக்கிறது என்பதை நம்முடைய ஆதி திராவிடர் நலத் துறைச் செயலாளர் கண்டுபிடிக்க வேண்டும்.

அதேபோன்று, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம். ஓர் அருமையான திட்டத்தை முத்தமிழ் அறிஞர் முதல்வர் அவர்கள் கொடுத்திருக்கிறார். இந்தத் திட்டத்திலே, சரியான நபர்களுக்கு இந்தப் பணம் போய்ச் சேர வேண்டும்.

அதேபோன்று, 2007-2008 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், மொத்த வருவாய் ரூ.44,532 கோடி என காட்டப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டிலே



ரூ.46,516 கோடியாக உயர்ந்தது அதாவது, கடந்த ஆண்டு இறுதியில் எதிர்பார்த்ததைவிட ஆகக்கூடுதலாக 2,000 கோடி ரூபாய் வரவு வந்துள்ளது. அது சரியாக நம்முடைய S.C.S.P.-லே வருகிறதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும்.

இவ்வாண்டு, 100 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படுகின்றன. ஆனால், ஒரு ஆதி திராவிடர் நலப் பள்ளிகூட மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படவில்லை என்று அறிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செல்வம், உரையை முடியுங்கள்.

**திரு. கு. செல்வம்:** நான் என்னுடைய தொகுதி பற்றிச் சொல்லிவிடுகிறேன். ஓரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் என்னுடைய தொகுதியிலே இரண்டு பள்ளிக்கூடங்களைத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டேன்; ஒன்றுகூட முடியாது என்ற நிலையில் இருப்பதாக அறிகிறேன். ஒடுக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுக்கும் எங்கள் தொகுதியிலே நீங்கள் கண்டிப்பாக ஒரு பள்ளியையாவது தரம் உயர்த்தித் தர வேண்டும்.

அதேபோன்று, பெரமபூரிலே ஞானதேசிக சங்கம் என்ற ஒன்று ஏற்படுத்தப்பட்டது, ஆதி திராவிட மக்களுக்காக. நிலத்தைக் கையகப்படுத்தி, அது அப்படியே கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. நானும், ஏற்கெனவே 3 துறைச் செயலாளர்களை அணுகி, சந்தித்துப் பேசினேன். இதுவரை அந்தச் சங்கத்திற்கு எந்தவித விடிவும் ஏற்படவில்லை. ஏற்கெனவே 1977 ஆம் ஆண்டு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள். (குறுக்கீடு) No, no. அடுத்த உறுப்பினர் பேச வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு) அது என்ன கழிப்பது, கூட்டுவது?

**திரு. கு. செல்வம்:** 1977 ஆம் ஆண்டு ஓர் அரசாணை வழங்கப்பட்டது. அரசாணை எண் 1120. அது என்ன சொல்கிறது என்றால், ஏழையெளிய மாணவர்களுக்கு—The Government have now decided to make tuition fee free to all children belonging to SC and ST and convey to them regardless of the income of their parents from this academic year... என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. அந்த ஆணை இப்பொழுது நடைமுறையில் இருக்கின்றதா, இல்லையா என்பதை நம்முடைய அமைச்சர் பரிசீலிக்கவேண்டும். அதேபோன்று ஆங்காங்கே

பிரச்சினைகள். இன்று இந்து பத்திரிகையிலே வந்திருப்பதையெல்லாம் படித்தோம். மிகவும் துடிப்பான அமைச்சரை, சுறுசுறுப்பான அமைச்சரை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்தத் துறைக்கு வழங்கியிருக்கின்றார்கள். நீங்கள் இதையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு இந்த அரசுக்கு நற்பெயர் ஏற்படுத்தி வருகின்றீர்கள். அதேபோன்று மதுரை மாவட்டத்தில் நேற்று நடந்த பிரச்சினை.

*பிற்பகல் 1–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. போளூர் ம. வரதன்.

**திரு. போளூர் ம. வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றாவது முறையாக இந்தச் சட்டமன்றத்திற்கு என்னை அனுப்பி, ஆதிதிராவிட மக்களுடைய துறையின்மீது பேசுவதற்கு வாய்ப்பை உருவாக்கித் தந்த அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் நயினார் அவர்களுக்கும், (சிரிப்பு) தங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு) இல்லை நிறைய நயினார் இருக்கின்றார்கள். அதனால் மொத்தமாகவும் எடுத்துக்கொள்ளலாம். ஆற்காட்டார்கூட எனக்கு நயினார்தான்.

பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் உள்ளாட்சித் துறையின்மூலம் செங்கம் சட்டமன்றத் தொகுதிக்கு 10 கோடியே 40 இலட்சம் ரூபாயில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை வழங்கிய உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்களுக்கு செங்கம் சட்டமன்றத் தொகுதி மக்கள் சார்பிலும், என் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். செங்கம் பகுதியிலே ஓரவந்தவாடி என்ற கிராமம் இருக்கின்றது. அந்தக் கிராமம் செய்யாற்றின் கரையிலே இருக்கின்றது. அதைச் சுற்றி பனவோலைப்பாடி என்ற கிராமம் இருக்கின்றது. அந்த கிராமங்களைச் சுற்றி 10, 20 கிராமங்கள் இருக்கின்றன. அந்த வழியாக ஆற்றைக் கடந்துதான் போகவேண்டும். மழைக் காலங்களில் ஒரு மாதத்திற்கு யாரும் அங்கே போகமுடியாது. இறந்து போன பிணத்தைக்கூட எடுத்துப் போய் புதைக்க முடியாத ஒரு சூழ்நிலை. ஆகவே அந்த ஆற்றங்கரையிலே மேம்பாலம் அமைக்கவேண்டுமென்று கோரிக்கை வைத்திருந்தேன். நம்முடைய அமைச்சருக்கும் கடந்த வருடமே எழுதிக் கொடுத்தேன். ஆனால் இதுவரையில் அது பரிசீலிக்கப்படவில்லை. அதைப் பரிசீலிக்க வேண்டுகின்றேன்.



செங்கம் மலைப் பகுதி. ஏழை மக்கள் அதிகம் வாழ்கின்ற அந்தப் பகுதியில் தொழிற்சாலையே இல்லை. நம்முடைய தளபதியார் அவர்கள் அமைச்சராக அங்கே வந்தபோது, அங்கே ஒரு பால் பவுடர் தொழிற்சாலையை ஆரம்பிக்க அடிக்கல் நாட்டினார்கள். ஆனால் அந்தப் பணி இதுவரையில் தொடங்கவில்லை. அதைத் தொடங்கி வைத்து, அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல பல பிரச்சினைகள் தொகுதியிலே இருந்தாலும்கூட அந்த மாவட்டத்திலே தொழில்வளம் குறைவாக இருக்கின்றது. என் பகுதியில் எந்தத் தொழிலும் இல்லை. ஏற்கெனவே general discussion செய்திருக்கின்றேன். ஏதாவது ஒரு தொழிற்சாலையை அந்தப் பகுதிக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

துறை பற்றிய விவாதத்தில் பங்குபெற, என்னுடைய கருத்தைச் சொல்ல விழைகின்றேன். கல்வி. கல்வித் துறையில் welfare education நிறைய இருக்கின்றது. பள்ளியில் படிக்கின்ற மாணவர்களால் fees கட்ட முடியாத சூழ்நிலை இருக்கின்றது. 1970–க்கு முன்பாக ஆதிதிராவிட மாணவர்களுக்கு 2,500 ரூபாய் income இருந்தால், அவர்களுக்கு scholarship காங்கிரஸ் Government–ல் கொடுக்கப்பட்டது. இது அன்றைய நிலை. 1970–ல் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக வந்தவுடன் அந்த 2,500 ரூபாயை 9,000 ரூபாயாக உயர்த்தி அரசாணை வெளியிட்டார்கள். G.O. Ms. No.1120, Social Welfare, dated 13-11-1970. அதன் அடிப்படையில் அன்றைக்கு scholarship கொடுத்தார்கள். அப்படிக் கொடுக்கின்றபோது பல மாணவர்களால் Special fees கட்ட முடியவில்லை, Exam fees கட்ட முடியாத சூழ்நிலை வந்தது.

*பிற்பகல் 1–05*

1977–லே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக வந்தபோது, ஆதி திராவிட மாணவர்கள் ஒன்று சேர்ந்து அன்றைக்கு அன்னை மரகதம் சந்திரசேகர் அவர்களைச் சந்தித்து, எம்.ஜி.ஆர். அவர்களிடத்திலே இதைச் சொல்லுங்கள் என்று சொன்னோம். அவர்களும், எங்களை அழைத்துக்கொண்டு எம்.ஜி.ஆர். அவர்களை இராமாவரம் தோட்டத்திலே சந்தித்தார்கள். சந்தித்தபோது எம்.ஜி.ஆர். அவர்கள் சொன்னார்கள், முதலமைச்சராக ஆகி இரண்டு மாதம்தான் ஆகி இருக்கிறது. அம்மா, திடீரென்று வந்து கேட்டுவிட்டீர்கள், முடிந்த அளவு விரைவில் நான் முடிவெடுக்கிறேன் என்று சொல்லி

[திரு. போளூர் ம. வரதன்] [2008 ஏப்ரல் 17

G.O.Ms.No. 722. 13-10-1977 என்ற தேதியிலே ஓர் அரசாணையை வெளியிட்டார்கள். அந்த அரசாணையிலே என்ன சொன்னார் என்றால், ஆதி திராவிட, மலைவாழ மக்கள் உயர் கல்வி படிப்பவர்களுக்கு, P.U.C.க்கு மேலே படிக்கக்கூடிய மாணவர்கள், எக்காரணம் கொண்டும் tuition fees கட்டவேண்டியதில்லை. ஒரு E-Card, அந்தந்த District-ல் இருக்கக்கூடிய ஆதி திராவிட நலத் துறை அதிகாரியின்மூலம் அந்த Card-ஐப் பெற்றுக்கொண்டு College-ல் கொடுத்தால் போதும். அந்தப் பணத்தை அரசாங்கத்திடம கல்லூரிகள் பெற்றுக்கொள்ளலாம். அந்த முறைதான் இன்றுவரை நடைமுறையில் இருக்கிறது.

அப்படி இருக்கின்றபோது, தனியார் கல்லூரிகளில் அப்படி இல்லை. இப்போது நிலை என்ன என்று எண்ணிப் பாருங்கள். கல்லூரிகளிலே பயிலுகின்ற மாணவர்களுக்கு, அரசுக் கொடுக்கக்கூடிய scholarship சரியாக இருக்கிறது. அரசாங்கம் இப்போது பெருகி, அவர்கள் இஷ்டம்போல fees வாங்குகின்றார்கள். தனியார் கல்லூரிகள் இவ்வளவுதான் என்ற ஒரு கணக்கே இல்லை. மாறுபட்டு ஒவ்வொருவரும் ஒரு Deemed University என்று வைத்துக்கொள்கிறார்கள். அந்த Deemed University-க்கு என்ன பெயர் என்றால், copy அடிக்கின்ற பள்ளிக்கூடம் என்று பெயர் -College. Copy அடிப்பதற்கென்றே உருவாக்கப்பட்ட கல்லூரிகள். ஏழை மக்களுடைய இரத்தத்தை உறிஞ்சக்கூடிய கல்லூரிகள். கிராமப்புறத்திலே இருக்கின்ற ஏழைகள் வைத்திருக்கின்ற நிலங்களையெல்லாம் விற்றுக்கொண்டு சொத்து சேர்க்கக்கூடிய கல்லூரிகளாக இன்றைக்கு மாற்றப்பட்டு, ஆதி திராவிட மக்களை உறிஞ்சிக் கொண்டிருக்கிறார்கள் என்ற நிலை இருக்கிறது.

அந்தக் கல்லூரிகளுக்கெல்லாம் நான் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களைக் கேட்டுக்கொள்வது ஒன்றுதான். என்ன கேட்கிறேன் என்றால், உங்கள் காலத்திலேயே நீங்கள் 2,500 ரூபாயை 9,000 ரூபாயாக உயர்த்தி, இன்றைக்கு இலட்சம் ரூபாய்க்கு மேல income வரம்பினை உயர்த்தியிருக்கிறீர்கள். அவற்றையெல்லாம் நீங்கள் கருத்தில்கொண்டு, Government College-ல் என்ன fees வாங்குகிறார்களோ, S.C./S.T. students-களுக்கு, அதே மாதிரி மதம் மாற்றப்பட்டு கிறித்தவர்களுக்கு வழங்குகின்ற Government College-ல் என்ன fees வாங்குகிறீர்களோ, அதே fees தான் தனியார் கல்லூரிகளும் வாங்கவேண்டும். அப்படி வாங்காத, ஏற்றுக்கொள்ள முடியாத கல்லூரிகளினுடைய உரிமத்தை நீங்கள் இரத்துச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



2008 ஏப்ரல் 17] [திரு. போளூர் ம. வரதன்]

அதற்கு மேலே நீங்கள், உங்கள் ஆட்சிக் காலத்திலே, இந்தியாவிலேயே, ஒரு நல்ல வழிகாட்டியாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்றைக்கு சில செயல்களை உருவாக்கியிருக்கிறீர்கள். ஏழாயிரம கோடி ரூபாய் கூட்டுறவுக் கடனைத் தள்ளுபடி பண்ணியிருக்கிறீர்கள். அதனுடைய விளைவு, அறுபதாயிரம் கோடி ரூபாய் மத்திய சர்க்கார் இன்றைக்குத் தள்ளுபடி பண்ணியிருக்கிறது. வேறு எந்தச் சர்க்காரும் இந்தியாவிலே, முதன்முதலில் ஏழாயிரம் கோடி ரூபாய தள்ளுபடி செய்ததில்லை. இங்கே ஏழாயிரம் கோடி ரூபாய் தள்ளுபடி செய்ததன் விளைவு அங்கு அறுபதாயிரம் கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. இதிலே எத்தனை ஆதி திராவிட மக்களுக்கு இந்த ஏழாயிரம் கோடி ரூபாயில் இலாபம் இருக்கும் என்று எண்ணிப் பாருங்கள்.

நேற்றைய தினம்கூட, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், தன்னுடைய அறிவிப்பிலே சொன்னார்கள். சற்று எண்ணிப்பாருங்கள். வேலைக்கு உணவு, மத்திய சர்க்கார் திட்டத்தில், 50 விழுக்காடுகள் (percentage) கூலி வேலை செய்யக்கூடியவர்கள் ஆதி திராவிடர்கள் என்று சொன்னார்கள். அப்படியென்றால் அவர்களெல்லாம் landless people, poor. வறுமைக்கோட்டிற்கு கீழே இருப்பவர்கள். 50 percent இன்றைக்கு கூலி வேலை செய்துகொண்டிருக்கிறார்கள், மண் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று அவரே ஒத்துக்கொண்டிருக்கிறார். அப்படி சூழ்நிலை இருக்கின்றபோது, நீங்கள் தள்ளுபடி செய்த ஏழாயிரம் கோடி ரூபாயில் எத்தனை ஆதி திராவிட மக்கள் பலனடைந்திருக்கிறார்கள் என்று எண்ணிப்பார்த்தால், இல்லை. ஆனால், TAHDCO-வில் இன்றைக்கு நீங்கள் ஐந்தரை கோடி ரூபாய் தள்ளுபடி செய்திருக்கிறீர்கள். அது ஒன்றும் பெரிய தொகையல்ல. TAHDCO மூலம் தமிழகத்திலே ஒட்டுமொத்தமாக மிஞ்சிப்போனால் 200 கோடி ரூபாய் கடன் வாங்கி இருப்பார்கள். அந்த 200 கோடி ரூபாய் கடனையும் நீங்கள் தள்ளுபடி செய்து, அந்த சமுதாயத்தினுடைய வளர்ச்சிக்கு நீங்கள் உதவவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. நேற்றைக்கு நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தொகுப்பு வீடுகள் repair பண்ணுவதற்கு ஒரு தனி நிதியை ஒதுக்குவதற்கு அரசு முயற்சிக்கும் என்று சொன்னார்கள். நேற்றையதினம் அறிவிப்பாக வரும் என்று எதிர்பார்த்தேன். இன்றைக்கு 35,000 ரூபாய்—நம்முடைய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் இல்லை. அவர்கூட நான் வந்தவாசியில் பேசும்போது நிரம்ப

கோபப்பட்டார். என்ன மாண்புமிகு முதலமைச்சரை வைத்துக்கொண்டு இப்படிக் கேட்டீர்களே என்று கேட்டார். நான் சொன்னேன். முதலமைச்சரை நான் தாக்குறைவாகப் பேசவில்லை. சொல்ல வேண்டிய இடத்தில் நான் சொல்கிறேன். நடக்கும் என்று நம்புகிறேன் என்று சொன்னேன். 37 ஆயிரம் ரூபாய் இன்றைக்கு 55 ஆயிரம் ரூபாயாக மாறி இருக்கிறது. அந்த உணர்வுகளைப் புரிந்து கொண்ட முதலமைச்சர் இன்றைக்கு இருப்பதனால் நான் கேட்கிறேன். அன்றைக்குக் கட்டிக் கொடுத்த வீடுகள் தரமில்லாமல் இருக்கின்றன. அந்தக் காலத்தில் கட்டியதைத் திருப்பி ரிப்பேர் பண்ண முடியாமல் பல குடும்பங்கள் இப்போது நடுத்தெருவிலேயும், மரத்தடி ஓரத்திலேயும் வாழ்வதை கிராமப்புறங்களிலே நாம் பார்க்கிறோம். அப்படி இருக்கிற அந்த வீடுகளை ரிப்பேர் செய்வதற்குக் குறைந்தது—விலைவாசி இன்றைக்கு ஏறியிருக்கிறது—குறைந்தபட்சம் நீங்கள் 15 ஆயிரம் ரூபாய் ரிப்பேருக்கு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–10*

அதேநேரத்தில் (மணியடிக்கப்பெற்றது) முடித்துக் கொள்கிறேன். நான் ஒன்றும் controversy subject–க்குப் போகவில்லை. அதுமட்டுமல்ல 1997–லே ஆதி திராவிட இனத்திலே பட்டதாரி ஆசிரியர்களாக இருந்தவர்கள் பணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். அவர்கள் இதுநாள் வரையிலும் நடுநிலை ஆசிரியர்களாகவே பணியில் இருக்கிறார்கள். அவர்களை B.T. Assistant–ஆக ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களுக்கும் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டு நாளைக்கு முன்னால் நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் ஓர் அறிவிப்பைச சொன்னார். மிகவும் வேதனைப்படுகிறேன். என்ன அது என்று கேட்டால் மத்திய அமைச்சரை, அவர் தொகுதியில் வரட்டும் பார்த்துக்கொள்கிறேன் என்று சொல்கிறார்கள், வந்தால் திரும்பிப் போக மாட்டார் என்று சொல்கிறார்கள். ஏனென்றால் அவரும் ஒரு ஆதி திராவிடர். அதே மாதிரி பால் வளத் துறை மந்திரி அவர்களை district உள்ளே வரச் சொல்லுங்கள் பார்க்கலாம் என்று challenge பண்ணுகிறார்கள். ஆதி திராவிடன் என்பதற்காக நீங்கள் challenge செய்தால் நாங்களும் challenge பண்ணுவோம். நீங்கள் எங்கள் சாதி அமைச்சர்களை வரக் கூடாது என்று சொன்னால் நீங்கள் வேறு மாவட்டத்திலே வந்துவிடுவீர்களா? வர தைரியமிருந்தால் வாருங்கள். நாங்கள்



பார்த்துக்கொள்கிறோம். இதைச் சவாலாகச் சொல்லவில்லை. எங்கள் மனது புண்படுகிறது. ஜனநாயக ரீதியிலே ஓர் அமைச்சர் வரமுடியுமா என்று கேட்கின்ற ஒரு நிலை எப்படி வருகிறது, எங்கேயிருந்து வருகிறது, யார் மூலம் வருகிறது. யார் சொல்லச் சொல்கிறார்கள் சொல்லுங்கள். அதுமட்டுமல்ல, கள்ளச்சாராயம் விற்கிறார்கள் என்றால் விற்பவர்களைப் போய் பிடி, ஆதி திராவிடர்கள்தான் கள்ளச் சாராயத்தையே குடிக்கிறான் என்று சொன்னால் எங்கள் மனதை அது புண்படுத்துமா இல்லையா? மற்றவர்கள் எல்லாம் குடிப்பதில்லையா? ஆதி திராவிடன்தான் சாராயத்தைக் குடிக்கிறானா? அப்படியென்றால் காய்ச்சுகிறவன் எல்லாம் யார்? எண்ணிப் பாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இல்லை, இல்லை. பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. போளூர் வரதன் அவர்கள் நான் ஏதோ பேசியதாகச் சொன்னார். நான் எந்த இடத்திலேயும் அப்படிப் பேசுவதில்லை. ஏனென்றால் எங்களுடைய தலைவருடைய சம்பந்தியே நீங்கள்தான்.

**திரு. போளூர் ம. வரதன்:** அந்த உரிமையோடு சொன்னால் நீங்கள் தாங்கிக்கொள்ள மாட்டீர்கள். நீங்கள்தான் சொன்னீர்கள். திரு. ராஜா, மத்திய அமைச்சர் உள்ளே வர மாட்டார். வரச் சொல் பார்க்கிறேன், வந்தால் போக மாட்டார் என்று சொன்னார்கள் என்று. அதுவும் இந்த அவைக் குறிப்பிலே இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னது எங்களுடைய கட்சியிலே இருக்கக்கூடிய ஒரு மத்திய அமைச்சரை அந்தத் தொகுதிக்கு வந்து திரும்பிப் போய்விட முடியுமா என்று பா.ம.க.–வைச் சார்ந்த ஓர் உறுப்பினர் பேசினார் என்றுதான் நான் சொன்னேனே தவிர, அதை நான் சரி என்று ஏற்றுக்கொள்ளவில்லை.

**திரு. போளூர் ம. வரதன்:** அதைத்தான் நானும் சொல்கிறேன். ஒவ்வொரு கட்சியும் இந்த மாதிரி challenge பண்ணினால் எங்கள் சாதி என்ன சொரணை கெட்ட சாதியா? எந்த ஊரில் நாங்கள் இல்லை?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வரதன், உட்காருங்கள். போதும். (குறுக்கீடு) 13 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. போளூர் ம. வரதன்:** இல்லை, இல்லை. ஒரு நிமிடம் சார் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும் திரு. வரதன், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். பிரேமா. (குறுக்கீடு) கூடுதலாக 3 நிமிடங்கள் பேசி இருக்கிறீர்கள் (குறுக்கீடு) சரி, உரையை சீக்கிரம் முடியுங்கள். திருமதி பிரேமா, கொஞ்சம் wait பண்ணுங்கள்.

**திரு. போளூர் ம. வரதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் உணர்வுகளை நான் சொல்ல வேண்டுமென்று எண்ணினாலும்கூட, நேரம் கருதி நீங்கள் சொல்கிறீர்கள். ஏற்றுக்கொள்கிறேன். வருங்காலத்திலாவது நாங்களும் மனிதர்கள் என்ற உணர்வை தமிழகத்திலே இருக்கிற உயர் சாதிக்காரர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்ற ஒரு நல்ல எண்ணத்தில் நான் சொல்கிறேன். சாதிச் சண்டை வர வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. சமத்துவத்திலே சகோதரர்களாக வாழ வேண்டும் என்ற நல்ல உணர்வை எடுத்துக்காட்டுகின்ற விதத்திலே சொல்லி, வாய்ப்புத் தந்த தங்களுக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். பிரேமா.

***திருமதி ஆர். பிரேமா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் விடிவெள்ளி, கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், ஆறரைக் கோடி மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், பெண் குலத்திற்கே பெருமை சேர்க்கும் எங்களின் இதய தெய்வம், தங்கத் தாரகை புரட்சித் தலைவி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பிரேமா, 10 நிமிடங்கள்தான்.

பிற்பகல் 1–15

**திருமதி ஆர். பிரேமா:** இப்போதுதானே பேச ஆரம்பிக்கிறேன். அதற்குள் 10 நிமிடங்கள் என்கிறீர்கள். சாதாரண பெண்ணாகிய என்னையும், சட்டமன்ற உறுப்பினராக்கி அழகு பார்க்கும் கழகத்தின் காவல் தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு, என் சார்பிலும்,





எனது அவினாசி தொகுதி மக்கள் சார்பிலும் கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் அமர்ந்திருக்கும் திசை நோக்கி வணங்கி எனது உரையைத் தொடங்குகிறேன்.

எனது அவினாசி தொகுதி மக்களின் நீண்ட கால ஜீவாதாரக் கோரிக்கை, குளம், குட்டைகளில், நீர் நிரப்பக் கோரும் அவினாசி–அத்திக்கடவு குடிநீர்த் திட்டம் ஆகும். இந்தத் திட்டத்தை 2006–2007 ஆம் ஆண்டில நிறைவேற்றுவதாக மத்திய நிதி அமைச்சர், உள்ளாட்சித் துறை அமைச்சர் ஆகிய இருவரும் கடந்த 1–1/2 ஆண்டுகளுக்கு முன்பு அவினாசி நகரில் நடந்த அரசு விழாவில் மக்கள் முன்பு அறிவித்தீர்கள். ஆனால் இன்று வரை குறிப்பாக 2008–2009 நிதிநிலை அறிக்கையில் அவினாசி–அத்திக்கடவு திட்டம் குறித்து வெறும் அறிவிப்பு மட்டும் வந்துள்ளது. திட்டத்தை நிறைவேற்ற முதற்கட்ட நிதி எதுவும் ஒதுக்காததால் மக்கள் மிகுந்த ஏமாற்றம் அடைந்துள்ளனர். இதனால் அவினாசி, பல்லடம், திருப்பூரின் வட பகுதி (மணியடிக்கப்பெற்றது) கோபியின் தென் பகுதி, பவானிசாகர், பெருந்துறை, காங்கேயம், மேட்டுப்பாளையம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் மெதுவாகப் படியுங்கள். follow பண்ண முடியவில்லை. கொஞ்சம் மெதுவாகப் படியுங்கள்.

**திருமதி ஆர். பிரேமா:** ஆகிய 8 தொகுதிகளிலும் உள்ள விவசாயிகள், விவசாயக் கூலித் தொழிலாளர்கள் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளனர். ஆகவே, வருகின்ற காலங்களிலாவது அவினாசி–அத்திக்கடவுத் திட்டத்தைக் கிடப்பில் போடாமல் நிறைவேற்ற வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

அவினாசி தொகுதியில், தீயணைப்பு நிலையம் இல்லாததால் தீ விபத்துக் காலங்களில் சுமார் 25 கி.மீ. தொலைவில் உள்ள திருப்பூர் தீயணைப்பு நிலையத்திற்குத் தகவல் கொடுத்து, தீயணைப்பு வண்டிகள் வருவதற்குள் பல இலட்சம் மதிப்புள்ள உடைமைகள், உயிர்கள் சேதமாகின்றன. ஆகவே, அவினாசி தொகுதியில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு முன் வர வேண்டும். அவினாசி அரசு மருத்துவமனையில், நீண்ட காலமாகப் பிரேதப் பரிசோதனைக்கூடம் இல்லாததால் விபத்து மற்றும் எதிர்பாராத காரணங்களால் இறப்புக்கள் நேரிட்டு, சடலங்களை சுமார் 25 கி.மீ. தொலைவில் உள்ள திருப்பூருக்கோ அல்லது 42 கி.மீ. தொலைவில் உள்ள கோவை அரசு

மருத்துவமனைக்கோ எடுத்துச் செல்ல வேண்டியுள்ளது. இந்த அவல நிலையைப் போக்க அவினாசி அரசு மருத்துவமனையில் பிரேதப் பரிசோதனைக்கூடம் அரசு அமைத்துத் தர வேண்டும்.

ஆதி திராவிட இன மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகள், வன்கொடுமைகள் ஆகியவற்றின்மீது இந்த அரசு விரைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். ஆதி திராவிட இன மக்களுக்கு சட்டப் பாதுகாப்பை வழங்கவும், உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆதி திராவிடத் தலைவர்களுக்கு போதிய பயிற்சிகள், உரிமைகள், பாதுகாப்புகள் வழங்கவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தாட்கோ வணிக வளாகங்கள் பினாமி பெயரில் உள்ளதை அரசு உரிய நடவடிக்கை எடுத்து சம்பந்தப்பட்டவர்கள் பயன் அடைய முழு முயற்சி எடுக்க வேண்டும்.

தொட்டில் குழந்தைத் திட்டம். பெண் குழந்தை என்றாலே கருவிலே அழிக்கும் அவல நிலையைப் போக்க (குறுக்கீடு) என்ன ஆயிற்று? பேசப் பேச மைக் கட் ஆகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள்.

**திருமதி ஆர். பிரேமா:** பேசப் பேச மைக் கட் ஆகிறது,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள், பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாட்கோவில் பினாமி இருப்பதாகச் சொல்கிறார்கள். எங்களுடைய தலைவர் கலைஞர் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு யாரும் பினாமி இல்லை. அவர்களுடைய ஆட்சியில் வேண்டுமானால் இருந்திருக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள், பேசுங்கள் . . .

**திருமதி ஆர். பிரேமா:** தொட்டில் குழந்தைத் திட்டம். பெண் குழந்தை என்றாலே கருவறையில் இருந்து அழிக்கும் அவல நிலையைப் போக்க மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் பெண் குழந்தைகளைப் பாதுகாக்க தொட்டில் குழந்தைத் திட்டம் என்ற உன்னதமான திட்டத்தை அறிவித்துச் செயல்படுத்தி சாதனை



படைத்தவர் எங்கள் அம்மா. இப்படிப்பட்ட உன்னதமான திட்டத்தை உலக சமூக சேவகியும், உலக புனிதர் பட்டம் பெற்றவருமாகிய அன்னை தெரசா அவர்களே நன்கு பாராட்டி உள்ளார்கள். இப்படிப்பட்ட ஒரு நல்ல திட்டத்தை இந்த அரசு கிடப்பில் போட்டுள்ளது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்புகூர்ந்து எதிரில் அமர்ந்து இருக்கும் நண்பர்களுக்குக் கூறிக்கொள்வது, தொட்டில் குழந்தைத் திட்டம் சமூக நலத் துறையில் வரும் திட்டம். அதுகுறித்து திங்கள் அன்று பேசப்படும். தயவு செய்து அவர்கள் பேசவேண்டியதைப் பேசச் சொல்லுங்கள்.

*பிற்பகல் 1–20*

**திருமதி ஆர். பிரேமா:** கோவை மாவட்டம், கோயம்புத்தூர் தெற்கு தாலுகா, உப்பிலிபாளையம் கிராமம் புல எண்கள் 287, 289, 290, 291/2—ல் 18.18 ஏக்கர் ஆதி திராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க கையகப்படுத்திய நிலத்திற்கு நில எடுப்பு நடவடிக்கையிலிருந்து விடுவித்தல் ஆணை செய்யப்பட்டுள்ளது. ஆகவே, மேற்படி நிலத்தை ஆதி திராவிட பயனாளிகள் பெற இந்த ஆணை தடையாக உள்ளது. இதுகுறித்து கோவை மாவட்ட ஆட்சித் தலைவரும், ஆதி திராவிடர் நலத் துறைச் செயலாளர் திரு. இராமையா அவர்களும் சுப்ரீம் கோர்ட் செல்ல ஒப்புதல் அளித்துள்ளனர். ஆனால் ஆதி திராவிடர் நலத் துறை அதிகாரிகள் மேற்படி பூமியை ஆதி திராவிடர் மக்களுக்குக் கொடுத்தால் அரசுக்குச் செலவு அதிகரிக்கும், அதனால் வேறு பூமியை எடுத்துக்கொள்ளுங்கள் என்று உத்தரவைப் பிறப்பித்துள்ளார்கள். ஆகவே, 18.18 ஏக்கர் பூமியைப் பெற மேற்படி தடையாணையை அரசு நீக்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிட மக்களுக்கு உதவுகின்ற வகையில்தான் ஆளுக்கு 2 ஏக்கர் நிலம் வழங்கும் திட்டம் தேர்தலின்போது தி.மு.க.—வினால் அறிவிக்கப்பட்டது. அவ்வாறு வழங்க வேண்டுமானால் நில உச்சவரம்புச் சட்டத்தில் இருக்கும் தறைபாடுகளை நீக்கி, பினாமி நிலங்களை எல்லாம் எடுத்துக்கொள்வதற்கு இந்த அரசு முன் வந்திருக்க வேண்டும். 1990 ஆம் ஆண்டில் அப்படி ஒரு சட்டத்தை இன்றைய முதலமைச்சர்

அவர்கள் கொண்டு வந்தார்கள். இதற்காக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒரு பெரிய போராட்டத்தை நடத்தியது. அந்த நில மீட்புப் போராட்டம் என்று ஒரு பெயரையும் வைத்தது. தஞ்சைத் தரணியில் விவசாய சங்கத்தைத் திரட்டி போராடிய தலைவரான சீனிவாசராவ் அவர்களை நினைவு கூறும் வகையில் திருத்துறைப்பூண்டியில் இந்த அரசு ஒரு நினைவுச் சின்னத்தையும் அமைத்திருக்கிறது. ஆனால் அவர் காட்டிய வழியில் இன்று பினாமி நிலங்களை எடுத்து நிலம் இல்லாத ஏழை விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு வழங்குவதுதான் அவருக்கு உண்மையாகவே நன்றிக் கடன் செலுத்துவதாக இருக்கும். ஆனால் பெரிய நிலப்பிரபுக்களின் பகை வந்து விடுமோ என்று அஞ்சி, இந்த அரசு அத்தகைய நடவடிக்கை எடுப்பதற்குத் தயக்கம் காட்டி வருகிறது. அரசுக்கும் தனியாருக்கும் சொந்தமாக இருக்கும் பயன்படாத பாழ் நிலமான தரிசு நிலத்தைப் பங்கிட்டுக் கொடுப்பதாக அறிக்கை கூறுகிறது. அதுவும் கையளவு நிலமாவது தரப்படும் என்று கூறுகிறது. சத்திரத்துச் சோற்றுக்கு சாத்தையங்கார் சிபாரிசு தேவையா? எங்கே 2 ஏக்கர் நிலம்? அவினாசி தொகுதியில் ஏங்கி நிற்கும் மக்களுக்கு இந்த அரசு என்ன பதில் சொல்லப்போகிறது? வீட்டுமனை கூட இல்லாமல் எத்தனையோ மக்கள் தெருவோரத்தில் வாழ்ந்து வருகிறார்கள். "வீதியோரத்தில் வேலையற்றதுகள். வேலையற்றதுகளின் உள்ளத்தில் விபரீத எண்ணங்கள், அவைதான் வெடிக்கும், எரிமலையாக மாறும்" என்றார் பேரறிஞர் அண்ணா. அதனை உணர்ந்து உடனடியாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு அரசு ஆர்வம் காட்ட வேண்டும். '8 அடி கூண்டுக்குள்ளே, முருகா எத்தனைநாள் காத்திருப்பேன்' என்று கேட்கும்நிலைதான் தொடர்ந்து கொண்டே வருகிறது.

ஆதி திராவிட மக்கள் அதிகமாக வசிக்கும் பேரூராட்சிகளில் சமுதாய நலக் கூடங்களைப் பொதுமக்கள் பயன்பெறும்பொருட்டு அமைத்துத் தர வேண்டும்.

ஆதி திராவிட மக்கள் வசிக்கும் பகுதியில் சுடுகாட்டுப் பாதைகள் மற்றும் கொட்டகைகள் தனியாக அமைத்துத் தர வேண்டும்.

ஆதி திராவிட மக்கள் வசிக்கும் தொகுப்பு வீடுகள் மிகவும் பழுதடைந்த நிலையில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் நிதியொதுக்கீடு செய்ய வேண்டுமென்ற நிலையில் உள்ளோம். அரசினுடைய நிதி போதுமானதாக இல்லை என்கிற காரணத்தால் இவ்வரசு இதற்கென தனி சிறப்பு நிதிகளை ஒதுக்கீடு செய்து தருமாறு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.



ஆதி திராவிட மக்கள் ஒரே வீட்டிலேயே 3, 4 குடும்பங்களாக வசித்து வருகிறார்கள். இட நெருக்கடி காரணமாகப் பல குடும்பங்கள் பட்டா இல்லாமல் சிரமப்படுகின்றன. இதைத் தவிர்க்கும்பொருட்டு திருமணமாகி ஒரே வீட்டில் வசிக்கும் அத்தனை குடும்பங்களுக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்குமாறு இவ்வரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அவினாசித் தொகுதியில் பேருந்து வசதிகள் குறைவு. குறிப்பாக ஊரகப் பகுதியில் இருந்து அவினாசி வழியாக திருப்பூர், பல்லடம் பகுதிகளுக்குப் புதிய பேருந்துகளும், நெரிசல் நேரங்களில் கூடுதல் பேருந்துகளும் விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏழை ஆதி திராவிட இன மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும்போது புன்செய் நிலமாக இருந்தால்தான் வழங்குகிறார்கள். நன்செய் நிலமாக இருந்தால் பட்டா வழங்க மறுக்கிறார்கள். நன்செய் நிலமாக இருந்தாலும் வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் இடங்களுக்கு முறையாக அளந்து கொடுத்து, அடிப்படை வசதிகளான சாலை வசதி, மின் விளக்கு வசதி, குடிநீர் வசதி போன்றவற்றைச் செய்து தருமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் பேச்சு முடிந்ததா அம்மா?

**திருமதி ஆர். பிரேமா:** இந்தப் பழமையும், தொன்மையும் வாய்ந்த இம்மாமன்றத்தில் எனது அவினாசித் தொகுதி மக்களின் கோரிக்கைகளைப் பற்றிப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், எங்கள் கட்சியின் கொறடா அண்ணன் அவர்களுக்கும், எனது அவினாசித் தொகுதி மக்களின் சார்பில் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1–25*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினர் அன்பிற்குரிய நமது போளூர் வரதன் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில் ஏதோ ஆதி திராவிட மக்கள் குடிப்பதாகச் சொல்லி ஒரு குற்றச்சாட்டைச் சொன்னதாகச் சொல்லியிருக்கிறார்கள். நான் இந்த அவைக்கும், அவருக்கும் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த

நாட்டில் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின ஆதி திராவிட மக்கள் அதிகம் குடித்து பொருளாதாரத்திலே, தங்களுடைய குடும்பத்திலே நலிவை அதிகரித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, குடிப் பழக்கத்திலேயிருந்து ஒடுக்கப்பட்ட மக்கள் விடுபட வேண்டுமென்ற விழிப்புணர்வை உருவாக்க வேண்டும். ஆகவே, அவர்களின் நலன் காப்பதற்காக அரசும் இந்த மதுக் கடைகளைப் படிப்படியாக மூட வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்திற்காக, நல்ல கருத்தினடிப்படையிலே சொல்லப்பட்டதே தவிர, ஒரு சமுதாயத்தின்மீது, குற்றச்சாட்டு அல்லது கொச்சைப்படுத்துவதற்காகச் சொன்னது அல்ல என்பதையும் இங்கே நான் தெளிவுபடக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். *(குறுக்கீடு)*

**திரு. போளூர் ம. வரதன்:** தலைவர் அவர்களே, ஒரு நிமிஷம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. போளூர் வரதன், அவர் ஒன்றும் சொல்லவில்லையே. அப்படி அவர் யாரையும் புண்படுத்த வேண்டுமென்று சொல்லவில்லையே? *(குறுக்கீடு)* சரி சொல்லுங்கள்.

**திரு. போளூர் ம. வரதன்:** ** *(குறுக்கீடுகள்)*

**திரு. கி. ஆறுமுகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . .

**திரு. தி. வேல்முருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, விடுங்கள், விடுங்கள், உட்காருங்கள். உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 25 ஆம் தேதி. . . *(குறுக்கீடுகள்)* திரு. ஜி.கே. மணி, Don't rake up this matter again and again, you please sit down. *(குறுக்கீடுகள்)* No, no, no. உட்காருங்கள், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* No, no, *(குறுக்கீடுகள்)* No, no, விடுங்கள், நீங்கள் உட்காருங்கள். திரு. கி. ஆறுமுகம், நீங்கள் உட்காருங்கள், சொன்னால் கேளுங்கள். Don't rake up this matter again and again, please sit down. No, no, உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* No, நீங்கள் உட்காருங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** தலைவர் அவர்களே, அவர் கடைசியாகச் சொன்ன அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. போளூர் வரதன் அவர்கள் சொன்ன ** என்ற வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





நீக்கப்படுகின்றன. *(குறுக்கீடு)* சரி உட்காருங்கள், உட்காருங்கள். திரு. போளூர் வரதன், உட்காருங்கள்.

## 8. அறிவிப்பு

### பேரவை அலுவலில் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 25–4–2008, வெள்ளிக்கிழமை அன்று எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 20, உயர் கல்வித் துறை, 6–5–2008, செவ்வாய்க்கிழமை அன்றும், 6–5–2008 செவ்வாய்க்கிழமை அன்று எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 32, தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, மானியக் கோரிக்கை எண் 47, இந்து சமய அறநிலையத் துறை, (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) ஆகியவை 25–4–2008 வெள்ளிக்கிழமை அன்றும் பேரவையின் ஒப்புதலோடு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 7. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### கோரிக்கை எண் – 4 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

***மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறு கோடித் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கும் எங்கள் தலைவர் முத்தமிழறிஞரே! நீங்கள் அகந்தை இல்லா அகநானூறு; குறைவில்லா குறுந்தொகை; நற்றமிழ் பேசும் நற்றிணை; எல்லோரிடமும் பாசம் காட்டும் பதிற்றுப் பத்து; வறியவருக்கு வாரி வழங்கும் பரிபாடல்; கற்றறிந்தோர் ஞானம் கலித்தொகை; மொத்தத்தில் நீங்கள்தான் எங்கள் சங்கத் தமிழ்; (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர்களின் வளர்ச்சிக்கென உழைக்கும் சாதனைத் தமிழ்; பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் பேனா பிடித்து, காஞ்சித் தலைவன் பேரறிஞர் அண்ணாவின் கருத்தை விதைத்து, மகாத்மா காந்தியின் வழியில் சமாதானம் பேசி, பண்டித ஜவஹர்லால் நேருவைப்போல

நேர் பாதையில் நடந்து, பாட்டுக்கொரு புலவன் பாரதியைப் போல் பட்டதைப் பட்டென்று சொல்லி, பாரதிதாசன் வழியில் பகுத்தறிவையும், தமிழ்ப் பற்றையும் பரப்பி, சிந்தனைச் சுரங்கமாய்த் திகழும் தமிழகத்தின் விடிவெள்ளியே, உங்களை நினைத்து, உங்களை நம்பியே, ஒவ்வொரு நாளும் வாழ்கின்றனர் உலகத்திலுள்ள தமிழர்கள் அனைவரும். அந்த உலகத் தமிழர்களில் ஒருவராக வாழும் நானும், வாழும் வள்ளுவராக விளங்கும் எங்கள் முத்தமிழ் வித்தகரே, மாண்புமிகு முதல்வர் அவர்களே, உங்களின் திருவடியை (மேசையைத் தட்டும் ஒலி) வணங்குகிறேன்.

பொறுமையின் சிகரமாக விளங்கும் எங்கள் அவை முன்னவர் இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்களே, இளைஞராக இருந்தாலும் எல்லாப் பிரச்சினைகளையும் சில நேரங்களில் சில சங்கடங்களை நெஞ்சுறுதியோடு சந்தித்து, மாற்றாருடைய கருத்துக்கும் மதிப்புக் கொடுத்தும், மாற்றாரையும் மரியாதை காட்டி அவர்களிடம் இனிமையாகவும் இதமான சொற்களைப் பயன்படுத்தியும், எந்தப் பிரச்சினைகளுக்கும் அடுத்தவர்களுக்காகக் காத்திருக்காமல் தானே இறங்கி வந்து தன்னலம் கருதாது, மண் நலம், மக்கள் நலம் பேணும் உள்ளாட்சியின் நல்லாட்சியே, எங்கள் அண்ணன் தளபதி அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) பாண்டிய மண்டலத்தையே தி.மு.க.-வின் எஃகுக் கோட்டையாக்கி கழகத்தின் கொடியைப் பட்டொளி வீசிப் பறக்க வைத்திருக்கும் எங்கள் அண்ணன் அஞ்சா நெஞ்சன் ஆற்றல் அரசு அவர்களே, மதுரை மாவட்டக் கழக வளர்ச்சிக்காக அரும்பணி ஆற்றிக்கொண்டிருக்கும் எங்களது புறநகர் மாவட்டக் கழகச் செயலாளரும், சோழவந்தான் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான அண்ணன் திரு. மூர்த்தி அவர்களே . . .

*பிற்பகல் 1–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியுடன் பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** ஐந்து ஆண்டுகால அமைச்சரவையில் மிக மிக சாதாரண குடும்பத்தில் பிறந்த என்னை இம்மாமன்றத்தில் 3–வது முறையாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானிய கோரிக்கையினை சமர்ப்பிக்க வைத்து எங்கள் இன மக்களின் வாழ்வின் வளர்ச்சிக்கு ஒளிவிளக்காக திகழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு முதல்வர், எங்கள் சமத்துவப் பெரியார் அவர்களின் பாதம் பணிந்து எனது பதிலுரையைத் தொடங்குகின்றேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானிய கோரிக்கையின் விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் 8 நபர்கள் தங்களுடைய அரிய கருத்துகளை வழங்கியுள்ளார்கள். அவற்றுக்கெல்லாம் இடையே சில விளக்கங்களை நான் அளித்துள்ளேன். மேலும், எனது பதிலுரையில் சில விளக்கங்களை அளிப்பதோடு, மாண்புமிகு உறுப்பினர்கள் அளித்த ஆக்கபூர்வமான கருத்துகள் இத்துறையைப் பலப்படுத்துவதற்குப் பயன்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பசாமி அவர்கள் இங்கு பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். நாங்கள் ஆட்சியில் இருந்தபோது ஆதி திராவிட மக்களுக்கு கார், சுமோ, ஆட்டோ இவற்றையெல்லாம் வாங்கிக் கொடுத்தோம் என்று இங்கே தம்பட்டம் அடித்தார்கள். ஆனால், உண்மை நிலை என்னவென்று சொன்னால் (குறுக்கீடுகள்) எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் 1996–ல் ஆட்சிப் பொறுப்பேற்றிருந்தபோது N.S.F.D.C. மூலமாக 21,33,00,000 ரூபாய் செலவில் கார், சுமோ மற்றும் டிராக்டர்கள் வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அதற்குப் பின்பு வந்த ஆட்சியாளர்கள், கடந்த ஆட்சியாளர்கள் எவ்வளவு ஒதுக்கீடு செய்தார்கள் என்று சொன்னால் – எங்கள் தலைவர் ஒதுக்கியது ரூ.21 கோடி, ஆனால் அவர்கள் ஒதுக்கியது – வெறும் ரூ.7 கோடி தான். ரூ.7 கோடியில் அதையும் உருப்படியாக அந்த நிதியைக் கொடுக்காமல், அந்தப் பணம் முறையாகச் செலவழிக்கப்படவில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனில் கற்றோன் சிறப்புடையன் – மன்னர்க்குத்
தன் தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச் சென்ற
இடமெல்லாம் சிறப்பு"

என்ற ஔவைப் பாட்டியின் மூதுரைக்கேற்ப, ஒடுக்கப்பட்டு வீழ்ந்து கிடந்த சமுதாயம் சென்ற இடமெல்லாம் சிறப்படைய வேண்டுமென்றால் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்வில் அறிவொளியை ஏற்றிட வேண்டும் என்ற உயர்ந்த சிந்தனை அடிப்படையில் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 2008–2009 ஆம் ஆண்டில் இத்துறைக்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிதியான 773,59,00,000 ரூபாயில் கல்விக்காக 595,29,00,000 ரூபாயை, அதாவது 77 சதவீதத்தினை ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

[திருமதி ஆ. தமிழரசி] [2008 ஏப்ரல் 17

மத்திய அரசு கல்வி உதவித் தொகையைப் பெற பள்ளி இறுதித் தேர்வில் 60 சதவீதம் மதிப்பெண்கள் பெற்றால்தான் ஆதி திராவிட மாணவ, மாணவியர்கள் தகுதியுடையவர் ஆவார்கள் என்று வெளியிட்ட ஆணையை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக மத்திய சமூக நலத் துறை அமைச்சர் அவர்களுக்கு கடிதம்மூலமும், தொலைபேசி மூலமாகவும் தொடர்புகொண்டு திரும்பப்பெறச் செய்து "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற வைர வரிகளுக்கு ஏற்ப உரிய நேரத்தில் தனது பணியினை ஆற்றி, தமிழகத்தில் மட்டுமில்லாது இந்தியாவிலுள்ள அனைத்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இன மாணவ, மாணவியர்களின் வாழ்வில் ஒளிவிளக்கை ஏற்றியவர்தான் நம்முடைய தலைவர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த இரண்டு ஆண்டுகளில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்காக பல்வேறு எண்ணற்ற சாதனைகள் செய்திருப்பினும், அவற்றில் ஒரு சிலவற்றையாவது இம்மாமன்றத்தில் பதிவு செய்வது எனது கடமையாகும். அரசுப் பள்ளிகள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகள், மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் பயின்று 10 ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் 10 நபர்களுக்கு மாவட்டந்தோறும் தாங்கள் விரும்பும் தலைசிறந்த தனியார் பள்ளிகளில் சேர்ந்து 11 ஆம் வகுப்பு தொடர்ந்து படிக்க முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் கடந்த ஆண்டு 1 கோடியே 68 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்து இந்த சிறப்பான திட்டத்தை அறிமுகப்படுத்தி, ஏழை மக்களின் வாழ்வில் அறிவொளியை ஏற்றி வைத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பசாமி அவர்கள் இங்கே பேசும்போது இந்தத் திட்டத்தினை ஏன் அறிமுகப்படுத்தினீர்கள் என்று ஒரு கேள்வியைக் கேட்டார்கள். ஏன் அரசாங்கப் பள்ளியிலே படிக்க வேண்டியதுதானே என்று கேட்கிறார்கள். ஆதி திராவிடர் மாணவர்கள் ஏன் தனியார் பள்ளியில் சேர்ந்து படிக்கக்கூடாதா? ஏன் அவர்களுக்கு அந்த வாய்ப்பினை வழங்கக்கூடாதா? தலைவர் கலைஞர் அவர்கள்தான் அந்த வாய்ப்பினை வழங்கியவர் என்பதை நான் இங்கே பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2008 ஏப்ரல் 17] [திருமதி ஆ. தமிழரசி]

ஆதி திராவிடர் மற்றும் பங்குடியின மாணவ, மாணவியர்களுக்கு நமது அரசும், மத்திய அரசும் கல்வி உதவித் தொகையாக 2006–2007 ஆம் ஆண்டில் ரூ.11,86,475 ரூபாயில் 3,92,037 மாணவ, மாணவியர்கள் பயன்பெற்றுள்ளார்கள். அதேபோல், 2007–2008 ஆம் ஆண்டில் 12 இலட்சத்து 94 ஆயிரத்து 875 ரூபாயில் 4 இலட்சத்து 4 ஆயிரத்து 558 மாணவ, மாணவியர்கள் பயன் பெற்றுள்ளனர். பழங்குடியின மாணவ, மாணவியர்களுக்குக் கல்வி உதவித் தொகையாக 2006–2007–ல் 68 இலட்சத்து 28 ஆயிரம் ரூபாயில் 2 ஆயிரத்து 854 மாணவ, மாணவியர் பயன் பெற்றுள்ளார்கள். அதேபோல் 2007–2008 ஆம் ஆண்டில் 79 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாயில் 3 ஆயிரத்து 182 மாணவ, மாணவியர்கள் பயன்பெற்றுள்ளார்கள்.

பிற்பகல் 1–35

மேலும், ஆதி திராவிடர் மாணவ, மாணவியரின் கல்வி வளர்ச்சிக்காக முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஐந்தாவது முறையாக பதவியேற்று, கடந்த இரண்டு ஆண்டுகளில் 1 கோடியே 77 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 5 ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். மேலும், 2 கோடியே 29 இலட்சத்து 92 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 8 ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. மற்றும் 1 கோடியே 46 இலட்சத்து 92 ஆயிரம் மதிப்பீட்டில் 5 பழங்குடியினர் நல உண்டி உறைவிட நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. மேலும், நடப்பாண்டில் மாண்புமிகு நிதி அமைச்சர் இனமான பேராசிரியர் பெருந்தகை அளித்த வரலாற்றுச் சிறப்புமிக்க வரியில்லா நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு 3 கோடியே 68 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 8 ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளாகவும், 3 பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடையேழு வள்ளல்களில் ஒருவரான மன்னன் பேகன் கடுங் குளிரைத் தாங்க முடியாமல் நடுங்கிய மயிலுக்குத் தன் போர்வையைக் கொடுத்தான் என்பது வரலாறு. ஆனால், அந்த வரலாற்றுப் பாதையில் வரலாறாக நடைபோட்டுக் கொண்டிருக்கிற எங்கள் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், ஆதி திராவிட, பழங்குடியின

மாணவர்களுக்கு 1 கோடியே 12 இலட்ச ரூபாய் செலவில் ஒவ்வொரு மாணவருக்கும் ஒரு போர்வையை வழங்கி, எட்டாவது வள்ளலாக இம்மாமன்றத்தில் வீற்றிருக்கிறார் என்பதைப் பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏழை மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினையான உணவு, உடை, இருப்பிடம் இம்மூன்றும் மனித வாழ்விற்கு மிக இன்றியமையாதது. ஏழை மக்கள் வயிறாரச் சாப்பிட வேண்டும் என்பதற்காக தலைவர் கலைஞர் அவர்கள் தரமான அரிசி கிலோ 2 ரூபாய்க்கு வழங்கி, ஏழை மக்கள் வயிற்றில் பாலை வார்த்தார்கள். வாலிப கவிஞர் வாலி அவர்கள் "Father of Ration" என்று எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்களைப் பாராட்டினார்கள். மாண்புமிகு வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் திரு. கோவை தங்கம் அவர்கள், தலைவர் கலைஞர் அவர்களிடம் பல்வேறு சமயங்களில் ஆதி திராவிடர் இன மக்களுக்கு சிற்றுண்டி வழங்க வேண்டும் என்று ஒரு கோரிக்கை வைத்திருந்தார்கள். தமிழ்நாட்டில் தங்கும் விடுதிகளில் தங்கிப் படிக்கின்ற ஆதி திராவிட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மையின மாணவ, மாணவியர்களுக்கு காலையிலும், மாலையிலும் தேநீர் வழங்க உதவிபுரிய வேண்டும் என்ற கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்துகொண்டிருக்கிறார்கள். இதைப் பரிசீலனை செய்து, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர், ஆதி திராவிடர், பழங்குடியின மாணவ, மாணவியர்கள் அரசு நடத்தும் பள்ளி, கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயின்று வருகின்ற 2007–2008 ஆம் ஆண்டில் சேர்ந்த பள்ளி மாணவர்களுக்கு மாதாந்திர உணவுப் படியாக ரூபாய் 400 ஆகவும், கல்லூரி மாணவர்களுக்கு ரூபாய் 500 ஆகவும் தலைவர் கலைஞர் அரசுதான் உயர்த்தி வழங்கியது.

மேலும், 2008–2009 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் உணவுப் படி 50 ரூபாய் அளவில் உயர்த்தப்பட்டு, பள்ளி விடுதிகளுக்கு மாதம் ரூபாய் 450–ம், கல்லூரி விடுதிகளுக்கு மாதம் ரூபாய் 550 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இந்த விடுதிகளில் தங்கிப் படிக்கின்ற மாணவ, மாணவியர்களுக்கு காலையிலும், மாலையிலும் தேநீர் வழங்கிட தலைவர் கலைஞர் அவர்கள் உத்தரவு பிறப்பித்து இருக்கிறார்கள் என்பதை இங்கு பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)





தை முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டாக அறிவித்து, தை முதல் நாள் அன்றே ஏழைகளுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கி மகிழ்ந்தவர்தான் எங்களுடைய தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

"ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்" என்றார் பேரறிஞர் அண்ணா. பேரறிஞர் அண்ணாவின் இதயத்தை இரவலாகப் பெற்றிருக்கும் நமது தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள், இன்று பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்திருந்தால் "ஏழைகளின் சிரிப்பில் என் தம்பி கலைஞரைக் காணலாம்" என்று கூறியிருப்பார். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த காலங்களில் ஆதி திராவிட மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்ட சீருடை என்பது தரமற்றதாகவும், மிக மெல்லியதாகவும் இருந்தது. அதை தலைவர் கலைஞர் அவர்கள் உணர்ந்து, சீருடைக்கென்று வருடந்தோறும் ஒதுக்குகின்ற நிதியானது 9 கோடியே 70 இலட்சம் ரூபாய். ஆனால் 2007–2008 ஆம் ஆண்டில் 5 கோடியே 30 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாய் கூடுதலாக நிதியை அள்ளி வழங்கி மகிழ்ந்தவர்தான் தலைவர் கலைஞர் அவர்கள்.

பிற்பகல் 1–40

மூன்றாவது முக்கியக் காரணி உறைவிடம். இங்கு மாண்புமிகு உறுப்பினர் திருமதி பிரேமா அவர்கள் பேசும்போது சொன்னார்கள். என்னவோ இவர்கள் ஆட்சியில்தான் வீட்டுமனைப் பட்டாக்களெல்லாம் அதிகமாக வழங்கப்பட்டிருக்கின்றன; நீங்கள் சரியாகக் கொடுக்கவில்லை, எங்களுடைய பகுதிக்கு வீட்டுமனைப் பட்டாக்களெல்லாம் கொடுக்க வேண்டுமென்று கூறினார்கள். வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்காக அதிகமாக நிதியை வழங்கியவர் தலைவர் கலைஞர் அவர்கள்; அதைக் குறைத்துக் கொடுத்து சாதனை புரிந்த ஆட்சி உங்களுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) தலைவர் கலைஞர் அவர்கள் நான்காவது முறையாக ஆட்சிப் பொறுப்பிலிருந்தபோது, ஐந்தாண்டுக் காலத்தில், ஏழை மக்களுக்காக 3 இலட்சத்து 39 ஆயிரத்து 368 நபர்களுக்கு ரூபாய் 75 கோடியே 70 இலட்சத்து 98 ஆயிரம் மதிப்பீட்டில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன, 1996 ஆம் ஆண்டிலே. ஆனால் அதற்குப் பின்பு வந்த நீங்கள் எவ்வளவு கொடுத்திருக்கிறீர்கள் தெரியுமா? வெறும் 71 ஆயிரத்து 271 நபர்களுக்கு மட்டும்தான் வீட்டுமனைப் பட்டாக்கள் கொடுத்திருக்கிறீர்கள்.

[திருமதி ஆ. தமிழரசி] [2008 ஏப்ரல் 17

மதிப்பு எவ்வளவு என்று சொன்னால் 17 கோடி, எங்கள தலைவர் கொடுத்தது 75 கோடி. நீங்கள் 17 கோடியே 14 இலட்சத்து 5 ஆயிரம் மதிப்பீட்டில்தான் வழங்கியிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆக, ஏழை மக்களுக்காக, எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்பையேற்று, ஒரு கையளவு இடம் இருந்தால்கூட அதை ஏழை மக்களுக்காகப் பிரித்துத் தருவேன் என்று சொல்லி, ஏழை மக்களுக்காக இரண்டு ஏக்கர் நிலம் பிரித்துத் தந்துகொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, ஆதி திராவிடர் நலத் துறையின்மூலமாக, கடந்த இரண்டாண்டுகளில் மட்டும், 24 ஆயிரத்து 955 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விடுதியில் தங்கிப் படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருப்பதால் அவர்களுக்குப் புதிய விடுதிகள் கட்டித் தர வேண்டுமென்று எண்ணிய நமது முதல்வர் அவர்கள் கடந்த ஆண்டு 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 25 விடுதிகள் கட்டுவதற்கு 8 கோடியே 75 இலட்சம் ரூபாயும், அதுபோல் பழங்குடியின மாணவ, மாணவியர்களுக்கு 5 விடுதிகள் கட்ட 2 கோடி ரூபாயும், புதிய மாணவ, மாணவியர் இல்லங்கள் தொடங்குவதற்கு விடுதி ஒன்றுக்கு 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வீதம் 25 புதிய இல்லங்கள் தொடங்குவதற்கு 1 கோடியே 87 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும் ஒதுக்கீடு செய்து, அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதேபோல், கடந்த இரண்டாண்டுகளில் 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2,000 கூடுதல் இடங்களை ஒதுக்கீடு செய்து மாணவ, மாணவியர் பயன்பெற்றுள்ளார்கள்.

இதுமட்டுமில்லாமல் விடுதியில் தங்கிப் படிக்கின்ற மாணவ, மாணவியருக்கு சோப்பு, எண்ணெய், முடி வெட்டிக்கொள்வதற்காக பள்ளி மாணவர்களுக்கு 15 ரூபாய் என்று இருந்ததை 25 ரூபாயாகவும், கல்லூரி மாணவர்களுக்கு 25 ரூபாய் என்று இருந்ததை 35 ரூபாயாகவும் உயர்த்திக் கொடுத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

அரசு பழங்குடியினர் உண்டி, உறைவிட தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் சமையலர்களுக்கு குடியிருப்பு



2008 ஏப்ரல் 17] [திருமதி ஆ. தமிழரசி]

இல்லம் கட்டிக்கொடுக்க வேண்டும் என்பதற்காக கடந்த ஆண்டு 1 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து அப்பணி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

286 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களின் உடல் நலனை நன்கு பேணிக் காக்கும்பொருட்டு, கடந்த ஆண்டு 8 கோடியே 58 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பாதுகாக்கப்பட்ட தூய்மையான குடிநீர் வழங்குவதற்காக சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் இயந்திரம் வழங்கி, தலைசிறந்த திட்டத்தைத் தீட்டி செயல்படுத்திக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆதி திராவிடர் இன மாணவ, மாணவியருக்குத் தரமான கல்வியை வழங்கிக் கொண்டிருக்கும் ஆசிரியப் பெருமக்களுக்குத் தரமான வாழ்க்கையை அமைத்துத் தர வேண்டும் என்று எண்ணிய எங்கள் ஒப்பற்ற முதல்வர், வருங்காலங்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் ஏற்படும் இடைநிலை ஆசிரியர் காலிப் பணியிடங்களில், இடைநிலை ஆசிரியர்களில் பட்டதாரி ஆசிரியர் பணியிடத்திற்கு தகுதி பெற்றவர்கள் அனைவரையும் பதவி உயர்வுமூலம் பட்டதாரி ஆசிரியர்களாக நியமனம் செய்ய ஆணையிட்டு இந்த ஆசிரியப் பெருமக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றியுள்ளார்கள் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்.

கடந்த இரண்டாண்டுகளில் ஆதி திராவிடர் நலத் துறையில் காலியாக உள்ள பணியிடங்களுக்கு இடைநிலை ஆசிரியர்கள் பட்டதாரி ஆசிரியர்கள் 356 ஆகவும், முதுநிலைப் பட்டதாரி 331 ஆகவும், பட்டதாரி ஆசிரியர்கள் 40 ஆகவும், சமையலர்கள் 338 ஆகவும், காவலர் மற்றும் ஆசிரியர்கள் 40 ஆகவும், சமையலர்கள் 338 ஆகவும், காவலர் மற்றும் ஏவலர் பணியிடங்கள் 56 ஆகவும், சுருக்கெழுத்துத் தட்டச்சர் 2 ஆகவும், தட்டச்சர்கள் 13 ஆகவும், இளநிலை உதவியாளர் 6 ஆகவும், பணிப் பார்வையாளர் 1 ஆகவும், ஆக மொத்தம் 1,143 நபர்களைப் பணி நியமனம் செய்து ஆசிரியர் பெருமக்களின் இல்லங்களில் ஒளி விளக்கை ஏற்றியவர்தான் எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள்.

பிற்பகல் 1–45

இவ்வாறு மாணவ, மாணவியர்களுக்குத் தேவையான உதவிகளையும், ஆசிரியப் பெருமக்களுக்குத் தேவையான உதவிகளையும் வழங்கியதால் ஊக்கமும், ஆக்கமும் பெற்றதால் 2005–2006 ஆம் ஆண்டில் 10 ஆம் வகுப்பில் 70 விழுக்காடாக இருந்த தேர்ச்சி விகிதம்,

2006–2007–ல் 77 விழுக்காடாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதேபோல் 12 ஆம் வகுப்பில் 54 விழுக்காடாக இருந்த தேர்ச்சி விகிதம், 65 விழுக்காடாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதறகு அம்மக்களுக்குத் தேவையான நலத் திட்ட உதவிகளை வழங்க வேண்டும் என்பதற்காக மற்ற வாரியங்களில் உள்ள உறுபபினர்களுக்கு என்னென்ன நலத் திட்டங்கள் உள்ளனவோ அப்படிப்பட்ட நலத் திட்டங்கள் அனைத்தையும் அப்பழங்குடியினர் நல வாரிய உறுப்பினர்கள் பெற வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் முதற்கட்டமாக 1 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து தந்துள்ளார்கள். இவ்வாரியத்தில் புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதற்காக நடவடிக்கைகள் மிக வேகமாக எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலர்களில் மணமுள்ள மலரிருக்கும், மணமில்லாத மலரும் இருக்கும், சில மலர்கள் அழகாக இருக்கும், மணம் இருக்காது, சில மலர்களில் மணம் இருக்கும், அழகு இருக்காது. இந்த நாட்டில் ஏழை, எளிய, ஆதி திராவிட மக்கள் மணமில்லாத மலர்களாக இருக்கிறார்கள். ஆனால் நல்ல மனம் உள்ளவர்களாக இருக்கிறார்கள், மணமில்லாத அவர்கள் வாழ்க்கையில், மணத்தை ஏற்றுகின்ற பொறுப்பை எங்களுடைய தலைவர் கலைஞர் அரசு ஏற்றிருக்கின்றது என்று, (மேசையைத் தட்டும் ஒலி) 1971 ஆம் ஆண்டு உதகை மலர்க் கண்காட்சியில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறினார்கள்.

அதனடிப்படையில், ஐந்தாவது முறையாகப் பதவியேற்று, கூட்டுறவு வங்கிகளில் வேளாண்மை நோக்கத்திற்காக வாங்கிய விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்தது போன்று, அனைத்துத் தாப்பு ஆதி திராவிட மக்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்வதுபோல் விவசாய நோக்கத்திற்காக தாட்கோ நிறுவனத்திடம் பெற்று நிலுவையில் உள்ள விவசாயக் கடன் 5 கோடியே 50 இலட்சம் ரூபாயை இந்த நிதிநிலை அறிக்கையின்மூலம் அறிவித்து கடனைத் தள்ளுபடி செய்துள்ளார்கள். இதனால் அனைத்து ஆதி திராவிட மக்களின் வாழ்வில் இருளை அகற்றி, இதயத்தில் என்றும் நீங்கா இடம் பெற்றுள்ளவர் நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்பதைப் பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)





ஆதி திராவிட மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு தலைவர் கலைஞர் அவர்களால் வழங்கப்பட்ட தையல் இயந்திரம், தேய்ப்புப் பெட்டி இவையெல்லாம் கடந்த ஆட்சிக் காலத்தில் நிறுத்தி வைக்கப்பட்டன. ஆனால் தற்போது மீண்டும் எங்களுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து, மேற்படி கருவிகள் அனைத்தும் ஏழை, ஆதி திராவிட மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக தலைவர் கலைஞர் அவர்களால் 1974 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தாட்கோ நிறுவனம் பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களையும், நல்ல தொழிற் பயிற்சிகளையும் ஆதி திராவிட மக்களுக்கு வழங்கி வருகிறது. ஆனால் இந்தப் பயனை மதம் மாறிய கிறிஸ்துவ ஆதி திராவிடர்கள் பெற இயலாத நிலையை எண்ணிய முதல்வர், அனைத்துப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களும், தொழிற் பயிற்சியும் மதம் மாறிய கிறிஸ்துவ ஆதி திராவிடர்களுக்கும் வழங்க வேண்டும் என்ற சீரிய எண்ணத்தின் அடிப்படையில், தமிழக வரலாற்றிலே முதல்முதலாக மாநில அரசின் சிறப்பு நிதியாக கடந்த இரண்டாண்டுகளில் 50 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து, அதன் பயனாக மதம் மாறிய கிறிஸ்துவர்களும் பயன் பெற்றுள்ளார்கள். இப்பயன்கள் தொடர்ந்து இம்மக்களுக்குக் கிடைத்திட முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த ஆண்டும் 25 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து மாநில சிறப்பு நிதியாகத் தந்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த காலங்களில் விமானத்திற்குள் பயணம் செய்து வந்த மத்திய அமைச்சரையே விமானத்தைவிட்டு கீழே இறக்கிய வரலாறு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் இன்று எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள், அந்த விமானத்திற்குள்ளே ஆதி திராவிடப் பெண்களைப் பணியாற்ற வைத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த இரண்டாண்டுகளில் தாட்கோ நிறுவனத்தின்மூலம் மிகச் சிறந்த பயிற்சியாகக் கருதப்படும் விமானப் பணிப்பெண் பயிற்சி 200 பெண்களுக்கு 2 கோடி ரூபாய் செலவில் வழங்க ஆணையிட்டுள்ளார்கள்.

கடந்த ஆட்சியிலே வெறும் கறவை மாடும், ஆடும்தான்—கறவை மாடு, அப்புறம் ஆட்டுக்குட்டி, பெட்டிக்கடையும்தான் வைக்கலாம். ஆனால் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் கறவை மாடும் வாங்கிக் கொடுக்கிறோம்; மற்ற கடனும் தருகிறோம்.

அதேபோல் பெண்களுக்கு இன்றைக்கு ஒரு இலட்சம் ரூபாய், தனிப்பட்ட ஒரு பெண்ணுக்கோ, ஒரு ஆணுக்கோ, ஒரு இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்த அரசு தலைவர் கலைஞருடைய அரசுதான் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

பிற்பகல் 1–50

இத்திட்டம் ஆண்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு, 1 கோடி ரூபாய் செலவில் 100 பேருக்கு Cabin Crew பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ஆதி திராவிட மாணவ, மாணவியர்கள் ஆங்கிலத்தில் சரளமாகப் பேச வேண்டுமென்பதற்காக, கடந்த இரண்டு ஆண்டுகளில், 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில், 6,000 நபர்களுக்கு ஆங்கிலப் பேச்சாற்றல் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் தனி நபர்க் கடன் திட்டத்தின்மூலமாக, 23,539 ஆதி திராவிட இளைஞர்கள் சுயமாகத் தொழில் தொடங்குவதற்காக, ரூ.60,49,99,000/– கடன் வழங்கப்பட்டுள்ளது.

மூன்றாவது முறையாக முதல்வராகப் பணியாற்றியபோது, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், பெண்களுக்கும் சொத்தில் சம பங்கு உண்டு என்று சட்டம் கொண்டு வந்தார்கள். அப்பெண்கள் சமூகத்தில் பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்று தலைநிமிர வேண்டுமென்பதற்காக, நிலம் வாங்கி வழங்கும் திட்டத்தின்கீழ் ரூ.24,95,33,000/– செலவில் 927 பெண்களுக்கு நிலம் வாங்க மானியமும், கடனும் வழங்கி, அவர்கள் பயன்பெற்றுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மூன்றாவது முறையாக முதல்வராக இருந்தபோது, எங்கள் ஒப்பற்றத் தலைவர் கலைஞர் அவர்கள் மகளிர் சுய உதவிக் குழுக்களை ஆரம்பித்தார்கள். அந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் இப்போது ஆலமரம்போல் பரந்து விரிந்து செயல்பட்டு, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குக் கடந்த இரண்டு ஆண்டுகளில், தாட்கோமூலம் பொருளாதார நிதியுதவித் திட்டத்தின்கீழ், 72,127 பெண்கள் பயன்பெறும் வகையில், ரூ.93,75,74,000/– கடனாக வழங்க ஆணையிட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், இக்குழுக்களுக்குச் சுழல் நிதியாக ரூ.20,37,20,000/– வழங்கப்பட்டுள்ளது.

மனிதக் கழிவினை மனிதனே அள்ளும் அவல நிலையை ஒழித்திடவேண்டும்; அத்தொழிலில் ஈடுபட்டுள்ள துப்புரவுத் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாத்திடவேண்டும் என்ற





அடிப்படையில், மற்ற வாரியங்களில் உள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் அனைத்தையும் தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியத்தில் உள்ள உறுப்பினர்களுக்கும் வழங்கவேண்டுமென்ற உயர்ந்த எண்ணத்தின் அடிப்படையில், தலைவர் கலைஞர் அவர்கள் முதற்கட்டமாக ஒரு கோடி ரூபாயினை வழங்கி, இவ்வாரியத்தில் புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கான பணி விரைவாக, தீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

அருந்ததியர் இன மக்கள் சமூக, கல்வி, பொருளாதார நிலைகளில் அடித்தளத்தில் இருப்பதால், அவர்கள் முன்னேறுவதற்குச் சில சிறப்புச் சலுகைகள் அளிப்பது அவசியம் எனக் கருதி, ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்டுவரும் இட ஒதுக்கீட்டில், அருந்ததியருக்குத் தனி உள் இட ஒதுக்கீடு வழங்குவது என்று டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையிலான அரசின் கருத்துருவினை அனைத்துக் கட்சியும் 12–3–2008 அன்று ஏற்றுக்கொண்டதன்பேரில், அருந்ததியர்க்கு உள் ஒதுக்கீடு வழங்குவதற்கு வழிமுறைகளை அரசுக்கு ஆராய்ந்து அளித்திட, ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. எம்.எஸ். ஜனார்த்தனம் அவர்களைக் கொண்ட ஒரு நபர் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் அறிக்கை கிடைத்தவுடன், அருந்ததியர் இன மக்களுக்கு, சமூகப் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான உள் ஒதுக்கீட்டை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அளிப்பார்கள் என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கடந்த கால ஆட்சியில் நிறுத்தி வைக்கப்பட்ட விளிம்புத் தொகைத் திட்டம், கடந்த ஆண்டு முதல், ஒரு வருடத்திற்கு 5 கோடி ரூபாய் செலவில் தாட்கோமூலம் மீண்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய அறிவிப்புகள் ஒருசிலவற்றைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். காலத்தை வென்று, ஞாலத்தில் நிலைத்து நிற்கக்கூடிய வலிவும், பொலிவும் பெற்றவர்தான் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள். அவர், இதோ ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு மிகப் பெரிய அளவில் ஒரு சமுதாய மாற்றத்தை உருவாக்க வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்துடன் புதிய அறிவிப்புகளைத் தந்துள்ளார்கள். அவற்றை இம்மாமன்றத்தில் அறிவிக்கின்றேன்.

மாண்புமிகு முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியதன்மூலம், அனைத்து விவசாயப் பெருங்குடி மக்களும்

எல்லையில்லா மகிழ்ச்சியடைந்துள்ளார்கள். விவசாயிகளிடம் ரூ.10,000 வைப்புத் தொகை பெற்றுக்கொண்டு, 'மின் இணைப்புகளை விரைந்து வழங்குதல்' (Fast Track Power Supply) திட்டத்தினை, தமிழ்நாடு மின்சார வாரியம் செயல்படுத்தி வருகிறது. ஆதி திராவிட, பழங்குடியின விவசாயிகளில் அதிகமான நபர்கள் ரூ.10 ஆயிரம் செலுத்த இயலாத வறுமை நிலையில் உள்ளதால், நபர் ஒருவருக்கு ரூ.10 ஆயிரம் வீதம், ஆண்டிற்கு 1,000 நபர்களுக்கு ரூ.1.00 கோடி மதிப்பீட்டில், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு தாட்கோமூலம் செலுத்தி, அவர்களுக்கு இலவசமாக மின் இணைப்பு பெற்றுத் தருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 1–55*

ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்களில் பெரும்பான்மையோர் சிறந்த தொழில் முனைவர்களாக வரக்கூடிய தகுதிகள் பெற்றிருந்தும் பொருளாதார வசதியின்மையால் தொழில் தொடங்க இயலாத நிலையில் உள்ளனர். இவர்களுக்குத் தேவைப்படும் மூலதனத்தினை, தொழில் தொடங்க தேவைப்படும் வசதி வாய்ப்புகளை அரசு உருவாக்கிக் கொடுக்கும்பட்சத்தில் இம்மக்களிடம் ஒரு எழுச்சி மற்றும் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டு, பெரிய சமுதாய மாற்றத்தினை உருவாக்க வேண்டும் என்ற நிலையில் முதல் கட்டமாக 5 நபர்களை தொழிலதிபர்களாக்கும் முயற்சியில் சிறப்பு மூலதன மானியமாக அரசு சார்பில் 50 இலட்சம் ரூபாய் அல்லது 10 சதவீதம் இதில் எது குறைவோ அதனை மானியமாக வழங்கி, மீதத் தொகையினை வங்கி அல்லது நிதி நிறுவனங்கள்மூலமாக கடனாகப் பெறுவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி அளித்து, ஆதி திராவிட மக்களைத் தொழிலதிபர்களாக்கும் மாபெரும் முயற்சியை ஏற்படுத்தியுள்ளார்கள் என்பதைப் பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த அறிவிப்புகளை அவையில் அறிவித்ததாகச் சொல்லி பதிந்துகொள்ளலாமா?

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** இல்லை, இல்லை. காலத்தின் அருமை கருதி முக்கியமான 4, 5 அறிவிப்புகளை மட்டும் படிக்கிறேன். மற்ற அறிவிப்புகளையும் @ நான் இந்த அவையிலே படித்ததாகக் கருதி, அவற்றையும் சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

@ 210 முதல் 218 வரையிலான பக்கங்களில் இணைப்பு - II ஆக அச்சிடப்பட்டுள்ளது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சரி. சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** கல்வி, சமுதாயப் பணியில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் தொடங்கும் தொண்டு நிறுவனங்களுக்கு, தமது பங்களிப்பாக 10 சதவீதம் நிதியினை அளித்து, மீதித் தொகையான 90 சதவீதம் நிதியை மத்திய அரசிடம் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. மற்ற துறையோடு ஒப்பிடும்போது இத்துறையில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மிகவும் குறைவாக உள்ளதால் தனி நபர் பங்களிப்பான 10 சதவீத நிதியில் பாதித் தொகையினை 5 சதவீதத்தை அல்லது 10 இலட்சம் ரூபாய் இதில் எவ்வளவு குறைவோ அந்தத் தொகையினை மாநில அரசு வழங்கும். இதில் மருந்தாளுநர் படிப்பு, செவிலியர் படிப்பு, கல்வியியல் படிப்பு போன்ற உயர் படிப்புகளைத் தொடங்க முன்வரும் தொண்டு நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று தலைவர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் 1,241 விடுதிகளும், 37 பழங்குடியினர் நல விடுதிகளும் செயல்பட்டு வருகின்றன. விடுதிகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு மிகவும் இன்றியமையாதது என்பதால் தூய்மையான ,மற்றும் பாதுகாப்பான சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பதற்காக தனியார் நிறுவனத்தின்மூலமாகச் சிறப்பாக செயல்படுத்தலாம் என்பதற்காக இந்த ஆண்டு ஆதி திராவிடர் நலத் துறை விடுதிகளைத் தற்காலிகமாகத் தனியார்மூலம் பராமரிப்பு செய்ய தலைவர் கலைஞர் அவர்கள் முடிவு செய்துள்ளார்கள். தற்போது கிராமங்களில் அரசுப் பள்ளிகளிலும், ஆங்கில நர்சரி பள்ளிகளிலும், ஏழையெளிய குழந்தைகள் கல்வி பயின்று வருகிறார்கள். எனவே 6 ஆம் வகுப்பு செல்லும் ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவ, மாணவிகளுக்குத் தரமான ஒரு சிறந்த கல்வியை வழங்கும்பொருட்டு, ஒரு தனித் தேர்வு நடத்தி வட்டாரத்திற்கு ஒரு மாணவர் வீதம் தேர்ந்தெடுத்து, மொத்தமுள்ள 385 வட்டாரங்களில் 385 மாணவ, மாணவிகளை நற்பெயர் பெற்ற சிறந்த உண்டி உறைவிடப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பில் சேர்த்து, அவர்கள் தொடர்ந்து 12 ஆம் வகுப்புவரை பயில ஆகும் செலவு முழுவதையும் மாநில அரசு ஏற்றுக்கொள்ளும் என்ற மிகப் பெரிய ஓர் அறிவிப்பினை தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கியுள்ளார்கள்.

தமிழ்நாட்டிலுள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில் கடந்த ஆண்டு 1,645 இடங்களில் M.B.B.S. படிப்பில் சேர அனுமதி வழங்கப்பட்டது. இதில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களைச் சேர்ந்த

[திருமதி ஆ. தமிழரசி] [2008 ஏப்ரல் 17

மாணவர்கள் 277 பேர் மட்டுமே சேர வாய்ப்புக் கிடைத்துள்ளது. ஒரு ஆதி திராவிட மாணவர் 90 விழுக்காடு மதிப்பெண் பெற்றிருந்தால்கூட மருத்துவப் படிப்பில் சேர வாய்ப்பு இல்லாமல் போகிறது. இம்மாணவர்கள், அகில இந்திய அளவில் நடத்தப்படும் மருத்துவப் படிப்பு மற்றும் மருத்துவ மேல் படிப்புக்கான நுழைவுத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்று, இந்தியாவிலுள்ள எந்த ஒரு மாநிலத்திலும் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில் மேற்கண்ட படிப்பினைத் தொடர விரும்பினால் அவர்களுக்கு படிப்பு, விடுதிக் கட்டணம் மற்றும் இதர செலவினங்கள் அனைத்தையும் மத்திய அரசு வழங்கும் post-matric கல்வி உதவித் தொகைமூலமாக எஞ்சிய செலவை மாநில அரசின் நிதியிலிருந்து வழங்கும் என்று தலைவர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், 10 சமுதாயக் கூடங்கள் கட்டுவதற்கு ஒரு கோடி ரூபாயை தலைவர் கலைஞர் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். மூன்று பழங்குடியின விடுதிகள் ஆரம்பிப்பதற்கு தலைவர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

ஆதி திராவிட மக்களிடம் விழிப்புணர்வுத் திட்டம் 70 இலட்சம் ரூபாய் செலவில் கொண்டுவரப்படும். விடுதி மாணவர்களுக்கு ஆதி திராவிட பழங்குடியின விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு யோகா மற்றும் ஆழ்நிலை தியானப் பயிற்சிகள் "வாழ்க வளமுடன்" மற்றும் "ஈசா" யோகா போன்ற நிறுவனங்களின்மூலமாக 100 விடுதிகளில் இப்பயிற்சிகள் வழங்குவதற்கு தலைவர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும், மாணவியர் விடுதிகளுக்கு 61 இலட்சத்து 57 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் சுற்றுச் சுவர் கட்டப்படும். பழங்குடியின உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு முதலுதவிப் பெட்டிகள் 2 இலட்சத்து 12 ஆயிரத்து 550 ரூபாய் ஒதுக்கீட்டில் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், பழங்குடியின பள்ளிகளில் படிக்கின்ற மாணவச் செல்வங்கள் தரையில் அமர்கின்றபோது அது மலைப் பகுதியாக இருப்பதனால் தரை மிகவும் குளிராக, ஜில்லென்று இருப்பதால் மாணவர்கள் அமர்ந்து படிக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. தலைவர் கலைஞர் அவர்கள் அதற்காக, ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவர்கள் அமர்ந்து படிப்பதற்கு 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமரும் பலகைகள் வழங்கப்படும் என ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2008 ஏப்ரல் 17] [திருமதி ஆ. தமிழரசி]

பிற்பகல் 2–00

ஆதி திராவிட இளைஞர்களுக்கு சென்ற ஆண்டில் விமானப் பணிப்பெண் பயிற்சி வழங்கப்பட்டதுபோல, 2008–2009 ஆம் ஆண்டில் கடல்சார் பயிற்சியளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. கடல் சார்ந்த துறையில் அதிக வேலைவாய்ப்பு இருப்பதால், இத்துறையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களின் பங்கு மிகவும் குறைவாக இருப்பதால், இத்துறையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் பங்களிப்பை அதிகப்படுத்தும்முகமாக, கடல்சார் துறையில் பயிற்சியளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனம் (Tamil Nadu Maritime Academy), தேசிய கடல்சார் பயிற்சி நிறுவனம் ஆகியவற்றின்மூலம் 6 மாத கால, ஒரு வருட காலப் பயிற்சிகள் அளிக்கப்படும். இப்பயிற்சிகள், 100 இளைஞர்களுக்கு 50 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும் என்று தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

வேலைவாய்ப்புப் பயிற்சி. தொழில்நுட்பம் சார்ந்த துறைகளான பிளம்பிங், வெல்டிங், மரவேலை, ஓட்டுநர், குளிர்சாதனப் பெட்டிகள் பழுதுபார்த்தல் போன்ற துறைகளில், வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு அதிகமாக இருப்பதால், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின 500 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கவும், கண் சிகிச்சைக்கான சிறப்பு உதவி செவிலியர்கள் பயிற்சியில் 100 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் ரூ.70 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவர்கள் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்களின்மூலமாக வெளிநாடுகளில் வேலைவாய்ப்பைப் பெற்றிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை வழங்கியுள்ளார்கள்.

பொறியியல் பட்டப்படிப்பு படித்த இளைஞர்கள் வெளிநாடுகளில் உயர் கல்வி படிக்க வேண்டுமென்றால், GRE/TOEFL/GMAT/CAT போன்ற தேர்வுகளில் தேர்ச்சி பெற்றவர்கள் மட்டுமே படிக்க முடியும். இதுபோன்ற நுழைவுத் தேர்வுகளுக்குச் செல்லும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் 200 இளைஞர்களுக்கு 40 இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சிகள் வழங்க தலைவர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறைவனின் அருமை பெருமை, அங்கு போக வேண்டியதன் அவசியம், போனால் ஏற்படும் பலன் ஆகியவற்றைப் பாட்டாகவும், கூத்தாகவும், படமாகவும் எடுத்துக்காட்டிவிட்டு, கேட்ட மக்களுக்கு ஒரு ஆவல், பற்று, பாசம் ஏற்படும்படி செய்துவிட்டு, வீணையை மீட்டத் தொடங்கியதும்,

[திருமதி ஆ. தமிழரசி] [2008 ஏப்ரல் 17

இசைகேட்க வருபவனின் காதுகளை அடைத்ததுபோல, எழில்மிகு சித்திரத்தைக் காண வாரீரென அனைவரையும் அழைத்து, காணவரும் சிலரின் கண்களைக் கட்டியிருப்பதுபோல, பழச்சாற்றின் இனிப்பைக் கூறிக்கொண்டு, பருகக் கொஞ்சம் தருக எனக் கேட்டவனை விரட்டுவதுபோல, ஆலயங்களின் மகிமையையும் பலனளிக்கும் சக்தியை அங்கு இருப்பதையும் கூறிவிட்டு, அங்கு வரக்கூடாது, நுழையக்கூடாது என்று சிலரை அல்ல; ஏறக்குறைய 8 கோடி மக்களைத் தடுத்து வருகின்றோம். இது முறையா? நீதியா? தருமமா? நெடுநாட்கள் செல்லலாமா? இவை கேள்விகள் அல்ல, எண்ணத்தில் கலப்படம் இல்லாத எவருக்கும் இருக்கும் இதயத் துடிப்புக்கள்; 1948 ஆம் ஆண்டு, தீண்டாமை என்னும் தீயை, தீயிட்டுக் கொளுத்தி, ஆதி திராவிட மக்களை, ஆலயப் பிரவேசம் செய்ய, அறைகூவல் விடுத்தவர்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள். பேரறிஞர் அண்ணாவின் இதயத்தை இரவலாகப் பெற்றிருக்கும் முத்தமிழ் அறிஞர், டாக்டர் கலைஞர் அவர்கள், அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்று ஆணையிட்டு, அதில் ஆதி திராவிடர்களும் ஆலயத்திற்குள் இறை பணியாற்ற, இந்தியாவிலே முதன்முதலில் வழிவகை செய்து, வரலாற்றில் இடம்பெற்ற (மேசையைத் தட்டும் ஒலி) நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கும் தலைவர் கலைஞர் அவர்கள், பேரறிஞர் அண்ணாவின் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்த இனிய வேளையில், இம்மாமன்றம் மட்டுமல்ல, இந்த நாடே மகிழ்ச்சியடைகிறது. அந்த மகிழ்ச்சியான கொண்டாட்டத்தில், ஆதி திராவிடர் மேம்பாட்டிற்காக பாடுபட்ட பேரறிஞர் அண்ணாவிற்குப் பெருமை சேர்க்கும் வகையில், இத்துறையின்மூலமாக இவ்வாண்டு கட்டப்படும் அனைத்து ஆதி திராவிடர் நல விடுதிகளுக்கும், சமுதாயக் கூடங்களுக்கும் "பேரறிஞர் அண்ணாவின் நூற்றாண்டு விழா நினைவுக் கட்டடம்" என்று பெயர் சூட்டப்படும் என்பதை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கை 4-ன்மீது மாண்புமிகு பேரவை உறுப்பினர் பெருமக்களால், 378 வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கோரிக்கைகளையும், வெட்டுத் தீர்மானங்களையும் படித்துப் பார்த்தேன். இந்த மானியக் கோரிக்கை தொடர்பாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்கிய ஆலோசனைகளுக்கும், கருத்துகளுக்கும் வேண்டிய விளக்கங்களை அளித்துள்ளேன் எனக் கருதுகிறேன்.



2008 ஏப்ரல் 17] [திருமதி. ஆ. தமிழரசி]

உறுப்பினர்கள் தங்கள் வெட்டுத் தீர்மானங்களில் சுட்டிக்காட்டிய கருத்துகளையும், திட்டங்களையும் நன்கு பரிசீலனை செய்து, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் அரசு உரிய வகையில் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, வெட்டுத் தீர்மானங்களை அளித்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அவற்றைத் திரும்பப் பெற்று, இம்மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொண்டு, இம்மன்றத்தில் ஆதி திராவிடர் நலத் துறையின் மானியக் கோரிக்கையினைச் சமர்ப்பிப்பதற்குத் தேவையான புள்ளிவிவரங்களைத் துல்லியமாக அளித்து, அரசுக்கு உறுதுணையாக இருந்த ஆதி திராவிடர் நலத் துறையின் செயலாளர் மற்றும் இயக்குநர், பழங்குடியினர் நலத் துறை ஆணையர், தாட்கோ உயரதிகாரிகள் அனைவருக்கும் நன்றி கூறி விடைபெற்றுக் கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 2-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு (குறுக்கீடு) திரு. கோவை தங்கம், என்ன இது? (குறுக்கீடு) விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு (குறுக்கீடு) உட்காருங்கள். மானியக் கோரிக்கை எண் 4 – ஆதி திராவிடர் (குறுக்கீடு) சரி, திரு. கோவை தங்கம், சொல்லுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவைக் கூட்டத்திலே நான் ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அய்யா அவர்களிடம் சிற்றுண்டி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க, சிற்றுண்டி வழங்குவதற்கு உத்தரவிட்ட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அய்யா அவர்களுக்கு ஆதி திராவிட மக்கள் சார்பாகவும், மாணவ, மாணவிகள் சார்பாகவும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அற்புதமாக, பொறுமையாக மானியக் கோரிக்கைக்கான பதிலை அளித்திருக்கின்றார்கள். அவர்களுக்கு உளமார என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

[2008 ஏப்ரல் 17

## கோரிக்கை எண் 4 – ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 4 – ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.696,11,77,000/–, மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.72,58,99,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 21–4–2008 (திங்கட்கிழமை) காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–06 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

42. 2006–2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் முப்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)



2008 ஏப்ரல் 17]

43. 2006–2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தின் இருபத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

78. மானியக் கோரிக்கை எண் 4 – ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008–2009. (தமிழ், ஆங்கிலம்)

79. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய வரவு-செலவு செயலாக்கத் திட்டம், 2008–2009. (தமிழ், ஆங்கிலம்)

80. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய "மக்கள் சாசனம்", 2008–20.9. (தமிழ், ஆங்கிலம்)

81. 2006–2007 மற்றும் 2007–2008 ஆம் ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின்மீது நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் விவரம். (தமிழ்)

82. 2006–2007 மற்றும் 2007–2008 ஆம் ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின்மீது நகராட்சி நிருவாக ஆணையரகத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் விவரம். (தமிழ்)

83. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் வழங்குவது தொடர்பாக பரிசீலிக்க அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகளின்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளின் விளக்கக் குறிப்பு. (தமிழ்)

84. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2008–2009. (தமிழ்)

85. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2008–2009. (தமிழ்)

[2008 ஏப்ரல் 17

86. 2007–2008 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின்மீது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரம். (தமிழ்)

87. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் வழங்குதல் குறித்து அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழு அறிக்கைமீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் விவரம். (தமிழ்)

88. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினால் வெளியிடப்பட்ட முக்கிய அரசாணைகள் தொகுப்பினைக் கொண்ட அடர் குறுந்தகடு.

89. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று இரண்டாவது அறிக்கை. (2007–2008)

90. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று மூன்றாவது அறிக்கை. (2007–2008)

91. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று நான்காவது அறிக்கை. (2007–2008)

92. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று ஐந்தாவது அறிக்கை. (2007–2008)

93. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று ஆறாவது அறிக்கை. (2007–2008)

94. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று ஏழாவது அறிக்கை. (2007–2008)

95. பொது நிறுவனங்கள் குழுவின் எண்பத்து எட்டாவது அறிக்கை. (2007–2008)

96. பொது நிறுவனங்கள் குழுவின் எண்பத்து ஒன்பதாவது அறிக்கை. (2007–2008)

97. பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூறாவது அறிக்கை. (2007–2008)

98. பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூற்று ஒன்றாவது அறிக்கை. (2007–2008)



2008 ஏப்ரல் 17]

99. பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூற்று இரண்டாவது அறிக்கை. (2007–2008)

100. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் நான்காவது அறிக்கை. (2007–2008)

101. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஐந்தாவது அறிக்கை. (2007–2008)

102. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஆறாவது அறிக்கை. (2007–2008)

103. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஏழாவது அறிக்கை. (2007–2008)

## இணைப்பு–I

*(89 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 4 – ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2008–2009

"அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை."

—திருவள்ளுவர்

போர்க்களத்தில் எதிர்ப்புகளைத் தாங்கி படைநடத்தும் பொறுப்பு அதற்கான ஆற்றல் படைத்தவர்களிடம் இருப்பது போலத்தான், குடிமக்களைக் காப்பாற்றி உயர்வடையச் செய்யும் பொறுப்பும் அவர்களைச் சேர்ந்த ஆற்றலாளர்களுக்கே உண்டு என்ற இக்குறள் நெறியின்படி ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை உயர்வடையச் செய்ய வேண்டுமென்பதே இவ்வரசின் தலையாய கொள்கையாகும். 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகை 624.06 இலட்சத்தில் 19 விழுக்காடு (118.58 இலட்சம்) ஆதி திராவிடரும், 1.04 விழுக்காடு (6.51 இலட்சம்) பழங்குடியினரும் உள்ளனர். இச்சமுதாய மக்கள் கல்வி மற்றும் பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள நிலையை உயர்த்த இவ்வரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. ஆதி திராவிட மக்களின் எழுத்தறிவு விகிதம் 63.19 விழுக்காடாகவும், பழங்குடியினரது எழுத்தறிவு விகிதம் 41.53 விழுக்காடாகவும் உள்ளது. இது மாநிலத்தின் மொத்த எழுத்தறிவு விகிதமான 73.45 விழுக்காட்டுடன் ஒப்பிடுகையில் குறைவானதாகும். இதற்குக் காரணம், பொருளாதார நலிவும், தரமான கல்வியின்மையும், சமூக ஏற்றத் தாழ்வுகளும்தான். இந்த நிலையை மாற்றியமைக்க, வறுமையை ஒழிப்பதோடு மட்டுமல்லாமல் எல்லோரையும் சமமாக எண்ணும் மனப்பக்குவம் வளர வேண்டும் என்ற கருத்தில் இவ்வரசு உறுதியாக உள்ளது.

சமுதாயத்தில் நலிவுற்ற ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் அறியாமையை நீக்கும் வகையில், இம்மக்களுக்கு கல்வி புகட்டுவதில் இவ்வரசு அதிக கவனம் செலுத்தி வருகிறது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் குழந்தைகள் அனைவரும் பள்ளிகளில் சேர்ந்து கல்வி அறிவைப் பெற்றால்தான்

இவர்களும் மற்றவர்களைப்போல முன்னேற்ற நிலையை அடைய இயலும். எனவே, இவர்களுக்குக் கல்வி நிறுவனங்களில் தரமான கல்வி வசதிகளை ஏற்படுத்துதல், கல்வி உதவித் தொகை வழங்குதல், தொழிற் கல்வி, பட்டப் படிப்பு, முதுகலைப் பட்டப் படிப்பு ஆகியவற்றில் இலவசக் கல்வி அளித்தல், இலவசச் சீருடைகள் வழங்குதல், இலவச மிதிவண்டிகள் வழங்குதல், கிராமப்புற மாணவிகளுக்கு ஊக்கத் தொகை வழங்குதல் போன்ற திட்டங்கள் இவ்வரசால் செயல்படுத்தப்படுகின்றன. மேலும், இப்பிரிவு மாணவ/மாணவியர் இலவசமாகத் தங்கி கல்வி பயில விடுதிகள் இத்துறையால் நடத்தப்படுகின்றன. சொந்தக் கட்டடங்கள் இல்லாத விடுதிகளுக்கு நவீன வசதிகளுடன்கூடிய அரசுக் கட்டடங்களையும் இவ்வரசு தொடர்ந்து கட்டி வருகிறது.

**இடஒதுக்கீடு**

இடஒதுக்கீட்டு முறையை சீரிய முறையில் நடைமுறைப்படுத்தி வருவதன்மூலம் ஆதி திராவிடர்/பழங்குடியினருக்குரிய இடஒதுக்கீடு கிடைக்க வழி வகுப்பதுடன் சமூக நீதியும் காக்கப்படுகிறது. அரசுப் பணியாளர் தேர்வு முகமைகளான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம் மற்றும் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் ஆகியவற்றின்மூலம் மேற்கொள்ளப்படும் நேரடி நியமனங்களில் ஆதி திராவிடர்/பழங்குடியினருக்குச் சட்டப்படியான 18 விழுக்காடு மற்றும் 1 விழுக்காடு இட ஒதுக்கீட்டின்படி ஆதி திராவிடர்/பழங்குடியினர் நியமனம் செய்யப்படுகின்றனர். இந்த இடஒதுக்கீட்டின்படி தகுதி வாய்ந்த ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினப் பணி நாடுனர்கள் போதிய அளவில் கிடைக்கப் பெறாதபோது அவர்களுக்கான அந்தப் பணியிடங்கள் பின்னடைவுக் காலிப் பணியிடங்களாக அறிவிக்கப்பட்டு, அடுத்து வருகின்ற தேர்வுகள் அல்லது சிறப்புத் தேர்வுகள்மூலம் நிரப்பப்பட்டு வருகின்றன.

ஆதி திராவிடர்/பழங்குடியினருக்குச் சட்டப்படியான ஒதுக்கீட்டிற்கும் (அதாவது 19 விழுக்காட்டில்) குறைவாக பிரதிநிதித்துவம் இருக்கின்ற பணிகளையும், அதில் அடங்கியுள்ள பணி இடங்களையும் கண்டறிந்து நிரப்பிட ஓர் உயர்மட்டக் குழு ஆதி திராவிடர் நல அமைச்சர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் முதன் முயற்சியாக இந்தக் குறைவு பிரதிநிதித்துவப் பணியிடங்களை (Shortfall vacancies) நிரப்பிட சட்டபூர்வமான வழியினைச் செய்திடும் வகையில் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி விதிகளில் விதி 22 (ஜி) என்ற புதிய பிரிவினை இணைத்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதனால், உயர்மட்டக் குழு கண்டறியும் குறைவுப் பணியிடங்களை நேரடி நியமனம்



மூலமாகச் செய்திடவும், தேவைப்பட்டால் உரிய சிறப்புப் பணி விதிகளில் திருத்தம் செய்திடவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இக்குழு துறைவாரியாக ஆய்வு செய்து குறைவுப் பணியிடங்களை நிரப்ப தக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

ஆதி திராவிடர் மக்களில், அருந்ததியினர் சமூக, பொருளாதார நிலையில் அடித்தளத்தில் இருப்பதால் அவர்தம் முன்னேற்றத்திற்குச் சிறப்புச் சலுகைகள் அளிப்பது அவசியம் எனக் கருதி, தற்போது ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்டு வரும் இடஒதுக்கீட்டில் இவர்களுக்குத் தனி உள்ஒதுக்கீடு வழங்குவது பற்றி அனைத்துக் கட்சிகளையும் கலந்தாலோசித்து முடிவெடுப்பதாக 23-1-2008 அன்று சட்டமன்றத்தில் மேதகு ஆளுநர் உரையில் அறிவித்ததைத் தொடர்ந்து, அவ்வாறே அனைத்துக் கட்சிகள் கூட்டம் 12-3-2008 அன்று நடத்தப்பட்டது. அக்கூட்டத்தில், ஒரு மனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கேற்ப அருந்ததியர் இன மக்களுக்கு உள்ஒதுக்கீடு வழங்கவேண்டும் என்ற கோரிக்கையினை ஆய்வு செய்து பரிந்துரை செய்திட, சென்னை உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் திரு. எம்.எஸ். ஜனார்த்தனம் அவர்கள் தலைமையில் ஒரு நபர் குழு அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது.

## I. ஆதி திராவிடர் நலம்

### கல்வி

ஆதி திராவிடர்/பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கும் மொத்தப் பள்ளிகளின் விவரம் பின் வருமாறு:—

| பள்ளிகளின் வகைப்பாடு | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் | 1,058 | 2,08,200 |
| அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் | 290 | 36,624 |
| மொத்தம் | 1,348 | 2,44,824 |

### கல்வி மேம்பாட்டுத் திட்டங்கள்

2008-2009 ஆம் ஆண்டில் இத்துறைக்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ரூ. 773.59 கோடியில், ரூ. 595.29 கோடி அதாவது 77 விழுக்காடு நிதி, கல்வி சார்ந்த திட்டங்களுக்காகவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது, மைய அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை பெற மாணவ/மாணவியரின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் முறையே ஆதி திராவிடர்களுக்கு ரூ.1,00,000 என்றும், பழங்குடியினர்களுக்கு ரூ.1,08,000 என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர்/பழங்குடியினர்/கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிட மாணவ/மாணவியர் மாநில அரசின் கல்வி உதவித் தொகையினைப் பெறுவதற்கு இதுநாள் வரை பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ. 50,000 ஆக இருந்தது. தற்போது இந்த உச்சவரம்பு ரூ. 1,00,000 ஆக 2008-2009 ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்படுகிறது.

**கல்விக் கட்டணச் சலுகைகள்**

**1. கற்பிப்புக் கட்டணச் சலுகை**

ஆதி திராவிடர்/பழங்குடியினர்/கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவ/மாணவியர், அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பயில பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பின்றி கற்பிப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழுவதுமாக விலக்களிக்கப்பட்டுள்ளது. இக்கல்விச்சலுகை இளங்கலை பட்டப் படிப்பு பயிலும் மாணவ/மாணவியர்க்கும் வழங்கப்படுகிறது. இதற்காக 2007-2008ஆம் ஆண்டில் ரூ. 215.82 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு திருத்திய மதிப்பீட்டில் ரூ. 348.67 இலட்சமாக உயர்த்தப்பட்டு 8218 மாணவ/மாணவியர் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டம், நடப்பு நிதியாண்டு 2008-2009-ல் ரூ. 321.42 இலட்சத்தில் செயல்படுத்தப்படும்.

**2. இளங்கலை பட்டப் படிப்பு பயிலும் மாணவ/மாணவியர்க்குச் சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணச் சலுகைகள்**

மைய அரசு மற்றும் மாநில அரசு நிர்ணயித்துள்ள ஆண்டு வருமான வரம்பிற்கு மேற்பட்ட இளங்கலை பட்டப் படிப்பு பயிலும் ஆதி திராவிடர்/பழங்குடியினர்/கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவ/மாணவியர்க்குச் சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. இதற்காக 2007-2008 ஆம் ஆண்டில் ரூ. 90.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 5,870 மாணவ/மாணவியர் பயனடைந்துள்ளனர்.



இத்திட்டத்திற்கென நடப்பு நிதியாண்டு 2008-2009-ல் ரூ. 90.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3. முதுகலைப் பட்டம் படிக்கும் மாணவியர்க்குச் சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணச் சலுகைகள்**

மைய அரசு மற்றும் மாநில அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைக்கு நிர்ணயிக்கப்பட்ட வருமான வரம்பிற்கு மேற்பட்ட முதுகலைப் பட்டப் படிப்பு படிக்கும் மாணவியர்க்கு மட்டும் சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. இதற்காக 2007-2008 ஆம் ஆண்டில் ரூ. 50.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 1406 மாணவியர் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்காக நடப்பு நிதியாண்டு 2008-2009-ல் ரூ. 50.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4. 10 ஆம் வகுப்பு வரை படிப்பிற்கான (Pre-matric) சிறப்புக் கட்டணச் சலுகை**

6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் அனைத்து ஆதி திராவிடர்/பழங்குடியினர்/கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ/மாணவியர் சிறப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றனர். இதன் பொருட்டு ஏற்படும் செலவினம் அந்தந்தக் கல்வி நிறுவனங்களுக்கு இத்துறை மூலம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்காக நடப்பு நிதியாண்டு 2008-2009-ல் ரூ.532.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5. பொதுத் தேர்வுக் கட்டணச் சலுகைகள்**

10 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் ஆதி திராவிடர்/பழங்குடியினர்/கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ/மாணவியர் அனைவரும் வருமான வரம்பின்றி தேர்வுக் கட்டணங்கள் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகின்றனர். இதற்கான செலவினத் தொகை முழுவதும் இத்துறையால், அரசுத் தேர்வுகள் துறைக்கு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்காக நடப்பு நிதியாண்டு 2008-2009-ல் ரூ. 461.71 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 17

## 6. கல்வி உதவித் தொகைத் திட்டங்கள்

### (அ) துப்புரவுத் தொழில் புரிவோரின் குழந்தைகளுக்கு 10 ஆம் வகுப்பு வரை படிப்பிற்கான (Pre-matric) உதவித் தொகைத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் துப்புரவுத் தொழில் புரிவோரின் குழந்தைகளுக்கு அவர்களது சாதி, மதம் மற்றும் வருமான வரம்பினைக் கணக்கில் கொள்ளாமல் உதவித் தொகை வழங்கப்படுகிறது. விடுதியில் தங்காது பயிலும் மாணவ/மாணவியர்க்கு மாதம் ஒன்றிற்கு 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை ரூ. 40-ம், 6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை ரூ. 60-ம், 9 ஆம் வகுப்பு மற்றும் 10 ஆம் வகுப்பிற்கு ரூ. 75-ம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. விடுதியில் தங்கிப் பயில்வோருக்கு 3 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரையில் மாதம் ரூ. 300-ம், 9 மற்றும் 10 ஆம் வகுப்பு பயில்வோருக்கு மாதம் ரூ. 375-ம் வழங்கப்படுகிறது. இதுவன்றி தனி மானியமாக விடுதியில் தங்காது பயிலும் மாணவ/மாணவியர்க்கு ஆண்டுக்கு ரூ. 550-ம், விடுதியில் தங்கிப் பயில்வோருக்கு ரூ. 600-ம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.298.52 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு திருத்திய மதிப்பீட்டில் ரூ.681.92 இலட்சமாக உயர்த்தப்பட்டு 54,597 மாணவ/மாணவியர் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்காக நடப்பு நிதியாண்டு 2008-2009-ல் ரூ. 681.92 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ஆ) 10 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கான (Post-matric) உதவித் தொகைத் திட்டம்

மைய அரசு திட்டத்தின்கீழ் 10 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பு பயிலும் ஆதி திராவிடர்/பழங்குடியின மாணவ/மாணவியர்க்கு அவர்களது பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் முறையே ரூ. 1,00,000 மற்றும் ரூ. 1,08,000-க்கு மிகாமல் இருப்பின், குறிப்பேடுகள் வாங்குதல் போன்ற கட்டாயச் செலவுகள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய கட்டாயக் கட்டணங்கள் ஆகியவற்றை ஈடுசெய்ய அதிக அளவாக மாதம் ஒன்றிற்கு ரூ. 330 வரை அவர்கள் பயிலும் படிப்புக்கு ஏற்றவாறு வழங்கப்படுகிறது. இவர்கள் விடுதியில் தங்கி கல்வி பயில்பவராக இருப்பின் இத்தொகை அவர்கள் பயிலும் படிப்புக்கு ஏற்றவாறு அதிக அளவாக மாதம் ஒன்றிற்கு ரூ. 740 வரை பராமரிப்புப் படியாக வழங்கப்படுகிறது. இவை தவிர மாணவ/மாணவியர்களால் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்விநிறுவனங்களுக்கு செலுத்தப்பட



2008 ஏப்ரல் 17]

வேண்டிய கட்டாயக் கட்டணங்கள் அக்கல்வி நிறுவனங்களுக்கு நேரடியாக வழங்கப்படுகின்றன.

மேற்கூறப்பட்ட, மைய அரசின் கல்வி உதவித் தொகையைப் பெறும் மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம், பாலிடெக்னிக், சட்டம், வணிக நிருவாக முதுகலைப் பட்டம், பட்டயக் கணக்கியல், உயிர் அறிவியல் மற்றும் இதர தொழில் நுட்பம் சார்ந்த படிப்பினை மேற்கொள்ளும் மாணவ/மாணவியரின் கல்வி மேம்பாட்டிற்காக புத்தக வங்கித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் புத்தக வங்கிமூலம் ரூ. 2,400 முதல் ரூ.7,500 வரை மதிப்பிலான புத்தகங்கள் மாணவ/மாணவியர்க்குப் பயன்படும் வகையில் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்கென 2008-2009ஆம் ஆண்டில் ரூ. 138,29.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (இ) 10 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கான (Post-Matric) மாநில சிறப்பு உதவித் தொகைத் திட்டம்

மைய அரசின் கல்வி உதவித் தொகை பெற இயலாத கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ/மாணவியர்க்கு 10 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்காக (Post-matric) சிறப்பு உதவித் தொகைத் திட்டத்தை மாநில அரசு செயல்படுத்தி வருகிறது. இதன்படி விடுதியில் தங்காது 10 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பு பயிலும் மாணவ/மாணவியர்க்கு மாதம் ஒன்றிற்கு ரூ. 65 முதல் ரூ. 125 வரையில் பராமரிப்புப் படி மற்றும் கட்டாயக் கட்டணங்கள், படிப்புக்கு ஏற்றவாறு உதவித் தொகை வழங்கப்படுகிறது. விடுதியில் தங்கி கல்வி பயில்பவராக இருப்பின் மாதம் ஒன்றிற்கு ரூ. 115 முதல் ரூ. 280 வரையில் படிப்பிற்கு ஏற்றவாறு இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

மேலும், இவ்வுதவித் திட்டத்தின்கீழ், தொழிற்பயிற்சி மற்றும் இதர பயிற்சிகள் பெற 10ஆம் வகுப்பு தேர்ச்சி தேவையில்லாத இனங்களும் போஸ்ட் மெட்ரிக் படிப்பாகக் கருதப்பட்டு, அதற்குரிய உதவித் தொகை வழங்கப்படுகிறது.

மைய அரசு மற்றும் மாநில அரசின் இக்கல்வி உதவித் தொகைகள் அந்தந்தக் கல்வி நிறுவனத்தின்மூலமாக மாணவ/மாணவியர்க்கு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2008-2009ஆம் ஆண்டில் ரூ. 520.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 17

### 7. உயர் கல்வி சிறப்பு உதவித் தொகை

கல்விக் கடன் உதவித் தொகைத் திட்டம் மானியமாக மாற்றப்பட்டு "உயர் கல்வி சிறப்பு உதவித் தொகை" என வழங்கப்பட்டு வருகிறது. கல்வி நிலையம் சார்ந்த விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவியர்க்கு இந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் இளங்கலைப் பட்டப் படிப்பிற்காக ஆண்டொன்றுக்கு ரூ. 6,500-ம், முதுகலை பட்டப்படிப்பு மற்றும் தொழிற்கல்வி படிப்பிற்காக ஆண்டொன்றுக்கு ரூ.7,000-மும் வழங்கப்படுகிறது. மருத்துவப் படிப்பு பயிலும் மாணவ/மாணவியர்களை பொறுத்தவரை ஆண்டொன்றுக்கு ரூ. 7000-ல் 75 விழுக்காடு தொகை மானியமாகவும், 25 விழுக்காடு தொகை கடனாகவும் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்காக 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.1029.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, திருத்திய மதிப்பீட்டில் ரூ.1,170.50 இலட்சமாக உயர்த்தப்பட்டு 16,569 மாணவ/மாணவியர் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டம் 2008-2009 ஆம் ஆண்டில் ரூ 1,150.00 இலட்சத்தில் தோராயமாக 16,000 மாணவ/மாணவியர் பயனடையும் வகையில் செயல்படுத்தப்படும்.

### 8. வெளிநாடு சென்று உயர் கல்வி பயில உதவித் தொகை

தற்போது ஆராய்ச்சி மற்றும் முதுகலைப் பட்டப்படிப்பு நிலை குறிப்பாக பொறியியல், தொழில்நுட்பவியல் மற்றும் அறிவியல் போன்ற துறைகளில் வெளிநாடு சென்று மேற்படிப்பைத் தொடர இளைஞர்கள் விரும்புகின்றனர். அவர்களது விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் இந்த உதவித் தொகை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் பயன்பெற விரும்பும் பணியிலுள்ள மாணவ/மாணவியர் அல்லது அவரின் பெற்றோர் பாதுகாவலரின் மாத வருமானம் ரூ 12,000-க்கு மிகாமலிருக்க வேண்டும் என்ற நிபந்தனையோடு இந்த நிதியுதவி வழங்கப்படுகிறது.

### 9. பெண் கல்வி ஊக்குவிப்பு சிறப்புத் திட்டம்

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்தவந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி"

– மகாகவி பாரதியார்



2008 ஏப்ரல் 17]

பெண்கள் கல்வியில் சிறந்து, பட்டங்கள் பெற்று, நாட்டினை ஆள்வதற்கான சட்டம் இயற்றும் திறமை பெற்று, ஆண்களுக்கிணையாக வாழவேண்டும் என்ற மகாகவி பாரதியாரின் கனவை நனவாக்கிட இத்துறை, பெண் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

### (அ) பள்ளிச் சேர்க்கையை அதிகப்படுத்துதல்

பெண் கல்வி வளர்ச்சியின் காரணமாக இப்போது பெண்கள் பல்வேறு துறைகளிலும் நன்கு முன்னேறி வருகிறார்கள். எனவே, பள்ளிப் படிப்பின் தொடக்க நிலையிலிருந்தே ஆதி திராவிடர்/பழங்குடியின பெண் குழந்தைகளின் கல்வித் தரத்தை உயர்த்துவது அவசியமாகும். பெண் கல்வி ஊக்குவிப்பு சிறப்புத் திட்டத்தின்கீழ் ஆதி திராவிடர்/பழங்குடியின பெண் குழந்தைகளின் பள்ளிச் சேர்க்கையை 100 விழுக்காடாக உறுதிப்படுத்திடும் நோக்கத்தோடு "பெண் கல்வி ஊக்குவிப்புத் திட்டம்" செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரையில் கல்வி பயிலும் ஆதி திராவிடர்/பழங்குடியின பெண் குழந்தைகள் 60,000 பேருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 50 வீதம் 10 மாதங்களுக்கு ஊக்க உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டம் ஆதி திராவிட மாணவிகளைப் பொறுத்தவரையில் கல்வியில் பின்தங்கியுள்ள மாவட்டங்களான தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், விருதுநகர், காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், சேலம், நாமக்கல், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், கரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் வழங்கப்படுகிறது. பழங்குடியின மாணவிகளைப் பொறுத்தவரையில் சென்னையைத் தவிர அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் 2007-2008 ஆம் ஆண்டில் ரூ. 300.00 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது.

நடப்பு நிதி ஆண்டு 2008-2009-ல் இதற்காக ரூ. 300.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ஆ) இடை நிற்றலைத் தவிர்த்தல்

6 ஆம் வகுப்பில் சேர்ந்து கல்வி பயிலும் மாணவியர் கல்வியைத் தொடர ஊக்குவிக்கும் வகையில் 30,000 ஆதி திராவிடர்/பழங்குடியின மாணவியர்க்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 100 வீதம் 10 மாதங்களுக்கு சென்னையை தவிர மற்ற அனைத்து மாவட்டங்களிலும் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டம் 2007-2008 ஆம் ஆண்டில் ரூ. 300.00 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது.

[2008 ஏப்ரல் 17

நடப்பு நிதி ஆண்டு 2008-2009-ல் இதற்காக ரூ. 300.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

10. சிறந்த மாணவ/மாணவியருக்கு பரிசுத் தொகைகள் (மாநில அளவில்) அரசுத் தேர்வுகளில் மாணவ/மாணவியர் அதிக மதிப்பெண்கள் பெற்று உயர் கல்வி பயில்வதற்கு அவர்களை ஊக்குவிக்க பல்வேறு பரிசுத் தொகைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவ/மாணவியர்க்கு மாநில அளவில் பொதுப்பரிசுகள் பின்வருமாறு வழங்கப்படுகின்றன:—

| | | |
|---|---|---|
| 1. | பன்னிரெண்டாம் வகுப்பு | பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வில் மாநில அளவில் முதலாவதாக வரும் ஆதி திராவிடர்/பழங்குடியினர்/கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் ஒவ்வொன்றிலும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு பரிசு ரூ. 25,000 வீதம். |
| 2. | பத்தாம் வகுப்பு | பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதலாவதாக வரும் ஆதி திராவிடர்/ பழங்குடியினர்/கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் ஒவ்வொன்றிலும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு பரிசு ரூ. 10,000 வீதம். |
| 3. | பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வு மாநில அளவில் (25 பாடங்கள்) | பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் ஒவ்வொரு பாடத்திலும் (25 பாடங்கள்) முதல் மதிப்பெண் பெற்ற ஆதி திராவிடர்/பழங்குடியினர்/ கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் ஒவ்வொன்றிலும் ஒரு மாணவர் அல்லது ஒரு மாணவிக்கு பரிசு ரூ. 2,000 வீதம். |
| 4. | பத்தாம் வகுப்பு தேர்வில் மாநில அளவில் (ஐந்து பாடங்கள்) | பத்தாம் வகுப்பு தேர்வில் மாநில அளவில் ஒவ்வொரு பாடத்திலும் (5 பாடங்கள்) முதல் மதிப்பெண் பெற்ற ஆதி திராவிடர்/ பழங்குடியினர்/கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் ஒவ்வொன்றிலும் ஒரு மாணவர் அல்லது ஒரு மாணவிக்கு பரிசு ரூ. 1,000 வீதம். |



2008 ஏப்ரல் 17]

இத்திட்டத்திற்கென 2007-2008ஆம் ஆண்டில் ரூ. 3.75 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

நடப்பு நிதி ஆண்டு 2008-2009-ல் இதற்காக ரூ. 3.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**11. சிறந்த மாணவ/மாணவியருக்குப் பரிசுத் தொகைகள் (மாவட்ட அளவில்)**

மாவட்ட அளவில் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவ/ மாணவியர்க்கு பொதுப் பரிசுகள் பின்வருமாறு வழங்கப்படுகின்றன:—

| | | |
|---|---|---|
| 1 | பன்னிரெண்டாம் வகுப்பு | ஆதி திராவிடர்/பழங்குடியினர்/கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் ஆகிய மூன்று பிரிவினரில் அதிக மதிப்பெண் பெற்ற ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு பரிசு ரூ. 3,000 வீதம். |
| 2. | பத்தாம் வகுப்பு | (3 பரிசுகள்) |
| | முதல் பரிசு | ஆதி திராவிடர்/பழங்குடியினர்/கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் ஆகிய மூன்று பிரிவினரில் அதிக மதிப்பெண் பெற்ற ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு பரிசு ரூ. 1,000 வீதம் |
| | இரண்டாம் பரிசு | ஆதி திராவிடர்/பழங்குடியினர்/கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் ஆகிய மூன்று பிரிவினரில் அதிக மதிப்பெண் பெற்ற ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு பரிசு ரூ. 500 வீதம். |
| | மூன்றாம் பரிசு | ஆதி திராவிடர்/பழங்குடியினர் /கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் ஆகிய மூன்று பிரிவினரில் அதிக மதிப்பெண் பெற்ற ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு பரிசு ரூ. 300 வீதம். |

இத்திட்டத்திற்கென 2007-2008ஆம் ஆண்டில் ரூ. 3.01 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

நடப்பு நிதி ஆண்டு 2008-2009-ல் இதற்காக ரூ. 3.01 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 17

**12. முதலமைச்சரின் தகுதிப் பரிசுகள்**

பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் ஆதி திராவிடர்/பழங்குடியினர்/கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவர்களில் முதல் 1,000 பேருக்கும், மாணவிகளில் முதல் 1,000 பேருக்கும் அவர்களது மேற்படிப்பை தொடர்ந்து படித்தால் ஆண்டுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 1,500 வீதம் ஐந்து ஆண்டுகளுக்கு தகுதிப் பரிசு வழங்கப்படுகிறது. 2007-2008 ஆம் ஆண்டில் ரூ. 64.42 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 3,602 மாணவ/மாணவியர் பயன் பெற்றுள்ளனர்.

நடப்பு நிதி ஆண்டு 2008-2009-ல் இத்திட்டத்திற்கு ரூ. 64.42 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**13. அண்ணல் காந்தி நினைவு பரிசுத் தொகை**

பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் ஒவ்வொரு மாவட்டத்திலும் முதல் மதிப்பெண்கள் பெறும் இந்து ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவி இத்திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு அண்ணல் காந்தியடிகளின் நினைவாக இப்பரிசுத் தொகை அளிக்கப்பட்டு வருகிறது. இந்தப் பரிசுத் தொகை முதல் வருடத்திற்கு ரூ. 1,500 வீதமும், அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 1,000 வீதமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2007-2008 ஆம் ஆண்டில் 186 மாணவ/மாணவியர் பயன்பெறும் வகையில் ரூ. 2.36 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

நடப்பு நிதி ஆண்டு 2008-2009-ல் இத்திட்டத்திற்கு ரூ. 3.34 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**14. தகுதி வழிவகை பரிசுத் தொகை**

அண்ணல் காந்தி நினைவு பரிசுத் தொகை வழங்கப்படுவதுபோல் ஒவ்வொரு மாவட்டத்திலும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும், பழங்குடியின மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் இவ்வகை பரிசுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. 2007-2008 ஆம் ஆண்டில் ரூ. 0.90 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு திருத்திய மதிப்பீட்டில் ரூ.1.20 இலட்சமாக உயர்த்தப்பட்டு 113 மாணவ/மாணவியர் பயனடைந்துள்ளனர்.

நடப்பு நிதி ஆண்டு 2008-2009-ல் இத்திட்டத்திற்கு ரூ. 1.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2008 ஏப்ரல் 17]

**15. சிறப்புப் பரிசுத் தொகை திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் பட்டப் படிப்பு, முதுகலை பட்டப் படிப்பு, தொழிற்கல்வி படிப்புகளில் 60 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சிபெற்ற ஆதி திராவிடர்/பழங்குடியினர்/கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவ/மாணவியர்க்கு பரிசுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதன்படி பரிசுத் தொகையாக ரூ. 2,000 முதல் ரூ. 5,000 வரையில் மொத்தம் 550 மாணவ/மாணவியர்க்கு வழங்கப்படுகிறது. 2007-2008ஆம் ஆண்டில் 550 மாணவ/மாணவியர்க்கு இத்திட்டத்தின்கீழ் ரூ. 18.50 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

நடப்பு நிதி ஆண்டு 2008-2009-ல் இத்திட்டத்திற்கு ரூ.18.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**16. (அ) சிறந்த மாணவ/மாணவியர்க்கான ஊக்கத் தொகை**

இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆதி திராவிடர்/பழங்குடியினர்/கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் ஆகிய ஒவ்வொரு பிரிவிலும் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் இரண்டு மாணவர் மற்றும் இரண்டு மாணவியர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு முதல் ஆண்டுக்கு ரூ. 800-ம், அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளுக்கு ஓராண்டிற்கு ரூ. 960 வீதமும் அவர்கள் படிப்பினை தொடர்ந்தால் மட்டும் ஆறு ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

2007-2008 ஆம் ஆண்டில் ரூ. 8.16 இலட்சம் ஒதுக்கீட்டில் 348 மாணவ/மாணவியர் பயன்பெற்றுள்ளனர்.

நடப்பு நிதியாண்டு 2008-2009-ல் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**(ஆ) தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்தரக் கல்வி நிறுவனங்களில் பயில்வோர்க்கு உதவித் தொகை**

மைய அரசு 2007-2008ஆம் ஆண்டு முதல் உயர்தரக் கல்வி நிறுவனங்களில் பயிலும் ஆதி திராவிடர்/பழங்குடியின மாணவர்களுக்கு ஒரு புதிய "மைய அரசு உயர்தரக் கல்வி திட்டம்" (Central Sector Scholarship Scheme of Top-class Education for SCs/STs) ஒன்றை அறிமுகப்படுத்தி உள்ளது. இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் பொறியியல், மேலாண்மை, மருத்துவம், சட்டம் மற்றும் விமான

[2008 ஏப்ரல் 17

ஓட்டுனர் பயிற்சி போன்ற படிப்புகளை நடத்தும் 6 உயர்தரக் கல்வி நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் +2 படிப்பில் நல்ல மதிப்பெண்கள் பெற்று உயர்தரக் கல்வி நிறுவனங்களில் பயிலும் ஆதி திராவிடர்/பழங்குடியினர் மாணவர்களின் கல்வித் திறனை உயர்த்துவது ஆகும்.

எனவே, அவர்கள் பயிலும் கல்வி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய கல்விக் கட்டணம், திரும்பப் பெறமுடியாத கட்டணங்கள், புத்தகங்கள் மற்றும் கணினி ஆகியவற்றிற்காக ஏற்படும் செலவுத் தொகையை அந்தந்த நிறுவனங்களுக்கு மைய அரசு நேரடியாக அளித்து வருகிறது. இக்கல்வி உதவித் தொகை பெற பெற்றோர்/பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ. 2.00 இலட்சத்திற்கு மிகைப்படாமல் இருக்கவேண்டும். இந்த 6 உயர்தரக் கல்வி நிறுவனங்கள் மற்றும் உதவித் தொகை பெறும் ஆதிதிராவிட/பழங்குடியின மாணவர்களின் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:—

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | படிப்புகள் | உதவி பெறும் ஆதி திராவிடர் மாணவர்கள் எண்ணிக்கை | உதவி பெறும் பழங்குடியின மாணவர்கள் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | தேசிய தொழில்நுட்ப நிறுவனம், திருச்சிராப்பள்ளி | பொறியியல் | 10 | 5 | 15 |
| 2. | வேலூர் தொழில்நுட்ப நிறுவனம், வேலூர் | பொறியியல் | 10 | 5 | 15 |
| 3. | இந்திய தொழில்நுட்ப நிறுவனம், சென்னை | பொறியியல் | 10 | 5 | 15 |
| 4. | இந்திய தொழில்நுட்ப நிறுவனம், சென்னை | மேலாண்மை | 10 | 5 | 15 |
| 5. | அரசு மருத்துவக் கல்லூரி, வேலூர் | மருத்துவம் | 10 | 5 | 15 |
| 6. | சென்னை விமான ஓட்டுநர் பயிற்சி நிறுவனம், மீனம்பாக்கம், சென்னை. | விமான ஓட்டுநர் பயிற்சி | 5 | 5 | 10 |
| | மொத்தம் | | | | 85 |



2008 ஏப்ரல் 17]

**17. இலவச சிலேட்டுகள் வழங்குதல்**

இத்துறை நடத்தும் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பில் பயிலும் அனைத்து மாணவ/மாணவியர்க்கும் பிளாஸ்டிக் சட்டத்திலான சிலேட்டுகள் ஆண்டுதோறும் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. இதற்காக 2007-2008 ஆம் ஆண்டில் ரூ. 2.70 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டு 2008-2009-ல் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**18. இலவச பாடப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்கும் திட்டம்**

ஆதி திராவிடர்/பழங்குடியினர் நலப் பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ/மாணவியர்க்கும் இலவசமாகப் பாடப் புத்தகங்களும், 3 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியர்க்கு இலவசமாகக் குறிப்பேடுகளும் வழங்கப்படுகின்றன. பள்ளிக் கல்வித் துறைப் பள்ளிகளில் பயிலும் ஆதி திராவிடர்/பழங்குடியினர்/கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவ/மாணவியரைப் பொறுத்தமட்டில் 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியர்க்கு இலவசமாக பாடப் புத்தகங்களும், 4 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியர்க்கு இலவசமாகக் குறிப்பேடுகளும் வழங்கப்படுகின்றன.

நடப்பு நிதியாண்டு 2008-2009-ல் இத்திட்டத்திற்கு ஆதி திராவிடர்/பழங்குடியின பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்க்கு ரூ. 500.00 இலட்சமும், பொதுப் பள்ளிகளில் பயிலும் இவ்வின மாணவ/மாணவியர்க்கு ரூ. 1,819.88 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**19. இலவசச் சீருடைகள் வழங்கும் திட்டம்**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைப் பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ/மாணவியர்க்கும் மற்றும் ஆதி திராவிடர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் அனைத்து மாணவ/மாணவியர்க்கும், ஆண்டொன்றுக்கு இரண்டு ஜோடி சீருடைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. 2006-2007 ஆம் கல்வியாண்டு முதல் மாணவ/மாணவியர்க்கு வழங்கப்படும் சீருடைகளின் வடிவமைப்பில் மாறுதல் செய்து 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவிகளுக்கு சுடிதாரும், 8 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முழுக்கால் சட்டையும் (Full Pant) வழங்கப்படுகிறது.

2007-2008 ஆம் நிதியாண்டில் சீருடைகள் வழங்குவதற்கென ரூ. 970.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பின்னர் திருத்திய

மதிப்பீட்டில் ரூ. 1,333.18 இலட்சமாக உயர்த்தப்பட்டு 36,008 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளனர்.

நடப்பு நிதியாண்டு 2008-2009-ல் இத்திட்டத்திற்கென ரூ. 1,333.18 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 20. பள்ளிகளுக்கும், விடுதிகளுக்கும் இலவசமாகப் பொது அறிவு பத்திரிகைகள் வழங்கும் திட்டம்

இந்திய ஆட்சிப் பணி மற்றும் அரசு உயர் பணிகளுக்கான தேர்வுகள் எழுத ஆற்றல் பெற உதவும்பொருட்டு, மாணவர்களின் பொது அறிவை வளர்க்கும் நோக்கத்தை கருத்தில் கொண்டு, "Competition success Review" போன்ற பொது அறிவு பத்திரிகைகளை ஆதி திராவிடர்/பழங்குடியினர் நலத் துறையின் அனைத்து உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கும் மற்றும் விடுதிகளுக்கும் வழங்கும் திட்டம் முதல் முறையாக 2006-2007 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 2007-2008 ஆம் ஆண்டில் ரூ. 6.80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு திருத்திய மதிப்பீட்டில் ரூ. 14.94 இலட்சமாக உயர்த்தப்பட்டு செலவிடப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டு 2008-2009-ல் இத்திட்டத்திற்கென ரூ. 14.56 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 21. இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டம்

அரசு/அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் +1 மற்றும் +2 மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் சுயநிதி அடிப்படையில் நடத்தப்படும் +1 மற்றும் +2 வகுப்புகளில் பயிலும் மாணவ/மாணவியர்க்கு இலவச மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.1,502.79 இலட்சம் செலவில் 71,012 ஆதி திராவிடர்/பழங்குடியினர்/கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவியர்க்கும் ரூ.1,397.35 இலட்சம் செலவில் 63,132 ஆதி திராவிடர்/பழங்குடியினர்/கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவர்களுக்கும் இலவச மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

2008-2009 ஆம் ஆண்டிற்கு மாணவியர்க்கு மிதிவண்டி வழங்க ரூ.1,488.76 இலட்சமும், மாணவருக்கு மிதிவண்டி வழங்க ரூ. 1,380.53 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 22. உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வி

இத்திட்டத்தின்கீழ் இத்துறையால் நடத்தப்படும் 77 மேல்நிலைப் பள்ளிகளில், 68 மேல்நிலைப் பள்ளிகளுக்கு கணிப்பொறி அறிவியல் பாடப்பிரிவுகள் துவக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பள்ளிகளிலும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.



## 23. 10-ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ/மாணவியரை நற்பெயர் பெற்ற பள்ளிகளில் சேர்த்தல்

ஆதி திராவிடர்/பழங்குடியின மாணவர்கள் பொருளாதார வசதியின்மையால் தனியார் பள்ளிகளில் சேர இயலாமலும், அகில இந்திய அளவில் நடைபெறும் பொதுத் தேர்வுகளுக்கான ஆற்றல் பெற இயலாமலும் உள்ள நிலையினைத் தவிர்க்கும் பொருட்டு அரசு/மாநகராட்சி/நகராட்சிப் பள்ளிகளில் பயின்று 10 ஆம் வகுப்புத் தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் மாணவ/மாணவியரில் குடும்ப ஆண்டு வருமானம் ரூ. 1,00,000க்குள் உள்ள மாணவ/மாணவியரில் ஒரு மாவட்டத்தில் 10 பேர் வீதம் மொத்தம் 300 மாணவ/மாணவியர் தேர்வு செய்யப்பட்டு நற்பெயர் பெற்றுள்ள தனியார் பள்ளிகளில் +1 மற்றும் +2 படிக்க வைத்து திறன் வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் 2007-2008 ஆம் ஆண்டில் 297 மாணவர்கள் தற்போது +1 படித்து வருகின்றனர்.

நடப்பாண்டு 2008-2009-ல், மேற்குறிப்பிட்டுள்ள +2 படிக்க உள்ள 297 மாணவர்களுடன், +1-ல் சேர்க்க உள்ள 310 மாணவர்களையும் சேர்த்து (31 மாவட்டங்கள் x 10 மாணவர்கள்) இத்திட்டம் ரூ.108.00 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட உள்ளது.

## 24. ஆங்கில மொழி ஆய்வுக் கூடம்

ஆதி திராவிடர்/பழங்குடியினர் பள்ளிகளில் பயிலும் ஆதி திராவிடர்/பழங்குடியினர்/கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவர்களின் ஆங்கில அறிவும், உச்சரிப்புத் திறனும் குறைவாக உள்ளதால் பொதுத் தேர்வில் ஆங்கிலப் பாடத்தில் மதிப்பெண் குறைவாகப் பெறுவதைத் தவிர்க்கும் பொருட்டு, 2007-2008 ஆம் ஆண்டில் 30 ஆதி திராவிடர்/பழங்குடியினர் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் பள்ளி ஒன்றுக்கு ரூ. 1.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ. 30.00 இலட்சம் செலவில் ஆங்கில மொழி ஆய்வுக்கூடம் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

## 25. விடுதிகள்

கிராமப் பகுதிகளில் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ/மாணவியர் தங்கள் படிப்பில் கவனம் செலுத்தி படிப்பினை தொடரும்பொருட்டு அவர்களை ஊக்கப்படுத்த விடுதி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2007-2008 ஆம் ஆண்டின்படி ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கீழ் இயங்கிவரும் விடுதிகளின் விவரம்:—

[2008 ஏப்ரல் 17

| விடுதிகளின் வகைப்பாடு | விடுதிகளின் எண்ணிக்கை | விடுதி மாணவ/மாணவியர்களின் எண்ணிக்கை | அரசு கட்டடத்தில் இயங்கும் விடுதிகள் | வாடகை கட்டடத்தில் இயங்கும் விடுதிகள் |
|---|---|---|---|---|
| ஆதி திராவிடர் நலவிடுதிகள் | 1,204 | 82,636 | 1,030 | 174 |
| பழங்குடியினர் நல விடுதிகள் | 37 | 1,985 | 27 | 10 |
| மொத்தம் | 1,241 | 84,621 | 1,057 | 184 |

2007-2008 ஆம் ஆண்டு முதல் ஆதி திராவிடர்/பழங்குடியினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் அனைத்து மாணவ/மாணவியர்க்கும், உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்க்கும், இரண்டு ஆண்டுகளுக்கொருமுறை போர்வைகள் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ரூ. 110.30 இலட்சம் செலவில் போர்வைகள் வழங்கப்பட்டு 1,06,055 மாணவ/மாணவியர் பயனடைந்து வருகின்றனர்.

## 26. இடைநிலை ஆசிரியர்கள் அனைவருக்கும் பணியிடைப் பயிற்சி

ஆசிரியர்களின் கல்வி மற்றும் கற்பிக்கும் திறனை மேம்படுத்த "அனைவருக்கும் கல்வி" என்ற "சர்வ சிக்ஷா அபியான்" திட்டத்தின் மூலம் பள்ளிக் கல்வித் துறையுடன் சேர்ந்து செயலாற்ற இத்துறை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

## 27. ஆதி திராவிடர் துணைத் திட்டம்

பல்வேறு திட்டங்கள்மூலம் ஆதி திராவிட மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என அரசு கருதுகிறது. இதற்கேற்ப, ஆண்டு திட்ட நிதியில் மக்கள் தொகைக்கேற்ப நிதி ஒதுக்கப்பட வேண்டுமென மைய அரசு அறிவுறுத்தியுள்ளது. இத்திட்டமானது 21 செயலாக்கத் துறைகள்மூலம் செயல்படுத்தப்படுகிறது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து ஆதி திராவிடர் துணைத் திட்டமானது, பகுக்கப்படும் (Divisible) மற்றும் பகுக்கப்படாத (Indivisible) திட்டங்களாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு துறையிலும், ஒருங்கிணைக்கும் அலுவலர் (Nodal Officer) நியமனம் செய்யப்பட்டு இத்திட்டங்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.



2008 ஏப்ரல் 17]

2007-2008 ஆம் ஆண்டின் மொத்த திட்ட நிதி ஒதுக்கீடான ரூ. 14,000 கோடியில், பகுக்கப்படும் திட்டங்களின்கீழ் ஆதி திராவிடர்களுக்கான துணைத் தலைப்பு 789-ன் கீழ் ரூ.1,638.19 கோடி ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பின்னர் அது ரூ. 1,649.84 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், பகுக்கப்படாத திட்டத்தின்கீழ் ரூ. 1,707.04 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கென மொத்தம் ரூ. 3,356.88 கோடியாக 2007-2008 ஆம் ஆண்டு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

2008-2009 ஆம் ஆண்டின் மொத்த நிதி ஒதுக்கீடான ரூ. 16,000.00 கோடியில், பகுக்கப்படும் (Divisible) திட்டங்களில், ஆதி திராவிடர் துணைத் தலைப்பு 789-ன் கீழ் ரூ. 2,365.55 கோடி ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் பகுக்கப்படாத (Indivisible) திட்டங்களில் ரூ. 674.45 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட உள்ளது. இத்திட்டத்திற்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூ. 3,040.00 கோடியாக நிர்ணயம் செய்யப்படவுள்ளது.

2005-2006 முதல் 2007-2008 வரையிலான ஆதி திராவிடர் துணைத் திட்டத்தின் செலவின விவரங்கள் பின்வருமாறு :

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | மாநில ஆண்டு திட்ட ஒதுக்கீடு | திட்டமிடப்பட்ட ஆதி திராவிடர் துணைத்திட்ட ஒதுக்கீடு | செலவினம் | | | மாநில ஆண்டு திட்ட ஒதுக்கீட்டுடன் செலவின விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|
| | | | பகுக்கப்படும் இனம் | பகுக்கப்படாத இனம் | மொத்தம் | |
| 2005–2006 | 910000.00 | 210455.00 | 55481.74 | 118203.08 | 173684.82 | 19.09% |
| 2006–2007 | 1250000.00 | 311785.43 | 124368.65 | 121935.27 | 246303.92 | 19.70% |
| 2007–2008 (31-12-2007 வரையிலான 3 காலாண்டு முடிய) | 1400000.00 | 335688.80 | 120999.84 | 45291.46 | 166291.30 | 11.88% |

[2008 ஏப்ரல் 17

## 28. பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

### (அ) மைய அரசின் சிறப்பு நிதியுதவித் திட்டம்

ஆதி திராவிடர் துணைத் திட்டத்தின்கீழ் மைய அரசு ஒவ்வொரு ஆண்டும் சிறப்பு மைய நிதியுதவி வழங்குகிறது. ஆதி திராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக மாநில அரசு வழங்கும் நிதிகளுக்குக் கூடுதலாக வழங்கப்படும் தொகையாகும். இந்த நிதி, பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்த தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்திற்கு அளிக்கப்படுகிறது.

2007-2008 ஆம் ஆண்டிற்கு நிலம் வாங்கும் திட்டம், மகளிர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள், தனி நபர் பயனாளிகளுக்கான நிதி உதவி, தொழிற் பயிற்சி, மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமை நிதி, சிறப்புப் பொருளாதாரத் திட்டங்கள் மற்றும் இளைஞர்களுக்கான சுய தொழில் வேலை வாய்ப்புத் திட்டம், தொழிற்சாலை பராமரிப்பு, பின்னலாடை நெய்தல், இந்திய ஆட்சிப் பணி ஆரம்ப நிலை தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு முதன்மைத் தேர்விற்கு முந்தைய பயிற்சிக்காக நிதியுதவி அளித்தல் போன்ற திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2005-2006 முதல் 2007-2008 முடிய வழங்கப்பட்ட நிதி மற்றும் செலவின விவரம் பின்வருமாறு அளிக்கப்படுகிறது:—

| வருடம் | மைய அரசு நிதி உதவி விடுவிக்கப்பட்டது (ரூபாய் இலட்சத்தில்) | நிதி உதவி பயன்படுத்தியது (ரூபாய் இலட்சத்தில்) | பயனடைந்தோர் |
|---|---|---|---|
| 2005–2006 | 4306.62 | 4306.62 | 154040 |
| 2006–2007 | 4482.57 | 4482.57 | 117438 |
| 2007–2008 | 4897.99 | 4897.99 | 119744 |



2008 ஏப்ரல் 17]

### (ஆ) மாநில அரசின் சிறப்பு நிதியுதவித் திட்டம்

ஒவ்வோர் ஆண்டும் ஆதி திராவிடர் பொருளாதார வளர்ச்சியினை கருத்திற் கொண்டு அவர்களின் மேம்பாட்டிற்கான திட்டங்களை செயல்படுத்த மைய அரசு ரூ. 50.00 கோடி வரை மானியம் வழங்குகிறது. இதில் இந்து ஆதி திராவிடர்கள் மட்டுமே பயனடைவார்கள். இது கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவியாக இல்லை. இதனை கருத்திற் கொண்டு, ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்படும் இச்சலுகைகள் இந்து ஆதி திராவிடர்களுக்கு மட்டுமன்றி மதம் மாறிய கிருத்துவ ஆதி திராவிடர்களுக்கும் கிடைத்திட தமிழகத்தின் வரலாற்றிலேயே முதன் முறையாக இவ்வரசு "மாநில அரசின் சிறப்பு நிதியுதவித் திட்டம்" என்ற திட்டத்தை 2006-2007 ஆம் ஆண்டு உருவாக்கியது. இத்திட்டத்திற்கென 2007-2008 ஆம் ஆண்டில் ரூ. 25.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தாட்கோ மூலம் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

நடப்பு நிதியாண்டு 2008-2009-ல் இத்திட்டத்திற்கு ரூ. 25.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (இ) இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் மற்றும் ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள்

இத்திட்டத்தின்கீழ் வீடற்ற ஆதி திராவிடர்/பழங்குடியினர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட நில எடுப்புச் செய்து வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு வருகிறது. இதற்கான நிலங்கள் தனியார் பேச்சுவார்த்தை மூலம் மற்றும் தமிழ்நாடு நில எடுப்புச் சட்டம் 31/78ன்படி நில எடுப்பு செய்யப்பட்டு பட்டா வழங்கப்பட்டு வருகிறது. இதற்கென கிராமப்புறங்களில் ரூ. 16,000 எனவும், நகர்ப் புறங்களில் ரூ. 24,000 எனவும் ஆண்டு வருமானமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2007-2008 ஆம் ஆண்டு உயர் இழப்பீட்டுத் தொகை, அடிப்படை வசதி மற்றும் வீட்டுமனை வழங்க ரூ. 1,15.5.89 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை 12,740 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டு 2008-2009-ல் இத்திட்டத்திற்கென ரூ. 1,154.81 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 17

## 29. சமூக மேம்பாட்டுத் திட்டங்கள்

### (அ) சமுதாயக் கூடங்கள்

பல்வேறு சமூக நிகழ்ச்சிகள், குறிப்பாக சமுதாய விழாக்கள், கூட்டங்கள் மற்றும் திருமணங்கள் நடத்துவதற்கும், சமுதாயக் கூடங்கள் தேவைப்படுகின்றன. இதனைக் கருத்தில் கொண்டு ஆதி திராவிடர் குடியிருப்புகளில் சமுதாயக் கூடங்கள் கட்டப்படும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. 2007-2008 ஆம் ஆண்டில் ரூ. 80.00 இலட்சம் மதிப்பீட்டில் 8 சமுதாயக் கூடங்கள் கட்ட இந்த அரசு ஆணையிட்டு கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நடப்பு நிதியாண்டு 2008-2009-ல் இத்திட்டத்திற்கென ரூ. 14.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ஆ) மயானங்கள் மற்றும் பாதை வசதி

மயான வசதி மற்றும் மயானப் பாதைகள் அமைத்துக் கொடுக்க இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இத்திட்டத்திற்குத் தேவையான நிலத்தினை வாங்குவதற்கும், கையகப்படுத்துவதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஊராட்சி ஒன்றியங்களும் தமது நிதியிலிருந்து ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தருகின்றன. இதற்காக குடிநீர் வசதிக்கு 15 விழுக்காடு, இணைப்புச் சாலை வசதிக்கு 10 விழுக்காடு இத்துறையின் பங்குத் தொகையாக வழங்கப்படுகின்றன.

நடப்பாண்டு 2008-2009-ல் இத்திட்டத்திற்கென ரூ. 72.94 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (இ) ஈமச் சடங்குக்கு உதவித் தொகை

ஆதி திராவிடர்/பழங்குடியினர்/கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் குடும்பத்தில் இறப்பு ஏற்பட்டால் ஈமச் சடங்கிற்கான செலவினை மேற்கொள்ள நிதி உதவியாக ரூ. 500/- வழங்கப்படுகிறது. இதற்கான ஆண்டு வருமான வரம்பு ரூ. 24,000/- ஆகும். இத்திட்டத்தின் கீழ் 2007-2008 ஆம் ஆண்டில் ரூ. 283.26 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டு 2008-2009-ல் இத்திட்டத்திற்கென ரூ. 283.26 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2008 ஏப்ரல் 17]

## 30. சாதிச் சான்றிதழ்கள்

ஆதி திராவிடர்கள்/பழங்குடியினர்களுக்கான சாதிச் சான்றிதழ்கள் உரிய வட்டாட்சியர்களால் வழங்கப்பட்டு வந்தன. 11-11-1989 முதல் அனைத்துப் பழங்குடியினருக்கும் சாதிச் சான்றிதழ் வழங்கும் அதிகாரம் உரிய வருவாய் கோட்டாட்சியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு அரசியல் அமைப்பின்படி அளிக்கப்பட்டுள்ள இடஒதுக்கீட்டை, போலியான சாதிச் சான்றுகள் பெற்று இதர இனத்தவர் கல்வி நிறுவனங்களில் சேருதல், பொதுப் பணிகளில் நியமனம் பெறுதல்மூலம் உண்மையான ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் பாதிக்கப்படுகின்றனர். எனவே, அவ்வாறு அளிக்கப்பட்ட சான்றிதழ்கள் மெய்த்தன்மை உடையனவா என்று ஆய்வு செய்தல் இன்றியமையாததாகும். இதற்கென உச்ச நீதிமன்றத்தின் நெறிமுறைகளின் அடிப்படையில் அரசு, மாவட்ட அளவில் விழிப்புணர்வுக் குழுவும், மாநில அளவில் கூர்நோக்குக் குழுவும் அமைத்துள்ளது. இக்குழுக்களில் ஒரு மானுடவியல் வல்லுநர் (Anthropologist) சேர்க்கப்பட்டுள்ளார். வட்டாட்சியர் வழங்கிய ஆதி திராவிடர் சான்றிதழ்களை மாவட்ட அளவிலான விழிப்புணர்வுக் குழுவும், கோட்டாட்சியர் வழங்கிய பழங்குடியினர் சாதிச் சான்றிதழ்களை மாநில அளவிலான கூர்நோக்குக் குழுவும் ஆய்வு செய்து வருகின்றன.

## 31. குடியுரிமைப் பாதுகாப்பு

### (அ) தீண்டாமை ஒழிப்பு

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு எதிராக நிகழும் தீண்டாமை மற்றும் வன்கொடுமைகளைத் தடுக்க அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்காக, 1955 ஆம் ஆண்டு குடியுரிமை பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1989 ஆம் ஆண்டு வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம் ஆகியவை உருவாக்கப்பட்டு அவைச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்கென காவல் துறைத் தலைவர் (சமூக நீதி மற்றும் மனித உரிமைகள்) அவர்கள் தலைமையின்கீழ் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு ஒன்று சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. மேலும், இவ்விரு சட்டங்களின்கீழ் தொடுக்கப்பட்ட வழக்குகளை விசாரிக்க முதல் நிலை சிறப்பு அமர்வு நீதிபதிகளைக் கொண்ட 4 சிறப்பு நீதி மன்றங்கள் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் இயங்கி வருகின்றன. மற்ற மாவட்டங்களில் குற்றவியல் அமர்வு நீதிமன்றங்களுக்கு இவ்வழக்குகளை விசாரணை செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், கலவரங்களால் பாதிக்கப்படும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு நிதி உதவி வழங்கும் வகையில் நடப்பு நிதியாண்டு 2008-2009-ல் இத்திட்டத்திற்கு ரூ. 225.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

**(ஆ) தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம், மனித நேய வார விழா மற்றும் சமபந்தி விருந்து**

தீண்டாமையின் தீமை குறித்து பொதுமக்களுக்கு எடுத்துரைக்கப் படுகிறது. தீண்டாமை ஒழிப்பு தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படும் வகையில் குறுந்திரைப்படங்கள் கிராமங்களில் திரையிடப்படுகின்றன.

மனித நேய வார விழா ஒவ்வோர் ஆண்டும், அனைத்து மாவட்டங்களிலும் ஜனவரி 24 முதல் 30 ஆம் நாள் வரை பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடத்தப்படுகிறது. வில்லுப்பாட்டு கலைஞர்கள்மூலம் பொதுமக்களுக்குத் தீண்டாமை ஒழிப்பு குறித்து விளம்பரப்படுத்தப்படுகிறது.

மேலும், சமபந்தி விருந்து ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 26, ஆகஸ்டு 15, அக்டோபர் 2 அல்லது அந்தந்த மாவட்டங்களில் முக்கியத்துவம் வாய்ந்த நாட்களில் ஏற்பாடு செய்யப்படுகிறது. மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள சென்னையில் ஒரு விளம்பரப் பிரிவும், திருச்சிராப்பள்ளியில் ஒரு விளம்பரப் பிரிவும் செயல்பட்டு வருகின்றன.

இதற்காக நடப்பு நிதியாண்டு 2008-2009-ல் இத்திட்டம் ரூ. 40.49 இலட்சம் செலவில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**(இ) தீண்டாமை ஒழிப்பில் சிறந்த கிராமங்களைத் தேர்ந்தெடுத்தல்**

இத்திட்டத்தின்கீழ், பொதுமக்கள் நல்லிணக்கத்துடனும் அமைதியுடனும் வாழ ஊக்குவிக்கபபடுகின்றனர். ஒவ்வொரு மாவட்டத்திலும் தீண்டாமையைக் கடைப்பிடிக்காமல் பொது மக்கள் நல்லிணக்கத்துடன் வாழும் ஒரு கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டு அக்கிராமத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகையைக் கொண்டு அக்கிராமத்தின் முன்னேற்றத்திற்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.29.00 இலட்சம் செலவு செய்யப்பட்டது.

நடப்பு நிதியாண்டு 2008-2009-ல் இத்திட்டத்திற்கென ரூ. 29.01 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**(எ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை, இலக்கிய மேம்பாட்டு அமைப்பு**

ஆதி திராவிடர்/பழங்குடியினர் தொடர்பான கலை, கலாச்சாரம், இலக்கியம் போன்ற படைப்புகளை வெளிக்கொணரும் படைப்பாளர்களின் திறனை ஊக்குவிக்கவும், இவை குறித்த ஆராய்ச்சியை மேற்கொள்ளவும் "ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டு அமைப்பு" என ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர் /பழங்குடியினர்/கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களின் சிறந்த படைப்புகளை வெளியிட ஒவ்வோர் ஆண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 எழுத்தாளர்களுக்கும், ஆதி திராவிடர்களின் பிரச்சினை பற்றி எழுதும் ஆதி திராவிடர் அல்லாதவர் ஒருவருக்கும் தலா ரூ. 20,000 வீதம் நிதியுதவி அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டிற்கு 11 எழுத்தாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள்.

நடப்பு நிதியாண்டு 2008-2009-ல் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**32. கொத்தடிமை ஒழிப்பு**

கொத்தடிமைத் தொழிலாளர் முறையை அறவே ஒழிக்க இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. தேசிய அளவில் கொத்தடிமை முறையை ஒழிப்பதற்காக 1976 ஆம் ஆண்டு கொத்தடிமை ஒழிப்புச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் அதே ஆண்டு முதல் தமிழகத்திலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கொத்தடிமையில் சிக்கியுள்ளவர்களை விடுவித்து அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. கொத்தடிமை ஒழிப்புச் சட்டத்தை மாநிலத்தில் திறம்பட நிறைவேற்றிட அந்தந்த மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு மாவட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. மாநில அளவில் தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு உயர்மட்டக் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 13,609 கொத்தடிமைத் தொழிலாளர்கள் விடுவிக்கப்பட்டு ரூ.16.54 கோடி செலவில் மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டு 2008-2009-ல் இத்திட்டத்திற்கென ரூ. 110.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 17

**கொத்தடிமைத் தொழிலாளர்கள் மறு கணக்கெடுப்பு**

கொத்தடிமைத் தொழிலாளர்கள் குறித்து மைய அரசின் நிதியுதவியுடன் தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் ரூ.60.00 இலட்சம் செலவில் மறு கணக்கெடுப்பு மேற்கொள்வதற்கு அரசாணை வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், ரூ.15.00 இலட்சம் செலவில் காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் கொத்தடிமைத் தொழிலாளர்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள ஆணைகள் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

## II பழங்குடியினர் நலன்

பழங்குடியினர் நலனுக்காக தனியே ஒரு இயக்ககம் ஏப்ரல் 2000 முதல் செயல்பட்டு வருகிறது. பழங்குடியினர் நல இயக்ககம் பழங்குடியினர்கள் அதிகம் வாழும் மாவட்டங்களில் தனிக் கவனம் செலுத்தி வருகிறது. மாநிலத்தின் 36 வகை பழங்குடியினர்களில் 6 வகை பழங்குடியினர் அதாவது தோடா, கோட்டா, குரும்பாஸ், இருளர், பனியன், காட்டுநாயக்கன் ஆகியோர் பண்டைய பழங்குடியினர்களாக கண்டறியப்பட்டுள்ளனர். மேற்கண்ட பழங்குடியினர் தவிர இதர பழங்குடியினர் பரவலாக வசித்து வருவதால் இவர்கள் பரவி வாழும் பழங்குடியினர் என அழைக்கப்படுகின்றனர். மொத்த மக்கட்தொகையில் 50 விழுக்காடுக்கும் அதிகமாக பழங்குடியினர் வாழும் பகுதிகள் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதியென அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டப் பகுதி சேலம், நாமக்கல், விழுப்புரம், திருவண்ணாமலை, திருச்சிராப்பள்ளி, தருமபுரி மற்றும் வேலூர் ஆகிய 7 மாவட்டங்களில் உள்ளது.

### 33. பழங்குடியினர் துணைத் திட்டம்

பழங்குடியினர்களின் சமூகப் பொருளாதார நிலையினை உயர்த்தும் வகையில் தமிழக அரசு பழங்குடியினர் துணைத் திட்டத்தினை 1976-1977 முதல் செயல்படுத்தி வருகிறது. இதன்படி அனைத்துத் துறைகளும் தங்களது ஆண்டு திட்ட நிதி (Annual Plan Outlay) ஒதுக்கீட்டில், பழங்குடியினர் மக்கட்தொகை விகிதாச்சாரத்திற்கு ஏற்ப நிதியினை ஒதுக்கீடு செய்து, வளர்ச்சித் திட்டங்கள் முழுமையாக பழங்குடியினர் மக்களுக்குச் சென்றடைவதை உறுதி செய்கிறது.



2008 ஏப்ரல் 17]

2001 ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்புப்படி தமிழ்நாட்டில் பழங்குடியின மக்கள் 6.51 இலட்சம் உள்ளனர். இம்மக்கட்தொகை மொத்த மக்கள் தொகையில் 1.04 விழுக்காடு ஆகும். இத்திட்டமானது 21 செயலாக்கத் துறைகள்மூலம் செயல்படுத்தப்படுகிறது. 10-வது ஐந்தாண்டுத் திட்டம் முதல் பழங்குடியினர் துணைத் திட்டமானது பகுக்கப்படும் (Divisible) மற்றும் பகுக்கப்படாத (Indivisible) திட்டங்களாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு துறையிலும் ஒருங்கிணைக்கும் அலுவலர் (Nodal Officer) நியமனம் செய்யப்பட்டு இத்திட்டங்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

2008-2009 ஆம் ஆண்டின் மொத்த திட்ட நிதி ஒதுக்கீடான ரூ. 16,000.00 கோடியில் பகுக்கப்படும் (Divisible) திட்டங்களில், பழங்குடியினருக்கான துணைத் தலைப்பு 796-ன்கீழ் ரூ.32.11 கோடி, பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் பகுக்கப்படாத (Indivisible) திட்டங்களில் ரூ.134.29 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட உள்ளது. இத்திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.166.40 கோடியாக நிர்ணயம் செய்யப்படவுள்ளது.

2005-2006 முதல் 2007-2008 வரையிலான பழங்குடியினர் துணைத் திட்டத்தின் செலவின விவரங்கள் பின்வருமாறு:

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | மாநில திட்ட மதிப்பீடு | பழங்குடியினர் துணைத் திட்டம் | செலவினம் | | | மாநில திட்ட மதிப்பீட்டினை பொறுத்த செலவினத்தின் விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|
| | | | பகுக்கப்படும் இனம் | பகுக்கப்படாத இனம் | மொத்தம் | |
| 2005–2006 | 910000.00 | 16728.94 | 2452.97 | 7730.37 | 10183.34 | 1.12% |
| 2006–2007 | 1250000.00 | 22567.64 | 2458.33 | 10713.18 | 13171.51 | 1.05% |
| 2007–2008 (31-12-2007 வரையிலான 3 காலாண்டு முடிய) | 1400000.00 | 26386.11 | 1469.85 | 4730.70 | 6200.55 | 0.44% |

[2008 ஏப்ரல் 17

## 34. பழங்குடியினருக்கான அடிப்படை வசதிகள்

### (அ) வீட்டு வசதித் திட்டம்

மலைப் பகுதி மற்றும் சமவெளிப் பகுதியில் வாழும் பழங்குடியினர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக அரசு இம்மக்களுக்கு வீட்டு வசதித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இதன்படி ஆண்டுதோறும் சமவெளிப் பகுதிகளில் ஒரு வீட்டிற்கு ரூ.37,000/- வீதமும், மலைப் பகுதிகளில் ரூ.39,500/- வீதமும் செலவினம் செய்து பழங்குடியினர்களுக்கு வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. இத்திட்டத்திற்கான முழு செலவினமும் அரசால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. 2007-2008 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் 46 வீடுகள் கட்டுவதற்காக ரூ.16.80 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டு 2008-2009-ல் இத்திட்டத்திற்கென ரூ.16.80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ஆ) குடிநீர் வசதி

பழங்குடியினர் வாழும் பகுதிகளில் குடிநீர் வசதி தேவைப்படும் இடங்கள் கண்டறியப்பட்டு அதற்கான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இதற்காக ஒவ்வோர் ஆண்டும் நிதி உதவி செய்யப்படுகிறது. 2007-2008 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் 2 மாவட்டங்களில் (விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை) உள்ள 7 பழங்குடியினர் குடியிருப்புகளில் குடிநீர் வசதி செய்ய ரூ. 32.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டு 2008-2009-ல் இத்திட்டத்திற்கென ரூ.32.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (இ) பொருளாதார மேம்பாடு

பழங்குடியின மக்களின் விளைபொருட்களை விற்பனை செய்ய வகை செய்வதோடு மட்டுமின்றி குறுகிய கால மற்றும் நீண்ட காலக் கடன்கள் வழங்குவதற்கும், பழங்குடியினருக்குத் தேவையான நுகர் பொருட்கள் நியாயமான விலையில் கிடைக்க வழிவகை செய்வதற்கும், பெரிய அளவிலான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் (LAMP Societies) ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்போது தமிழ்நாட்டில் 17 சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.



2008 ஏப்ரல் 17]

நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் பழங்குடியினர்களுக்கு வேலைவாய்ப்பில் வழிகாட்டும் வகையில் ஒரு தொழில் நெறி வழிகாட்டு மையம் செயல்பட்டு வருகிறது.

பழங்குடியினர் நல்வாழ்வைக் கருத்தில் கொண்டு 25 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 76 துணை சுகாதார நிலையங்களும், 7 சித்த மருத்துவமனைகளும், 5 அரசு மருந்தகங்களும் மற்றும் ஒரு நடமாடும் சித்த மருத்துவ நிலையமும், பழங்குடியினர் பகுதியில் அவர்களின் முன்னேற்றத்திற்காகச் செயல்பட்டு வருகின்றன.

### (ஈ) குடும்ப வருவாய் ஈட்டித் தரும் திட்டங்கள்

பரவி வாழும் பழங்குடியினருக்கு குடும்ப வருவாய் ஈட்டித் தரும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ஆடு அலகுகள் மற்றும் கறவை மாடுகள் வழங்கப்படுகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் 71 ஆடு அலகுகளும், 25 கறவை மாடுகளும், பெரம்பலூர், திருவள்ளூர், வேலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள பரவி வாழும் பழங்குடியினர்களுக்கு வழங்கும் பொருட்டு ரூ.10.14 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டு 2008-2009-ல் இத்திட்டத்திற்கென ரூ.10.12 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 35. மைய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்

பழங்குடியினர் பகுதியில் பின்வரும் மைய அரசு பொறுப்பு ஏற்கும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன:

### (அ) பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கான சிறப்பு மைய உதவி

இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கப்படும் நிதி பழங்குடியினர்களுக்கு வருவாய் ஈட்டித் தரும் திட்டத்திற்கு முதன்மையாகவும், இதில் ஒரு பகுதி (30%-க்கு மிகாமல்) அடிப்படை வசதிகளுக்காகவும் செலவிடப்படுகிறது. 2007-2008 ஆம் ஆண்டில் மைய அரசு இத்திட்டத்திற்காக தோராயமாக ரூ.361.00 இலட்சம் ஒதுக்கியுள்ளது. இதில் முதல் தவணையாக ரூ.86.55 இலட்சம் மைய அரசு விடுவித்துள்ளது.

2008-2009 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின்கீழ் ரூ.361.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு மைய அரசிடமிருந்து நிதியுதவி எதிர்பார்க்கப்படுகிறது.

[2008 ஏப்ரல் 17

**(ஆ) இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு கூறு 275(1)-ன்கீழ் விடுவிக்கப்படும் நிதி**

இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 275(1)ன்கீழ் வழங்கப்படும் நிதி பழங்குடியினர் பகுதிகளில் உள் கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் விழுப்புரம் மாவட்டம் கல்வராயன் மலையில் உள்ள வெள்ளிமலையில் ஏகலைவா மாதிரி உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளி 1998 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மேலும், சேலம் மாவட்டத்தில் ஒரு ஏகலைவா மாதிரி உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளி 2006-2007 ஆம் ஆண்டில் துவங்கப்பட்டுள்ளது. இப்பள்ளிக்குத் தொடராச் செலவினமாக ரூ. 150.00 இலட்சமும் தொடர்ச் செலவினமாக ரூ.30.00 இலட்சமும் 2006-2007 ஆம் ஆண்டில் மைய அரசு விடுவித்துள்ளது.

வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் இப்பள்ளிக்கு ஆத்தூர் வட்டத்தில் அபிநவம் என்ற இடத்தில் சேலம் கட்டட மையம் மூலம் அரசுக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

2007-2008 ஆம் ஆண்டிற்கு வெள்ளிமலை ஏகலைவா பள்ளியின் தொடர் செலவினங்களுக்கு ரூ.62.14 இலட்சம் வழங்கக் கோரி செயற்குறிப்பு மைய அரசிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

2008-2009 ஆம் ஆண்டில் வேலூர் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் தலா ஒரு ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளி தொடங்க மைய அரசிற்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன.

வெள்ளிமலை ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளியின் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு தேர்ச்சி விழுக்காடு பின்வருமாறு :

| வருடம் | வகுப்பு | தேர்ச்சி விழுக்காடு |
|---|---|---|
| 2006 | 10 ஆம் வகுப்பு | 100 % |
| | 12 ஆம் வகுப்பு | 71 % |
| 2007 | 10 ஆம் வகுப்பு | 100 % |
| | 12 ஆம் வகுப்பு | 97 % |



2008 ஏப்ரல் 17]

நடப்பு நிதியாண்டு 2008-2009-ல் இத்திட்டத்திற்கென ரூ.300.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு மைய அரசிடமிருந்து நிதியுதவி எதிர்பார்க்கப்படுகிறது.

**(இ) பண்டைய பழங்குடியினர் மேம்பாட்டிற்கான மைய அரசின் நிதியுதவி**

பண்டைய பழங்குடியினர் மேம்பாட்டிற்காக மைய அரசு ஆண்டு தோறும் நிதியுதவி வழங்கி வருகிறது.

நடப்பு நிதியாண்டு 2008-2009-ல் இத்திட்டத்திற்கென ரூ. 323.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு மைய அரசிடமிருந்து நிதியுதவி எதிர்பார்க்கப்படுகிறது.

**(ஈ) பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் மற்றும் பழங்குடியினர் அருங்காட்சியகம்**

பழங்குடியினர்களுக்காக அருங்காட்சியகம் ஒன்று உதகமண்டலம் பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தில் 1996 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தில் பழங்குடியினர்கள் தொடர்பான ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் பழங்குடியினர் திட்டங்களை ஆய்வு செய்தல், பழங்குடியினர் புள்ளி விவர கணக்கெடுப்பு ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(உ) ஜனஸ்ரீ பீம யோஜனா (JBY)**

பண்டைய பழங்குடியினரிடையே இறப்பு விகிதம் அதிகம் ஏற்படுவது சம்பந்தமான அறிக்கையின் பேரில் வறுமைக் கோட்டிற்கு கீழ் மற்றும் அதற்கு சிறிதளவு மேலாக வாழும் 18 முதல் 58 வயது வரையுள்ள பண்டைய பழங்குடியினருக்கென ஒரு காப்பீட்டுத் திட்டம் வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. இக்காப்பீட்டுத் திட்டத்தில் சேருபவரின் 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகையாக நபர் ஒன்றுக்கு ஒவ்வொரு காலாண்டிற்கும் ரூ. 300/- வீதம் வழங்கப்படுகிறது.

**ஜனஸ்ரீ பீம யோஜனா காப்பீட்டுத் திட்டத்தின் பயன்கள் பின்வருமாறு :**

1. இயற்கையான மரணத்திற்கு ரூ. 30,000/-
2. விபத்தில் இறந்தால் ரூ. 75,000/-
3. விபத்தினால் முழு அளவிலான ஊனம் ஏற்பட்டால் ரூ. 75,000/-
4. விபத்தினால் பகுதி அளவிலான ஊனம் ஏற்பட்டால் ரூ. 37,500/-

இத்திட்டத்தின்கீழ் இதுவரை 12 பண்டைய பழங்குடியினர் குடும்பங்கள் பயனடைந்துள்ளன. இதில், விபத்தில் இறந்தவர் ஒருவரும், இயற்கையாக மரணமடைந்தவர்கள் 11 நபர்களும் அடங்குவர். மொத்தம் ரூ.2.93 இலட்சம் தொகை இறந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்டது.

மேலும், இத்திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்ட உறுப்பினர்களின் குடும்பங்களைச் சேர்ந்த 181 மாணவ/மாணவியர்க்கு கல்வி உதவித் தொகை ரூ.1,55,100/- வழங்கப்பட்டது.

## 36. பழங்குடியினருக்கான இதர திட்டங்கள்

### (அ) தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம்

தமிழ்நாட்டிலுள்ள பழங்குடியின மக்கள் சமூக, பொருளாதார, கல்வி நிலைகளில் திட்டமிடப்பட்ட உறுதியான முன்னேற்றத்தை அடைவதற்கென அவர்களுக்கு தனியாக ஒரு வாரியம் ஆதி திராவிடர் நல அமைச்சரைத் தலைவராகக் கொண்டு 20-4-2007 முதல் அமைக்கப்பட்டு, அதில் 6 அலுவல் சார்ந்த உறுப்பினர்களும், 13 அலுவல் சாரா உறுப்பினர்களும் நியமனம் செய்யப்பட்டு அதற்கான கூட்டம் நடத்தப்பட்டது. இந்த வாரியத்தில் சேர்க்கப்படும் உறுப்பினர்களுக்கு பல்வேறு நலத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டு அவற்றைச் செயல்படுத்த முதற்கட்டமாக ரூ.1.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ஆ) தமிழ்நாடு பழங்குடியினர் ஆன்றோர் மன்றம்

தமிழ்நாடு பழங்குடியினர் ஆன்றோர் மன்றத்தின் பதவிக் காலம் ஏற்கெனவே முடிந்துவிட்ட நிலையில், ஆதி திராவிடர் நல அமைச்சரைத் தலைவராகக் கொண்டு மீண்டும் 25-10-2007 முதல் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இதில் அலுவல் சார்ந்த 2 உறுப்பினர்களும், 3 பழங்குடியினர் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களும், அலுவல் சாரா பழங்குடியினர் உறுப்பினர்கள் 12 நபர்களும், பழங்குடியினர் அல்லாத 2 உறுப்பினர்களும் நியமனம் செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது.

### (இ) பழங்குடியினர் சுய உதவிக் குழுக்கள்

பழங்குடியின மகளிருக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் சுய உதவிக் குழுக்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. 31-03-2008 அன்றைய நிலையில் நமது மாநிலத்தில்



3,876 சுய உதவிக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு அதில் 55,580 பழங்குடியின பெண்கள் சேர்ந்து ரூ.1,867.28 இலட்சம் வரை சேமித்து பயன் அடைந்துள்ளனர். பழங்குடியினர் பகுதியில் கயிறு திரிப்பதும், பொம்மைகள் தயார் செய்வதும், தேநீர் இலை தயார் செய்வதும் மற்றும் தோடர்கள் எம்ப்ராய்டரி வேலை செய்வதும் முக்கிய பணிகளாகும்.

### (ஈ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

நீலகிரியில் வாழும் பழங்குடியினர்களின் நலனுக்காக மட்டும் நீலகிரி மாவட்ட ஆட்சியரால் பின்வரும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பழங்குடியினர்களுக்கு வீடு கட்டுதல், உண்டி உறைவிடப் பள்ளியில் சமையல் அறை மற்றும் உணவருந்தும் கூடம், பள்ளிகளுக்குத் தடுப்புச் சுவர், சுற்றுச் சுவர், ஆதி திராவிடர்/பழங்குடியினர்களுக்கான குடியிருப்புகளில் உள்ள பணிகள், உண்டி உறைவிடப் பள்ளிகளில் உள்ள உள்ளமைப்புகள், குடிநீர் கிணறுகள், பம்ப் அறை, சுகாதாரம் மற்றும் சுகாதார வசதி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி, கணினி பயிற்சி மற்றும் வாகன ஓட்டுநர் உரிமம் வழங்குதல் ஆகியவை இத்திட்டத்தில் அடங்கும். 2007-2008 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.659.55 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நடப்பு நிதி ஆண்டு 2008-2009-ல் இதற்காக ரூ.673.70 இலட்சம் மதிப்பீட்டில் முன்மொழிவுகள் மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

### (உ) இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழுமம் (ICMR)

இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழும திட்டப் பணிகள் நீலகிரி, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மூன்று மாவட்டங்களில் 1999 முதல் மாவட்ட சுகாதார துணை இயக்குநர்மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

பண்டைய பழங்குடியினரிடையே சுகாதாரத்தினை மேம்படுத்துவதற்காக உலக சுகாதாரக் கழகமும் (WHO) புதுடில்லியில் உள்ள இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழுமமும் (ICMR) இணைந்து செயல்படுவதே இதன் முக்கிய நோக்கமாகும். தமிழ்நாட்டில் இத்திட்டத்தை மாநில அளவில் செயல்படுத்துவதற்கு ஊக்குநராக உதகமண்டலம் பழங்குடியினர் நல ஆராய்ச்சி மைய இயக்குநர் நியமிக்கப்பட்டுள்ளார். தோடா, கோட்டா, இருளர், குறும்பாஸ்,

பனியன் மற்றும் காட்டுநாயக்கன் ஆகிய பண்டைய பழங்குடியினர் இத்திட்டத்தில் பயனடைகிறார்கள். இத்திட்டம் துணை இயக்குநர்கள் (சுகாதாரம்) மூலம் நீலகிரி, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் பண்டைய பழங்குடியினரிடையே சுகாதார விழிப்புணர்வு ஏற்படுத்தி இதன்மூலம் இவர்களுடைய மக்கள் தொகை நாளுக்கு நாள் குறைந்து வருவதைத் தடுப்பதாகும்.

பழங்குடியினர் நல தன்னார்வலர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் 10 நாட்கள் புத்தாக்கப் பயிற்சியும், பழங்குடியின மகப்பேறு உதவியாளர்களுக்கு 3 நாள் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. 400 முதல் 500 வரையுள்ள பழங்குடியினர்களுக்கு ஒருவர் வீதம் பழங்குடியினர் நல தன்னார்வலர்களும், மகப்பேறு உதவியாளர்களும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இம்மூன்று மாவட்டங்களிலும் மொத்தம் 120 தன்னார்வலர்களும், 120 மகப்பேறு உதவியாளர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இம்மூன்று மாவட்டங்களிலும் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒரு பழங்குடியினர் நல ஆலோசகர் உள்ளார். இம்மாவட்டங்களில் உள்ள 25 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 25 அரசு மருத்துவமனைகள் பழங்குடியினர்களுக்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் வழிகாட்டுதல் ஆகியவற்றைச் செவ்வனே செய்து பழங்குடியின நோயாளிகளுடன் நட்புடன் பழகி இத்திட்டத்தினை நிறைவேற்ற உறுதுணை புரிகின்றார்கள்.

இதுவரை ரூ.28.34 இலட்சம் இத்திட்டத்திற்காக செலவிடப் பட்டுள்ளது. 2007-2008 ஆம் நிதியாண்டில் இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழுமம் ரூ.4.29 இலட்சம் விடுவித்துள்ளது. மேலும், இதுவரை 15,000 பழங்குடியினர் இத்திட்டத்தின்மூலம் பயனடைந்துள்ளனர்.

### (ஊ) மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம்

மேற்கு தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 2007-2008 ஆம் ஆண்டில் பழங்குடியினர் வளர்ச்சிக்கான திட்டங்களுக்கு ரூ.50.90 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு சுற்றுச்





சுவர் கட்டுவதற்கும், பள்ளி வகுப்பறைகளைப் பழுது பார்க்கவும், பள்ளி/விடுதிகளில் சமையல் அறை மற்றும் தடுப்புச் சுவர் கட்டவும், ஆடு அலகுகள் வாங்கி வழங்கவும், சாலை வசதிகள் செய்யவும், குடிநீர் விநியோகம் செய்யவும், பள்ளிகளில் ஆய்வுக் கூடம் பராமரிக்கவும், கோயம்புத்தூர், திண்டுக்கல், தேனி, மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நடப்பு நிதியாண்டு 2008-2009-ல் இத்திட்டத்திற்கென ரூ.50.90 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## III. தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ)

தமிழகத்தில் வாழ்கின்ற நலிந்த ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக தொடங்கப்பட்ட தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) 1974 முதல் செயல்பட்டு வருகிறது.

நலிவடைந்த மக்களின் பொருளாதார முன்னேற்றத் திட்டத்தில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. வங்கிகளின்மூலம் கிடைக்கும் வாய்ப்பு வசதிகளை ஆதி திராவிட இன மக்கள் பெற்று பயன்பெறும் வகையில், விளிம்புத் தொகை மற்றும் இதர கடன் வசதித் திட்டங்களை அரசு உருவாக்கி ஆதி திராவிட மக்கள் சுய வேலைவாய்ப்பு தொடங்க உதவுகிறது.

விளிம்புத் தொகை திட்டத்தின்கீழ் மைய அரசு 49 விழுக்காடும், மாநில அரசு 51 விழுக்காடும் நிதி உதவி வழங்குகின்றன. இத்திட்டம் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் மூலம் செயல்படுத்தப்படுகின்றது. மேலும், இத்திட்டம் மைய அரசின் சிறப்பு நிதி உதவித் திட்டத்துடன் சேர்த்து செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கும் இக்கழகம் இருபெரும் பணிகளைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

1. பொருளாதார மேம்பாட்டுத் திட்டப் பணிகள்

2. கட்டுமானப் பணிகள்

இக்கழகத்தின் வளர்ச்சிப் பிரிவு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் தேவையின் அடிப்படையிலான பொருளாதார மேம்பாட்டுத் திட்டப் பணிகளைச் செயல்படுத்தி வருகிறது. இக்கழகத்தின் தொழில்நுட்பப் பிரிவு மாணவ/மாணவியர் விடுதிக் கட்டடங்கள், பள்ளிக் கட்டடங்கள், அறிவியல் ஆய்வுக் கூடங்கள், ஆசிரியர் குடியிருப்புகள், சமுதாயக் கூடங்கள் போன்ற கட்டுமானப் பணிகளைச் செய்து வருகிறது.

**37. தாட்கோவின் 2007–2008 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்**

2007-2008 ஆம் ஆண்டிற்கு மைய அரசிடமிருந்து மைய அரசின் சிறப்பு நிதியாக ரூ. 55.00 கோடியை எதிர்நோக்கியும், மாநில அரசிடமிருந்து மாநில அரசின் சிறப்பு நிதியாக ரூ.25.00 கோடி பெற்றும் ஆக மொத்தம் ரூ.80.00 கோடியை கணக்கில்கொண்டு தாட்கோ செயல் திட்டம் வகுத்து அரசாணை வெளியிடப்பட்டது.

**38. (அ) மைய அரசின் நிதி உதவித் திட்டம்**

மைய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட ரூ.55.00 கோடியில் 2007-2008 ஆம் ஆண்டிற்கு ரூ.48.98 கோடி மட்டுமே வரப்பெற்றுள்ளது. இதில் ஆதி திராவிடர் நலப் பள்ளிகள்/விடுதிகள் மற்றும் ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதி செய்துகொடுக்கும்பொருட்டு, ஆதி திராவிடர் நல இயக்குநர்மூலம் செலவிட 10 விழுக்காடு நிதியான ரூ.4.90 கோடி விடுவிக்கப்பட்டது. மீதித் தொகையான ரூ.44.08 கோடியும் பின்வரும் திட்டங்களுக்காக தாட்கோவால் செலவிடப்பட்டன:—

1. மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமை நிதித் திட்டம்
2. சுய உதவிக் குழுக்கள் உட்பட மகளிர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்
3. மகளிர்க்கான நிலம் வாங்கி வழங்கும் திட்டம்
4. தனிநபர் பயனாளிகளுக்கான நிதி உதவித் திட்டம்



5. இளைஞர்களுக்கான சுய தொழில் வேலைவாய்ப்புத் திட்டம்
6. புதிய முற்போக்குத் திட்டமான இந்திய குடிமைப் பணிகள் (Civil Services) இறுதித் தேர்வு எழுதுபவர்களுக்கு நிதி உதவி அளிக்கும் திட்டம்
7. எளிதில் வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய சிறப்புப் பயிற்சிகளை சிறந்த நிறுவனங்கள்மூலம் வழங்குதல்

**(ஆ) மாநில அரசின் சிறப்பு நிதி உதவித் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் ஆதி திராவிடர்/பழங்குடியினர் மட்டுமல்லாமல் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர்களும் பயன்பெறும் வகையில் மாநில அரசு ரூ.25.00 கோடி மாநில அரசின் சிறப்பு நிதியுதவியாக வழங்கி வருகிறது. இதனைத் தொடர்ந்து கடந்த 2 ஆண்டுகளாக, ஆதி திராவிடர்களுக்கு இணையாக கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர்களும்/பழங்குடியினரும், ஆதி திராவிடர்களுக்கு அளிக்கப்படும் நலத் திட்ட உதவிகள் மற்றும் வேலைவாய்ப்பு பெறத்தக்க பயிற்சியினைப் பெற்று வருகின்றனர்.

நடப்பு நிதியாண்டு 2008-2009-ல் இத்திட்டத்திற்கென ரூ.25.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மாநில அளவில் வழங்கப்பட்டு வரும் பயிற்சிகள்**

100 மகளிர்க்கு நபர் ஒருவருக்கு ரூ.1,00,000 வீதம் மொத்தம் ரூ.1 கோடி செலவில் விமானப் பணிப்பெண் பயிற்சி மற்றும் 100 இளைஞர்களுக்கு விமானத்திற்குள் (Cabin Crew) பணி செய்யும் பயிற்சி, நபர் ஒருவருக்கு ரூ.1,00,000 வீதம் மொத்தம் ரூ.1 கோடி செலவில் சீருடை மற்றும் உதவித்தொகையுடன் உணவு உறைவிடத்துடன் கூடிய பயிற்சி.

தேசிய நிறுவனங்கள்மூலம் 500 இளைஞர்களுக்கு ஆடை வடிவமைப்புப் பயிற்சி, 250 இளைஞர்களுக்கு பிளாஸ்டிக் பொருட்கள் தயாரித்தல் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் கணினிமூலம் வடிவமைப்பு போன்ற உயரிய தொழில்நுட்பப் பயிற்சி. 250 இளைஞர்களுக்கு "மத்திய காலணி தயாரித்தல் பயிற்சி நிறுவனம்" (Central Footwear Training Institute) மூலம் காலணி வடிவமைப்பு, காலணி தயாரித்தல் போன்றவற்றில் பயிற்சி.

**மாவட்ட அளவில் வழங்கப்பட்டு வரும் பயிற்சிகள்**

மாவட்ட அளவில் 3,500 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு இலவசச் சீருடையுடன், உணவு தயாரித்தல், உணவு பதப்படுத்துதல் மற்றும் உணவு பரிமாறுதல், வீடு பராமரித்தல் (House Keeping) போன்ற பயிற்சிகள் மற்றும் 2,000 மாணவ, மாணவியர்க்கு கணினி மென்பொருள் மற்றும் கணினி வன்பொருள் சம்பந்தப்பட்ட ஓராண்டு பயிற்சி.

மாவட்ட அளவில் 2,000 நபர்கள் பயன்பெறும் வகையில் சில்லறை விற்பனை மேலாண்மை பயிற்சி வழங்கப்படுகிறது. சென்னையில் உள்ள கல்லூரி விடுதிகளில் தங்கி இளங்கலை பட்டம் பயிலும் 1,000 மாணவ/மாணவியருக்கும், மாவட்ட அளவில் கல்லூரிகளில் தங்கி இளங்கலை பட்டம் பயிலும் 4,000 மாணவ/மாணவியருக்கும், ஆக மொத்தம் 5,000 மாணவ/மாணவியருக்கும் இலவசப் பயிற்சி புத்தகங்களுடன் (Course Material) ஆங்கில மொழி பேச்சாற்றல் பயிற்சி அளிக்கப்படுகிறது. மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய மாநகர்களில் உள்ள பள்ளி மாணவ/மாணவியரும் இப்பயிற்சியில் அடங்குவர்.

1,000 இளைஞர்களுக்கு உடனடி வேலை வாய்ப்புள்ள பின் செயல் நடவடிக்கை அழைப்பு மையம் (BPO Call Centre) பயிற்சி, 500 இளைஞர்களுக்கு மருத்துவ பரிமாற்றம் (Medical Transcription) பயிற்சி, 200 நபர்களுக்கு 3 டி ஸ்டுடியோ மேக்ஸ் (Graphics Animation) பயிற்சி, 150 நபர்களுக்கு இயந்திரவியல் தொழிற்சார்ந்த கணினி வரைவு வடிவமைப்பு [Professional Mechanical (CADD)] பயிற்சி, 150 நபர்களுக்கு மின்னியல் தொழிற்சார்ந்த கணினி வரைவு வடிவமைப்பு [Professional Electrical (CADD)] பயிற்சி, 150 நபர்களுக்கு அமைவியல் / சிற்ப தொழிற்சார்ந்த கணினி வரைவு வடிவமைப்பு (Professional Civil / Arch CADD) பயிற்சி, 200 நபர்களுக்கு கணினி வன்பொருள் நெட்வொர்க்கிங் மற்றும் செக்யூரிட்டி சிஸ்டம் பயிற்சி, 100 நபர்களுக்கு காட்சி ஊடகம் மீடியா பயிற்சி, 100 நபர்களுக்கு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி மற்றும் 150 நபர்களுக்கு கைதொலைபேசி, குளிர்சாதனப்பெட்டி மற்றும் குளிர்வூட்டுதல், மின்னணுக் கருவிகள் பழுது நீக்குதல் பயிற்சி வழங்கப்படுகிறது.



**39. தேசிய துப்புரவுப் பணியாளர் விடுவிப்பு மற்றும் மறுவாழ்வுத் திட்டம்**

துப்புரவுத் தொழிலாளர்களுக்காக 2007-2008 ஆம் ஆண்டு தாட்கோ மூலம் ரூ.21.00 கோடிக்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்துள்ளவர்களின் பொருளாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் "துப்புரவுப் பணியாளர் சுயதொழில் வேலைவாய்ப்புத் திட்டம்" என்னும் ஒரு புதிய திட்டம் மைய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், சுய தொழில் மேற்கொள்வதற்குத் தேவையான பயிற்சியும், ஊக்குதவித் தொகையுடன் Stipend கூடிய மூலதனக்கடன் ரூ.25,000 முதல் ரூ.5.00 இலட்சம் வரையிலும் அவர்கள் மேற்கொள்ளும் சுய தொழிலுக்கேற்றவாறு அளிக்கப்படும். 'சுபமதி' சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி மற்றும் பொருளாதாரத் திட்டங்களுக்காகவும் Economic Assistance நிதியுதவி வழங்கப்படுகிறது.

கணினிப் பயிற்சி, உணவு தயாரித்தல், உணவு பதப்படுத்துதல் மற்றும் சேவைப் பயிற்சிகள், உதவி செவிலியர் பயிற்சி போன்ற உடனடி வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய பயிற்சிகள் இத்திட்டத்தின்கீழ் 250 நபர்களுக்கு வழங்கப்படுகின்றன.

மேலும், துப்புரவுப் பணிபுரிவோர் மற்றும் அவரைச் சார்ந்தோர்கள் அரசு உதவி பெற செய்தித் தாள்களில் விளம்பரம் கொடுக்கப்பட்டு இதுவரை 17,095 நபர்கள் தங்கள் பெயர்களை தாட்கோ மாவட்ட மேலாளர்களிடம் பதிவு செய்துள்ளனர். பதிவு செய்யப்பட்ட துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு அடையாள அட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**40. தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியம்**

தூய்மைப் பணிபுரிவோரின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கென அரசு செயல்படுத்தும் பல்வேறு திட்டங்களின் செயலாக்கத்தைக் கண்காணித்து அவர்களின் முன்னேற்றத்தை உறுதி செய்ய தக்க ஆலோசனைகளை அரசுக்கு வழங்க ஆதி திராவிடர் நல அமைச்சர் அவர்கள் தலைமையில், 13 அலுவல் சார் உறுப்பினர்களும் மற்றும் 12 அலுவல் சாரா உறுப்பினர்களும் நியமனம் செய்யப்பட்டு தூய்மைப் பணிபுரிவோர் நலவாரியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த வாரியத்தில் புதிதாகச் சேர்க்கப்படவுள்ள உறுப்பினர்களுக்காக பல்வேறு நலத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டு அவற்றைச் செயல்படுத்த முதற்கட்டமாக ரூ. 1.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## இணைப்பு II

(160 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

## அறிவிப்புகள் 2008–2009

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலுடன் 2008-2009 ஆம் ஆண்டுக்கான புதிய அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் தெரிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

### I. புதிய திட்டங்கள்

**1. ஆதி திராவிடர்/பழங்குடியின விவசாயிகளுக்கு மின் இணைப்பு விரைந்து பெறுதல் (Fast Track Power Supply)**

தமிழ்நாடு மின்சார வாரியம் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. மின் இணைப்புகளை விரைந்து வழங்குதல் (Fast Track Power Supply) திட்டத்தின்கீழ் விவசாயிகளிடம் ரூ.10,000 வைப்புத் தொகை பெற்றுக்கொண்டு விரைவில் மின் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆதி திராவிடர்/பழங்குடியின விவசாயிகளில் அதிகமான நபர்கள் ரூ.10,000 செலுத்த இயலாத நிலையில் உள்ளனர். மேலும், இத்திட்டத்தின்கீழ் 1982-83 ஆம் ஆண்டில் பதிவு செய்த ஆதி திராவிடர்/பழங்குடியினருக்குத்தான் தற்போது இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. எனவே, துரித மின் இணைப்பு பெறும் வகையில் நபர் ஒருவருக்கு ரூபாய் 10,000/-ஐ தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் செலுத்தி, 1,000 நபர்களுக்கு ரூபாய் 1 கோடி செலவில் பயனடைய இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**2. தொழில் முனைவோருக்கு மூலதன உதவி**

ஆதி திராவிடர்/பழங்குடியின மக்களில் பெரும்பான்மையோர் சிறந்த தொழில் முனைவர்களாக வரக்கூடிய தகுதிகள் அனைத்தும் பெற்றிருந்தும் பொருளாதார வசதியின்மையால் தொழில் துவங்க இயலாத நிலை உள்ளது. முதல் கட்டமாக சுமார் 5 நபர்களை தொழிலதிபர்களாக்கும் முயற்சியில் சிறப்பு மூலதன மானியமாக ரூபாய் 50 இலட்சம் அல்லது 10 சதவீதம் இதில் எது குறைவோ





அதனை அரசு மானியமாகவும், மீதத் தொகையினை வங்கி அல்லது நிதி நிறுவனங்கள் மூலமாக கடனாகவும் பெறுவதற்கு வழிவகை செய்யப்படும்.

**3. கல்வி/சமுதாய பணியில் ஆதி திராவிடர்/பழங்குடியினர் தொடங்கும் தொண்டு நிறுவனங்களை ஊக்குவித்தல்**

அரசின் நலத்திட்டங்களை முன்வந்து செய்யும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் ஆதி திராவிடர் / பழங்குடியின மக்களின் பங்கு குறிப்பிடும்படியாக இல்லை. தொண்டு நிறுவனங்கள் பங்களிப்பாக 10% நிதியை அளித்து மத்திய அரசிடம் 90% நிதியை பெறுகின்றனர். இவர்களை ஊக்குவிக்க ஆதி திராவிடர் / பழங்குடியின இனத்தைச் சேர்ந்த நபர்கள் தொண்டு நிறுவனங்கள் அமைத்து கல்வி அல்லது சமுதாயப் பணியில் ஈடுபட வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தில் தனி நபர் பங்களிப்பான 10 சதவீத நிதியில் பாதித் தொகையினை அதாவது 5 சதவீதத்தை அல்லது ரூபாய் 10 இலட்சம் இதில் எது குறைவோ அத்தொகையினை மாநில அரசு வழங்கும். மருந்தாளுநர் படிப்பு (Pharmacist), செவிலியர் படிப்பு (Nursing), கல்வியியல் படிப்பு (B.Ed.) போன்ற உயர் படிப்புகளைத் தொடங்க முன்வரும் தொண்டு நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**4. தனியார் நிறுவனங்கள் மூலம் விடுதிகளைப் பராமரித்தல்**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் 1,241 ஆதி திராவிடர் நல விடுதிகளும், 37 பழங்குடியின நல விடுதிகளும் செயல்பட்டு வருகின்றன. தூய்மையான மற்றும் பாதுகாப்பான சுற்றுச்சூழலை மாணவ / மாணவியர்க்கு சிறப்பான முறையில் அளிக்க வேண்டும் என்பதனைக் கருத்தில் கொண்டு, தேவைப்படும் விடுதிகளில் இவ்வாண்டு முதல் தூய்மைப் பணி மற்றும் பாதுகாவல் பணிகள் தனியார் நிறுவனம் (Private Agency) மூலம் செயல்படுத்தப்படும்.

**5. ஆதி திராவிடர்/பழங்குடியின மாணவ/மாணவியர்களை நற்பெயர் பெற்ற சிறந்த உண்டி உறைவிடப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பில் சேர்த்தல் (Admission in reputed residential schools for Adi Dravidar/Tribal students in 6th Standard)**

ஆதி திராவிடர்/பழங்குடியின மாணவ/மாணவியர்க்கு தரமான சிறந்த கல்வியை (Top Class Education) வழங்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, 5 ஆம் வகுப்பு படித்து 6 ஆம் வகுப்பு செல்லும்

[2008 ஏப்ரல் 17

இம்மாணவ/மாணவியருக்கு தனித்தேர்வு ஒன்று நடத்தி, வட்டாரத்திற்கு (Block) ஒரு மாணவர் வீதம் தேர்ந்தெடுத்து மொத்தம் உள்ள 385 வட்டாரங்களில் உள்ள 385 மாணவ/மாணவியரை நற்பெயர் பெற்ற சிறந்த உண்டி உறைவிடப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பில் சேர்த்து அவர்கள் தொடர்ந்து 12 ஆம் வகுப்பு வரை பயில ஆகும் செலவினம் முழுவதையும் அரசே ஏற்கும்.

### 6. மருத்துவப் படிப்பை தமிழ்நாட்டில் மட்டுமல்லாது வேறு மாநிலத்தில் படிக்க உள்ள மாணவர்களுக்கு நிதி உதவி

தமிழகத்தைச் சேர்ந்த ஒரு ஆதி திராவிடர் / பழங்குடியின மாணவர் 90 விழுக்காடு மதிப்பெண் பெற்றிருந்தால் கூட மருத்துவப் படிப்பிற்கு சேர வாய்ப்பில்லாமல் போகிறது. தமிழ்நாட்டிலுள்ள ஆதி திராவிடர்/பழங்குடியினர் மாணவர்கள் அகில இந்திய அளவில் நடத்தப்படும், மருத்துவப் படிப்பு மற்றும் மருத்துவ பட்ட மேற்படிப்புக்கான நுழைவுத் தேர்வுகளில் (All India Entrance Test for MBBS/PG/Diploma Course) கலந்துகொண்டு தேர்ச்சி பெற்று இந்தியாவில் உள்ள எந்த ஒரு மாநிலத்திலும் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில் மேற்கண்ட படிப்பைத் (U.G./P.G.) தொடர விரும்பினால், இதற்கான செலவினங்கள் அனைத்தையும் அரசே ஏற்கும்.

### 7. சமுதாயக் கூடங்கள்

ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் அதிகமாக வாழும் பகுதிகளில் சமுதாயக் கூடங்கள் அமைக்க வேண்டும் என இச்சமுதாய மக்களிடமிருந்து தொடர்ந்து கோரிக்கைகள் பெறப்பட்டு வருகின்றன. சமூக விழாக்கள் நடத்துவதற்கும் மற்றும் சமுதாய மக்கள் ஒன்று கூடுவதற்கும் சமுதாயக் கூடங்கள் மிகவும் பயனுள்ளதாக இருப்பதால், 2008-2009 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.100.00 இலட்சம் செலவில் 10 சமுதாயக் கூடங்கள் கட்டப்படும்.

### 8. பழங்குடியினர் நல விடுதிகள் ஆரம்பித்தல்

தற்போது தமிழ்நாட்டில் 37 பழங்குடியினர் நல விடுதிகள் உள்ளன. இது அம்மாணவர்களுக்குப் போதுமானதாக இல்லை. கல்வி அறிவில் மிகவும் பின்தங்கியுள்ள பழங்குடியின மக்களை மேலும் உயர்வடையச் செய்ய வேண்டும் என்பதனைக் கருத்தில் கொண்டு ஆதி திராவிடர் மாணவர்களுக்கு 25 புதிய விடுதிகள் துவங்குவதற்கு நிதிநிலை அறிக்கையில் அறிவித்ததைப் போன்று 3 பழங்குடியினர் நல புதிய விடுதிகள் துவங்கப்படும்.



2008 ஏப்ரல் 17]

### 9. மக்கள் விழிப்புணர்ச்சித் திட்டம் (Mass Awareness Programme)

தீண்டாமையை ஒழிப்பதற்கு, ஒவ்வொரு மாவட்டத்திலும் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், 1955 ஆம் ஆண்டின் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1989 ஆம் ஆண்டின் ஆதி திராவிடர்/பழங்குடியினர் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் ஆகியவற்றை முனைப்புடன் செயல்படுத்தவும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரிடையே நம்பிக்கையை ஏற்படுத்தவும், வன்கொடுமையைத் தடுப்பதற்கும், சமத்துவத்தை ஏற்படுத்தவும், **"மக்கள் விழிப்புணர்ச்சித் திட்டம்"** ஒன்று மத்திய/மாநில அரசுகள் பங்கேற்கும் 50:50 திட்டத்தின்கீழ் ரூ.70 இலட்சம் செலவில், காவல்துறைத் தலைவர் (சமூக நீதி மற்றும் மனித உரிமை) மூலமாக மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து செயல்படுத்தப்படும்.

### 10. விடுதி மாணவர்களுக்கு யோகா மற்றும் தியானப் பயிற்சியளித்தல்

ஆதி திராவிட/பழங்குடியின விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவியர்க்கு யோகா (Yoga) மற்றும் ஆழ்நிலை தியானம் (Meditation) போன்ற பயிற்சிகள் "வாழ்க வளமுடன்" மற்றும் "ஈஷா யோகா" போன்ற நிறுவனங்கள் மூலமாக முதற்கட்டமாக 100 விடுதிகளில் செயல்படுத்தப்படும்.

### 11. ஆதி திராவிட மாணவியர் விடுதிகளுக்குச் சுற்றுச்சுவர் கட்டுதல்

ஆதி திராவிடர் மாணவியர்களின் பாதுகாப்பினை கருத்திற்கொண்டு இவ்விடுதிகளுக்கு சுற்றுச்சுவர் அமைப்பது இன்றியமையாததாகையால் 2008-2009 ஆம் ஆண்டில் சுற்றுச் சுவர் இல்லாத 18 மாணவியர் விடுதிகளுக்கு ரூ.61.57 இலட்சம் செலவில் சுற்றுச் சுவர்கள் அமைக்கப்படும்.

### 12. அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் / விடுதிகளுக்கு முதல் உதவிப் பெட்டிகள் வழங்குதல்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் உள்ள 290 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் 37 பழங்குடியினர் நல விடுதிகளில் பெரும்பான்மையானவை மலைப் பகுதிகளில் இயங்கி வருகின்றன. இம்மாணவ/மாணவியர்களின் நலனைக் கருத்தில் கொண்டு முதலுதவி அளிப்பதற்கு ஏதுவாக ரூ.2.13 இலட்சம் செலவில் முதலுதவிப் பெட்டிகள் வழங்கப்படும்.

[2008 ஏப்ரல் 17

**13. அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தங்கிப் பயிலும் மாணவ / மாணவியர்க்கு அமரும் பலகைகள் வழங்குதல்**

அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மலைப் பகுதிகளில் அமைந்துள்ளன. மழைக் காலங்களிலும், குளிர் காலங்களிலும் வகுப்பறையில் தரைப்பகுதி குளிர்ச்சியாக உள்ளதால் மாணவர் / மாணவியர்கள் தரையில் அமர்ந்து கல்வி பயில்வதற்கு சிரமப்படுகின்றனர். எனவே, முதற்கட்டமாக, 100 பள்ளிகளுக்கு அமரும் பலகைகள், 30 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

## II. சிறப்பு மாநில நிதி

இந்த அரசு பொறுப்பேற்றபின் முதன் முதலாக ஆதி திராவிடர் நலனில் சிறப்பு அக்கறைகொண்டு கடந்த இரண்டு ஆண்டுகளாக சிறப்பு மாநில நிதி உதவி வழங்கி வருவது போன்று நடப்பு நிதியாண்டு 2008-2009-லும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறப்பு மாநில நிதி உதவியாக ரூ.25.00 கோடியினை ஒதுக்கியுள்ளார்கள். இந்நிதியிலிருந்து தாட்கோ மூலமாக 2008-2009 ஆம் ஆண்டில் பின்வரும் பயிற்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

**14. கடல்சார் பயிற்சி**

கடல் சார்ந்த துறையில் அதிக வேலைவாய்ப்பு இருந்து வருகிறது. இத்துறையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குயின இளைஞர்களின் பங்கு மிகவும் குறைவாக உள்ளதால் இத்துறையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் பங்களிப்பை அதிகப்படுத்துவதற்காக கடல் சார் துறையில் முதன்முறையாக பயிற்சியளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பயிற்சி தேசிய கடல்சார் பயிற்சி நிறுவனம் (National Maritime Academy), தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனம் (Tamil Nadu Maritime Academy) மற்றும் நற்பெயர் பெற்றுள்ள தனியார் பயிற்சி நிறுவனங்கள் மூலமாக 100 இளைஞர்களுக்கு ரூ.50 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்படும்.

**15. வெளிநாடுகளில் வேலைவாய்ப்புக்கான பயிற்சி**

தொழில்நுட்பம் சார்ந்த துறைகளான பிளம்பிங், வெல்டிங், மரவேலை, ஓட்டுநர், குளிர்சாதனப் பெட்டிகள் பழுதுபார்த்தல் போன்ற துறைகளில் வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு அதிகம் இருந்து வருகிறது.



2008 ஏப்ரல் 17]

ஆதி திராவிடர்/பழங்குடி வகுப்பினர் இப்பயிற்சி பெற்று இத்துறையில் வெளிநாடுகளுக்குச் செல்பவர்கள் மிகவும் குறைவாகவே உள்ளனர். மேற்கண்ட படிப்பினை படித்த 500 இளைஞர்களுக்கு புத்தாக்கப் பயிற்சியளித்தும், கண் சிகிச்சைக்கான, சிறப்பு உதவி செவிலியர்களுக்கும் வெளிநாடுகளில் உடனடி வேலை வாய்ப்பு அதிகம் இருந்து வருவதால், 100 நபர்களுக்கு கண் சிகிச்சை சிறப்பு உதவியாளர் பயிற்சி (Opthalmic Nursing Assistant) வழங்கியும் அவர்களை Overseas Man Power Corporation-ல் பதிவு செய்து வெளிநாட்டில் நல்ல வேலைவாய்ப்பு பெற்றுத்தர வாய்ப்பு ஏற்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் 600 நபர்களுக்கு ரூபாய் 70.00 இலட்சம் செலவில் இப்பயிற்சிகள் வழங்கப்படும்.

**16. GRE/TOEFL/GMAT/CAT போன்ற தேர்வுகளுக்கான பயிற்சி**

பொறியியல் மற்றும் மருத்துவப் படிப்பு படித்த இளைஞர்கள் மேற்படிப்பிற்காக அதிகமாக வெளிநாடுகளுக்கு செல்கிறார்கள். வெளிநாடு சென்று உயர் கல்வி படிப்பதற்கும் இந்திய உயர் கல்வி நிறுவனங்களில் படிப்பதற்கும் GRE/TOEFL/GMAT/CAT போன்ற தேர்வுகளில் தேர்ச்சி பெறுவது அவசியம். எனவே, இது போன்ற தேர்வுகளுக்கு தயார் செய்யும் இளைஞர்களை ஊக்கப்படுத்த முதன்முறையாக 200 நபர்களுக்கு ரூ. 40.00 இலட்சம் செலவில் பயிற்சிகள் அளிக்கப்படும்.

**17. தொழில்சார் சிறப்புப் படிப்புகளுக்கான நிதியுதவி**

தற்போது தமிழ்நாட்டில் பட்டயக் கணக்கர் (CA), செலவுக் கணக்கர் (CWA), போன்ற படிப்புகளில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆர்வம் காட்டுவது குறைவாக உள்ளது. இந்நிலையை மாற்ற இப்படிப்பு படிக்கும் மாணவர்களின் கல்விக் கட்டணம், புத்தகக் கட்டணம், தேர்வுக் கட்டணம் முதலியவற்றை அரசே ஏற்கும். இத்திட்டம் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்படுகிறது. இதற்காக 25 நபர்களுக்கு ரூ.50.00 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும்.

**18. பின்னலாடை பயிற்சி–NIFT-TEA**

பின்னலாடைத் தொழிலில் தலைசிறந்த நகரமான திருப்பூரில் பின்னலாடை சம்பந்தப்பட்ட துறையில் வேலைவாய்ப்புகள் அதிகமாக இருந்து வருகிறது. எனவே, இத்துறையில் தகுந்த பயிற்சி வழங்கி பின்னலாடைத் துறையில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்கள் அதிகளவில் வேலைவாய்ப்பினை

பெற 500 இளைஞர்களுக்கு ரூ.75.00 இலட்சம் செலவில், NIFT-TEA மூலமாக திருப்பூரில் உண்டி உறைவிடத்துடன் கூடிய பயிற்சி வழங்கப்படும்.

**19. தேசிய நிறுவனங்கள் மூலம் பயிற்சி**

தேசிய நிறுவனங்களான CIPET மூலம் பிளாஸ்டிக் பொருட்கள் தயாரித்தல் பயிற்சியும் ATDC மற்றும் NIFT மூலம் ஆயத்த ஆடை வடிவமைத்தல் பயிற்சியும், CFTI மூலமாக தோல் பொருள் மற்றும் காலணி தயாரித்தல் பயிற்சியும் வழங்கி வருகின்றன. இந்நிறுவனங்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கி உடனடி வேலை கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில் 1,000 இளைஞர்களுக்கு ரூ.160.00 இலட்சம் செலவில் பயிற்சிகள் வழங்கப்படும்.

**20. திரைப்படம் சார்ந்த துறையில் பயிற்சிகள்**

திரைப்படத் துறையில் ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியின இளைஞர்களின் பங்களிப்பு மிகவும் குறைவாக இருக்கிறது. இத்துறையில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு விசுவல் மீடியா, சினிமாட்டோகிராபி மற்றும் ஒலிப்பதிவு போன்ற திரைப்படம் சார்ந்த பயிற்சிகள் 300 நபர்களுக்கு, ரூ.110.00 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.

**21. விமானப் பணி பயிற்சி**

கடந்த ஆண்டுகளில், விமானப் பணிப் பெண் பயிற்சி, விமான பணியாளர் பயிற்சி வழங்கியது போன்று, நடப்பாண்டிலும் 50 பெண்களுக்கு விமானப் பணிப்பெண் பயிற்சியும், 50 ஆண்களுக்கு விமானப் பணியாளர் பயிற்சியும் ரூ.100.00 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.

**22. விமான ஓட்டுநர் பயிற்சி**

விமானப் போக்குவரத்துத் துறையில் பெருகிவரும் வேலை வாய்ப்பினை கருத்தில் கொண்டு, இதில் ஆதி திராவிடர்/ பழங்குடியினர் இளைஞர்கள் பங்குபெற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் முதல் முறையாக விமானம் ஓட்டுநர் பயிற்சி 10 நபர்களுக்கு ரூ.100.00 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.



**23. சில்லறை விற்பனை மற்றும் மருத்துவ கருத்துப் பரிமாற்றம் பயிற்சி**

வளர்ந்து வரும் சில்லறை விற்பனை துறையிலும், மருத்துவ கருத்துப் பரிமாற்றம் துறையிலும் அதிக வேலைவாய்ப்பு இருந்து வருகிறது. எனவே, சில்லறை விற்பனை மற்றும் மருத்துவ கருத்துப் பரிமாற்றம் பயிற்சி வழங்குவதன் அவசியத்தை கருத்தில் கொண்டு 1,500 நபர்களுக்கு ரூ.100.00 இலட்சம் செலவில் நற்பெயர் பெற்ற சிறந்த நிறுவனங்கள் மூலம் பயிற்சிகள் அளிக்கப்படும்.

**24. விடுதி மாணவர்களுக்கு ஆங்கிலப் பேச்சாற்றல் பயிற்சி**

கிராமப்புற இளைஞர்களும், ஆங்கிலத்தில் பேசும் திறமையை வளர்க்க ஆதி திராவிட விடுதிகளில் தங்கிப் பயிலும் 1,000 இளைஞர்களுக்கு ரூ.30.00 இலட்சம் செலவில் ஆங்கிலப் பேச்சாற்றல் பயிற்சி அளிக்கப்படும்.

**25. மூன்றாண்டு செவிலியர் பட்டயப் பயிற்சி**

மூன்றாண்டு செவிலியர் பட்டயப் படிப்பு படித்தவர்களுக்கு அதிக வேலைவாய்ப்பு இருந்து வருகிறது. இதனைக் கருத்தில் கொண்டு 125 பெண்களுக்கு ரூ.330.00 இலட்சம் செலவில் அரசு கல்லூரிகளில் பயிற்சி அளிக்கப்படும்.

**26. கல்வியியல் பட்டயப்படிப்பு (பி.எட்.) பயிற்சி**

கல்வியியல் பட்டயப் படிப்பு (பி.எட்.) படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு அதிகம் இருப்பதால் அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் இப்படிப்பிற்காக 100 நபர்களுக்கு ரூ.25.00 இலட்சம் செலவில் நிதியுதவி அளிக்கப்படும்.

**27. உணவு தயாரித்தல் மற்றும் பரிமாறுதல்**

விருந்தோம்பல் துறையில் அதிக வேலைவாய்ப்பு பெருகி வருவதால் உணவு தயாரித்தல் மற்றும் பரிமாறுதல் பயிற்சி நற்பெயர் பெற்ற நிறுவனங்கள் மூலம் 800 நபர்களுக்கு ரூ.82.20 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.

**28. உதவி செவிலியர் பயிற்சி**

உள்நாடுகளிலும், வெளிநாடுகளிலும் உதவி செவிலியர் வேலைக்கு வாய்ப்பு அதிகமிருப்பதால் 400 நபர்களுக்கு நற்பெயர் பெற்ற பயிற்சி நிறுவனங்கள் மூலம் ரூ.77.80 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்படும்.

**29. கனரக வாகன ஓட்டுனர்/ஜேசிபி இயக்குபவர் பயிற்சி**

கனரக வாகனம் ஓட்டுனர்கள் மற்றும் ஜேசிபி இயக்குபவர்களுக்கு வேலைவாய்ப்பு அதிகம் இருப்பதால், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு கனரக வாகனம் ஓட்டுனர் பயிற்சி (Institute of Road Transport) மூலமும்,ஜேசிபி இயக்குபவர் பயிற்சி நற்பெயர் பெற்ற தனியார் நிறுவனங்கள் மூலமும் 500 நபர்களுக்கு ரூ.50.00 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.

**30. பிளம்பர்/ஏ.சி. மெக்கானிக்/டீசல் மெக்கானிக் பயிற்சி**

பிளம்பர், ஏ.சி. மெக்கானிக் மற்றும் டீசல் மெக்கானிக் பயிற்சிகளுக்கு வெளிநாடுகளிலும், தொழிற்கூடங்களிலும் வேலை வாய்ப்பு அதிகம் உள்ளதால் 1,500 நபர்களுக்கு ரூ.150 இலட்சம் செலவில் நற்பெயர் பெற்ற நிறுவனங்கள்மூலம் பயிற்சி அளிக்கப்படும்

## III. 2008–09 க்கான பகுதி–II திட்டங்கள்

*31.* ரூ.10.00 இலட்சம் செலவில் விருதுநகர் மாவட்டம் சாத்தூரில் ஒரு புதிய கல்லூரி மாணவியர் விடுதி தொடங்கப்படும்.

*32.* ரூ.41.10 இலட்சம் செலவில் மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்களுக்கு ஒளி நகல் இயந்திரம் மற்றும் நிகரி இயந்திரம் வாங்கி வழங்கப்படும்.

*33.* ரூ.96.00 இலட்சம் செலவில் 6 பழங்குடியினர் மேல்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் ஆய்வுக் கூடங்கள் கட்டப்படும்.

D
4 21|31 pol
48.1

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228411
சென்னை-600 008
நூலகம்

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Principal Secretary to Government and
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.